
# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் - ஜூலை 2022

www.tnpscthervupettagam.com








SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy in India
SINCE 2004

Plot No. 1742, I Foor, 18th Main Road,
Anna Nagar, Chennai - 600 040.
Phone - 044-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

TNPSC துளிகள் ..... 11
தமிழ்நாடு செய்திகள் ..... 18
கல்லூரிக் கனவு திட்டம் ..... 18
சூரியா திட்டம் ..... 19
'வணிகம் செய்வதை எளிதாக்குதல்' தரவரிசை ..... 19
சூரியசக்தி மின் உற்பத்தி நிலையம் ..... 20
20 புதிய கல்லூரிகள் ..... 20
இந்தியாவின் முதல் ஏவுகல இயந்திர உற்பத்தித் தொழிற்சாலை ..... 20
தேசிய நிறுவனங்கள் தரவரிசைக் கட்டமைப்பின் தரவரிசையில் தமிழகக் கல்லூரிகள் ..... 21
திறன்மிகு நகரத்திற்கான நிதிப் பயன்பாடு ..... 21
சதுரங்க ஒலிம்பியாட் போட்டியின் தொடக்க விழா ..... 22
காலை உணவுத் திட்டம் ..... 22
தேசியச் செய்திகள் ..... 23
வெளிநாடு வாழ்இந்தியருக்கான மிஸ் இந்தியா பட்டம் 2022 ..... 23
தேசிய அளவில் சிறந்தத் தளவாடங்களுக்கான விருதுகள் ..... 24
ஒரே நாடு, ஒரே சிறுநீரக கூழ்மப் பிரிப்பு ..... 24
பல்லோன்ஜி மிஸ்திரி ..... 25
புதிய தொழிலாளர் குறியீடுகள் - இந்தியா ..... 25
பால் ஸ்வராஜ் தளம் ..... 26
பெங்களூரு ஒரு சுகாதாரம் என்ற சோதனைத் திட்டம் ..... 26
குறுகியக் காலப் பணியாளர்கள் குறித்த நிதி ஆயோக் அமைப்பின் அறிக்கை ..... 26
உத்தவ் தாக்கரே ..... 27
இந்தியத் தலைமை அரசு வழக்குரைஞர் ..... 28
மாவட்டங்களுக்கான செயல்திறன் தரவரிசைக் குறியீடு ..... 28
யுரேனியச் சுரங்கம் - ராஜஸ்தான் ..... 29
சிறந்த தேசிய நெடுஞ்சாலை விருதுகள் 2021 ..... 29
டி-ஹப் ..... 29
PADMA ..... 29
வணிகச் சீர்திருத்த நடவடிக்கை 2020 ..... 30
GAIL நிறுவனத்தின் புதிய தலைவர் ..... 30
GOAL திட்டம் ..... 31
வன (வளங்காப்பு) விதிகள் – 2022 ..... 31
'பசுமை ஹைட்ரஜன் பயன்பாடு' குறித்த அறிக்கை ..... 31
குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் செயல்திறனை மேம்படுத்துதல் மற்றும் துரிதப்படுத்துதல் திட்டம் ..... 32
வீடு தேடி வரும் பொது விநியோகம் பற்றிய அறிக்கை ..... 33

பேரிடர்களைத் தாங்கக் கூடிய உள்கட்டமைப்புக்கான கூட்டமைப்பு........33
பாரத் ஸ்டேட் வங்கி நிறுவப்பட்ட தினம்........33
தேர்தல் பத்திரங்கள் வெளியீடு........34
ஐந்தாவது உலகளாவியத் திரைப்படச் சுற்றுலா மாநாடு........34
தொடக்க நிறுவனங்களுக்கான தரவரிசை 2021........35
தேசியக் காற்று தர வளக் கட்டமைப்பு........35
"NARCOS" நடவடிக்கை........36
டிஜிட்டல் இந்தியா பாஷினி........36
நிலையான அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான கல்வி நிறுவனம்........36
அமைச்சகங்கள் ஒதுக்கீடு........37
நியமன உறுப்பினர்கள் - மாநிலங்களவை........37
இந்தியாவின் மிக முதுமையான வங்காளப் புலி........37
மிகை மெய்த்தோற்றத் திரைகள்........37
ஹரியாலி மஹோத்சவ்........38
விலங்குகள் நலன் குறித்த உச்சி மாநாடு 2022........38
தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச்சின்னம்........38
அமர்நாத் கோவில் பகுதியில் மேக வெடிப்பு........39
இந்திய சணல் பொருட்கள் முத்திரை........39
அக்சய பாத்திரா மதிய உணவகம்........40
வாத்சல்யா திட்டத்திற்கான வழிகாட்டுதல்கள்........40
இந்தியாவில் குழந்தை நலன் பற்றிய அறிக்கை........40
உயர்கல்வி மீதான வாரணாசி பிரகடனம்........41
முதல் குரங்கு அம்மை நோய்ப் பாதிப்பு........41
இயற்கை வேளாண்மை குறித்த மாநாடு........42
ஸ்வநிதி மஹோத்சவம்........43
சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் தொடர்பான 6வது தேசிய மாநாடு........43
உலகளாவியப் பாலின இடைவெளிக் குறியீடு........43
டிராகன் பழச் சாகுபடி........44
தரங்கா மலைக்குன்றுகள்-அம்பாஜி-அபு சாலை மற்றும் இரயில் பாதை........44
வடகிழக்குப் பிராந்தியத்தில் வேளாண் ஏற்றுமதி மையம்........45
மிக நீளமான இரட்டை அடுக்குப் பாலம்........46
திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுக்கான முதல் மிதவை முனையம்........46
சபைக் குழுக்களின் பதவிக் காலம்........46
பேடி பச்சாவோ பேடி பதாவோ திட்டம் நீட்டிப்பு........47
நாரி அதாலத்........48
திருமணமாகாத நபர்களின் விகிதம் கணக்கெடுப்பு........48
NIRF தரவரிசை 2022........49
பாரத் ரங் மஹோத்சவம் 2022........49
SPRINT சவால்கள்........50

சமயம், மற்றும் மொழியினச் சிறுபான்மையினர் அந்தஸ்து ........ 50
முதல் மின்னணுக் கழிவு சுற்றுச்சூழல் பூங்கா ........ 50
இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அறுவை சிகிச்சை எந்திர அமைப்பு ........ 51
ஜாக்ரிதி சின்னம் ........ 51
மலைப் பகுதிக்கான போர்ப் பயிற்சி மையம் ........ 51
இந்திய புத்தாக்கக் குறியீடு 2021 ........ 52
பாராளுமன்ற மரபிற்கு ஒவ்வாத வார்த்தைகளின் பட்டியல் ........ 52
இந்தியாவின் 15வது குடியரசுத் தலைவர் ........ 52
ஜல் ஜீவன் திட்டத்தின் இலக்கு 51% நிறைவு ........ 53
குறைந்தபட்ச ஆதரவு விலை தொடர்பான குழு ........ 53
ஜவஹர்லால் நேரு துறைமுகம் ........ 54
குடிமைப் பணித் தேர்வுகளின் பயிற்சி நிறுவனங்களுக்கான தேசிய தர நிலைகள் ........ 55
இந்தியாவின் அடிப்படைச் சாலைப் புள்ளிவிவரங்கள் 2018-19 ........ 55
நமஸ்தே திட்டம் ........ 56
ஹர் கர் திரங்கா அபியான் ........ 56
சட்டப்பூர்வ அளவியல் (பொதி கட்டப்பட்டப் பொருட்கள்) விதிகள் 2011 ........ 56
குறைந்த வெப்பநிலையில் இயங்கும் வெப்பமுறை உப்பு நீக்க ஆலை ........ 57
இந்தியாவின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுச் செலவினங்கள் பற்றிய ஆய்வு ........ 57
பதவிப் பிரமாணம் - திரௌபதி முர்மு ........ 58
இந்திய உயிரிப் பொருளாதார அறிக்கை 2022 ........ 59
இந்தியக் கொடியின் விதிமுறைகள் ........ 59
இந்திய அண்டார்டிகா மசோதா – 2022 ........ 60
'ஜோஹர்' வரவேற்பு ........ 61
கூட்டுப் போர் படைப்பிரிவுகள் ........ 61
வெள்ளை வெங்காயத்திற்குப் புவிசார் குறியீடு ........ 62
ஸ்வதேஷ் தர்ஷன் திட்டம் 2.0 ........ 63
கடல்சார் கூட்டாண்மைப் பயிற்சி ........ 63
தேசிய ஊக்கமருந்து எதிர்ப்பு மசோதா 2021 ........ 63
நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் தீவு ........ 64
விமானம் தாங்கி கப்பல் ஐஎன்எஸ் விக்ராந்த் ........ 64
ராஷ்ட்ரிய கனிஜ் புரஸ்கார் ........ 64
வாக்காளர் பட்டியலில் முன்கூட்டியே பதிவு செய்தல் ........ 65
சர்வதேசச் செய்திகள் ........ 65
காமன்வெல்த் அமைப்பின் புதிய உறுப்பினர்கள் ........ 65
ஐக்கிய நாடுகள் சபையின் பெருங்கடல் மாநாடு 2022 ........ 66
பிரிக்ஸ் அமைப்பில் இணையும் புதிய நாடுகள் ........ 66
இயற்கை மறுசீரமைப்புச் சட்டம் ........ 67
நிலங்களுக்கான சாசனம் ........ 67
வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் படைகள் ........ 68

நீலநிறப் பசிபிக் என்ற முன்னெடுப்பின் பங்குதாரர்கள் ..... 68
மெர்சர் நிறுவனம் மேற்கொள்ளும் 2022 ஆம் ஆண்டு வாழ்க்கைச் செலவின மதிப்பீடு ..... 68
ஐக்கிய நாடுகள் சபை வாழ்விட அமைப்பின் உலக நகரங்கள் அறிக்கை 2022 ..... 69
யுனெஸ்கோ அமைப்பின் அருகி வரும் உலகப் பாரம்பரிய தளங்களின் பட்டியல் ..... 69
QS சிறந்த மாணவர்களைக் கொண்ட நகரங்களின் தரவரிசை ..... 70
அமெரிக்காவிற்கு கோவோவாக்ஸ் தடுப்பூசி வழங்கீடு ..... 70
நைஜீரியாவில் லித்தியம் கண்டுபிடிப்பு ..... 71
இயற்கை சார்ந்தத் தீர்வுகளுக்கான இந்திய மன்றம் ..... 71
பட்சகன் கோயிலில் கண்காட்சி ..... 72
இணைய முடக்கம் குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை ..... 73
RIMPAC 2022 பயிற்சி ..... 73
ஆறாவது காஸ்பியன் உச்சி மாநாடு ..... 74
லிஸ்பன் பிரகடனம் ..... 74
வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்புடனான இணக்க நெறிமுறைகள் ..... 75
2023 ஆம் ஆண்டில் உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட நாடு ..... 75
சர்வதேச சிறார் பாலியல் சுரண்டல் தொடர்பான முன்னெடுப்பு ..... 76
SOFI 2022 ..... 77
உலக மக்கள்தொகை வளங்கள் 2022 ..... 78
I2U2 தலைவர்கள் உச்சி மாநாடு 2022 ..... 79
வளர்ந்து வரும் நாடுகளில் நிலவும் வாழ்க்கைச் செலவின நெருக்கடி ..... 79
ஸீ கார்டியன்-2 பயிற்சி ..... 80
10வது உலக அமைதி மன்றம் ..... 80
ஜெருசலேம் பிரகடனம் ..... 81
நேபாள நாட்டின் முதல் குடியுரிமை திருத்த மசோதா ..... 81
முதல் மார்பர்க் வைரஸ் பெருந்தொற்று ..... 81
ஊழல் எதிர்ப்பு மீதான பிரிக்ஸ் அமைப்பின் அமைச்சர்கள் கூட்டம் 2022 ..... 82
S-400 ஏவுகணை கொள்முதலில் இந்தியாவிற்கு விலக்கு ..... 82
இலங்கையின் 9வது குடியரசுத் தலைவர் ..... 83
ஜெட்டா பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு உச்சி மாநாடு ..... 83
G-20 அமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் சந்திப்பு ..... 84
குரங்கு அம்மை – உலகளாவிய அவசரநிலை ..... 84
ரஷ்யா மற்றும் துருக்கி இடையிலான தானிய ஏற்றுமதி ஒப்பந்தம் ..... 85
சகுராஜிமா எரிமலை ..... 85
குரங்கு அம்மைக்கு எதிரான தடுப்பூசி - 'இமான்வாக்ஸ்' ..... 86
மின்சாரச் சந்தை பற்றிய அறிக்கை ..... 86
பேரிடரைத் தாங்கக் கூடிய நெகிழ்திறன்மிக்க உள்கட்டமைப்பிற்கான கூட்டணியில் ஐரோப்பிய முதலீட்டு வங்கி ..... 87
உலக விமான நிலையப் போக்குவரத்து தரவுத்தொகுப்பு 2021 ..... 87
சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து ரஷ்யா விலகல் ..... 88

பொருளாதாரச் செய்திகள் .......... 88
உலகளாவியச் சுகாதார நலன் .......... 88
சரக்கு மற்றும் சேவை வரிச் சபையின் 47வது கூட்டம் .......... 88
முதன்மை வேளாண் கடன் சங்கங்கள் .......... 89
நிதிச் சேவை நிறுவனங்கள் வாரியம் .......... 90
எதிர்கால யூனிகார்ன் நிறுவனங்கள் குறியீடு 2022 .......... 90
தங்கத்திற்கான இறக்குமதி வரி .......... 91
நிதி நிலைத்தன்மை அறிக்கை .......... 91
கடல்சார் பொருட்களின் ஏற்றுமதி .......... 92
ஜூன் மாத சரக்கு மற்றும் சேவை வரி வசூல் .......... 92
வெளிநாடுகளில் உள்ள உறவினர்கள் அனுப்பு தல் மூலம் வரும் பணவரவு .......... 93
இந்தியாவின் சேவைத் தொழில் துறை .......... 93
உலக ஃபின்டெக்ஸ் தரவுத்தளம் .......... 94
இந்திய ரூபாய் மதிப்பில் சர்வதேச வர்த்தகம் மேற்கொள்வதற்கான வழிமுறை .......... 95
முத்தரப்பு மேம்பாட்டு ஒத்துழைப்பு நிதி .......... 95
மறுநிதியளிப்பு - டாலர் மதிப்பிலானப் பத்திரங்கள் .......... 96
புதிய சரக்கு மற்றும் சேவை வரி விகிதங்கள் .......... 96
2020-21 ஆம் ஆண்டில் இந்திய நாட்டில் பதிவான பண வருகை .......... 97
திடீர் வரியில் குறைப்பு .......... 98
4 அடுக்கு ஒழுங்குமுறைக் கட்டமைப்பு .......... 98
நீண்ட கால மீள்திறன் கொண்ட விநியோக அமைப்புகள் .......... 99
எண்ணிம வங்கிகள் .......... 99
வெளிநாடுகளில் இருந்து அதிகளவு பண வரவினைப் பெறும் நாடு - 2021 .......... 99
இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி .......... 100
5ஜி அலைக்கற்றை ஏலம் .......... 101
முதல் சர்வதேச விலைமதிப்பு மிக்க உலோகப் பொருட்கள் பரிமாற்ற வசதி .......... 101
BSNL மற்றும் BBNL நிறுவனங்கள் இணைப்பு .......... 101
சூயஸ் கால்வாய் பொருளாதார மண்டலம் .......... 102
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் .......... 103
ஆற்றல் சேமிப்புத் தளம் .......... 103
மின்மினிப் பூச்சி போன்ற ஒளி உமிழும் எந்திரங்கள் .......... 103
தடிப்புத் தோல் அழற்சி நோய்க்கான சிகிச்சைக்கு எஸ்ட்ராடியோல் பயன்பாடு .......... 104
ஜென்னோவா mRNA தடுப்பூசி .......... 105
அணுசக்தியினால் இயங்கும் விமானத்தில் நடத்தப்படும் தங்கும் விடுதி .......... 106
அண்டத்தில் உள்ள தன் இனத்தையே உட்கவரும் நட்சத்திரம் .......... 106
இந்தியாவின் பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டு ஏவுகணை (ATGM) .......... 107
மூளையிலுள்ள நரம்பு இணைப்புப் பற்றி அறிவதற்கான புதிய நிரல் நெறிமுறை .......... 108
CAPSTONE விண்வெளித் திட்டம் .......... 108
PSLV-C53 விண்வெளித் திட்டம் .......... 109

அபியாஸ்-அதிவேக விரைவுப்படுத்தக்கூடிய வான்வழி இலக்கு (HEAT) அமைப்பு ....... 109
விண்வெளியில் எலும்பு நிறை இழப்பு ....... 110
சால்மோனெல்லா பாதிப்பு ....... 110
தன்னிச்சையாக பறக்கும் வான்வழி வாகனத் தொழில்நுட்பத்தின் செயல் விளக்கம் ....... 111
அப்ஹீலியன் நிகழ்வு 2022 ....... 111
தாவரங்களில் நைட்ரேட் உட்கிரகித்தல் செயல்முறையை ஒழுங்குபடுத்துதல் ....... 112
புதிய அணுவகத் துகள்கள் ....... 113
உலகின் முதல் "மணல் மின்கலன்" ....... 113
தன்னிச்சையாகப் பறக்கும் ஆளில்லா விமானத்தின் முதல் புறப்பாடு ....... 114
சூ துகள்கள் 2.0 ....... 114
இதுவரை காணப்படாத பேரண்டத்தின் படங்கள் ....... 114
உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட லித்தியம்-அயனி மின்கலம் ....... 115
LUX-ZEPLIN கரும்பொருள் உணர்வி ....... 115
பாக்டீரியாவிலிருந்து ராக்கெட் எரிபொருள் தயாரிப்பு ....... 116
கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்க்கு எதிரான தடுப்பூசி ....... 116
இலகுரக ஹெலிகாப்டர் அடங்கிய படைப்பிரிவு INAS 324 ....... 117
செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான புற்றுநோயைக் கண்டறியும் கருவி ....... 117
மார்பர்க் வைரஸ் நோய் ....... 118
ARYABHAT-1 ....... 118
IS4OM ....... 119
செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான மாண்டரின் மொழிபெயர்ப்பு ....... 119
இந்தியாவின் முதல் தனித்தன்மை வாய்ந்த இரத்த வகை ....... 120
சிறுகோள் 2022 KY4 ....... 120
தொலைதூரக் கிரகத்தில் நீர் இருப்பது குறித்த கண்டுபிடிப்பு ....... 121
திட்டம் 17A - ரேடாருக்குப் புலப்படாத போர்க் கப்பல் ....... 122
உலகின் அதிவேக வரைகலைக்கான சக்தி வாய்ந்த நேரடி அணுகல் நினைவகச் சில்லுகள் ....... 122
புதிய செயற்கை பெப்டைடுகள் ....... 122
வர்ரோவா உண்ணி மூலம் பரவும் பிளேக் நோய் ....... 123
மனிதர்கள் பயணிக்கும் வகையிலான இந்தியாவின் முதல் ஆளில்லா விமானம் ....... 123
நுண்ணுயிர் எதிர்ப்புத் தடுப்பூசிகள் ....... 124
"வென்ஷியன்" விண்வெளி நிலையப் பெட்டகங்கள் ....... 125
பேரண்டத்தின் பழமையான பால்வெளி மண்டலம் ....... 125
வானவில் நிறத்திலான கோள் ....... 126
விரைவாகச் செயல்படும் போர் வாகனம் ....... 127
சுற்றுச்சூழல் செய்திகள் ....... 127
புதிய உயிர்க்கோளக் காப்பகங்கள் ....... 127
விலங்கு இனங்களின் பட்டியல் ....... 128
புதிய கண்டுபிடிப்புகள் 2021 ....... 129
உலகின் மிகப்பெரிய நீராம்பல் ....... 129

யுனெஸ்கோ குழுவின் உறுப்பினர் பதவி ........ 130
சிவப்புப் பாண்டா கரடிகள் அறிமுகம் ........ 130
ஈஸ்கன்சர் கோப்ரென்சிஸ் ........ 131
வன உயிரினங்களை நிலையான முறையில் பயன்படுத்துதல் ........ 132
ஓசோன் துளை 2022 ........ 132
கார்பன் நடுநிலையைக் கொண்ட முதல் விமான நிலையம் ........ 133
சிறுத்தை மறு அறிமுகம் ........ 133
13வது பீட்டர்ஸ்பர்க் பருவநிலை குறித்த பேச்சுவார்த்தை ........ 134
வெப்ப அலை ........ 134
உலகின் மிக வயதான பெரிய ஆண் பாண்டா ........ 135
முதல் அபாய வானிலை எச்சரிக்கை ........ 135
காரகோரம் முரண்பாடு ........ 136
புலம்பெயரும் மோனார்க் வகை வண்ணத்துப் பூச்சி ........ 137
இந்தியாவின் புதிய ராம்சார் தளங்கள் 2022 ........ 137
புலிகள் மற்றும் யானைகள் பற்றிய தரவு ........ 138
பனிச் சிறுத்தை பற்றிய இந்திய விலங்கியல் கணக்கெடுப்பு அமைப்பின் ஆய்வு ........ 139
பூமியின் சுற்றுச்சூழல் வள எல்லை மீறல் தினம் ........ 140
**மாநிலச் செய்திகள் ........ 141**
ஏக்நாத் ஷிண்டே ........ 141
ஔரங்காபாத் மற்றும் ஒஸ்மானாபாத் மாவட்டங்கள் – மகாராஷ்டிரா ........ 141
ஜான்சி இரயில் நிலையம் ........ 142
மிகப்பெரிய மிதக்கும் சூரிய மின்சக்தி ஆலைத் திட்டம் ........ 142
'சூரியா' திட்டம் முன்னெடுப்பு ........ 142
ஜகன்னாத் பூரி இரத யாத்திரை 2022 ........ 142
பொதுச் சுகாதார அவசரநிலை ........ 143
'எறும்புச் சட்னிக்கு' புவிசார் குறியீடு ........ 143
நாரி கோ நமன் திட்டம் ........ 144
தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்திற்கான மாநில தரவரிசைக் குறியீடு ........ 144
டெல்டா தரவரிசை ........ 145
தியோகர் விமான நிலையம் ........ 145
இந்தியாவின் முதல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை ........ 145
புதிய கல்விக் கொள்கை அமலாக்கம் ........ 146
உத்தரப் பிரதேசத்தில் 13 விரைவு வழிச் சாலைகள் ........ 146
"சுகாதார உரிமை" மசோதா ........ 146
இந்தியாவின் மிகப்பெரிய வணிகத் திருவிழா ........ 147
அன்னை தெரசா நினைவு விருது ........ 147
அரசுக்குச் சொந்தமான இணையச் சேவை ........ 147
இந்தியாவில் எண்ணிமம் சார்ந்த லோக் அதாலத் ........ 148
பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனா- ஆந்திரப் பிரதேசம் ........ 148

எல்லைப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கான ஒப்பந்தங்கள் .......... 148
புல்வாய் இனங்களின் கணக்கெடுப்பு .......... 149
வாகன இருப்பிடக் கண்காணிப்புச் சாதனம் பொருத்துதல் .......... 150
OBC ஒதுக்கீட்டினை மறுசீரமைத்தல் .......... 150
இணையவழி முதல் தகவல் அறிக்கை முறை .......... 150
'ஹர் கர் ஜல்' சான்றிதழ் பெற்ற முதல் மாவட்டம் .......... 151
இந்தியாவின் முதல் மூளை நல மருத்துவமனை .......... 151
ராஜஸ்தான் மகிளா நிதி .......... 151
பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் .......... 151
விஜய் அமிர்தராஜ் .......... 151
ஆஸ்கார் அகாடமி உறுப்பினர்கள் 2022 .......... 152
இயோன் மோர்கன் ஓய்வு .......... 152
வரீந்தர் சிங் .......... 152
அமெரிக்க உச்ச நீதிமன்றத்தில் முதல் கருப்பினப் பெண் நீதிபதி .......... 152
சரஸ்வதி சம்மான் 2021 .......... 153
நிதியியல் நடவடிக்கைப் பணிக் குழுவின் தலைவர் .......... 153
21வது TIFF பதக்க வழங்கீட்டு விழா .......... 153
ஆயுர்வேத ரத்னா விருது .......... 153
மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் ஆண்டின் சிறந்தப் பங்குதார நிறுவன விருதுகள் 2022 .......... 154
இந்தியாவின் இளம் வயது சபாநாயகர் .......... 154
ஃபீல்ட்ஸ் விருதுகள் 2022 .......... 154
தெற்கு சூடான் நாட்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புத் திட்டத்தின் படைத் தளபதி .......... 155
சிரோமணி விருது .......... 155
"Mind Master: Winning Lessons from a Champion's Life" புத்தகம் .......... 155
P.கோபிநாத் நாயர் .......... 156
முன்னாள் தலைமை பொருளாதார நிபுணர்களின் புகைப்படம் கொண்ட சுவர் .......... 156
ஜப்பான் பிரதமர் .......... 156
ஐக்கிய இராஜ்ஜியத்தின் பிரதமர் .......... 157
இந்திய இணைய உலகத்தின் தந்தை .......... 157
கர்ச்சி திருவிழா .......... 157
தொல்பொருள் ஆய்வாளர் எனமுல் ஹக் .......... 158
திருமதி பிரபஞ்சப் பேரழகி .......... 158
சுப்ரீம் ஆர்டர் ஆஃப் கிரிசாந்திமம் விருது .......... 158
பேராயர்களுக்கான ஆலோசனைக் குழு .......... 159
இலண்டன் இந்தியத் திரைப்பட விருது விழா .......... 159
கௌதம் அதானி - உலகின் நான்காவது பணக்காரர் .......... 159
68வது தேசியத் திரைப்பட விருதுகள் 2022 .......... 160
உலகின் சிறந்த சிறு மற்றும் நடுத்தர நிறுவன வங்கி .......... 160
உலக ஆற்றல் பரிசு 2022 .......... 161

கமல்ஹாசனுக்கு தங்க நுழைவு இசைவுச் சீட்டு....161
அதிக வரி செலுத்தும் நபர்கள்....161
வின்ஸ்டன் சர்ச்சில் தலைமைத்துவ விருது....162
இந்தியாவின் பணக்காரப் பெண்மணி....162
விளையாட்டுச் செய்திகள்....163
கோசனோவ் நினைவு தடகளப் போட்டி....163
அதானி ஸ்போர்ட்ஸ்லைன் நிறுவனம்....163
நீரஜ் சோப்ராவின் தேசியச் சாதனை....163
ஜஸ்பிரித் பும்ரா - உலகச் சாதனை....164
புதிய பந்துவீச்சு சாதனை....164
15 வயதிற்கு உட்பட்டவர்களுக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டி....164
SENA குழும நாடுகளில் டெஸ்ட் விக்கெட்டுகள்....165
காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் 2022....165
எலோர்டா கோப்பைப் போட்டி....165
உலக மாஸ்டர்ஸ் தடகள சாம்பியன்ஷிப் போட்டி....165
காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் - 2022....166
விம்பிள்டன் ஆடவர் போட்டி....166
20 வயதிற்குட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்தச் சாம்பியன்ஷிப் போட்டி....167
ISSF உலகக் கோப்பை போட்டி....167
சிங்கப்பூர் ஓபன் பட்டம்....168
36வது தேசிய விளையாட்டுப் போட்டியின் சின்னம்....168
உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டி 2025....168
உலகத் தடகள சாம்பியன்ஷிப் போட்டி - உலக சாதனை....169
உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டி – 2022....169
முக்கிய தினங்கள்....170
தேசிய மருத்துவர்கள் தினம் - ஜூலை 01....170
சரக்கு மற்றும் சேவை வரி தினம் - ஜூலை 01....170
பட்டயக் கணக்காளர்கள் தினம் - ஜூலை 01....171
உலக விளையாட்டுத் துறையின் பத்திரிகையாளர் தினம் - ஜூலை 02....171
சர்வதேசக் கூட்டுறவு தினம் – ஜூலை 02....171
உலக அடையாளம் காண இயலாதப் பறக்கும் பொருட்கள் தினம் - ஜூலை 02....172
சர்வதேச நெகிழிப் பைகள் இல்லாத தினம் – ஜூலை 03....172
உலக விலங்குவழித் தொற்று தினம் - ஜூலை 06....172
உலக சாக்லேட் தினம் - ஜூலை 07....173
உலக கிஸ்வாஹிலி மொழி தினம் – ஜூலை 07....173
வன மஹோத்சவம் - ஜூலை 01 முதல் 07 வரை....174
தேசிய மீனவர் தினம் - ஜூலை 10....174
உலக மக்கள் தொகை தினம் - ஜூலை 11....174
தம்மசக்கர தினம் 2022....175

தமிழ்நாடு தினம் - ஜூலை 18 ........ 175
உலக இளைஞர் திறன் தினம் - ஜூலை 15 ........ 176
தேசிய ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சைத் தினம் - ஜூலை 15 ........ 176
சர்வதேச நீதிக்கான உலக தினம் - ஜூலை 17 ........ 176
சர்வதேச நிலவு தினம் - ஜூலை 20 ........ 176
சர்வதேச நெல்சன் மண்டேலா தினம் - ஜூலை 18 ........ 177
சர்வதேச சதுரங்கத் தினம் - ஜூலை 20 ........ 177
தேசியக் கொடி தினம் - ஜூலை 22 ........ 177
உலக மூளை தினம் - ஜூலை 22 ........ 178
உலக நலிவுற்ற X குரோமோசோம் குறைபாட்டு நோய் விழிப்புணர்வுத் தினம் - ஜூலை 22 ........ 178
பை மதிப்பின் தோராயமாக்கல் தினம் - ஜூலை 22 ........ 178
தேசிய ஒலிபரப்புத் தினம் - ஜூலை 23 ........ 179
வருமான வரி தினம் - ஜூலை 24 ........ 179
உலக நீரில் மூழ்கும் நிகழ்வுகளைத் தடுத்தல் தினம் - ஜூலை 25 ........ 180
உலக செயற்கைக் கருத்தரித்தல் முறை தினம் - ஜூலை 25 ........ 180
கார்கில் விஜய் திவாஸ் - ஜூலை 26 ........ 181
உலக கல்லீரல் அழற்சி நோய் தினம் - ஜூலை 28 ........ 182
சதுப்புநிலக் காடுகளின் சூழலைமைவின் பாதுகாப்பிற்கான சர்வதேச தினம் - ஜூலை 26 ........ 182
உலக இயற்கைப் பாதுகாப்பு தினம் - ஜூலை 28 ........ 183
சர்வதேச புலிகள் தினம் - ஜூலை 29 ........ 183
மத்திய சேமக் காவல் படையின் 84வது எழுச்சி தினம் - ஜூலை 27 ........ 183
இதரச் செய்திகள் ........ 184
நெகிழ்திறன் மிக்க மக்களாட்சி அறிக்கை 2022 ........ 184
ஆசிய பசிபிக் நிலைத் தன்மைக் குறியீடு 2021 ........ 184
உலகப் போதைப்பொருள் பயன்பாடு குறித்த அறிக்கை 2022 ........ 185
அல்லூரி சீதாராம ராஜு சிலை ........ 185
8வது டிஜிட்டல் இந்தியா வாரம் 2022 ........ 186
டைனோசர் எலும்புக் கூடு ஏலம் ........ 186
ஐரோப்பாவில் கண்டறியப்பட்ட பழமையான மனித புதைபடிவம் ........ 187
2022 ஆம் ஆண்டின் உலகின் மிகச் சிறந்த இடங்கள் ........ 187
AIDef கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி ........ 188
நாடு கடத்தப்பட்ட உள்நாட்டினர் தரவரிசை 2022 ........ 188
ஹென்லி கடவுச்சீட்டு குறியீடு 2022 ........ 189
அபின் உற்பத்தி மற்றும் பதப்படுத்துதல் ........ 190
வைரம் - லுலோ ரோஸ் ........ 190

# TNPSC துளிகள்

- மத்திய நேரடி வரிகள் வாரியத்தின் (CBDT) புதியத் தலைவராக இந்திய வருவாய்ப் பணி அதிகாரி நிதின் குப்தா நியமிக்கப்பட்டுள்ளார்.
- முன்னாள் வெளியுறவுத் துறை செயலாளராகவும், அணுசக்தி விவகாரங்கள் மற்றும் பருவநிலை மாற்றத்துக்கான பிரதமரின் சிறப்புத் தூதராகவும் பணியாற்றிய ஷியாம் சரண் இந்திய சர்வதேச மையத்தின் தலைவராக தற்போது பொறுப்பேற்றுள்ளார்.
- இந்திய அரசு சாரா வர்த்தகச் சங்கம் மற்றும் ஆலோசனை வழங்கும் நிறுவனமான நாஸ்காம், ஒருங்கிணைந்தச் செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவுப் பயன்பாட்டுத் திட்டத்தின் மூலம் 2025 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை 500 பில்லியன் டாலர்களாக உயர்த்த முடியும் என்று கூறுகிறது.
    - நாஸ்காம், EY நிறுவனத்துடன் இணைந்து மைக்ரோசாப்ட், EXL மற்றும் Capgemini ஆகியவற்றின் ஆதரவுடன், செயற்கை நுண்ணறிவு ஏற்பின் துறை சார்ந்த ஒரு முன்னேற்றத்தினைக் கண்காணிப்பதற்காக செயற்கை நுண்ணறிவு ஏற்புக் குறியீடு என்ற ஒன்றினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- சர்வதேசப் பளு தூக்குதல் கூட்டமைப்பின் (IWF) தலைவராக ஈராக் நாட்டின் அரசு அதிகாரி முகமது ஜலூத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
    - 44 ஆண்டுகளாக சர்வதேசப் பளு தூக்குதல் கூட்டமைப்பினைக் கட்டுப்படுத்தி வந்த தாமஸ் அஜான் 2020 ஆம் ஆண்டில் பதவி விலகியதையடுத்து இவர் அதன் முதல் நிரந்தர தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்.
- மெக்சிகோவில் நடைபெற்ற சர்வதேசப் பளுதூக்குதல் கூட்டமைப்பின் இளைஞர்களுக்கான பளுதூக்குதல் சாம்பியன்ஷிப் போட்டியில் ஆந்திராவைச் சேர்ந்த குருநாயுடு சனாபதி தங்கம் வென்றார்.
    - இந்தப் போட்டியில் தங்கம் வென்ற இந்தியாவின் முதல் பளுதூக்கும் வீரர் என்ற ஒரு பெருமையை இவர் பெற்றுள்ளார்.
- அசாமின் கவுகாத்தியில் உள்ள நிலாச்சல் மலையில் அமைந்துள்ள புகழ்பெற்ற காமாக்யா கோவிலில், நான்கு நாட்கள் வரையில் நடைபெறும் அம்புபாச்சி மேளா விழா தொடங்கியது.
- தென் கொரிய நாடானது, உள்நாட்டிலேயேத் தயாரித்த நூரி என்ற ஏவுகலனைப் பயன்படுத்தி தனது முதல் செயற்கைக் கோளைச் சுற்றுப்பாதையில் நிலை நிறுத்தச் செய்தது.
- பிரகதி மைதான் ஒருங்கிணைந்தப் போக்குவரத்து வழித் தடத் திட்டத்தைப் பிரதமர் அவர்கள் சமீபத்தில் தொடங்கி வைத்தார்.
    - புது தில்லியில் உள்ள பிரகதி மைதானத்தில் உருவாக்கப்பட்டு வரும் கண்காட்சி மற்றும் மாநாட்டு மையத்திற்கு இடையூறு இல்லாத மற்றும் சுமூகமான முறையில் சென்றடைவதற்கான வழித் தடத்தினை வழங்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கம் ஆகும்.
- ரிலையன்ஸ் ஜியோ நிறுவனத்தில் இருந்து முகேஷ் அம்பானி ராஜினாமா செய்து உள்ளார்.

- அவரது மகன் ஆகாஷ் அம்பானி ரிலையன்ஸ் டெலிகாம் நிறுவனத்தின் தலைவராக அறிவிக்கப்பட்டார்.

❖ தேசியக் காப்பீட்டு விழிப்புணர்வு தினம் ஜூன் 28 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகிறது.

- ஆங்கிலேயப் பொருளாதார வல்லுநரான நிக்கோலஸ் பார்பன் 1666 ஆம் ஆண்டில் முதலாவது தீ விபத்துக் காப்பீட்டு நிறுவனத்தை நிறுவினார்.

❖ டென்னிஸ் வரலாற்றிலேயே நான்கு கிராண்ட்ஸ்லாம் போட்டிகளிலும் சேர்த்து 80 போட்டிகளில் வெற்றி பெற்ற முதல் வீரர் என்ற பெருமையை செர்பியாவின் நோவக் ஜோகோவிச் பெற்றார்.

❖ 2030 ஆம் ஆண்டிற்குள் "நமது" நிலங்கள், நீர்வளங்கள் மற்றும் பெருங்கடல்களைக் குறைந்த பட்சம் 30% வரை பாதுகாத்தல் என்ற ஒரு இலக்கை எட்டும் என்று சர்வதேச நாடுகளுக்கு இந்தியா உறுதியளித்தது.

❖ 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் இங்கிலாந்தில் படிப்பதற்காக 75 இந்திய மாணவர்களுக்கு முழு நிதியுதவி உதவித் தொகைகளை வழங்கச் செய்வதற்காக வேண்டி, இந்தியாவில் உள்ள முன்னணி வணிக நிறுவனங்களுடன் ஒரு கூட்டுறவை மேற்கொள்ள உள்ளதாக ஐக்கிய இராஜ்ஜிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

❖ ஆம் ஆத்மி அரசானது தனது முதல் பஞ்சாப் மாநில நிதிநிலை அறிக்கையில், 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் ஒவ்வொரு வீட்டிற்கும் ஒவ்வொரு மாதமும் 300 அலகுகள் வரை இலவச மின்சாரம் வழங்க உள்ளதாக அறிவித்துள்ளது.

❖ ஒலிம்பிக் தங்கப் பதக்கம் வென்ற, அமெரிக்காவினைச் சேர்ந்த சிட்னி மெக்லாலின், அமெரிக்காவின் ஒரிகானின் யூஜினில் நடைபெற்ற அமெரிக்கச் சாம்பியன்ஷிப் போட்டியில் மகளிருக்கான 400 மீட்டர் தடை ஓட்டத்தின் இறுதிப் போட்டியில், அதனை 51.41 வினாடிகளில் கடந்து தனது சொந்த உலகச் சாதனையை முறியடித்தார்.

❖ டெல்லியில் உள்ள முன்னணி ஆளில்லா விமான உற்பத்தி இயங்குதள நிறுவனமான ஐஜி ட்ரோன்கள் ஏர்வார்ட்ஸ் அமைப்பினால் வழங்கப்படும் "சிறந்த ஆளில்லா விமான அமைப்பு - தொடக்க நிறுவனங்கள் பிரிவு" என்ற விருதைப் பெற்றுள்ளது.

- ஏர்வார்ட்ஸ் என்பது உலகெங்கிலும் உள்ள நேர்மறையான ஆளில்லா விமானப் பயன்பாட்டு நிகழ்வுகளின் பரவலை அடையாளம் காணவும், அதனை அங்கீகரித்து, அதில் வெற்றி பெறுவதற்காகவும் வேண்டி அர்ப்பணிக்கப்பட்ட முதல் பரந்து பட்ட உலகளாவிய விருதுகள் திட்டமாகும்.

❖ கிர்கிஸ்தானின் பிஷ்கெக் நகரில் நடைபெற்ற 2022 ஆம் ஆண்டு U23 ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில், டோக்கியோ நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வென்ற தீபக் புனியா 86 கிலோ ஃப்ரீஸ்டைல் எடைப் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்றார்.

❖ முகேஷ் அம்பானியின் மகள் இஷா அம்பானி ரிலையன்ஸ் ரீடெய்ல் இண்டஸ்ட்ரீஸ் (சில்லறை விற்பனைத் தொழில்துறை) என்ற நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட உள்ளார்.

- ரிலையன்ஸ் ரீடெய்ல் மற்றும் ரிலையன்ஸ் ஜியோ ஆகியவை முகேஷ் அம்பானி தலைமையிலான ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் துணை நிறுவனங்களாகும்.

❖ இந்தியாவில் கடன் அட்டைகள் மூலமான செலவினங்கள் மே மாதத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு 1.14 டிரில்லியன் டாலர் என்ற அளவை எட்டியுள்ளது என்பது சில்லறை

வணிகம் சிறப்பாகச் செயல்படுவதைக் குறிக்கிறது.

- இந்திய ரிசர்வ் வங்கியின் தரவுகளின்படி, இந்தியாவில் கடன் அட்டைகள் மூலமானச் செலவினங்கள் ஆண்டுதோறும் 118 சதவீதம் அதிகரித்துள்ளது.

❖ நஃப்தலி பென்னட்டிற்குப் பிறகு இஸ்ரேலின் 14வது பிரதமராக யாயர் லாபிட் என்பவர் அதிகாரப் பூர்வமாக பதவியேற்றுள்ளார்.

❖ அங்காராவின் (துருக்கி) பாதுகாப்புப் பிரச்சனைகளை நிவர்த்தி செய்யும் முத்தரப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பிறகு, வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பில் இணைய ஸ்வீடன் மற்றும் பின்லாந்து ஆகியவற்றிற்கு துருக்கி ஒப்புதல் அளித்து உள்ளது.

❖ $CO_2$ உமிழ்வைக் குறைக்கும் முயற்சியில், 2035 ஆம் ஆண்டிற்குள் ஐரோப்பாவில் எரிப்பு இயந்திரங்கள் கொண்ட வாகனங்களின் விற்பனையை முடிவுக்குக் கொண்டு வரும் திட்டத்தை ஐரோப்பிய ஒன்றியம் அங்கீகரித்துள்ளது.

❖ ஹேப்பிஸ்ட் மைண்ட்ஸ் டெக்னாலஜிஸ் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் செயல் தலைவர் அசோக் சூடா 2021 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தொழில்துறை தரநிலை ரத்னா விருதைப் பெற்றுள்ளார்.

❖ இந்தியப் பத்திரங்கள் மற்றும் பரிமாற்ற வாரியமானது, அந்நியத் தொகுப்பு முதலீட்டாளர்களைப் பரிமாற்ற முறையில் வர்த்தகம் செய்யப்பட்ட பொருட்களுக்கான கொணர்வுச் சந்தையில் பங்கேற்பதில் அனுமதிப்பதற்கு முடிவு செய்தது.

❖ இந்திய ராணுவத்தின் கோனார்க் படை ஆனது ஜோத்பூரில் (ராஜஸ்தான்) எல்லை மற்றும் கடலோரப் பாதுகாப்பு ஆகியவற்றிற்கான "சுரக்சா மந்தன் 2022" என்ற ஒரு பயிற்சியினை ஏற்பாடு செய்தது.

❖ 2025 ஆம் ஆண்டில் அடுத்த ஐக்கிய நாடுகள் பெருங்கடல் மாநாட்டினை நடத்திட பிரான்ஸ் மற்றும் கோஸ்டாரிகா ஆகிய நாடுகள் இரண்டும் இணைந்து கோரிக்கை விடுத்துள்ளன.

❖ கர்நாகடாவினைச் சேர்ந்த சினி ஷெட்டி என்பவர் 2022 ஆம் ஆண்டின் ஃபெமினா மிஸ் இந்தியா பட்டத்தை வென்றார்.

- இது மும்பையில் நடத்தப் பட்டது.

❖ ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, கேரளா, ஒடிசா, தமிழ்நாடு மற்றும் தெலுங்கானா ஆகிய ஆறு இந்திய மாநிலங்களைச் சேர்ந்த பெண்கள் மற்றும் குழந்தைகள் நலப் பிரதிநிதிகள், ஆட்கடத்தலை எதிர்த்துப் போராடுவதற்கு என்று ஒத்துழைப்புடன் செயல்படுவதற்காக வேண்டி மாநிலங்களுக்கு இடையேயான ஒரு பிரகடனத்தில் கையெழுத்திட்டனர்.

❖ கிராண்ட்ஸ்லாம் ஒற்றையர் பிரிவுப் போட்டியில் அரையிறுதிக்கு முன்னேறிய முதல் அரேபியப் பெண்மணி மற்றும் முதல் வடக்கு ஆப்பிரிக்கப் பெண் என்ற பெருமையை துனிசியாவின் ஒன்ஸ் ஜபியர் பெற்றார்.

- இவர் இந்த நிலையினை 2022 ஆம் ஆண்டில் விம்பிள்டன் போட்டியில் அடைந்தார்.

❖ இந்திய விமானப்படையினைச் சேர்ந்த தந்தை மற்றும் மகள் அடங்கிய இணையினர் ஆன, விமானப் படை அதிகாரி அனன்யா ஷர்மா மற்றும் வான்படைத் தலைவர் சஞ்சய் சர்மா ஆகியோர் ஒரே ஜெட் படைக்குழுவில் பறந்து விமானத் துறையில் ஒரு வரலாற்றை உருவாக்கி உள்ளனர்.

❖ TVS சப்ளை செயின் சொல்யூஷன்ஸ் என்ற நிறுவனத்தின் நிர்வாகத் துணைத் தலைவர் R.தினேஷ், இந்தியத் தொழில்துறையின் தலைவராக 2022-2023 ஆகிய ஆண்டுகளுக்கு நியமிக்கப் பட்டுள்ளார்.

- நிதி ஆயோக் அமைப்பின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி அமிதாப் காந்த், G20 அமைப்பின் தலைமைப் பொறுப்பினை இந்தியா ஏற்பதற்கு சில மாதங்களுக்கு முன்னதாக இந்தியாவின் அரசு முறை அதிகாரியாக (ஷெர்பாவாக) பணியாற்ற உள்ளார்.
- ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே அவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில், ஜூலை 09 ஆம் தேதியன்று இந்திய நாடு முழுவதும் அரசு துக்க நாளாக அனுசரிக்கப் பட்டது.
- கஜகஸ்தானில் நடைபெற்ற எலோர்டா கோப்பைப் போட்டியில் இந்தியக் குத்துச் சண்டை வீராங்கனைகளான அல்ஃபியா பதான் மற்றும் கிதிகா ஆகியோர் தங்கப் பதக்கம் வென்றனர்.
- கிரிக்கெட் வரலாற்றில் தொடர்ச்சியாக 13 டி20 போட்டிகளில் வெற்றி பெற்ற முதல் அணித் தலைவர் என்ற பெருமையை இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் ரோகித் சர்மா பெற்றுள்ளார்.
- இளம் இந்திய கிராண்ட்மாஸ்டர் D.குகேஷ் ஸ்பெயினின் ஜிஜோன் நகரில் நடைபெற்ற கிஜோன் செஸ் மாஸ்டர்ஸ் போட்டியில் சாம்பியன் பட்டத்தை வென்றார்.
- ஒரு மூத்த நிர்வாக அதிகாரியான R.K.குப்தா துணைத் தேர்தல் ஆணையராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவரின் நினைவாக, பொது நிர்வாகத்திற்கான டாக்டர் ராஜேந்திர பிரசாத் நினைவு விருது என்ற ஒன்று நிறுவப்பட்டுள்ளது.
- எர்ணாகுளம் பால்பொருட்கள் ஆலையானது, முழுவதுமாகச் சூரிய சக்தியினால் இயங்கும் இந்தியாவின் முதல் ஆலையாக மாற உள்ளது.
- பெண் கல்விக்காக பாடுபடும் ஒரு இளம் பெண்மணியான பாகிஸ்தானைச் சேர்ந்த மலாலா என்ற பெண்மணியைக் கௌரவிக்கும் வகையில் ஜூலை 12 ஆம் தேதியன்று உலக மலாலா தினம் அனுசரிக்கப்படுகிறது.
- தென் கொரியாவின் சாங்வோ நகரில் நடைபெற்ற சர்வதேசத் துப்பாக்கி சுடுதல் விளையாட்டுப் போட்டிகள் கூட்டமைப்பு (ISSF) நடத்திய துப்பாக்கிச் சுடுதல் உலகக் கோப்பை போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் பாபுதா தனது முதல் தங்கப் பதக்கத்தை வென்றார்.
- இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பிரவோம் தொகுதியின் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் M.J. ஜேக்கப் (82) பின்லாந்தின் தாம்பியரில் நடைபெற்ற 2022 ஆம் ஆண்டு உலக மாஸ்டர்ஸ் தடகள சாம்பியன்ஷிப் போட்டியின் 200 மீட்டர் தடை ஓட்டம் மற்றும் 80 மீட்டர் தடை ஓட்டப் போட்டிகளில், இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளார்.
- பீகார் சட்டமன்றக் கட்டிடத்தின் ஒரு நூற்றாண்டு விழாவின் நிறைவைக் குறிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள பீகார் சட்டமன்றக் கட்டிடத்தின் ஒரு நூற்றாண்டு நினைவுத் தூணினைப் பிரதமர் அவர்கள் திறந்து வைத்தார்.
- ஸ்ரீநகரின் சோன்வார் பகுதியில் உள்ள கோவிலில் அமைந்துள்ள சுவாமி ராமானுஜா ஆச்சாரியாரின் 'அமைதியைக் குறிக்கும் சிலையை' மத்திய உள்துறை அமைச்சர் அமித் சா காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்.
- மத்திய வெளியுறவு மற்றும் கலாச்சாரத் துறை இணை அமைச்சர் மீனாட்சி லேகி, 75 சுதந்திரப் போராட்ட வீரர்களையும் கொண்டாடுகின்ற, அவர்கள் நாட்டுக்காகச் செய்த தியாகங்களைப் பகிர்ந்து கொள்கின்ற 'சுவாதிநாத சங்க்ராம் நா சர்விரோ' என்றப் புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.

- ❖ மாநில வேளாண்மை மற்றும் தோட்டக்கலை அமைச்சர்களின் தேசிய அளவிலான மாநாடு ஆனது வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தினால் பெங்களூரு நகரில் ஏற்பாடு செய்யப்பட்டது.
- ❖ சர்வதேச அளவில் போட்டித்திறன் மிக்க ஏலத்திற்காக 10 எண்ணெய்க் கிணறுகளை வழங்குவதற்கு, அனைத்து நிறுவன திறந்தநிலை நில உரிமத் திட்டத்தின் எட்டாம் கட்ட ஏலத்தினை அரசாங்கம் தற்போது தொடங்கியுள்ளது.
- ❖ அமெரிக்காவின் பிர்மிங்காம் நகரில் நடைபெற்ற 2022 ஆம் ஆண்டு உலக வில்வித்தை விளையாட்டுப் போட்டியில் அபிஷேக் வர்மா மற்றும் ஜோதி சுரேகா வெண்ணம் ஆகியோர் வெண்கலப் பதக்கத்தினை வென்றனர்.
- ❖ மேற்கு இரயில்வே நிர்வாகமானது மும்பையில் கர் ரோடு இரயில் நிலையத்திலிருந்து அருகிலுள்ள பாந்த்ரா முனையம் வரை மிக நீளமான இணைப்பு கொண்ட மேம்பால நடைபாதையினை (314 மீ) திறந்துள்ளது.
- ❖ சர்வதேச வேளாண் மேம்பாட்டு நிதியம் (IFAD) ஆனது ஸ்பெயின் நாட்டினைச் சேர்ந்த அல்வாரோ லாரியோ என்பவரை நான்காண்டுக் காலத்திற்கு அதன் புதிய தலைவராக நியமித்துள்ளது.
- ❖ ஜேம்ஸ் பாண்ட் படங்களுக்கான பிரத்தியேக இசை ராகத்தினை எழுதிய பிரிட்டிஷ் இசையமைப்பாளர் மான்டி நார்மன் சமீபத்தில் காலமானார்.
- ❖ இந்தியாவின் முதல் மிக உயர்ந்த நகர்ப்புற விரைவுவழிச் சாலையான, டெல்லி மற்றும் அரியானா மாநிலங்களை இணைக்கும் துவாரகா விரைவுச் சாலை, 2023 ஆம் ஆண்டில் பயன்பாட்டிற்கு வரும்.
- ❖ மத்திய அமைச்சரும் பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்தப் பாராளுமன்ற உறுப்பினருமான பியூஷ் கோயல் மாநிலங்களவையின் ஆளுங்கட்சித் தலைவராக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.
- ❖ 2012 ஆம் ஆண்டில் வெளியிடப் பட்ட தென் கொரிய ராப் பாடகர் சையின் 'கங்னம் ஸ்டைல்' பாடலானது யூடியூப் ஊடகத்தில் ஒரு பில்லியன் பார்வைகளைக் கடந்த முதல் ஒளிப்படக் காட்சி (பாடல்) என்ற பெருமையைப் பெற்றது.
- ❖ ஒன்கார்டு என்ற கைபேசி கடன் அட்டை வழங்கீட்டு நிறுவனமானது, 100 மில்லியன் டாலர் நிதியைத் திரட்டி, இந்தியாவின் 104வது யூனிகார்ன் நிறுவனமாக மாறியுள்ளது.
- ❖ நீருக்கடியில் அமைக்கப்பட உள்ள இந்தியாவின் முதல் மெட்ரோ போக்குவரத்து வசதி கொல்கத்தாவில் 2023 ஆம் ஆண்டில் செயல்பாட்டுக்குக் கொண்டு வரப் படும்.
- ❖ ஃபேஸ்புக் ஊடகத்தின் உரிமம் கொண்ட மெட்டா நிறுவனமானது தனது முதலாவது வருடாந்திர மனித உரிமை அறிக்கையை வெளியிட்டது.
- ❖ இந்தியா தனது ஒட்டு மொத்த கோவிட் 19 தடுப்பூசி வழங்கீட்டு இயக்கமானது 200 கோடி என்ற எண்ணிக்கையைக் கடந்துள்ளது.
- ❖ பாரதி ஏர்டெல் நிறுவனமானது, பெங்களூருவில் உள்ள போஷ் வாகனத் தொழில் நுட்ப மின்னணு உற்பத்தி ஆலையில் இந்திய நாட்டின் முதல் 5G தனியார் கட்டமைப்பினை வெற்றிகரமாகப் பரிசோதனை செய்தது.
- ❖ ஸ்பெயினில் நடைபெற்ற 41வது வில்லா டி பெனாஸ்க் சர்வதேச சதுரங்க ஓபன் போட்டியில் இந்திய கிராண்ட்மாஸ்டர் அரவிந்த் சிதம்பரம் வெற்றி பெற்றுள்ளார்.

- செர்பியாவில் நடைபெற்ற பாராசின் ஓபன் சதுரங்கப் போட்டியில் இந்திய கிராண்ட் மாஸ்டர் R. பிரக்ஞானந்தா வெற்றி பெற்றுள்ளார்.
- பஞ்சாபைச் சேர்ந்த பிரபல கஜல் பாடகர் பூபிந்தர் சிங் சமீபத்தில் மும்பையில் காலம் ஆனார்.
- ஒரு புதிய சுழல்முறை முன்னெடுப்பின் கீழ் 2022-23 ஆம் ஆண்டிற்கான ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் முதலாவது "கலாச்சார மற்றும் சுற்றுலாத் தலைநகரமாக" வாரணாசி மாறியுள்ளது.
- அமெரிக்காவில் நடைபெறும் உலகத் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் ஆண்களுக்கான நீளம் தாண்டுதல் பிரிவின் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்ற முதல் இந்தியர் என்ற பெருமையைக் கேரளாவினைச் சேர்ந்த முரளி ஸ்ரீசங்கர் பெற்றுள்ளார்.
- தேசிய வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கியின் சுய உதவிக் குழுக்களுக்கான வங்கி இணைப்புத் திட்டத்தின் கீழ், 2021-22 ஆம் நிதியாண்டிற்கான தமிழ்நாட்டின் சிறப்பாகச் செயல்படும் வங்கி என்ற விருதை இந்தியன் வங்கி பெற்றுள்ளது.
- இங்கிலாந்தில் நடைபெற்ற ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் சதம் அடித்த முதல் ஆசிய-விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேன் என்ற புதிய உலகச் சாதனையை இந்தியாவின் ரிஷப் பந்த் படைத்துள்ளார்.
- ரஷ்யாவிடமிருந்து பெறப் பட்ட INS சிந்துத்வாஜ் கப்பலானது விசாகப் பட்டினத்தில் 35 ஆண்டு காலச் சேவைக்குப் பிறகு கடற்படையில் இருந்து விலக்கப்பட்டது.
- L&T டெக்னாலஜி சர்வீசஸ் என்ற நிறுவனமானது, அரசினால் மேற்கொள்ளப்பட்ட முழு அளவிலான 5ஜி வலையமைப்புகளுக்கான அலைக்கற்றை நேரடி ஒதுக்கீட்டில் தனது ஆர்வத்தை வெளிப்படுத்திய முதல் தொழில்நுட்ப நிறுவனமாக மாறியுள்ளது.
- உத்தரப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள 296 கி.மீ. நீளமுள்ள பண்டேல்கண்ட் விரைவுச் சாலையைப் பிரதமர் சமீபத்தில் திறந்து வைத்தார்.
- உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி வினீத் சரண் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் நெறிமுறைகள் அதிகாரி மற்றும் குறைகேட்பு அதிகாரியாகப் பொறுப்பேற்றுள்ளார்.
- தேசியப் பங்குச் சந்தையின் புதிய மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியாக ஆஷிஷ் குமார் சவுகான் நியமிக்கப்பட்டுள்ளார்.
- தேசிய வேளாண் ஆராய்ச்சி மேலாண்மைக் கழகமானது அதன் ஒட்டுமொத்தச் செயல் திறனுக்காக வேண்டி 2021 ஆம் ஆண்டின் சர்தார் படேல் இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தின் சிறந்த நிறுவன விருதினைப் பெற்றுள்ளது.
- திரைப்படத் தயாரிப்பாளர் K.P.குமரன் 2021 ஆம் ஆண்டிற்கான மதிப்புமிக்க J.C. டேனியல் விருதிற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
    - மலையாளச் சினிமாத் துறைக்கு ஒரு தனிநபர் ஆற்றும் பங்களிப்பினை அங்கீகரிக்கும் வகையில் கேரள அரசாங்கத்தினால் ஆண்டுதோறும் இந்த விருது வழங்கப் படுகிறது.
- எலான் மஸ்க், ட்விட்டர் நிறுவனம் போலி கணக்குகளின் எண்ணிக்கை குறித்த போதுமான தகவலை வழங்கத் தவறியதை அடுத்து, 44 பில்லியன் டாலர் தொகையில் ட்விட்டரை வாங்குவதற்கான திட்டத்தினை ரத்து செய்துள்ளார்.

- கோடக் மஹிந்திரா வங்கியானது, வருமான வரித் துறையின் இணையவழி வருமான வரித் தாக்கல் செய்வதற்கான தளத்துடன் அதன் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பை நிறைவு செய்துள்ளது.
  - இதன் மூலம், கோடக் மஹிந்திரா வங்கியின் வாடிக்கையாளர்கள் இணைய வழியில் தங்கள் நேரடி வரிகளை இந்த இணைய தளத்தின் இணைய வழி வரிப் பதிவுப் பக்கத்தின் மூலம் செலுத்த முடியும்.
- 2023 ஆம் ஆண்டில் யூரோ நாணயத்தினை ஏற்றுக் கொள்வதற்கு குரோஷிய நாட்டிற்கு ஐரோப்பிய ஒன்றியம் தனது இறுதி ஒப்புதலை வழங்குகிறது.
  - இதனால், 2023 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியன்று யூரோ பணப் பிரிவில் இணையும் 20வது நாடாக குரோஷியா மாற உள்ளது.
- ஒவ்வோர் ஆண்டும், ஜூலை 22 ஆம் தேதியன்று மாம்பழங்களைக் கொண்டாடும் வகையில் தேசிய மாம்பழத் தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- எல்தோஸ் பால், அமெரிக்காவில் நடைபெறும் 2022 ஆம் ஆண்டிற்கான உலக தடகள சாம்பியன்ஷிப் மும்முறை தாண்டல் போட்டியின் இறுதிச் சுற்றிற்குத் தகுதி பெற்ற முதல் இந்தியர் ஆனார்.
- நீரஜ் சோப்ரா, அமெரிக்காவில் நடைபெறும் 2022 ஆம் ஆண்டிற்கான உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் முதன்முறையாக வெள்ளிப் பதக்கத்தினை வென்று வரலாறு படைத்துள்ளார்.
  - உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தினை வென்ற முதல் இந்தியராக இவர் உருவெடுத்துள்ளார்.
- திருவனந்தபுரத்தில் உள்ள மத்திய அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபையின் தேசியப் பல்துறை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனமானது, மென் ரகப் பொருட்களின் (CASM) வேதியியல் மற்றும் பயன்பாடுகள் குறித்த சர்வதேச மாநாட்டினை நடத்த உள்ளது.
- வங்காளதேசத்தைச் சேர்ந்த மலையேறும் வீராங்கனையான வசிஃபா நஷ்ரீன், இரண்டாவது உயரிய மலைச் சிகரமான K2 சிகரத்தில் ஏறிய முதல் வங்காளதேச நபர் என்ற பெருமையைப் பெற்றார்.
- முதலாவது கேலோ இந்தியா மகளிர் வாள்சண்டைப் போட்டியானது, புது டெல்லியில் உள்ள டல்கடோரா உள்விளையாட்டு அரங்கத்தில் நடத்தப்படும்.
- இந்தியா டுடே இதழுடன் இணைந்து டீம் மார்க்ஸ்மேன் என்ற அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட முதல் ஆய்வில் 2022 ஆம் ஆண்டின் பணி செய்ய மிகவும் விரும்பத்தகு இடங்களில் ஒன்றாக தேசிய அனல்மின் கழகம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- வோடபோன் ஐடியா நிறுவனமானது, அக்சயா முந்த்ரா என்பவரை மூன்று ஆண்டுக் காலத்திற்கு அதன் தலைமை நிர்வாக அதிகாரியாக நியமித்துள்ளது
- இலங்கையின் குடியரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கே, இலங்கையின் புதிய மற்றும் 15வது பிரதமராக தினேஷ் குணவர்தனா என்பவரை நியமித்துள்ளார்.
- 44வது சர்வதேச சதுரங்க ஒலிம்பியாட் போட்டிக்கான ‘வணக்கம் சென்னை’ கீதத்தை ஏ.ஆர்.ரஹ்மான் வெளியிட்டார்.
- கான்பூரில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் தொடக்க நிறுவன காப்பு மற்றும் புத்தாக்க மையமானது, "நிர்மான்" உத்வேகத் திட்டத்தை தொடங்கி உள்ளது.

- சர்வதேச கிரிக்கெட் சபையானது, அதன் 78வது வருடாந்திரப் பொதுக் கூட்டத்தில் மங்கோலியா, சுவிட்சர்லாந்து மற்றும் தஜிகிஸ்தான் ஆகிய நாடுகளை தனது புதிய உறுப்பினர் நாடுகளாக இணைத்தது.
- உலக வங்கியானது, இண்டர்மிட் கில் என்பவரை அதன் தலைமைப் பொருளாதார நிபுணராகவும், மேம்பாட்டுப் பொருளாதாரத்திற்கான மூத்த துணைத் தலைவராகவும் நியமித்துள்ளது.
    - கௌசிக் பாசுவுக்குப் பிறகு, இந்த சர்வதேச நிதி நிறுவனத்தின் தலைமைப் பொருளாதார நிபுணராக பொறுப்பேற்க உள்ள இரண்டாவது இந்தியர் கில் ஆவார்.
- பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் நிறுவனத்திற்கான 1.64 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான மறுசீரமைப்பு நிதிக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- பெங்களூரு, குஜராத், புது டெல்லி மற்றும் போபால் ஆகிய நான்கு வெவ்வேறு இடங்களில் 5G வலையமைப்பினை நிறுவி அதனை இந்தியத் தொலைத்தொடர்பு ஒழுங்கு முறை ஆணையம் பரிசோதித்து வருகிறது.
- ஐக்கிய நாடுகளின் பாலஸ்தீன அகதிகளுக்கான நிவாரணம் மற்றும் பணி முகமைக்கு இந்தியா 2.5 மில்லியன் அமெரிக்க டாலர்களை நிதியாக வழங்கியுள்ளது.
- அமெரிக்காவின் யோசெமிட்டி என்ற தேசியப் பூங்காவிற்கு அருகே ஏற்பட்ட ஒரு காட்டுத் தீயானது கட்டுப்பாட்டை மீறி கொழுந்து விட்டு எரிந்தது.
    - இது இந்த ஆண்டில் ஏற்பட்ட கலிபோர்னியாவின் மிகப்பெரிய காட்டுத் தீ நிகழ்வில் ஒன்றாக உருவெடுத்துள்ளது.
- இத்தாலியின் ரோம் நகரில் நடைபெற்ற 17 வயதுக்குட்பட்டோருக்கான கிரேக்க-ரோமன் உலக சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய மல்யுத்த வீரர் சூரஜ் வசிஷ்த் தனது முதலாவது தங்கப் பதக்கத்தினை வென்றார்.
- பி.வி.சிந்து மற்றும் இந்திய ஆடவர் ஹாக்கி அணித் தலைவர் மன்பிரீத் சிங் ஆகியோர் இங்கிலாந்தின் பர்மிங்ஹாமில் நடைபெற உள்ள காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளின் தொடக்க விழாவில் இந்திய நாட்டின் தேசியக் கொடியை ஏந்தி அணியை வழி நடத்திச் செல்ல உள்ள வீரர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

# தமிழ்நாடு செய்திகள்

## கல்லூரிக் கனவு திட்டம்

- முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கல்லூரிக் கனவு என்ற திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- இது ‘நான் முதல்வன்’ என்ற திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டது.
- இது 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு உயர்கல்விக்கான வழி காட்டுதலை வழங்குவதற்கான ஒரு திட்டமாகும்.
- இதனை மேலும் செம்மைப்படுத்தித் தமிழகத்தைக் கல்வியில் சிறந்து விளங்கும் ஒரு மாநிலமாக மாற்றுவதற்கான திட்டமே நான் முதல்வன் திட்டமாகும்.

## சூரியா திட்டம்

- சிங்கப்பூரைச் சேர்ந்த IGSS நிறுவனமானது தமிழக அரசுடன் இணைந்து, தமிழ்நாட்டில் 300 ஏக்கர் பரப்பளவில் 25,600 கோடி ரூபாய் முதலீடு மற்றும் மானியத்துடன் குறை கடத்தி உற்பத்திப் பூங்காவை நிறுவுவதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை மேற்கொண்டுள்ளது.
- இந்த உயர் தொழில்நுட்பத் தொழில்துறைப் பூங்கா சென்னைக்கு அருகில் நிறுவப்பட உள்ளது.
- IGSS என்ற துணிகர முதலீட்டு நிறுவனமானது தனது குறைகடத்தி உற்பத்திப் பூங்காவினை 'சூரியா திட்டம்' என்ற பெயரில் அறிமுகப்படுத்த உள்ளது.

## 'வணிகம் செய்வதை எளிதாக்குதல்' தரவரிசை




- 2020 ஆம் ஆண்டு 'வணிகச் சீர்திருத்தச் செயல் திட்டம் (BRAP) ஆனது சமீபத்தில் மத்திய நிதி அமைச்சகத்தினால் வெளியிடப்பட்டது.
- 2020 ஆம் ஆண்டு வணிகச் சீர்திருத்தச் செயல் திட்டமானது 15 வணிக ஒழுங்குமுறைப் பகுதிகளை உள்ளடக்கிய 301 சீர்திருத்த மதிப்புகளை உள்ளடக்கியது.
- வணிகச் சீர்திருத்தச் செயல் திட்டத்தின் அமலாக்கத்தின் அடிப்படையில் முதல் ஏழு சாதனையாளர்களின் பட்டியலில் தமிழ்நாடும் இடம் பெற்றுள்ளது.
- முன்பு 14வது இடத்தில் இருந்த தமிழகம் தற்போது மூன்றாவது இடத்திற்கு முன்னேறி உள்ளது.
- ஆந்திரா 98% மதிப்புடன் முதலிடத்திலும், குஜராத் 97.7% மதிப்புடன் இரண்டாம் இடத்திலும் தமிழ்நாடு 97% மதிப்புடன் மூன்றாம் இடத்திலும் உள்ளன.

## சூரியசக்தி மின் உற்பத்தி நிலையம்

- டாடா பவர் நிறுவனமானது திருநெல்வேலி மாவட்டத்தில் ரூ.3000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய சூரிய மின்கலம் மற்றும் மாதிரி உற்பத்தி நிலையத்தினை அமைப்பதற்கு தமிழ்நாடு அரசுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.
- இது புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு மாறுதல் மற்றும் இம்மாநிலத்தில் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதல் ஆகியவற்றை ஊக்குவிகச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## 20 புதிய கல்லூரிகள்

- மு.க.ஸ்டாலின் அவர்கள் 20 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைக் காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்.
- இந்த 20 கல்லூரிகளும் தற்போது தற்காலிகக் கட்டிடங்களில் செயல்படும்.
- அவற்றிற்கானக் கட்டிடங்கள் அரசால் கட்டப்பட்ட பிறகு இந்தக் கல்லூரிகள் நிரந்தரக் கட்டிடங்களுக்கு மாற்றப்படும்.
- மாநிலத்தில் 20 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தொடங்குவதற்கான ஒரு அறிவிப்பினை உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி அவர்கள் சட்டசபையில் வெளியிட்டார்.
- 2021-22 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட ஒரு அறிவிப்பின் படி, மாநில அரசானது 10 கல்லூரிகளை நிறுவத் திட்டமிட்டிருந்தது.
- பின்னர் 2022-23 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அறிவிப்பில், மேலும் 10 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை நிறுவ மாநில அரசு திட்டமிட்டுள்ளது.

## இந்தியாவின் முதல் ஏவுகல இயந்திர உற்பத்தித் தொழிற்சாலை

- அக்னிகுல் காஸ்மோஸ் என்ற நிறுவனமானது, முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட ஏவுகல இயந்திரங்களை உற்பத்தி செய்வதற்கான இந்தியாவின் முதல் தொழிற் சாலையைச் சென்னையில் துவக்கியுள்ளது.
- இது அதன் சொந்த உள்பயன்பாட்டு ஏவுகலங்களுக்கான இயந்திரங்களைத் தயாரிக்கப் பயன்படும்.
- இந்த உற்பத்தி நிலையமானது வாரத்திற்கு இரண்டு ஏவுகல இயந்திரங்கள் தயாரிப்பதன் மூலம் ஒவ்வொரு மாதமும் ஒரு ஏவுகல வாகனத்தினைத் தயாரிக்கும் திறன்களைக் கொண்டது,
- இது அக்னிபான் என்ற ராக்கெட்டினை ஏவுவதற்கு தேவையான எண்ணிக்கையிலான இயந்திரங்களை உருவாக்குகிறது.
- இது தனிப் பயனாக்கக் கூடிய, இரண்டு நிலைகள் கொண்ட ஒரு ஏவுகல வாகனமாகும்.
- இது 700 கி.மீ. உயரத்தில் உள்ள (புவி தாழ்மட்ட சுற்றுப்பாதைகள்) சுற்றுப் பாதைக்கு 100 கிலோ எடையுள்ளப் பொருட்களை எடுத்துச் செல்லும் திறன் கொண்டது.
- மேலும், இது குறைந்தபட்சக் குறுக்கீடுகளோடு வன்பொருள் மாற்றத்தினை மேற் கொள்ளச் செய்வதற்கான உள்ளமைவைச் செயல்படுத்துகிறது.

## தேசிய நிறுவனங்கள் தரவரிசைக் கட்டமைப்பின் தரவரிசையில் தமிழகக் கல்லூரிகள்

# 4th year in a row, IIT-M best institution

### Retains Position As Country's Top Engg College

Times News Network

**New Delhi/Chennai:** For the fourth year in a row, the Indian Institute of Technology Madras (IIT-M) has topped the National Institutional Ranking Framework (NIRF) rankings in the overall category. It also retained its position as the country's best engineering institution, which it has held ever since the rankings began in 2016.

While Delhi's Miranda House, IIT, Jawaharlal Nehru University, All India Institute of Medical Sciences and Jamia Millia Islamia (JMI) continued their good show, sought-after colleges such as St Stephen's, Shri Ram College of Commerce (SRCC) and Lady Shri Ram (LSR) have dropped in the rankings. St Stephen's, for the first time, is not in the top 10.

**HOW COLLEGES IN TN PERFORMED**

| Name | NIRF 2021 | NIRF 2022 |
|---|---|---|
| IIT Madras | 1 | 1 |
| Amrita Vishwa Vidyapeetham | 12 | 16 |
| Vellore Institute of Technology | 21 | 18 |
| NIT Trichy | 23 | 21 |
| Anna University | 25 | 22 |
| Bharathiar University | 22 | 25 |

**2 FROM CITY**

- Presidency, Chennai | **Rank 3**
- Loyola, Chennai | **Rank 4**
- PSGR Krishnammal College for Women | **Rank 6**

Indian Institute of Science, Bengaluru, topped in the university and research categories. Miranda House topped the list of arts and science colleges. Several government and private institutions in Tamil Nadu did well in the rankings. They include Anna University, which improved over its 2021 ranks in overall (22), engineering (17) and research (21) categories. Amrita Vishwa Vidyapeetham in Coimbatore (16), Vellore Institute of Technology (18), National Institute of Technology in Trichy (21), and Bharathiar University (24) made it to the top 25 engineering colleges this year.

▸ Dravidian model, P 6

- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கழகமானது ஒட்டு மொத்தப் பிரிவில் நாட்டின் சிறந்த உயர்கல்வி நிறுவனமாகத் தரநிலைப் படுத்தப்பட்டுள்ளது.
- ஒட்டு மொத்தப் பிரிவில், முதல் 200 கல்லூரிகளில் தமிழக மாநிலத்தைச் சேர்ந்த 38 கல்லூரிகள் இடம் பெற்றுள்ளன.
- மாநில (பிரசிடென்சி) கல்லூரியானது, மூன்றாவது சிறந்த கல்லூரியாக மீண்டும் தனது இடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- இதில் லயோலா கல்லூரி நான்காவது இடத்தைப் பெற்றுள்ளது.
- இதில் சென்னை கிறிஸ்தவக் கல்லூரி 17வது இடத்தில் உள்ளது.
- நான்கு மகளிர் கல்லூரிகள் – ராணி மேரி (47), எத்திராஜ் (65), மகளிர் கிறிஸ்டியன் (72) மற்றும் ஸ்டெல்லா மேரிஸ் (76) ஆகியவை முதல் 76 இடங்களில் இடம் பெற்றுள்ளன.
- இந்திய நாட்டின் முதல் 200 கல்வி நிறுவனங்களின் பட்டியலில் தமிழக மாநிலத்தின் 73 கல்லூரிகள் இடம்பெற்றுள்ளன.
- நாட்டின் சிறந்தப் பொறியியல் நிறுவனங்களில் பதிமூன்று கல்லூரிகள் சென்னையில் உள்ளவையாகும்.
- 11 சிறந்த முதுகலை வணிக மேலாண்மை கல்வி நிறுவனங்கள் தமிழகத்தில் அமைந்துள்ளன.

## திறன்மிகு நகரத்திற்கான நிதிப் பயன்பாடு


- அரசின் முதன்மையான திறன்மிகு நகரங்கள் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதியின் பயன்பாடுகளின் அடிப்படையில் தரவரிசைப்படுத்தப்பட்ட மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.
- இதில் உத்தரப் பிரதேசம் இரண்டாவது இடத்தில் உள்ளது.
- 100 திறன்மிகு நகரங்களைக் கட்டமைப்பதற்கு மத்திய அரசு ரூ.30,751.41 கோடியை வெளியிட்டுள்ள நிலையில் அதில் 90% நிதியானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

- மத்திய அரசானது 2015 ஆம் ஆண்டு ஜூன் 25 ஆம் தேதியன்று திறன்மிகு நகரங்கள் திட்டத்தைத் தொடங்கியது.
- மத்திய அரசானது இத்திட்டத்திற்காக ஒரு நகரத்தினைக் கட்டமைப்பதற்காக வேண்டி ஆண்டுக்குச் சராசரியாக ரூ.100 கோடி என்ற அளவில் ஐந்தாண்டுகளுக்கு ரூ.48,000 கோடி நிதியுதவி அளிக்கும்.

## சதுரங்க ஒலிம்பியாட் போட்டியின் தொடக்க விழா

- சென்னையில் நடைபெறுகின்ற 44வது சதுரங்க ஒலிம்பியாட் போட்டியைப் பிரதமர் தொடங்கி வைத்தார்.
- இந்தியாவில் சதுரங்க ஒலிம்பியாட் போட்டி நடைபெறுவது இதுவே முதல் முறை ஆகும்.
- இதில் அதிக எண்ணிக்கையிலான நாடுகள், அதிக எண்ணிக்கையிலான அணிகள் மற்றும் பெண் சதுரங்க வீராங்கனைகளின் அதிக அளவிலானப் பங்கேற்பு என இது பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளது.
- முதலில் இந்த ஒலிம்பியாட் போட்டியானது ரஷ்யாவில் நடைபெறத் திட்டமிடப்பட்டது.
- ஆனால் ரஷ்யா - உக்ரைன் மோதல் காரணமாக அது ரத்து செய்யப்பட்டது.
- இதில் கலந்து கொள்கின்ற 73 இந்தியக் கிராண்ட் மாஸ்டர்களில் 26 பேர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.
- இந்த ஒலிம்பியாட்டின் வேஷ்டி அணிந்தச் சின்னமான தம்பி சகோதரத்துவத்தின் அடையாளமாகத் திகழ்கிறது.

## காலை உணவுத் திட்டம்



- தமிழக அரசானது ஜூலை 27ஆம் தேதியன்று, 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின்' முதற்கட்டத்தினை அமல்படுத்தச் செய்வதற்கான ஒரு அரசாணையை வெளியிட்டது.
- இது "இந்தியாவின் இத்தகைய முதல் வகைத் திட்டமாக" விளங்கும்.
- ஒவ்வொரு மாணவருக்கும் காய்கறிகளுடன் கூடிய 150-500 கிராம் அளவில் சமைத்த சாம்பார் உடன் கூடிய உணவானது காலை உணவாக வழங்கப்பட உள்ளது.
- இது 1,545 அரசு தொடக்கப் பள்ளிகளில் செயல்படுத்தப்பட உள்ளது.
- 2022-23 ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதும் உள்ள 1.14 லட்சத்திற்கும் அதிகமான 01 முதல் 05 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் இந்தத் திட்டத்தின் மூலம் பயன் அடைவார்கள்.
- இந்த ஆண்டில் இத்திட்டத்திற்கான மொத்தச் செலவு 33.56 கோடி ரூபாய் ஆகும்.

# தேசியச் செய்திகள்

## வெளிநாடு வாழ்இந்தியருக்கான மிஸ் இந்தியா பட்டம் 2022

- குஷி படேல், 2022 ஆம் ஆண்டிற்கான வெளிநாடு வாழ்இந்தியருக்கான மிஸ் இந்தியா பட்டத்தினை வென்றவராக அறிவிக்கப்பட்டார்.
- இது இந்தியாவிற்கு வெளியே பிற நாடுகளில் மிக நீண்ட காலமாக நடைபெறும் ஒரு இந்தியப் போட்டியாகும்
- இவர் ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த உயிரியல் மருத்துவ மாணவி ஆவார்.
- கயானாவைச் சேர்ந்த ரோஷானி ரசாக் என்பவர் 2022 ஆம் ஆண்டிற்கான மிஸ் டீன் இந்தியாவாக அறிவிக்கப்பட்டார்.
- கடந்த 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் மும்பையில் உள்ள லீலா தங்கும் விடுதியில் ஏற்பாடு செய்யப் பட்டதையடுத்து, மூன்று ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு இந்த ஆண்டிற்கானப் போட்டி தற்போது நடத்தப்பட்டது.


NRI Khushi Patel from UK wins Miss India Worldwide 2022

## தேசிய அளவில் சிறந்தத் தளவாடங்களுக்கான விருதுகள்

National Logistics Excellence Awards 2021 - List of Winners

- Best Cargo Airline & Terminal Operator – FedEx Express Transportation and Supply Chain Services (India) Pvt. Ltd.
- Best Road Freight Service Provider – DHL Supply Chain India Pvt. Ltd.
- Best Rail Freight Service Provider – Adani Logistics Ltd.
- Best Shipping & NVOCC service Provider – Maersk India Pvt. Ltd.
- Best Port Service Provider – DP World
- Best Warehouse service provider – Transport Corporation of India Ltd. (Through TCI Supply Chain Solutions)
- Best Cold Chain/Refrigerated service provider - Transport Corporation of India Ltd. (Through TCI Supply Chain Solutions)
- Best Express Logistics Service Provider – Safe express Pvt. Ltd.
- Best Logistics infrastructure and service provider – Adani Logistics Ltd.
- Best Freight Forwarders – Kuehne + Nagel Pvt. Ltd.
- Best Customs House Agent/Customs broker – International Clearing & Shipping Agency (India) Pvt. Ltd.
- Industry Excellence Award – Sun Pharmaceutical Industries Ltd.

❖ முதலாவது தேசிய அளவில் சிறந்தத் தளவாடங்களுக்கான விருதுகள் வழங்கும் விழாவானது புதுதில்லியில் இந்திய அரசால் நடத்தப்பட்டது.

❖ மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் மற்றும் வர்த்தகம் & தொழில்துறை இணை அமைச்சர் சோம் பிரகாஷ் ஆகியோர் 12 பிரிவுகளில் இந்த விருதுகளை வழங்கினர்.

❖ இந்தியாவில் தளவாட விநியோகச் சங்கிலியில் ஈடுபட்டுள்ள பல்வேறு வீரர்களுக்கு உரிய அங்கீகாரம் வழங்குவதற்காக இந்த விருதானது நிறுவப்பட்டது.

## ஒரே நாடு, ஒரே சிறுநீரக கூழ்மப் பிரிப்பு

❖ இது தேசிய சுகாதாரத் திட்டத்தின் கீழ் பிரதான் மந்திரி தேசிய சிறுநீரக கூழ்மப் பிரிப்பு என்ற திட்டத்தின் கீழ் அரசாங்கத்தால் தொடங்கப்பட உள்ளது.

❖ இந்தத் திட்டத்தின் கீழ், இந்தியாவில் உள்ள எந்தவொரு நோயாளியும் நாட்டில் உள்ள எந்தப் பகுதியிலிருந்தும் சிறுநீரக கூழ்மப் பிரிப்பு வசதியைப் பெறலாம்.

❖ இந்தியாவில் பெரும்பாலும் தனியார் துறையில், ஏறத்தாழ 4,950 சிறுநீரக கூழ்மப் பிரிப்பு மையங்கள் இருந்த போதிலும், தற்போதுள்ள உள்கட்டமைப்பினைக் கொண்டு தேவைகளைப் பூர்த்தி செய்யும் வீதம் பாதிக்கும் குறைவாகவே உள்ளது.

## பல்லோன்ஜி மிஸ்திரி

- ஷபூர்ஜி பல்லோன்ஜி குழுமத்தின் தலைவர் பல்லோன்ஜி மிஸ்திரி, மும்பையில் தனது 93 வயதில் காலமானார்.
- மிஸ்திரியின் குடும்பம் இந்தியக் கட்டுமானம் மற்றும் மனை விற்பனைப் பெரு நிறுவனமான ஷபூர்ஜி பல்லோன்ஜி குழுமத்தினை இயக்கி வருகிறது.
- இது 150 ஆண்டுகளுக்கு முன்பு நிறுவப்பட்டது.
- மேலும், தற்போது 50க்கும் மேற்பட்ட நாடுகளில் 50,000க்கும் மேற்பட்ட மக்கள் இந்த நிறுவனத்தில் பணியாற்றுகின்றனர்.
- இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் ஓமன் நாட்டின் சுல்தானுடைய நீலம் மற்றும் தங்க நிறத்தினாலான அல் ஆலம் அரண்மனை ஆகியவை இந்த நிறுவனம் கட்டமைத்த முக்கியத் திட்டங்களில் சிலவாகும்.
- பல்லோன்ஜி மிஸ்திரியின் மகன் சைரஸ் மிஸ்திரி 2016 ஆம் ஆண்டில் டாடா சன்ஸ் குழுமத்தின் தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

## புதிய தொழிலாளர் குறியீடுகள் - இந்தியா

- இந்தியாவில் 4 புதிய தொழிலாளர் குறியீடுகளின் தொகுப்பு மத்திய அரசால் வெளியிடப் பட உள்ளது.
- அவை 2022 ஆம் ஆண்டு ஜூலை 01 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வர உள்ளன.
- இந்த நான்கு தொழிலாளர் குறியீடுகளின் கீழ் உள்ள விதிகள் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சகத்தினால் இறுதி செய்யப்பட்டுள்ளன.
- புதிய தொழிலாளர்க் குறியீட்டின் நான்கு விதிகள் ஊதியங்கள், தொழில்துறை உறவுகள், சமூகப் பாதுகாப்பு மற்றும் தொழில் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் வேலை நிலைகள் ஆகியனவாகும்.
- வழக்கமான வேலை நேரமானது தற்போதுள்ள 9 மணிநேரத்தில் இருந்து ஒரு நாளைக்கு 12 மணி நேரமாக மாற்றப்படும்.
- ஒரு வாரத்தில் 3 கட்டாய விடுமுறைகளுடன் 4 நாட்கள் வேலை நாட்கள் என வரம்பிட வேண்டும்.
- இதன் அர்த்தம் 48 மணி நேரமாக விதிக்கப்பட்டுள்ள வாரத்தின் மொத்த வேலை நேரம் ஆனது மாற்றப் படாது என்பதாகும்.
- பணியாளர்கள் மற்றும் முதலாளிகள் ஆகியோரின் வருங்கால வைப்பு நிதிக்கானப் பங்களிப்புகள் அதிகரிப்பதால் ஊழியர்களின் சம்பளம் குறையும்.
- வருங்கால வைப்பு நிதிப் பங்களிப்பு என்பது மொத்த ஊதியத்தில் 50 சதவீதமாக இருக்க வேண்டும்
- முன்னதாக, விடுப்பு வேண்டுவதற்கு ஒரு வருடத்தில் குறைந்தபட்சம் 240 வேலை நாட்கள் வேலை செய்திருக்க வேண்டும் என்று சட்டம் இருந்தது.
- தற்போது இந்த வரம்பு 180 வேலை நாட்களாக குறைக்கப்பட்டுள்ளது.

29 labour laws now amalgamated into 4 labour codes

Wage security, social security & health security ensured for 50 crore workers

| Name of the Code | Number of amalgamated laws |
|---|---|
| Wage Code | 4 |
| Industrial Relation Code | 3 |
| Occupational Safety, Health & Working Conditions Code | 13 |
| Social Security Code | 9 |
| Total | 29 |

## பால் ஸ்வராஜ் தளம்

- தேசியக் குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் பால் ஸ்வராஜ் என்ற தளத்தின் கீழ் "CiSS செயலி" ஒன்றைத் தொடங்கியுள்ளது.
- இது தெருக்களில் வாழும் சூழ்நிலைகளில் உள்ள குழந்தைகளின் மறுவாழ்வு நடவடிக்கைகளுக்காக (CiSS) உதவுவதற்கு என்று உருவாக்கப் பட்டதாகும்.
- இது 2015 ஆம் ஆண்டு சிறார் நீதிச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது.

## பெங்களூரு ஒரு சுகாதாரம் என்ற சோதனைத் திட்டம்

- பால்வளம் மற்றும் கால்நடை வளர்ப்புத் துறை அமைச்சகம் ஆனது பெங்களூரில் 'ஒரு சுகாதாரம்' என்ற சோதனைத் திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- இது இந்தியத் தொழில் கூட்டமைப்பு மற்றும் பில் & மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை ஆகியவற்றினை அமலாக்கப் பங்குதாரர்களாகக் கொண்டுச் செயல்படுத்தப்படும்.
- இது மனிதர்கள், விலங்குகள் மற்றும் சுற்றுச்சூழல் நலன் ஆகியவற்றிற்கானப் பங்கு தாரர்களை ஒரே தளத்தில் கொண்டு வரும்.
- எதிர்காலத்தில் கோவிட்-19 தொற்றுநோய் போன்ற விலங்குவழித் தொற்று நோய் உருவாவதைத் தடுப்பதற்கான சில தீர்வுகளை உருவாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கால்நடை வளர்ப்பு மற்றும் பால்வளத் துறையானது, கர்நாடகா மாநிலத்தோடுச் சேர்த்து உத்தரகாண்ட் மாநிலத்திலும் இந்த சோதனைத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.
- கால்நடை வளர்ப்பு மற்றும் பால்வளத் துறையானது தேசிய அளவில் ஒரு சுகாதாரச் செயல்திட்டத்தினை உருவாக்க உள்ளது.
- இது எதிர்காலத்தில் விலங்குவழித் தொற்று நோய் உருவாவதைத் தடுக்க உதவும்.

## குறுகியக் காலப் பணியாளர்கள் குறித்த நிதி ஆயோக் அமைப்பின் அறிக்கை

- இந்தியாவிலுள்ள குறுகியக் காலப் பணியாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பை வழங்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை நிதி ஆயோக் பரிந்துரைத்துள்ளது.

- 2029-30 ஆம் ஆண்டில் இந்த பணியாளர்களின் எண்ணிக்கையானது 2.35 கோடியாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- நிதி ஆயோக் வெளியிட்ட ஒரு ஆய்வின்படி, 2020-21 ஆம் ஆண்டில் குறுகியக் காலப் பணியாளர்களின் எண்ணிக்கையானது 77 லட்சமாக இருக்கும் என மதிப்பிடப் பட்டு உள்ளது.
- இந்த அறிக்கையானது குறுகியக் காலப் பணியாளர்களை ஒரு குறிப்பிட்டத் தளத்தினைச் சார்ந்தப் பணியாளர்கள் மற்றும் ஒரு குறிப்பிட்டத் தளத்தினைச் சாராதப் பணியாளர்கள் என இரு வேறு பிரிவுகளாக வகைப்படுத்தியது.
- ஒரு குறிப்பிட்டத் தளத்தினைச் சார்ந்தப் பணியாளர்கள் என்பது இணையதள மென்பொருள் செயலிகள் அல்லது எண்ணிமத் தளங்களின் சேவைக்காகப் பணி புரிபவர்களைக் குறிக்கிறது.
- ஒரு குறிப்பிட்டத் தளத்தினைச் சாராதப் பணியாளர்கள் என்பது பொதுவாக சாதாரண கூலித் தொழிலாளர்கள் மற்றும் பெரும்பாலான துறைகளில் சொந்தமாகப் பகுதி நேரமாகவோ அல்லது முழு நேரமாகவோ சிறுதொழில் செய்வோர் ஆகியோரைக் குறிக்கிறது.
- 'ஸ்டார்ட் அப் இந்தியா முன்முயற்சியின் பாணியில் 'பிளாட்ஃபார்ம் இந்தியா முன் முயற்சியை' அறிமுகப்படுத்த நிதி ஆயோக் பரிந்துரைத்தது.
- தனது மொத்தப் பணியாளர்களில் மூன்றில் ஒரு பங்கு ஊனமுற்றோர் மற்றும் பெண்கள் ஆகியோரைக் கொண்ட நிறுவனங்களுக்கு ஊக்கத்தொகை வழங்கச் செய்வதற்கான முன்மொழிதலையும் இது முன்வைத்தது.


## உத்தவ் தாக்கரே

- மகாராஷ்டிர முதல்வர் உத்தவ் தாக்கரே தனது முதல்வர் பதவியை ராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார்.
- சட்டமன்ற மேலவை உறுப்பினர் பதவியையும் அவர் ராஜினாமா செய்துள்ளார்.
- நம்பிக்கை வாக்கெடுப்பு அல்லது பெரும்பான்மையை நிரூபிப்பதற்கான வாக்கெடுப்பினை மேற்கொள்வதற்குத் தடை விதிக்க உச்ச நீதிமன்றம் மறுத்ததை அடுத்து இந்த அறிவிப்பினை வெளியிட்டார்.
- சிறையில் உள்ள இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களான நவாப் மாலிக் மற்றும் அனில் தேஷ்முக் ஆகியோர் நம்பிக்கை வாக்கெடுப்பில் பங்கேற்கவும் நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.
- இந்த இரண்டு தேர்ந்தெடுக்கப்பட்டச் சட்டமன்ற உறுப்பினர்களும் அமலாக்க இயக்குநரகம் / மத்தியப் புலனாய்வு வாரியம் பதிவு செய்த வழக்குகளின் காரணமாக நீதிமன்றக் காவலில் இருப்பதால், அவர்களை வாக்களிக்க அழைத்துச் செல்வதற்கு அந்த இரு நிறுவனங்களுக்கும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.
- மகாராஷ்டிர ஆளுநர் பகத் சிங் கோஷ்யாரி, மகாராஷ்டிரா முதல்வர் உத்தவ் தாக்கரேவுக்கு எதிராக நம்பிக்கை வாக்கெடுப்பினை நடத்துவதற்காக ஜூன் 30 ஆம் தேதியன்று, மகாராஷ்டிரா மாநிலச் சட்டமன்றத்தின் ஒரு சிறப்புக் கூட்டத்தினைக் கூட்டுவதற்கு அழைப்பு விடுத்திருந்தார்.

## இந்தியத் தலைமை அரசு வழக்குரைஞர்

- 2017 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் முகுல் ரோஹத்கி என்பவருக்குப் பதிலாக இந்தியத் தலைமை அரசு வழக்குரைஞராக K.K. வேணுகோபால் நியமிக்கப் பட்டார்.
- இப்போது, K.K. வேணுகோபாலின் பதவிக் காலமானது 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் மேலும் 3 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டது.

## மாவட்டங்களுக்கான செயல்திறன் தரவரிசைக் குறியீடு




- கல்வித் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறை, 2018-19 மற்றும் 2019-20 ஆகிய ஆண்டுகளுக்கான மாவட்டங்களுக்கான செயல் திறன் தரவரிசைக் குறியீட்டை வெளியிட்டது.
- 2019-20 ஆம் ஆண்டு அறிக்கையின்படி, ராஜஸ்தானின் சுமார் 3 மாவட்டங்கள் பள்ளிக் கல்வியின் செயல்திறனில் 80 சதவீதத்திற்கு மேல் மதிப்பினைப் பெற்றுள்ளன.
- இந்த மாவட்டங்கள் 'உத்கர்ஷ்' என்ற தரத்தினை (இரண்டாம் உயரிய தரம்) பெற்று உள்ளன.
- இது விரிவானப் பகுப்பாய்விற்கான ஒரு குறியீட்டை உருவாக்குவதன் மூலம் மாவட்ட அளவில் பள்ளிக் கல்வி முறையின் செயல்திறனை மதிப்பிடுகிறது.
- இது 83 குறிகாட்டிகளில் 600 புள்ளிகளின் மொத்த மதிப்பீட்டினைக் கொண்டுள்ளது.
- இந்த 83 குறிகாட்டிகள் 6 பிரிவுகளின் கீழ் தொகுக்கப்பட்டுள்ளன.
  - மதிப்பீட்டு முடிவுகள்
  - செயல்திறன்மிக்க வகுப்பறைப் பரிமாற்றங்கள்
  - உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மாணவர்களுக்கான உரிமை வழங்கீடுகள்
  - பள்ளிப் பாதுகாப்பு மற்றும் குழந்தைப் பாதுகாப்பு
  - டிஜிட்டல் (எண்ணிமம்) கற்றல்
  - ஆளுகைச் செயல்முறை

## யுரேனியச் சுரங்கம் - ராஜஸ்தான்

- இந்தியாவில் யுரேனியச் சுரங்கத் தொழிலினை ராஜஸ்தான் தொடங்கியுள்ளது.
- ராஜஸ்தானின் சிகார் மாவட்டத்தில் உள்ள கண்டேலா தாலுகாவில் உள்ள ரோஹில் என்ற இடத்தில் மிகப்பெரிய அளவில் யுரேனியம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- ஒரு முதற்கட்ட மதிப்பீடுகளின்படி, சுமார் 12 மில்லியன் டன் யுரேனியம் இருப்பு இந்தப் பகுதியில் இருக்க வாய்ப்புள்ளது.
- தற்போது இந்தியாவில் ஜார்க்கண்ட் மாநிலத்தில் உள்ள சிங்பூமின் ஜஜகோடா மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய இடங்களில் யுரேனியம் தோண்டி எடுக்கப்பட்டு வருகிறது.
- உலகில் அதிகளவில் யுரேனியம் உற்பத்தியாகும் நாடுகள் கஜகஸ்தான், கனடா மற்றும் ஆஸ்திரேலியா ஆகியனவாகும்.
- ரஷ்யா, நமீபியா, உஸ்பெகிஸ்தான், அமெரிக்கா மற்றும் உக்ரைன் ஆகிய நாடுகளில் யுரேனியத்தின் கனிமங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

| Mines | States |
|---|---|
| Coastal sands | Kerala |
| Doimasiat, Khasi hills | Meghalaya |
| Dilwara-Kirovali, Udaipur | Rajasthan |
| Rohil, Sikar | Rajasthan |
| Jadugoda, Turamdih, Narwapahar | Jharkhand |
| Tumallapalle | Andhra Pradesh |
| Lambapur pedagatu | Andhra Pradesh |
| Gogi | Karnataka |

## சிறந்த தேசிய நெடுஞ்சாலை விருதுகள் 2021

- இந்த விருது வழங்கும் விழாவானது டெல்லியில் உள்ள விஞ்ஞான் பவனில் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப் பட்டது.
- இது "சாலைக் கட்டமைப்பில் புத்தாக்கம் மற்றும் சிறந்த செயல்திறன்" என்ற ஒரு கருத்துருவின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டது.


## டி-ஹப்

- தெலுங்கானா முதல்வர் K. சந்திரசேகர் ராவ் அவர்கள் ஹைதராபாத்தில் அமைக்கப் பட்டுள்ள டி-ஹப் என்ற புத்தாக்க மையம் மற்றும் சூழலமைவு இயக்ககத் தொழில் ஊக்குவிப்பு அமைப்பின் புதிய கட்டிடத்தினைத் திறந்து வைத்தார்.
- இது மொத்தமாக 5.82 லட்சம் சதுர அடிக்கும் அதிகமான பரப்பளவில் கட்டப் பட்டு உள்ளது.
- இது உலகின் மிகப்பெரியப் புத்தாக்கச் சூழலமைவாகக் கருதப்படுகிறது.

## PADMA

- மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் பாதுகாப்புக் கணக்குகளின் தலைமைக் கட்டுப்பாட்டாளர் (CGDA) ரஜ்னிஷ் குமார் "மாதாந்திரக் கொடுப்பனவுகள் வழங்கீட்டின் ஊதியப் பதிவேட்டினைத் தன்னியக்க முறையில் மாற்றுதல்" (PADMA) என்ற முறையைத் தொடங்கி வைத்தார்.

- இது இந்தியக் கடலோரக் காவல்படைக்காக வேண்டி தொடங்கப்பட்ட தானியங்கு ஊதியம் மற்றும் கொடுப்பனவுகள் வழங்கீட்டு அமைப்பாகும்.
- இது பாதுகாப்புக் கணக்குத் துறையின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது.
- மாதாந்திரக் கொடுப்பனவுகள் வழங்கீட்டின் ஊதியப் பதிவேட்டினைத் தன்னியக்க முறையில் மாற்றுதல் திட்டம் தொடங்கப்பட்ட நிகழ்வானது ஒரு மையப்படுத்தப்பட்ட ஊதிய முறையின் (CPS) தொடக்கத்தைக் குறிக்கிறது.




## வணிகச் சீர்திருத்த நடவடிக்கை 2020

- இதனை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் சமர்ப்பித்தார்.
- இதன்படி 7 மாநிலங்கள் சிறந்த சாதனை மாநிலங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.
- ஆந்திரப் பிரதேசம், குஜராத், ஹரியானா, கர்நாடகா, பஞ்சாப், தெலுங்கானா, தமிழ்நாடு ஆகியவை முன்னணியிலுள்ள சாதனை படைத்த மாநிலங்கள் ஆகும்.
- இந்தச் சாதனைப் படைத்த மாநிலங்களின் குழுவில் இமாச்சலப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, ஒடிசா, உத்தரகாண்ட் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகியவை அடங்கும் என்றும் இந்தக் கணக்கெடுப்பு குறிப்பிட்டது.
- சாதனை நிலையை எட்ட முயன்று வரும் மாநிலங்களின் பிரிவில் அசாம், சத்தீஸ்கர், கோவா, ஜார்க்கண்ட், கேரளா, ராஜஸ்தான் மற்றும் மேற்கு வங்காளம் ஆகியவை அடங்கும்.

## GAIL நிறுவனத்தின் புதிய தலைவர்

- இந்தியன் எண்ணெய்க் கழக நிறுவனத்தின் சந்தீப் குமார் குப்தா, இந்தியாவின் மிகப் பெரிய எரிவாயுப் பயன்பாட்டு நிறுவனமான இந்திய வாயு ஆணையம் அல்லது GAIL என்ற நிறுவனத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- ஆகஸ்ட் 31 ஆம் தேதியன்று ஓய்வு பெற உள்ள மனோஜ் ஜெயினுக்குப் பதிலாக இவர் நியமிக்கப் படுவார்.
- இந்தப் பரிந்துரையைப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் தலைமையிலான அமைச்சரவையின் நியமனக் குழு சரிபார்க்கும்.
- மத்திய ஊழல் தடுப்பு ஆணையம் மற்றும் மத்தியப் புலனாய்வு வாரியம் போன்ற ஊழல் எதிர்ப்பு அமைப்புகள் தடையில்லாச் சான்றுகளை வழங்கியப் பிறகு இந்த நியமனம் மேற் கொள்ளப் படும்.

## GOAL திட்டம்

- மெட்டா நிறுவனமானது (முன்னதாக பேஸ்புக்) பழங்குடியினர் விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் ஒத்துழைப்புடன் 'Going Online as Leaders - GOAL' திட்டத்தின் இரண்டாம் கட்டத்தைத் தொடங்கியது.
- GOAL என்பது ஒரு எண்ணிமக் கல்வியறிவு மற்றும் வழிகாட்டல் முன்னெடுப்பாகும்.
- இது எண்ணிம அதிகாரமளித்தல் அறக்கட்டளையுடன் (இந்தியா) உடன் இணைந்து பேஸ்புக் நிறுவனம் மேற்கொண்ட ஒரு முன்னெடுப்பாகும்.
- இது நாட்டின் பழங்குடிச் சமூகங்களைச் சேர்ந்த 10 லட்சம் இளைஞர்கள் மற்றும் பெண்களை எண்ணிம முறை அறிவில் மேம்படுத்துதல், இணைத்தல் மற்றும் அவர்களுக்கு அதிகாரம் அளித்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## வன (வளங்காப்பு) விதிகள் – 2022

- சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகமானது 2022 ஆம் ஆண்டு வன (வளங்காப்பு) விதிகளை வெளியிட்டுள்ளது.
- இது 1980 ஆம் ஆண்டு வன (வளங்காப்பு) சட்டத்தின் 4வது பிரிவினால் வழங்கப் படுகிறது.
- மேலும், இது 2003 ஆம் ஆண்டு வன (வளங்காப்பு) விதிகளுக்கான பதிலீட்டு விதிகள் ஆகும்.

### *விதிமுறைகள்*

- மாநிலம்/ஒன்றியப் பிரதேசத்தில் ஒரு ஆலோசனைக் குழு, ஒரு பிராந்திய அளவில் அதிகாரமளிக்கப் பட்ட குழு மற்றும் ஒரு ஆய்வுக் குழுவை அமைத்தல்.
- இது 40 ஹெக்டேர் வரையிலான நிலம் மற்றும் 0.7 வரையிலான மேல்பரப்பு கிளை அடர்த்தி கொண்ட வன நிலங்களைப் பயன்படுத்தும் அனைத்து முற்போக்குத் திட்டங்களையும் (எடுத்துக்காட்டாக சாலைகள், நெடுஞ்சாலைகள் போன்றவை) ஆய்வு செய்யும்.
- ஒவ்வொரு திட்டத்தையும் விரைவாக மதிப்பாய்வுச் செய்வதற்காக ஒரு குறிப்பிட்ட நேரம் வழங்கப்படும்.
- வனவாசிகளின் வன உரிமைகள் சார்பானப் பிரச்சனைகளை (வன உரிமைச் சட்டம், 2006) தீர்த்து வைப்பதற்கும், வன நிலங்களின் பல்பயன்பாட்டிற்கு அனுமதி அளிக்கச் செய்வதற்கும் வேண்டி மாநிலங்களுக்கு இதில் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.
- ஒரு பெரியப் பரப்பளவை உள்ளடக்கிய சில திட்டங்களுக்கு வேண்டி, அந்தக் குழுவிற்கு 100 ஹெக்டேருக்கு மேல் உள்ள சுரங்கப் பணி சாராதத் திட்டங்களுக்கு 120 நாட்களும், சுரங்கத் திட்டங்களுக்கு 150 நாட்களும் வழங்கப்படும் என்ற அளவில் இன்னும் சில கால அவகாசங்கள் வழங்கப்படும்.

## 'பசுமை ஹைட்ரஜன் பயன்பாடு' குறித்த அறிக்கை

- நிதி ஆயோக் "பசுமை ஹைட்ரஜனைப் பயன்படுத்துதல் - இந்தியாவில் ஆழ்ந்த கார்பன் நீக்கச் செயல்முறைக்கான வாய்ப்புகள்" என்ற தலைப்பில் ஒரு அறிக்கையை வெளியிட்டது.
- இந்த அறிக்கையானது டெல்லியைச் சேர்ந்த ஆலோசனை வழங்கீட்டுக் குழுவான RMI இந்தியாவுடன் இணைந்து தயாரிக்கப்பட்டுள்ளது.

- இந்தியாவில் உற்பத்தியை அதிகரிப்பதற்காக, பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி மீதான சரக்கு மற்றும் சேவை வரி மற்றும் சுங்க வரிகளைக் குறைக்க அல்லது அவற்றிற்கு விலக்கு அளிப்பதற்கு நிதி ஆயோக் பரிந்துரைத்துள்ளது.
- பசுமை ஹைட்ரஜன் என்பது நீரியல் மின்னாற்பகுப்பு மூலம் உற்பத்தி செய்யப் படுகின்ற ஹைட்ரஜன் வாயு ஆகும்.
- மின்னாற்பகுப்பு என்பது தண்ணீரை ஹைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜனாகப் பிரிக்கும் ஆற்றல் மிகுந்த ஒரு செயல்முறையாகும்.
- 2050 ஆம் ஆண்டில் இந்தியாவில் ஹைட்ரஜன் தேவை நான்கு மடங்கு அதிகரிக்கும் என்றும் இது உலகளாவிய ஹைட்ரஜன் தேவையில் 10% என்றும் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், பசுமை ஹைட்ரஜன் மற்றும் பசுமை அம்மோனியா கொள்கையை மத்திய அரசு அறிவித்தது.
- இந்தக் கொள்கையானது 2030 ஆம் ஆண்டிற்குள் பசுமை ஹைட்ரஜனின் உள்நாட்டு உற்பத்தியை 5 மில்லியன் டன்களாக அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் செயல்திறனை மேம்படுத்துதல் மற்றும் துரிதப்படுத்துதல் திட்டம்

- குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் செயல்திறனை மேம்படுத்துதல் மற்றும் துரிதப்படுத்துதல் என்ற திட்டத்தைப் பிரதமர் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- மாநிலங்களில் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் (MSME) அமலாக்கத் திறன் மற்றும் பரவலை அதிகரிப்பதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேலும், தற்போதுள்ள இதற்கானத் திட்டங்களை மேம்படுத்துவது மீதும் இது தாக்கத்தினை ஏற்படுத்துகிறது.
- இது ஆத்ம நிர்பர் பாரத் அபியான் திட்டத்தின் நோக்கத்தினைப் பூர்த்தி செய்யும்.
- இவர் பின்வரும் சில திட்டங்களையும் தொடங்கி வைத்தார்.
  - ‘முதல் முறையாக ஏற்றுமதி மேற்கொள்ளும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் திறனைக் கட்டமைத்தல்’ திட்டம் மற்றும்
  - `பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கத் திட்டத்தின்` (PMEG) புதிய அம்சங்கள்.



## வீடு தேடி வரும் பொது விநியோகம் பற்றிய அறிக்கை

- நிதி ஆயோக் அமைப்பானது சமீபத்தில் 'வீடு தேடி வரும் பொது விநியோகம் - மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்கள் முழுவதும் பயன்படுத்தப்படும் நல்ல நடைமுறைகள்' என்ற தலைப்பில் ஒரு அறிக்கையை வெளியிட்டது.
- உலக உணவுத் திட்டமும் இந்தக் கணக்கெடுப்பின் ஒரு பகுதியாகும்.
- மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களால் வீடு தேடி வரும் பொது விநியோக மதிப்புச் சங்கிலி முறையைச் செயல்படுத்துவதில் பின்பற்றப்பட்ட நல்ல மற்றும் புதுமையான நடைமுறைகளின் தொகுப்பை இது வழங்குகிறது.
- குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் பெண்களுக்கு (PLW) ஊட்டச் சத்தில் உள்ள இடைவெளியைப் பூர்த்தி செய்வதற்காக, ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுச் சேவைத் திட்டங்களின் (ICDS) துணை ஊட்டச்சத்து வழங்கீட்டுத் திட்டங்களின் கீழ், இந்திய அரசு வீடு தேடி வரும் பொது விநியோகத்தினை வழங்கச் செய்கிறது.

## பேரிடர்களைத் தாங்கக் கூடிய உள்கட்டமைப்புக்கான கூட்டமைப்பு

- பேரிடர்களைத் தாங்கக் கூடிய உள்கட்டமைப்புக்கான கூட்டமைப்பினை 'சர்வதேச அமைப்பாக' வகைப்படுத்தச் செய்வதற்கு மத்திய அமைச்சரவை சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது.
- விதிவிலக்குகள், பாதுகாப்புகள் மற்றும் சலுகைகளை வழங்கச் செய்வதற்காக, பேரிடர்களைத் தாங்கக் கூடிய உள்கட்டமைப்புக்கான கூட்டமைப்புடன் தலைமையக ஒப்பந்தத்தில் (HQA) கையெழுத்திடவும் அது ஒப்புதல் அளித்துள்ளது.
- 1947 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் (சலுகைகள் மற்றும் தடைகள்) சட்டத்தின் கீழ் இது மேற்கொள்ளப் பட்டது.
- இது பேரிடர்களைத் தாங்கக்கூடிய உள்கட்டமைப்புக்கான கூட்டமைப்பிற்கு ஒரு சுயாதீனமான மற்றும் சர்வதேச சட்ட ஆளுமையை வழங்கும்.
- இதனால் இந்த அமைப்பு சர்வதேச அளவில் அதன் செயல்பாடுகளைச் சரியான முறையிலும் திறம்படவும் செய்ய முடியும்.
- 2016 ஆம் ஆண்டு புது டெல்லியில் நடைபெற்ற பேரிடர் அபாயத்தைக் குறைப்பது குறித்த ஆசிய அமைச்சர்கள் மாநாட்டின் போது பேரிடர்களைத் தாங்கக்கூடிய உள் கட்டமைப்புக்கான கூட்டமைப்பு குறித்தக் கருத்தாக்கம் பிரதமர் அவர்களால் முன் மொழியப் பட்டது.


## பாரத் ஸ்டேட் வங்கி நிறுவப்பட்ட தினம்

- இந்திய நாட்டின் மிகப் பழமையான வணிக வங்கியான பாரத ஸ்டேட் வங்கி ஜூலை 01 ஆம் தேதியன்று தனது 67வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது.
- 1806 ஆம் ஆண்டு கல்கத்தா வங்கியாக நிறுவப்பட்டு பின்னர் இம்பீரியல் பேங்க் ஆஃப் இந்தியா என்று மாற்றப்பட்ட பின்னர் இது பாரத் ஸ்டேட் வங்கியாக உருவெடுத்தது.
- மெட்ராஸ் வங்கியானது, கல்கத்தா வங்கி மற்றும் பாம்பே வங்கியுடன் இணைக்கப் பட்டு இம்பீரியல் பேங்க் ஆஃப் இந்தியாவாக உருவானது.

- இது பின்னர் 1955 ஆம் ஆண்டில் பாரத் ஸ்டேட் வங்கி ஆக மாறியது.
- மெட்ராஸ் வங்கி 1806 ஆம் ஆண்டு ஜூன் 02 ஆம் தேதியன்று நிறுவப்பட்டது.
- பாம்பே வங்கி 1840 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் தேதியன்று நிறுவப் பட்டது
- மெட்ராஸ் வங்கி 1843 ஆம் ஆண்டு ஜூலை 01 ஆம் தேதியன்று நிறுவப் பட்டது.

## தேர்தல் பத்திரங்கள் வெளியீடு

- பாரத் ஸ்டேட் வங்கி அதன் அங்கீகரிக்கப்பட்ட 29 கிளைகள் மூலம் தேர்தல் பத்திரங்களை வெளியிடுவதற்கும் அவற்றைப் பணமாக்குவதற்கும் அந்த வங்கிக்கு மத்திய அரசு அங்கீகாரம் அளித்துள்ளது.
- தேர்தல் பத்திரங்கள் என்பது அரசியல் கட்சிகளுக்கு யார் வேண்டுமானாலும் பணத்தை நன்கொடையாக அளிப்பதற்கு வழிவகை செய்யும் செயற்கருவிகளாகும்.
- தேர்தல் பத்திரங்கள் வெளியிடப்பட்ட நாளிலிருந்து பதினைந்து நாட்களுக்குச் செல்லு படியாகும்.
- செல்லுபடியாகும் காலம் முடிந்த பிறகு தேர்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டால், அதன் மூலம் பணம் பெற இருந்த எந்தவொரு அரசியல் கட்சிக்கும் பணம் செலுத்தப் படாது.
- காலாவதியான பத்திரங்களின் மொத்த மதிப்புகள் பிரதமரின் நிவாரண நிதியில் பாரத் ஸ்டேட் வங்கியினால் வைப்பு வைக்கப்படுகின்றன.
- தேர்தல் பத்திரங்கள் நன்கொடையாளரின் பெயரைக் கொண்டிருக்காது.
- எனவே, அரசியல் கட்சிகள் நன்கொடையாளரின் அடையாளத்தினைத் தெரிந்து கொள்ள முடியாது.




## ஐந்தாவது உலகளாவியத் திரைப்படச் சுற்றுலா மாநாடு

- ஐந்தாவது உலகளாவியத் திரைப்படச் சுற்றுலா மாநாட்டினை மும்பையில் மத்திய சிறுபான்மையினர் விவகாரங்கள் அமைச்சர் முக்தர் அப்பாஸ் நக்வி தொடங்கி வைத்தார்.

- சுற்றுலா அமைச்சகம் மற்றும் தகவல் & ஒளிபரப்பு அமைச்சகத்துடன் இணைந்து, வர்த்தகத் தொழில்துறையின் PHD கழகமானது (PHDCCI) ஐந்தாவது உலகளாவியத் திரைப்படச் சுற்றுலா மாநாட்டினை ஏற்பாடு செய்தது.
- இது "சினிமாச் சுற்றுலாவின் ஆற்றலைக் கட்டவிழ்த்தல்" என்ற தலைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டது.

## தொடக்க நிறுவனங்களுக்கான தரவரிசை 2021

- தொழில்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையானது (DPIIT) 2021 ஆம் ஆண்டிற்கான தொடக்க நிறுவனங்களுக்கான தரவரிசைகளை அறிவித்துள்ளது.
- மொத்தம் 24 மாநிலங்கள் மற்றும் 7 ஒன்றியப் பிரதேசங்களை உள்ளடக்கிய இந்த ஆய்வானது, அவற்றைப் பின்வருகின்ற வகைகளில் தரவரிசைப்படுத்தியது.
    - சிறந்த முறையில் செயல்பட்ட நிறுவனங்கள்
    - முன்னணியிலுள்ள நிறுவனங்கள்
    - தலைமை
    - இலட்சியமிக்கத் தலைமைகள் மற்றும்
    - வளர்ந்து வரும் தொடக்க நிறுவனங்கள்
- குஜராத் மாநிலம் தொடர்ந்து மூன்றாவது முறையாகச் சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலமாக அங்கீகரிக்கப்பட்டது.
- ஜம்மு காஷ்மீர், கேரளா, மகாராஷ்டிரா, ஒடிசா மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்கள் சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களாகும்.
- தலைமை பிரிவில் பஞ்சாப், தமிழ்நாடு, உத்தரகாண்ட், உத்தரப் பிரதேசம், அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள், அருணாச்சலப் பிரதேசம் மற்றும் கோவா ஆகியவை அடங்கும்.
- சத்தீஸ்கர், டெல்லி, மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், சண்டிகர், புதுச்சேரி மற்றும் நாகாலாந்து ஆகிய மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் இலட்சியமுள்ளத் தலைமைகள் வகையின் கீழ் அடங்கும்.
- ஆந்திரப் பிரதேசம், பீகார், மிசோரம் மற்றும் லடாக் ஆகியவை தொடக்க நிறுவனங்களுக்கான சூழல் அமைப்புகளை உருவாக்கும் வகையிலான மாநிலங்களில் அடங்கும்.

## தேசியக் காற்று தர வளக் கட்டமைப்பு

- அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகர் இந்தியாவின் தேசிய காற்றுத் தர வளக் கட்டமைப்பின் தேசியத் திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.
- இது பெங்களூருவில் உள்ள தேசிய மேம்பட்ட ஆய்வுகள் நிறுவனத்தால் (NIAS) உருவாக்கப் பட்டுள்ளது.
- இது தகவல் உருவாக்கம், உள்கட்டமைப்பு மற்றும் தொழில்துறைக் கட்டமைப்புகளை மேம்படுத்துதல் மற்றும் நாட்டில் மனித சுகாதாரத்தில் அவை ஏற்படுத்தும் விளைவுகளை ஆய்வு செய்ய உதவும்.

- தேசியக் காற்று தர வளக் கட்டமைப்பு ஆனது பின்வரும் ஐந்து தொகுதிகளைச் சார்ந்து உருவாக்கப்படும்.
  - கருத்துரு-1: உமிழ்வு இருப்பு, காற்றுப் பட்டறை மற்றும் தணிப்பு
  - கருத்துரு-2: மனித ஆரோக்கியம் மற்றும் வேளாண்மை மீதான தாக்கங்கள்
  - கருத்துரு-3: ஒருங்கிணைந்த கண்காணிப்பு, முன்னறிவிப்பு மற்றும் ஆலோசனைக் கட்டமைப்பு
  - கருத்துரு-4: எல்லைகள், சமூகப் பரிமாணம், பரிமாற்ற உத்தி மற்றும் கொள்கை
  - கருத்துரு-5: தீர்வுகள், பொது-தொழில் கூட்டாண்மை, பசுந்தாள் எரிப்பு & புதியத் தொழில்நுட்பங்கள்.

## "NARCOS" நடவடிக்கை

- இரயில்வேப் பாதுகாப்புப் படையானது, 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் "NARCOS" என்ற நடவடிக்கையினைத் தொடங்கியது.
- இது இரயில் மூலம் போதைப் பொருள் கடத்தப்படும் நடவடிக்கைக்கு எதிராக மேற் கொள்ளப்பட்ட ஒரு மாத கால இந்தியா முழுவதுமான நடவடிக்கையாகும்.
- இரயில்களிலும், நாடு முழுவதும் அடையாளம் காணப்பட்ட சில அசம்பாவிதங்கள் நிகழும் இடங்களிலும் இரயில்வேப் பாதுகாப்புப் படை தனது சோதனைகளை தீவிரப் படுத்தியுள்ளது.

## டிஜிட்டல் இந்தியா பாஷினி

- மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகமானது, டிஜிட்டல் இந்தியா பாஷினிக்கான ஒரு உத்தியை வடிவமைக்கும் நோக்கில் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொடக்க நிறுவனங்களுடன் குழுச் சந்திப்பினை நடத்தியது.
- பாஷினி என்பது இந்தியாவிற்கான பாஷா இடைமுகத்தைக் குறிக்கிறது.
- இது இந்தியாவின் செயற்கை நுண்ணறிவு (AI) மூலம் இயங்கும் மொழிபெயர்ப்புத் தளமாகும்.
- பாஷினி தளமானது தேசிய மொழிபெயர்ப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- அதிகமான இந்தியர்கள் இணையத்தினைப் பயன்படுத்துவதால், அவர்கள் தங்கள் சொந்த மொழிகளில் உலகளாவிய உள்ளடக்கங்களை அணுகுவதை உறுதி செய்வதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

## நிலையான அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான கல்வி நிறுவனம்

- கிரீன்கோ நிறுவனம் ஆனது ஹைதராபாத்தில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கழகத்துடன் இணைந்து ஒரு கல்வி நிறுவனத்தை நிறுவியுள்ளது
- இதில் பருவநிலை மாற்றத்தைத் தணித்தல், சுழற்சி முறைப் பொருளாதாரம், ஆற்றல் மாற்றம் போன்ற நிலையான இலக்குகள் குறித்து மாணவர்களுக்குக் கற்பிக்கப்படும்.
- இந்த நிறுவனம் நிலையான அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான இந்தியாவின் முதல் பிரத்தியேகக் கல்வி நிறுவனமாகும்.

## அமைச்சகங்கள் ஒதுக்கீடு

- மத்திய அமைச்சர்கள் ஸ்மிருதி இரானி மற்றும் ஜோதிராதித்ய சிந்தியா ஆகியோருக்கு முறையே சிறுபான்மை விவகாரங்கள் மற்றும் எஃகு அமைச்சகம் ஆகியவற்றின் கூடுதல் பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.
- முக்தார் அப்பாஸ் நக்வி மற்றும் ராம் சந்திரப் பிரசாத் சிங் ஆகிய இரண்டு மத்திய அமைச்சர்கள் மத்திய அமைச்சரவையில் இருந்து உடனடியாக ராஜினாமா செய்து உள்ளனர்.
- அவர்கள் ராஜினாமா செய்ததையடுத்து பிரதமர் மோடி அவர்களின் ஆலோசனையின் படி, இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்களின் ராஜினாமா மனுக்களை ஏற்றுக் கொண்டார்.
- நாடாளுமன்றத்தின் இரு அவைகளில் இருந்தும் இரு அமைச்சர்கள் வெளியேறுவது இதுவே முதல் முறையாகும்.

## நியமன உறுப்பினர்கள் - மாநிலங்களவை

- ஆளும் பாரதிய ஜனதா கட்சி ஆனது தென் மாநிலங்களைச் சேர்ந்த நான்கு முக்கியப் பிரமுகர்களை மாநிலங்களவைக்குப் பரிந்துரை செய்துள்ளது.
- விளையாட்டுத் துறை நாயகியான P.T.உஷா, இசைஞானி இளையராஜா, ஆன்மீகத் தலைவர் வீரேந்திர ஹெக்கடே, திரைக்கதை எழுத்தாளர் K.V.விஜயேந்திர பிரசாத் ஆகிய 4 பேர் மாநிலங்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## இந்தியாவின் மிக முதுமையான வங்காளப் புலி

- ஒரு உயிரியல் பூங்காவில் வைத்துப் பாதுகாக்கப்பட்ட உலகிலேயே மிகவும் வயதான புலியான ராஜா சமீபத்தில் இறந்தது.
- இது கொல்கத்தாவின் தெற்கு கையிர்பாரி என்ற பாதுகாப்பு மையத்தில் இறந்தது.
- ராஜா என்ற புலியின் வயது 25 வயது 10 மாதங்களாகும்.
- புலிகளின் சாதாரண ஆயுட்காலம் ஆன 18 ஆண்டுகள் என்ற நிலையில், ராஜா 25 ஆண்டுகள் உயிர் வாழ்ந்துள்ளது.

## மிகை மெய்த்தோற்றத் திரைகள்

- மும்பையில் உள்ள சத்ரபதி சிவாஜி மகாராஜ் இரயில் முனையம் ஆனது, மிகை மெய்த் தோற்றத் திரைகள் பொருத்தப்பட்ட இந்தியாவின் முதல் இரயில் நிலையமாக மாறி உள்ளது.
- இரயில் நிலையத்தில் உள்ள பயணிகள் தற்போது விலங்குகளை நேரில் சந்திக்க முடிவதோடு பனிப்பொழிவு மற்றும் தந்திரக் காட்சிகளை நேரில் காணலாம் மற்றும் உலகத்தைக் கிட்டத்தட்ட ஒரே இடத்தில் சுற்றிப் பார்க்கலாம்.
- இது இரயில்வே நிர்வாகத்திற்கு வருவாயை ஈட்டித் தருவதையும், பயணிகளுக்கு சில வேடிக்கை மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- ❖ மிகை மெய்த்தோற்றம் (AR) என்பது உண்மையான நேரடி நிகழ்வுகளை மிகைப் படுத்திக் காட்டும் ஒரு தொழில்நுட்பமாகும்.
- ❖ இது எண்ணிம காட்சி கூறுகள், ஒலி அல்லது தொழில்நுட்பத்தின் மூலம் வழங்கப்படும் பிற உணர்ச்சி தூண்டுதல்களைப் பயன்படுத்துவதன் மூலம் உருவாக்கப்படுகிறது.

## ஹரியாலி மஹோத்சவ்

- ❖ சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத் துறை அமைச்சகம் புதுடெல்லியில் உள்ள தல்கடோரா அரங்கத்தில் “ஹரியாலி மஹோத்சவ்” என்ற ஒரு விழாவை ஏற்பாடு செய்தது.
- ❖ ஹரியாலி மஹோத்சவ் என்பது "மரங்களின் விழா" ஆகும்.
- ❖ நிலைத் தன்மை வாய்ந்த மரங்களின் முக்கியத்துவம் குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## விலங்குகள் நலன் குறித்த உச்சி மாநாடு 2022

- ❖ இந்தியாவின் முதல் "விலங்குகள் நலன் குறித்த உச்சிமாநாடு 2022" ஆனது புது டெல்லியில் ஏற்பாடு செய்யப்பட்டது.
- ❖ இந்த உச்சி மாநாட்டினை, இந்திய உணவு மற்றும் வேளாண்மைச் சங்கம் (ICFA) ஆனது அக்ரி கல்ச்சர் டுடே குழுமத்துடன் இணைந்து ஏற்பாடு செய்துள்ளது.
- ❖ இது இரண்டு நாள் நிகழ்வில், கீழ்க்காணும் தலைப்புகளில் பல குழு விவாதங்கள் நடத்தப் பட்டன. அவையாவன
    - ○ விலங்கு நலன் தொடர்பான கொள்கை முயற்சிகள்
    - ○ விலங்கு நலத் துறையில் வணிகச் சூழல்
    - ○ விலங்கு நலத் துறையில் முதலீட்டு வாய்ப்புகள்.

## தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச்சின்னம்

- ❖ தேசிய நினைவுச்சின்னங்கள் ஆணையமானது ராஜஸ்தானில் உள்ள மங்கர்ஹ் என்ற மலைச் சிகரத்தினை ஒரு தேசிய நினைவுச் சின்னமாக அறிவிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தது.
- ❖ இந்த மலைக் குன்றானது குஜராத் - ராஜஸ்தான் எல்லையில் அமைந்துள்ளது.
- ❖ இது 1913 ஆம் ஆண்டில் பில் பழங்குடியின விடுதலைப் போராளிகள் 1500 நபர்கள் படுகொலை செய்யப்பட்ட ஒரு பழங்குடியினரின் எழுச்சி நடைபெற்ற இடமாகும்.
- ❖ இந்த இடமானது ஆதிவாசிகளின் ஜாலியன் வாலா என்றும் அழைக்கப்படுவதால் அங்கு நினைவிடம் ஒன்றை அமைக்கவும் கோரிக்கை எழுந்துள்ளது.
- ❖ தேசியப் பண்டைய கால நினைவுச் சின்னங்கள் ஆனது 1958 ஆம் ஆண்டு பண்டைய நினைவுச் சின்னம் மற்றும் தொல்லியல் தளங்கள் மற்றும் சிதிலங்கள் சட்டத்தின் கீழ் வரையறுக்கப் பட்டுள்ளது.

- ❖ இந்தச் சட்டமானது நினைவுச் சின்னங்களைப் பராமரிக்கவும், பாதுகாக்கவும், மேம்படுத்தவும் மத்திய அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது.
- ❖ பில் பழங்குடியினர் பொதுவாக ராஜஸ்தானின் வில்லாளர்கள் என்று குறிப்பிடப் படுகிறார்கள்.
- ❖ இவர்கள் தெற்காசியாவின் மிகப் பெரிய பழங்குடி இனத்தினர் ஆவர்.



## அமர்நாத் கோவில் பகுதியில் மேக வெடிப்பு

- ❖ 2022 ஆம் ஆண்டு ஜூலை 08 ஆம் தேதியன்று, ஜம்மு மற்றும் காஷ்மீரில் உள்ள அமர்நாத் கோவில் அருகே மேக வெடிப்பு ஏற்பட்டது.
- ❖ ஒரு மணி நேரத்தில் 100 மில்லி மீட்டர் அளவு மழை பெய்தால் அது மேக வெடிப்பு எனப் படும்.
- ❖ அந்தக் குறிப்பிட்ட நாளில் இந்தப் பகுதியில் "மஞ்சள் எச்சரிக்கையானது" விடுக்கப் பட்டிருந்தது.

## இந்திய சணல் பொருட்கள் முத்திரை

JUTE MARK

- ❖ மத்திய அரசானது இந்திய சணல் பொருட்கள் முத்திரையினை அறிமுகப் படுத்தியது.
- ❖ இது சணல் பொருட்களுக்கான "நம்பகத்தன்மை சான்றிதழாக" விளங்கும்.
- ❖ இது உள்நாட்டுச் சந்தையை வலுப்படுத்தவும், இந்தியாவில் இருந்து மேற்கொள்ளப் படும் சணல் பொருட்களின் ஏற்றுமதியை வலுப்படுத்தவும் உதவும்.
- ❖ சணல் பொருட்களுடன் சணல் பொருட்கள் முத்திரை இணைக்கப்படும்.
- ❖ இது ஒரு தனித்துவமான விரைவுக் குறியீட்டினைக் கொண்டிருக்கும்.
- ❖ வாடிக்கையாளர்கள் இந்த விரைவுக் குறியீட்டினை ஸ்கேன் (உரலி) செய்வதன் மூலம் தயாரிப்பாளர்களைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.

## அக்சய பாத்திரா மதிய உணவகம்

- வாரணாசியில் அமைக்கப்பட்டுள்ள அக்சய பாத்திரா மதிய உணவகத்தினை பிரதமர் அவர்கள் திறந்து வைத்தார்.
- அக்சய பாத்ரா அறக்கட்டளையானது, அரசாங்கத்தின் பிரதான் மந்திரி போஷான் சக்தி நிர்மான் (PM POSHAN) திட்டத்துடன் இணைந்து உலகின் மிகப்பெரிய அளவிலான பள்ளிகளுக்கான உணவு வழங்கீட்டுத் திட்டங்களில் ஒன்றை செயல்படுத்தி வருகிறது.
- வறுமையின் காரணமாக குழந்தைகள் கல்வியைத் தவறவிடக் கூடாது என்பதனை உறுதி செய்யும் வகையில் இந்த உணவகம் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட அளவிலான குழந்தைகளுக்கு உணவளிக்கும்.

## வாத்சல்யா திட்டத்திற்கான வழிகாட்டுதல்கள்




- வாத்சல்யா திட்டம் என்ற குழந்தைகள் பாதுகாப்பு திட்டம் குறித்த மாநிலங்களுக்கான வழிகாட்டுதல்களை மத்திய அரசு வெளியிட்டது
- மத்திய அரசால் வழங்கப்படும் நிதியைப் பெறுவதற்காக மாநிலங்கள் இத்திட்டத்தின் இயற்பெயரை மாற்ற முடியாது.
- இது மாநில அரசுகள் மற்றும் ஒன்றியப் பிரதேச நிர்வாகங்களுடன் இணைந்து மத்திய அரசு நிதி வழங்கும் திட்டமாக செயல்படுத்தப்படும்.
- இதில் நிதிப் பகிர்வு முறையானது 60:40 என்ற விகிதத்தில் பிரிக்கப்படும்.
- எட்டு வடகிழக்கு மாநிலங்கள் & இமாச்சலப் பிரதேசம், உத்தரகாண்ட் மற்றும் ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசம் ஆகியவற்றிற்கான பங்கு 90:10 ஆக இருக்கும்.

## இந்தியாவில் குழந்தை நலன் பற்றிய அறிக்கை

- இது 2022 ஆம் ஆண்டிற்கான உலக உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து நிலை பற்றிய அறிக்கையில் வெளியிடப் பட்டது.

- இந்தியாவில் ஊட்டச்சத்துக் குறைபாடு உள்ளவர்களின் எண்ணிக்கையானது 2019/ 2021 ஆம் ஆண்டில் கடந்த 15 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 224.3 மில்லியனாக குறைந்துள்ளது.
- 2012 ஆம் ஆண்டில் 52.3 மில்லியனில் இருந்த 5 வயதுக்குட்பட்ட வளர்ச்சி குன்றிய குழந்தைகளின் எண்ணிக்கையானது 2020 ஆம் ஆண்டில் 36.1 மில்லியனாக குறைந்து உள்ளது.
- 2012 ஆம் ஆண்டில் மூன்று மில்லியனாக இருந்த ஐந்து வயதுக்குட்பட்ட அதிக எடை கொண்ட குழந்தைகளின் எண்ணிக்கையானது 2012 ஆம் ஆண்டில் 2.2 மில்லியனாகக் குறைந்துள்ளது.
- 2012 ஆம் ஆண்டில் 11.2 மில்லியனாக இருந்த 5 மாதங்கள் வரையிலான தாய்ப்பால் வழங்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கையானது 2020 ஆம் ஆண்டில் 14 மில்லியன் என்ற அளவினைத் தொட்டது.
- 2012 ஆம் ஆண்டில் 25.2 மில்லியனாக இருந்த 1.38 பில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட இந்தியாவில் உள்ள பருமனான வயது வந்தோரின் எண்ணிக்கை என்பது 2016 ஆம் ஆண்டில் 34.3 மில்லியனாக அதிகரித்துள்ளது.
- 2012 ஆம் ஆண்டில் 171.5 மில்லியனாக இருந்த இரத்த சோகையால் பாதிக்கப்பட்ட 15 முதல் 49 வயதுடைய பெண்களின் எண்ணிக்கையானது 2019 ஆம் ஆண்டில் 187.3 மில்லியனாக அதிகரித்துள்ளது.





## உயர்கல்வி மீதான வாரணாசி பிரகடனம்

- வாரணாசியில் ஏற்பாடு செய்யப்பட்ட "அகில் பாரதிய சிக்சா சமாஜத்தினை" பிரதமர் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- அகில பாரத சிக்சா சமாஜம் ஆனது மத்தியக் கல்வி அமைச்சகத்தால் நடத்தப்பட்டது.
- இந்த 3 நாட்கள் அளவிலான மாநாட்டின் போது உயர்கல்வி மீதான வாரணாசி பிரகடனம் என்பது ஏற்றுக் கொள்ளப் பட்டது.

## முதல் குரங்கு அம்மை நோய்ப் பாதிப்பு

- இந்தியாவில் முதலாவது குரங்கு அம்மை நோய்ப் பாதிப்பானது கேரளாவில் பதிவாகி உள்ளது.

- இந்த நோய்ப் பாதிப்புகளில் பெரும்பாலானவை ஐரோப்பிய பிராந்தியம் (86 சதவீதம்) மற்றும் அமெரிக்கா (11 சதவீதம்) ஆகிய பகுதிகளில் பதிவாகியுள்ளன.
- குரங்கு அம்மை என்பது ஒரு வைரஸ் மூலமாக பரவக்கூடிய விலங்குவழி நோய்த் தொற்றாகும் (விலங்குகளிலிருந்து மனிதர்களுக்கு பரவும் வைரஸ்).
- இதன் அறிகுறிகளானது கடந்த காலத்தில் பரவிக் கொண்டிருந்த பெரியம்மை நோயாளிகளிடம் காணப்பட்டதைப் போன்றதாகும்.
- 1980 ஆம் ஆண்டில் பெரியம்மை ஒழிப்பு மற்றும் பெரியம்மை தடுப்பூசி நிறுத்தப் பட்டது ஆகியவற்றைத் தொடர்ந்து, குரங்கு அம்மை நோயானது பொது சுகாதாரத்தின் மீது தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடிய மிக முக்கியமான ஆர்த்தோபாக்ஸ் இனத்தைச் சேர்ந்த வைரஸாக உருவெடுத்துள்ளது.




## இயற்கை வேளாண்மை குறித்த மாநாடு

- குஜராத்தின் சூரத் நகரில் இயற்கை வேளாண்மை குறித்த மாநாடானது ஏற்பாடு செய்யப் பட்டது.
- முன்னதாக, ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் குறைந்தது 75 விவசாயிகளை இயற்கை வேளாண்மை முறைக்கு மாறுமாறு பிரதமர் அவர்கள் வலியுறுத்தினார்.
- எனவே, சூரத் நகரில் மேற்கொள்ளப்பட்ட ஒரு முன்னெடுப்பின் கீழ், ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்திலும் 75 விவசாயிகள் அடையாளம் காணப்பட்டு இயற்கை வேளாண்மை முறையை மேற்கொள்வதற்கான பயிற்சி அளிக்கப்பட்டது.
- மொத்தம் 90 வெவ்வேறு தொகுதிகளில் பயிற்சி அளிக்கப்பட்டது.
- மாவட்டம் முழுவதும் மொத்தம் 41000 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.
- தற்போது, இந்தியா முழுவதும் இந்த "சூரத் மாவட்டத்தின் மாதிரி இயற்கை வேளாண்மை முறையை" பின்பற்றுமாறுப் பிரதமர் அவர்கள் வலியுறுத்தினார்.

## ஸ்வநிதி மஹோத்சவம்

- பிரதம மந்திரியின் தெருவோர வியாபாரிகளின் ஆத்மநிர்பார் நிதி (PM SVANIdhi) திட்டத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவையொட்டி, 'ஸ்வநிதி மஹோத்சவம்' ஆனது தொடங்கப் பட்டது.
- அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் உள்ள 75 நகரங்களில் இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டு, பல்வேறு கலாச்சார நடவடிக்கைகள், எண்ணிமப் பயிற்சி நடவடிக்கைகள் மற்றும் கடன் வழங்கீட்டு முகாம்கள் ஆகியவை நடத்தப் படும்.
- இதில் புகழ்பெற்றத் தெருவோர வியாபாரிகளைப் பாராட்டுவதற்கான நிகழ்வுகளும் அடங்கும்.

## சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் தொடர்பான 6வது தேசிய மாநாடு

- சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் தொடர்பான 6வது தேசிய மாநாடு ஆனது சமீபத்தில் டெல்லியில் நடத்தப் பட்டது.
- இந்த மாநாட்டின் சிறப்பம்சங்கள்
  - சுரங்கக் குடியிருப்பு முறையின் (எம்.டி.எஸ்) மூன்று மாதிரிகளைத் தொடங்குதல்.
  - 2020-21 ஆம் ஆண்டுகளுக்கான 5-நட்சத்திர மதிப்பு பெற்றச் சுரங்கங்களுக்கான விருதுகள், மற்றும்
  - தேசியப் புவி அறிவியல் விருதுகள்–2019.

## உலகளாவியப் பாலின இடைவெளிக் குறியீடு

- உலகப் பொருளாதார மன்றத்தின் 2022 ஆம் ஆண்டிற்கான உலகளாவியப் பாலின இடைவெளி அறிக்கையானது சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- இப்பட்டியலில் இடம்பெற்ற 146 நாடுகளில் இந்தியா 135வது இடத்தைப் பிடித்துள்ளது.
- வங்காளதேசம் (71), நேபாளம் (96), இலங்கை (110), மாலத்தீவுகள் (117) மற்றும் பூட்டான் (126) ஆகியவற்றுக்குப் பின்னால் இடம் பெற்று இந்தியா அதன் அண்டை நாடுகளின் மத்தியில் மோசமான தரவரிசையில் உள்ளது.
- தெற்காசியாவில் இந்தியாவை விட ஈரான் (143), பாகிஸ்தான் (145), ஆப்கானிஸ்தான் (146) ஆகியவற்றின் மதிப்புகள் மட்டுமே மோசமாக உள்ளது.
- பாலினச் சமத்துவத்தை அடைய இன்னமும் 132 ஆண்டுகள் ஆகும் என்று இந்த அறிக்கை கூறுகிறது.
- 2021 ஆம் ஆண்டில், இந்தப் பட்டியலில் இடம்பெற்ற 156 நாடுகளில் இந்தியா 140வது இடத்தில் இருந்தது.
- "சுகாதாரம் மற்றும் உயிர்வாழ்தல் திறன்" ஆகியவற்றிற்கான துணைக் குறியீட்டில் இந்தியா 146வது இடத்தினைப் பெற்று மோசமான நிலையில் உள்ளது.
- அரசியல் அதிகாரமளிப்பில் ஐஸ்லாந்து முதல் இடத்திலும், வங்காளதேசம் 9வது இடத்திலும் உள்ளன.
- கல்வித் தகுதிக்கானத் தரவரிசையில் இடம்பெற்ற 146 நாடுகளில் இந்தியா 107வது இடத்தில் உள்ளது.

- மேலும் இந்தியாவின் மதிப்பெண் ஆனது கடந்த ஆண்டிலிருந்து சற்று மோசமாக உள்ளது.
- 2021 ஆம் ஆண்டில், 156 நாடுகளில் இந்தியா 114 வது இடத்தைப் பிடித்தது.

**The gender score** | India ranked 135 in gender parity out of 146 countries, according to the Global Gender Gap Report 2022 released by the World Economic Forum. A look at India's ranking in the four sub-indexes based on which the overall ranking was determined

| India | Rank 2022* |
|---|---|
| **Global gender gap index** | **135** |
| Economic participation and opportunity | 143 |
| Educational attainment | 107 |
| Health and survival | 146 |
| Political empowerment | 48 |

*out of 146 countries*


## டிராகன் பழச் சாகுபடி

- ஆரோக்கியம் சார்ந்த பலன்களைக் கொண்டிருப்பதால் "பல்பயன் கொண்ட பழம்" என்று அழைக்கப்படும் டிராகன் பழத்தின் சாகுபடியை ஊக்குவிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- குஜராத் அரசானது சமீபத்தில் டிராகன் பழத்தின் பெயரை கமலம் (தாமரை) என்று மாற்றி, அதைப் பயிரிடும் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையை அறிவித்தது.
- இந்த அயல்நாட்டுப் பழ வகைகளை நடவு செய்யத் தயாராக இருக்கும் விவசாயிகளுக்கு ஹரியானா அரசும் மானியம் வழங்குகிறது.
- இந்தப் பழம் பொதுவாக தாய்லாந்து, இலங்கை, இஸ்ரேல் மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளில் விளைகிறது.
- ஆனால் தற்போது இந்தப் பழ வகை இந்தியாவிலும் மெல்ல மெல்ல விளைவிக்கப்பட்டு வருகிறது.

## தரங்கா மலைக்குன்றுகள்-அம்பாஜி-அபு சாலை மற்றும் இரயில் பாதை

- பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவானது 116.65-கி.மீ. நீளம் கொண்ட தரங்கா மலைக்குன்றுகள்-அம்பாஜி-அபு என்ற சாலை இரயில் பாதையை அமைப்பதற்கு ஒப்புதல் அளித்தது.
- இது இரண்டு மாநிலங்களையும் மூன்று வழிபாட்டுத் தலங்களையும் இணைக்கும்.
- இந்த இரயில் பாதையானது அம்பாஜிக்கு எளிதான முறையில் பயணம் மேற்கொள்ளச் செய்வதற்கான ஒரு பாதையினை வழங்கும்.
- தரங்கா மலையில் அஜித்நாத் (24 தீர்த்தங்கரர்களில் ஒருவர்) என்ற சமணக் கோவில் அமைந்துள்ளது.

- இந்தப் பாதையானது ராஜஸ்தானில் உள்ள சிரோஹி மாவட்டம் மற்றும் குஜராத்தில் உள்ள சபர்கந்தா, மகேசனா & பனஸ்கந்தா ஆகிய மாவட்டங்கள் வழியாக செல்லும்.
- இது தற்போதுள்ள அகமதாபாத்-அபு சாலை மற்றும் இரயில் பாதைக்கு ஒரு மாற்றுப் பாதையாகச் செயல்படும்.




## வடகிழக்குப் பிராந்தியத்தில் வேளாண் ஏற்றுமதி மையம்

- வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் மேம்பாடு மற்றும் ஆணையம் ஆனது இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் இருந்து மேற்கொள்ளப் படும் "வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவிக்கச் செய்வதற்காக" ஒரு உத்தியை வகுத்துள்ளது.
- இது அசாமின் ஏற்றுமதியாளர்கள், உற்பத்தியாளர் குழு மற்றும் பதப்படுத்துதல் நிறுவனங்களிடம் இருந்து நேரடியாக பொருட்களைப் பெற உதவும் வகையிலான ஒரு தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தத் தளமானது அசாமின் உற்பத்தியாளர்கள், பதப்படுத்துதல் நிறுவனங்கள் மற்றும் இந்தியா முழுவதும் உள்ள ஏற்றுமதியாளர்களிடையே இணைப்பை ஏற்படுத்தும்.
- இந்த நடவடிக்கையானது வடகிழக்கு மாநிலங்களில் ஏற்றுமதி மேற்கொள்ளப்படும் பகுதிகளுக்கான அடித்தளத்தை விரிவுபடுத்தும்.




## மிக நீளமான இரட்டை அடுக்குப் பாலம்


- இந்தியாவின் தேசிய நெடுஞ்சாலை ஆணையமும், மகாராஷ்டிரா மெட்ரோ நிர்வாகமும் மிக நீளமான இரட்டை அடுக்குப் பாலத்தைக் கட்டமைத்து உலக சாதனை ஒன்றைப் படைத்தன.
- நாக்பூரில் அமைக்கப்பட்டுள்ள இந்த பாலமானது 3.14 கி.மீ. நீளம் கொண்டது.
- இரட்டை அடுக்கு மேம்பாலத்தில் கட்டப்பட்ட அதிகபட்சமான மெட்ரோ இரயில் நிலையங்கள், ஆசிய சாதனைப் புத்தகப் பதிவு & இந்திய சாதனைப் புத்தகப் பதிவு ஆகிய அமைப்புகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

## திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுக்கான முதல் மிதவை முனையம்

- திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுக்கான இந்தியாவின் முதல் மிதவை முனையம் ஆனது மகாராஷ்டிராவில் உள்ள ஜெய்கர் நகரில் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப் பட உள்ளது.
- குஜராத்தின் ஜாஃப்ராபாத் என்னுமிடத்தில் அமைக்கப்பட்டுள்ள மற்றொரு மிதவை முனையமும் இந்த ஆண்டில் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்பட உள்ளது.
- இந்த இரண்டு முனையங்களும் கூடுதலாக ஆண்டிற்கு 11 மில்லியன் டன்கள் வரையில் மறுவாயுவாக்கும் திறனை வழங்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.




## சபைக் குழுக்களின் பதவிக் காலம்




- மாநிலங்களவைச் செயலகத்தின் முதல் விரிவான ஆய்வானது தனது பரிந்துரைகளை அவைத் தலைவரிடம் அளித்துள்ளது.
- முன்னாள் பொதுச் செயலாளரும் ஆலோசகருமான P.P.K. ராமச்சார்யுலு தலைமையிலான இந்தக் குழு இந்தப் பரிந்துரைகளை வழங்கியது.

- பாராளுமன்றக் குழுக்கள், சபையால் நியமிக்கப்பட்டவை அல்லது தேர்ந்தெடுக்கப் பட்டவை அல்லது சபாநாயகர் / தலைவரால் பரிந்துரைக்கப் பட்டவை ஆகும்.
- இவை சபாநாயகர் / அவைத் தலைவரின் வழிகாட்டுதலின் கீழ் செயல்படுகின்றன.

*பரிந்துரைகள்*

- உறுதித்தன்மை மற்றும் தொடர்ச்சியை உறுதி செய்வதற்காக பாராளுமன்ற நிலைக் குழுக்களின் பதவிக்காலம் ஆனது 1 வருடத்தில் இருந்து 2 வருடங்களாக அதிகரிக்கப் பட வேண்டும்.
- தற்போது ஒரு வருடத்தில் அதிகபட்சமாக 10 நாட்கள் அளவிலான கள ஆய்வானது இரண்டு வருகைகளில் இருந்து 15 நாட்கள் அளவிலான மூன்று வருகைகளாக அதிகரிக்கப் பட வேண்டும்.
- தொழில் மற்றும் வர்த்தகம் மீதான தற்போதைய குழுக்களை ஒன்றிணைத்தல்.
- சுற்றுலா மற்றும் கலாச்சாரம் தொடர்பான ஒரு புதிய குழுவை அமைத்தல்.
- மற்ற நாடுகளில் உள்ள தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் சட்டமன்றங்களின் அடிப்படையில், துறை சார்ந்த நிலைக்குழுக்களின் காணொளி வாயிலானச் சந்திப்புகளுக்கு வழிவகை செய்வதில் உள்ள சிக்கலை ஆய்வு செய்தல்.

## பேடி பச்சாவோ பேடி பதாவோ திட்டம் நீட்டிப்பு

- பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் ஆனது, பேடி பச்சாவோ பேடி பதாவோ (BBBP) திட்டத்தை அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தியுள்ளது.
- ஒவ்வோர் ஆண்டும் பிறப்புப் பாலின விகிதத்தில் 2 புள்ளிகள் முன்னேற்றத்தை அடைவதை அமைச்சகம் இலக்காக நிர்ணயித்துள்ளது.
- இது மருத்துவமனையில் நடைபெறும் மகப்பேறு சதவீதத்தில் 95% அல்லது அதற்கு மேல் முன்னேற்றம் அடையா எண்ணுகின்றது.
- இது 'கேலோ இந்தியா' திட்டத்தின் கீழ் பெண்களின் திறமைகளைக் கண்டறிந்து அவர்களை உரிய அதிகாரிகளுடன் தொடர்பு மேற்கொள்ள வைப்பதன் மூலம் விளையாட்டுத் துறைகளில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்க எண்ணுகின்றது.
- இது குடும்ப வன்முறை மற்றும் ஆட்கடத்தல் உள்ளிட்ட வன்முறைகளை எதிர் கொள்ளும் பெண்களுக்கு உதவும் வகையில் அமைக்கப்பட்டுள்ள தீர்வு மையங்களை வலுப்படுத்த எண்ணுகின்றது.
- பேடி பச்சாவோ பேடி பதாவோ திட்டம் ஆனது 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தொடங்கப் பட்டது.
- 2011 ஆம் ஆண்டில் ஒவ்வொரு 1,000 ஆண் குழந்தைகளுக்கு 918 பெண் குழந்தைகளாக இருந்த குழந்தைப் பாலின விகிதமானது குறைந்து வருதல் மற்றும் பாலின விருப்பம் அடிப்படையிலான கருக்கலைப்பு ஆகிய பிரச்சனைகளை நிவர்த்தி செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்திட்டமானது இந்தியாவின் 405 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

**IN THE WORKS**

- Additional 300 One-Stop Centres to be set up; existing centres to be upgraded
- Govt to introduce free day-care crèche facilities through Palna
- Half-Way Homes to be set up under Anti-Trafficking Units, where a group of victims, ready for reintegration, can live and work out of
- Hubs for empowerment of women to be set up at Central, states and districts levels to merge and monitor schemes

## நாரி அதாலத்

- ❖ பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் ஆனது 'நாரி அதாலத்' என்ற புதிய திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ கிராமப் பஞ்சாயத்து அளவில் உள்ள சிறு சிறு வழக்குகளைத் தீர்ப்பதற்கு மாற்றுவகை குறைதீர்வு வழிமுறைகளை பெண்களுக்கு வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- ❖ இது துன்புறுத்தல், சீர்குலைப்பு, உரிமைகளை வழங்காமல் இருத்தல் அல்லது உரிமைகள் வழங்குதல் தொடர்பான வழக்குகளை விசாரிக்கிறது.
- ❖ இது கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்தப்படும்.

## திருமணமாகாத நபர்களின் விகிதம் கணக்கெடுப்பு

- ❖ தேசியப் புள்ளியியல் அலுவலகத்தின் சமூகப் புள்ளியியல் பிரிவானது, இந்தியாவில் உள்ள திருமணமாகாத நபர்களின் எண்ணிக்கை விகிதம் குறித்த ஒரு அறிக்கையை வெளியிட்டது.
- ❖ நாட்டில் திருமணமாகாத இளைஞர்களின் சதவீதம் ஆனது அதிகரித்து வருகிறது.
- ❖ இந்த எண்ணிக்கையானது பொதுவாக ஆண்கள் மற்றும் பெண்கள் என இருவர் மத்தியிலும் அதிகரித்து வருகிறது.
- ❖ ஆண்களில் 15 முதல் 29 வயது வரையிலான திருமணமாகாத இளைஞர்களின் சதவீதம் ஆனது 2019 ஆம் ஆண்டில் 26.1 சதவீதம் அதிகரித்துள்ளது.
- ❖ இது 2011 ஆம் ஆண்டில் 20.8 சதவீதமாக இருந்தது.
- ❖ 2019 ஆம் ஆண்டில், ஜம்மு & காஷ்மீரில் உள்ள திருமணம் செய்து கொள்ளாத இளைஞர்களின் எண்ணிக்கையானது அதிக சதவிகிதத்தில் பதிவானது.
- ❖ அதைத் தொடர்ந்து உத்தரப் பிரதேசம், டெல்லி மற்றும் பஞ்சாப் ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- ❖ கேரளா, தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம் மற்றும் இமாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் குறைந்த சதவீதமே பதிவானது.

## NIRF தரவரிசை 2022

- கல்வி அமைச்சகம் இந்த ஆண்டுக்கான தேசிய நிறுவனங்கள் தரவரிசை கட்டமைப்பு (NIRF) தரவரிசையை வெளியிட்டுள்ளது.
- மருந்தாளுனர் பிரிவில் டெல்லியின் ஜாமியா ஹம்தார்ட் பல்கலைக் கழகம் ஆனது மீண்டும் முதல் இடத்தைப் பிடித்துள்ளது.
- அதனைத் தொடர்ந்து ஹைதராபாத்தில் உள்ள தேசிய மருந்துக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் ஆனது இரண்டாவது இடத்தில் உள்ளது.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி கழகமானது, இந்த ஆண்டின் தர வரிசையின் ஒட்டு மொத்தப் பிரிவில் சிறந்த பல்கலைக்கழகமாக அறிவிக்கப் பட்டது.
- அதைத் தொடர்ந்து, பெங்களூருவின் இந்திய அறிவியல் கல்விக் கழகமானது இரண்டாம் இடத்தில் உள்ளது.
- மேற்கூறியப் பட்டியலில் மும்பையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம், டெல்லியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி கழகம் மற்றும் கான்பூர் இந்தியத் தொழில் நுட்பக் கல்வி கழகம் ஆகியவை இந்தத் தரவரிசையின் ஒட்டு மொத்தப் பிரிவுகளில் முதல் ஐந்து நிறுவனங்களாக உள்ளன.
- இந்த ஆண்டு, கான்பூர் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி கழகத்தினைத் தொடர்ந்து காரக்பூர் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி கழகம், ரூர்க்கி இந்தியத் தொழில்நுட்பக் கல்வி கழகம் மற்றும் கௌகாத்தி இந்தியத் தொழில்நுட்பக் கல்வி கழகம் ஆகியவை முதல் 8 இடங்களைப் பிடித்ததால், இந்தியத் தொழில்நுட்பக் கல்வி கழகங்கள் இந்தப் பட்டியலில் ஆதிக்கம் செலுத்தின.
- இதில் டெல்லி எய்ம்ஸ் ஒன்பதாவது இடத்தையும், ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் பத்தாவது இடத்தையும் பெற்றுள்ளன.




| | |
|---|---|
| Indian Institute of Technology Madras | 1 |
| Indian Institute of Science, Bengaluru | 2 |
| Indian Institute of Technology Bombay | 3 |
| Indian Institute of Technology Delhi | 4 |
| Indian Institute of Technology Kanpur | 5 |
| Indian Institute of Technology Kharagpur | 6 |
| Indian Institute of Technology Roorkee | 7 |
| Indian Institute of Technology Guwahati | 8 |
| All India Institute of Medical Sciences, New Delhi | 9 |
| Jawaharlal Nehru University, New Delhi | 10 |

## பாரத் ரங் மஹோத்சவம் 2022

- பாரத் ரங் மஹோத்சவம் 2022 ஆம் ஆண்டு ஜூலை 16 ஆம் தேதி முதல் 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14 ஆம் தேதி வரையில் புது டெல்லியில் நடைபெறுகிறது.
- இந்த ஆண்டானது 22வது பாரத் ரங் மஹோத்சவத்தினைக் குறிக்கிறது.

- இந்திய வரலாற்றில் இடம் பெறாத, இந்திய சுதந்திரப் போராட்டத்திற்காகப் பாடுபட்ட தலைவர்களைப் பற்றிய நிகழ்வுகளைக் காட்சிப்படுத்துவதையும், அவர்களைப் பற்றி ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் இது நோக்கமாக உள்ளது.
- தேசிய நாடகப் பள்ளி நிர்வாகமானது 20 ஆண்டுகளுக்கு முன்பு பாரத் ரங் மஹோத்சவத்தினைத் தொடங்கியது.
- தேசிய நாடகப் பள்ளி நிர்வாகமானது சங்கீத நாடக அகாடமியினால் அதன் ஓர் அங்கமாக 1959 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இது 1975 ஆம் ஆண்டில் கலாச்சார அமைச்சகத்தின் கீழ் செயல்படும் ஒரு தன்னாட்சி அமைப்பாக மாறியது.

## SPRINT சவால்கள்

- இந்தியக் கடற்படைக்கான "SPRINT சவால்கள்" என்ற கருத்தரங்கமானது தொடங்கப் பட்டது.
- இந்தக் கருத்தரங்கினை கடற்படையின் புத்தாக்க மற்றும் உள்நாட்டுமயமாக்கல் அமைப்பு ஏற்பாடு செய்தது.
- இது இந்தியக் கடற்படையில் உள்நாட்டுத் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## சமயம், மற்றும் மொழியினச் சிறுபான்மையினர் அந்தஸ்து

- 'சமயம் மற்றும் மொழியினச் சமூகங்களின் சிறுபான்மையினர் அந்தஸ்து ஆனது "மாநில அரசைச் சார்ந்தது" என்று உச்ச நீதிமன்றம் கூறியது.
- ஒருவர் தனது சொந்த மாநிலத்திற்கு வெளியே சிறுபான்மையினராக இருக்கலாம்.
- முஸ்லிம்கள், சீக்கியர்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள், சமணர்கள் மற்றும் பாரசீகர்கள் ஆகிய இனத்தவர் 1992 ஆம் ஆண்டு சிறுபான்மையினருக்கானத் தேசிய ஆணையச் சட்டத்தின் 2 (c) என்ற பிரிவின் கீழ் சிறுபான்மைச் சமூகங்களாக அறிவிக்கப் பட்டுள்ளனர்.
- 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, நாட்டின் மொத்த மக்கள் தொகையில் சிறுபான்மையினரின் சதவீதம் சுமார் 19.3% ஆகும்.
- ஒரு சமூகத்தைச் சிறுபான்மையினராக அறிவிப்பதற்குப் பாராளுமன்றத்திற்கு சட்டப் பூர்வமான அதிகாரமும், மத்திய அரசிற்கு நிர்வாக அதிகாரமும் உள்ளது.

## முதல் மின்னணுக் கழிவு சுற்றுச்சூழல் பூங்கா

- டெல்லியில் உள்ள ஹோலம்பி கலன் எனுமிடத்தில் 21 ஏக்கர் பரப்பில் இந்தியாவின் முதல் மின்னணுக் கழிவு சுற்றுச்சூழல் பூங்கா உருவாக்கப்பட உள்ளது.
- டெல்லி மாநிலத் தொழில்துறை மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் (DSIIDC) ஆனது இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான முகமையாக இருக்கும்.

## இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அறுவை சிகிச்சை எந்திர அமைப்பு

- புது டெல்லியிலுள்ள ராஜீவ் காந்தி புற்றுநோய் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் அறுவை சிகிச்சை எந்திர அமைப்பை நிறுவி உள்ளது.
- இந்தச் சாதனத்திற்கு "SSI-மந்த்ரா" என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இது எந்திரம் மூலம் மேற்கொள்ளப்படும் இருதய அறுவை சிகிச்சை நிபுணர் உலகப் புகழ்பெற்ற டாக்டர் சுதிர் P.ஸ்ரீவஸ்தவாவின் சிந்தனையில் உருவான கருத்தாகும்.



## ஜாக்ரிதி சின்னம்

- ஜாக்ரிதி சின்னம் ஆனது நுகர்வோர் விவகாரத் துறையால் அறிமுகப்படுத்தட்டது.
- இது நுகர்வோருக்கு அதிகாரம் அளிப்பது மற்றும் அவர்களின் உரிமைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது நுகர்வோருக்கு அதிகாரம் அளிப்பது பற்றியும், "நுகர்வோர் உரிமைகள்" பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் உதவும்.
- இது அனைத்து ஊடகங்களின் பிரச்சாரங்களிலும் "ஜாகோ கிரஹக் ஜாகோ" என்ற முழக்கத்துடன் காட்சிப் படுத்தப்படும்.
- நுகர்வோர் உரிமை என்பது "தரம், அளவு, ஆற்றல், விலை, தூய்மை மற்றும் தரமானப் பொருட்கள் அல்லது சேவைகள் பற்றிய தகவல்களைப் பெறுவதற்கான உரிமை" என வரையறுக்கப் படுகிறது.

## மலைப் பகுதிக்கான போர்ப் பயிற்சி மையம்

- இந்திய திபெத்திய எல்லைக் காவல் படையானது, மலைப் பகுதிக்கான தனது முதல் போர்ப் பயிற்சி மையத்தினை வடகிழக்குப் பகுதியில் சிக்கிமில் நிறுவியுள்ளது.
- இது வடகிழக்கு இந்தியாவில் அமைந்த, மலைப்பகுதிக்கான முதல் போர்ப் பயிற்சி நிலையம் மற்றும் ஒட்டு மொத்த இந்தியாவிலேயே இரண்டாவதுப் பயிற்சி நிலையம் ஆகும்.
- இந்த வகையான முதல் நிலையமானது, 1973-74 ஆம் ஆண்டில் உத்தரகாண்டில் உள்ள ஜோஷிமத்திற்கு அருகிலுள்ள அவுலி எனுமிடத்தில் திறக்கப்பட்ட மலையேறுதல் மற்றும் பனிச் சறுக்கு நிறுவனம் (M&SI) ஆகும்.

- இந்தியத் திபெத்திய எல்லைக் காவல் படையானது (ITBP) சீனாவுடனான மெய்க் கட்டுப்பாட்டுப் பகுதியினைப் பாதுகாக்கும் பணியை மேற்கொள்கிறது.

## இந்திய புத்தாக்கக் குறியீடு 2021

- நிதி ஆயோக் அமைப்பானது மூன்றாவது இந்தியப் புத்தாக்கக் குறியீட்டினை வெளியிட்டுள்ளது.
- இது மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களை அவற்றின் புத்தாக்கச் செயல் திறனின் அடிப்படையில் தரவரிசைப் படுத்துகிறது.
- கர்நாடகா, மணிப்பூர் மற்றும் சண்டிகர் ஆகியவை இந்தக் குறியீட்டில் முதலிடத்தில் உள்ளன.
- 'வட கிழக்கு மற்றும் மலைப்பிரதேச மாநிலங்கள்' பிரிவில் மணிப்பூர் முதலிடம் பிடித்தது.
- 'ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் இறையாண்மை நகர மாநிலங்கள்' பிரிவில் சண்டிகர் முதலிடத்தில் இருந்தது.

| இடம் | மாநிலம் |
|---|---|
| 1 | கர்நாடகா |
| 2 | தெலங்கானா |
| 3 | ஹரியானா |
| 4 | மகாராஷ்டிரா |
| 5 | தமிழ் நாடு |


## பாராளுமன்ற மரபிற்கு ஒவ்வாத வார்த்தைகளின் பட்டியல்

- மக்களவைச் செயலகமானது சமீபத்தில் "பாராளுமன்ற மரபிற்கு ஒவ்வாத வார்த்தைகளின்" பட்டியலை வெளியிட்டது.
- பாராளுமன்ற மரபிற்கு ஒவ்வாத சில வார்த்தைகளில் 'ஜூம்லா ஜீவி, கோவிட் பரவல், ஸ்னூப் கேட் ஊழல், பால் புத்தி' ஆகியவை அடங்கும்.
- இதில் "வெட்கம், துரோகம், ஏமாற்றுதல், துஷ்பிரயோகம், நாடகம் மற்றும் திறமை இன்மை" போன்றப் பிரயோகங்களும் அடங்கும்.
- இந்தப் பட்டியலானது இதற்கு முன்னதாக 1954, 1986, 1992, 1999, 2004, 2009, 2010 ஆகிய ஆண்டுகளில் வெளியிடப்பட்டுள்ளது.
- 2010 ஆம் ஆண்டில், இது ஆண்டுதோறும் வெளியிடப்படுகிறது.

## இந்தியாவின் 15வது குடியரசுத் தலைவர்

- இந்தியாவின் 15வது குடியரசுத் தலைவராக திரௌபதி முர்மு தேர்ந்தெடுக்கப் பட்டு உள்ளார்.
- முர்மு இந்தியாவின் முதல் பழங்குடியினப் பெண் (சந்தால்) குடியரசுத் தலைவராக ஆனார்.

- ❖ பிரதிபா பாட்டீல் அவர்களுக்குப் பிறகு இந்தப் பதவியை வகிக்கும் இரண்டாவது பெண்மணி இவரே ஆவார்.
- ❖ இந்தியக் குடியரசுத் தலைவர் பதவிக்கான வேட்பாளராக முன்னிறுத்தப்பட்ட, பட்டியலினப் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த இரண்டாவது நபர் முர்மு ஆவார்.
- ❖ இவர் இந்தியாவின் முதல் பழங்குடிப் பெண் ஆளுநர் ஆவார்.
- ❖ இவர் 2015 முதல் 2021 ஆம் ஆண்டு வரை ஜார்க்கண்ட் மாநிலத்தின் ஒன்பதாவது ஆளுநராகப் பணியாற்றினார்.




## ஜல் ஜீவன் திட்டத்தின் இலக்கு 51% நிறைவு

- ❖ ஜல் ஜீவன் திட்டத்தின் இலக்கில் 51% நிறைவடைந்தது.
- ❖ இத்திட்டமானது 2024 ஆம் ஆண்டிற்குள், செயல்பாட்டில் உள்ள வீட்டுக் குழாய் இணைப்புகளை நிறுவுவதன் மூலம் ஒவ்வொரு கிராமப்புறக் குடும்பத்திற்கும் ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 55 லிட்டர் தண்ணீரை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- ❖ இத்திட்டமானது 17 சதவீத நிறைவில் இருந்து, 3 ஆண்டுகளுக்கும் குறைவான காலத்தில் 34 சதவீதத்திற்கும் அதிகமான பயனர்களைச் சென்றடைந்துள்ளது.
- ❖ குழாய் இணைப்புகளில் மறுசுழற்சி செய்யப்பட்ட தண்ணீரைப் பயன்படுத்தச் செய்வதற்காக பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகளில் சுமார் 1.4 மில்லியன் நீர் ஊற்றுப் படுகைகள் கட்டமைக்கப் பட்டுள்ளன.
- ❖ ஹரியானா, தெலுங்கானா மற்றும் கோவா ஆகிய மூன்று மாநிலங்களும் இந்தத் திட்டத்தை நிறைவு செய்து விட்டதாக அறிவித்துள்ளன.

## குறைந்தபட்ச ஆதரவு விலை தொடர்பான குழு

- ❖ மத்திய அரசானது "குறைந்தபட்ச ஆதரவு விலை மீதான குழுவை" நிர்ணயித்துள்ளது.
- ❖ குறைந்தபட்ச ஆதரவு விலையினை மேலும் பயனுள்ளதாகவும் வெளிப்படைத் தன்மையுடனும் மேம்படுத்துவதை ஒரு நோக்கமாகக் கொண்டு இந்தக் குழுவானது அமைக்கப் பட்டுள்ளது.

- இக்குழுவின் தலைவராக சஞ்சய் அகர்வால் செயல்படுவார்.
- "வேளாண் செலவினங்கள் மற்றும் விலைகளுக்கான ஆணையத்திற்கு" அதிக சுயாட்சி அதிகாரங்களை வழங்குவதற்கானப் பரிந்துரைகளை இந்தக் குழு வழங்கும்.
- இக்குழுவின் மற்ற உறுப்பினர்கள்
    - ரமேஷ் சந்த்- நிதி ஆயோக் அமைப்பின் உறுப்பினர்
    - சுக்பால் சிங் - அகமதாபாத் இந்திய மேலாண்மை கல்வி நிறுவனத்தின் பேராசிரியர்
    - திலிப் சங்கனி - இந்திய விவசாயிகள் உரக் கூட்டுறவு அமைப்பின் தலைவர்
    - உணவு மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறையின் செயலாளர்
    - கூட்டுறவு மற்றும் ஜவுளித்துறை செயலாளர்
    - வேளாண் துறை செயலாளர்
    - இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத் துறை செயலாளர்
    - கர்நாடகா, சிக்கிம், ஆந்திரப் பிரதேசம் மற்றும் ஒடிசா ஆகிய மாநில அரசுகளின் பிரதிநிதிகள்.

## ஜவஹர்லால் நேரு துறைமுகம்

- ஜவஹர்லால் நேரு துறைமுகம் ஆனது, அனைத்து கப்பல் நிறுத்தத் துறைகளும் பொது தனியார் கூட்டாண்மை மாதிரியில் இயக்கப்படுகின்ற இந்தியாவின் முதல் முழு அளவிலான நில உரிமையாளர் (லாண்ட்லார்ட்) மாதிரியினைக் கொண்ட முக்கியத் துறைமுகமாக மாறியுள்ளது.
- இந்தியத் துறைமுகங்களில் அரசு-தனியார் கூட்டாண்மை மாதிரி மூலம் மேற் கொள்ளப் படும் முதலீடானது, கடந்த 25 ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் அடைந்துள்ளது.
- லாயிட்ஸ் நிறுவனம் மேற்கொண்ட 2021 ஆம் ஆண்டின் முன்னணி 100 துறைமுகங்கள் பட்டியலில் நாட்டின் முன்னணி கொள்கலன் துறைமுகங்களில் ஒன்றாக இது குறிப்பிடப் பட்டுள்ளது.
- மேலும் இது சிறந்த 100 உலகளாவிய துறைமுகங்களின் பட்டியலில் 26வது இடத்தில் உள்ளது.

| Western Coast | Eastern Coast |
|---|---|
| 1. Kandla | 2. Kolkata (Riverine) Known for twin dock systems viz., Kolkata Dock System (KDS) on the eastern bank and Haldia Dock Complex (HDC) on the western bank of river Hooghly. |
| 3. Mumbai (Busiest and Biggest in India) | 4. Paradip |
| 5. Jawaharlal Nehru/ Nhava Seva | 6. Vishakhapatnam (oldest shipyard and natural harbour) |
| 7. Marmugao (Natural Harbour) | 8. Chennai (oldest and artificial harbour) |
| 9. Mangalore | 10. Ennore |
| 11. Cochin | 12. Tuticorin (artificial deep sea harbour) |

## குடிமைப் பணித் தேர்வுகளின் பயிற்சி நிறுவனங்களுக்கான தேசிய தர நிலைகள்

- மத்திய அரசானது, "குடிமைப் பணித் தேர்வுகளின் பயிற்சி நிறுவனங்களுக்கான தேசியத் தரநிலைகளை (NSCSTI)" வெளியிட்டது.
- குடிமைப் பணித் தேர்வுகளின் பயிற்சி நிறுவனங்களுக்கான தேசிய அளவிலான தர நிலைகளை உருவாக்குவதற்கான தனித்துவமான ஒரு மாதிரியை அறிமுகப்படுத்திய உலகின் முதல் நாடாக இந்தியா மாறியுள்ளது.
- இது குடிமைப் பணியில் சேரும் அதிகாரிகளின் தரம் மற்றும் திறனை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அரசு ஊழியர்களுக்கான கர்மயோகி திட்டத்தின் ஒரு பகுதியாக திறன் மேம்பாட்டு ஆணையமானது உருவாக்கப்பட்டது.
- கர்மயோகி திட்டம் என்பது "தேசியக் குடிமைப் பணிகள் திறன் மேம்பாட்டுத் திட்டம்" ஆகும்.

## இந்தியாவின் அடிப்படைச் சாலைப் புள்ளிவிவரங்கள் 2018-19

- சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகமானது அதன் வருடாந்திர "இந்தியாவின் அடிப்படைச் சாலைப் புள்ளிவிவரங்களை (2018-19)" வெளியிட்டது.
- 2019 ஆம் ஆண்டு மார்ச் மாத நிலவரப்படி, இந்தியாவில் 63,31,757 கிலோமீட்டருக்கும் அதிகமான சாலைகள் உள்ளது.
- இது உலகளவில் இரண்டாவது மிக அதிக தூர சாலை அமைப்பாகும்.
- இந்தியாவின் போக்குவரத்துத் துறையில் சாலைப் போக்குவரத்து அதிக ஆதிக்கம் செலுத்துகிறது.
- 2019-20 ஆம் ஆண்டிற்கான மொத்தப் போக்குவரத்து துறைப் பங்களிப்பான 4.58% என்ற அளவுடன் ஒப்பிடுகையில் இதன் பங்களிப்பு மொத்த மதிப்புக் கூட்டலில் 3.06% என்ற அளவிலானப் பங்கினை வழங்கியுள்ளது.
- இரயில்வே துறையின் பங்கானது 0.74% ஆக உள்ளது.
- விமானப் போக்குவரத்துத் துறையின் பங்கு 0.125 ஆகவும், நீர்ப் போக்குவரத்துத் துறையின் பங்கு 0.08% ஆகவும் உள்ளது.
- இந்தியாவின் மொத்த சாலைக் கட்டமைப்பில் தேசிய நெடுஞ்சாலைகளின் அளவு 2.09% ஆகும்.
- 13.4% நெடுஞ்சாலைக் கட்டமைப்புடன் மகாராஷ்டிரா முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து 8.9% நெடுஞ்சாலைக் கட்டமைப்புடன் உத்தரப் பிரதேச மாநிலமும், 7.8% நெடுஞ்சாலைக் கட்டமைப்புடன் ராஜஸ்தான் மாநிலமும் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.
- இந்தியாவின் மொத்த சாலைக் கட்டமைப்பில் மாநில நெடுஞ்சாலைகளின் அளவு 2.8 சதவீதம் ஆகும்.
- மகாராஷ்டிரா (17.83%) மிகப்பெரிய மாநில நெடுஞ்சாலைக் கட்டமைப்பினைக் கொண்டுள்ளது.

- அதைத் தொடர்ந்து கர்நாடகா, குஜராத், ராஜஸ்தான் மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- இந்தியாவில் உள்ள மொத்த மாநில நெடுஞ்சாலைக் கட்டமைப்பில் இந்த 5 மாநிலங்களும் 53.9% பங்கைக் கொண்டுள்ளன.

## நமஸ்தே திட்டம்

- சாக்கடைகள் மற்றும் கழிவுநீர்த் தொட்டிகளைச் சுத்தம் செய்வதற்காக நமஸ்தே என்ற திட்டத்தை அரசு வகுத்துள்ளது.
- நமஸ்தே என்பது இயந்திரமயமாக்கப்பட்ட துப்புரவுச் சூழல் அமைப்புக்கான தேசிய செயல் திட்டம் என்பதைக் குறிக்கிறது.
- இத்திட்டத்தின் நோக்கங்கள்
    - இந்தியாவின் துப்புரவுப் பணிகளில் உயிரிழப்புகளைத் தடுத்தல்
    - துப்புரவுப் பணியாளர்கள் மனித மலத்தினை நேரடியாக கையாள்வதை ஒழித்தல்
    - அனைத்துச் சாக்கடை மற்றும் கழிவுநீர்த் தொட்டிகளைச் சுத்தம் செய்யும் துப்புரவுப் பணியாளர்களுக்கும் மாற்று வாழ்வாதாரத்தினைப் பெறச் செய்தல்
- இது பின்வரும் அமைப்புகளின் ஒரு கூட்டு முன்னெடுப்பாகும்.
    - குடிநீர் மற்றும் துப்புரவுத் துறை
    - சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சகம் மற்றும்
    - வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்.


## ஹர் கர் திரங்கா அபியான்

- ஹர் கர் திரங்கா அபியான் என்பது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவின் கீழ் மத்திய அரசினால் தொடங்கப்பட்ட ஓர் இயக்கமாகும்.
- இந்தியச் சுதந்திரத்தின் 75வது ஆண்டைக் குறிக்கும் வகையில் திரங்காவை (மூவர்ணக் கொடியை) ஏற்றுவது குறித்து மக்களை ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## சட்டப்பூர்வ அளவியல் (பொதி கட்டப்பட்டப் பொருட்கள்) விதிகள் 2011


- நுகர்வோர் விவகாரத் துறையானது, 2022 ஆம் ஆண்டின் சட்டப்பூர்வ அளவியல் (பொதி கட்டப்பட்டப் பொருட்கள்), (இரண்டாவது திருத்தம்) விதிகளை வெளியிட்டுள்ளது.
- மின்னணுத் தயாரிப்புகளின் பொதியிலேயே இத்தகையத் தகவல்கள் குறிக்கப் படாமலிருந்தால், ஒரு வருட காலத்திற்கு விரைவுக் குறியீடு மூலம் சில கட்டாய உறுதி ஆவணங்களை வழங்குவதற்கு இந்த விதிகள் வழி வகுத்துள்ளன.
- இந்தத் திருத்தமானது, இந்தத் தொழில்துறையினர் விரைவுக் குறியீடு மூலம் விரிவான தகவல்களை எண்ணிம வடிவில் வழங்கிட வழி வகுக்கும்.
- முன்னதாக, மின்னணுத் தயாரிப்புகள் உட்பட அனைத்து பொதி கட்டப்பட்ட பொருட்களிலும், 2011 ஆம் ஆண்டு சட்டப்பூர்வ அளவியல் (பொதி கட்டப்பட்ட பொருட்கள்), விதிகளின் படி அனைத்துக் கட்டாய உறுதி ஆவணங்களையும் பொதியிலேயே குறிப்பிட வேண்டும்.

## குறைந்த வெப்பநிலையில் இயங்கும் வெப்பமுறை உப்பு நீக்க ஆலை




- ❖ சென்னையின் தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிறுவனமானது, உப்பு நீக்க ஆலையை தொடங்கியுள்ளது.
- ❖ இது உப்பு அல்லது உப்பு கலந்த கடல்நீரைக் குடிநீராக மாற்றும்.
- ❖ இந்தத் தொழில்நுட்பமானது லட்சத்தீவுகளில் வெற்றிகரமாக நிறுவப்பட்டுள்ளது.
- ❖ இந்த உப்பு நீக்க ஆலையானது குறைந்த வெப்பநிலையில் இயங்கும் வெப்பமுறை உப்பு நீக்க (LTTD) தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்குகிறது.
- ❖ லட்சத் தீவின் கவரட்டி, அகாத்தி மற்றும் மினிக்காய் ஆகிய தீவுகளில் மூன்று ஆலைகள் நிறுவப் பட்டு இயங்கி வருகின்றன.

## இந்தியாவின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுச் செலவினங்கள் பற்றிய ஆய்வு




- நிதி ஆயோக் அமைப்பானது இந்தியப் புத்தாக்கக் குறியீட்டினைச் சமீபத்தில் வெளியிட்டது.
- இது மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுக்கு அவற்றின் புத்தாக்கச் செயல்பாடுகளின் அடிப்படையில் தரவரிசைகளை வழங்குகிறது.
- நிதி ஆயோக் அமைப்பின் 2021 ஆம் ஆண்டு இந்தியப் புத்தாக்கக் குறியீட்டின் படி, இந்தியாவில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான மொத்தச் செலவினம் உலகிலேயே மிகக் குறைவானதாக உள்ளது.
- இந்தியா ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக மக்கள் தொகையில் ஒருவருக்கு தலா 43 அமெரிக்க டாலர்கள் என்ற அளவில் செலவிடுகிறது.
- ரஷ்யா தலா 285 அமெரிக்க டாலர்கள், பிரேசில் 173 அமெரிக்க டாலர்கள், மலேசியா 293 டாலர்கள் என்ற அளவில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக செலவிடுகின்றன.
- பிரேசில் (1.16%) மற்றும் தென்னாப்பிரிக்கா (0.83%) ஆகிய நாடுகளுடன் ஒப்பிடும் போதும் இந்தியாவின் செலவினம் குறைவாக உள்ளது.
- மெக்ஸிகோ (0.31%) நாட்டின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான மொத்தச் செலவினம் (மொத்த உள்நாட்டு உற்பத்தி சதவீதத்தில்) மட்டுமே இந்தியாவை விட குறைவானப் பங்கைக் கொண்டுள்ளது.

## பதவிப் பிரமாணம் - திரௌபதி முர்மு

- டெல்லியில் உள்ள பாராளுமன்ற மைய மன்றத்தில் இந்தியாவின் 15வது குடியரசுத் தலைவராக திரௌபதி முர்மு பதவியேற்றார்.
- அவருக்கு இந்தியத் தலைமை நீதிபதி NV ரமணா பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
- அவருக்கு 21 துப்பாக்கி குண்டுகள் முழங்கிய மரியாதை அளிக்கப்பட்டதையடுத்து, அவர் பதவிப் பிரமாணப் பதிவேட்டில் கையெழுத்திட்டார்.
- ஆயுதப் படைகளின் புதிய தலைமைத் தளபதி, ராஷ்டிரபதி பவனின் முன்புறத்தில் நிறுத்தப் பட்டிருந்த முப்படைகளின் பாதுகாப்பு வழங்கலை ஆய்வு செய்தார்.
- நாட்டின் மிக உயரிய அரசியலமைப்புப் பதவியை வகிக்கும் முதல் பழங்குடியினக் குடியரசுத் தலைவர் மற்றும் இரண்டாவது பெண் என்ற வரலாற்றை அவர் படைத்தார்.
- 64 வயதான இவர் இந்தியாவின் இளம் மற்றும் சுதந்திரத்திற்குப் பிறகு பிறந்த முதல் குடியரசுத் தலைவர் ஆவார்.
- அவர் 1958 ஆம் ஆண்டு ஜூன் 20 ஆம் தேதியன்று, ஒடிசாவின் மயூர்பஞ்ச் மாவட்டத்தில் உள்ள ராய்ராங்பூரில் ஒரு சந்தாலி குடும்பத்தில் பிறந்தார்.
- இவரது குடும்பத்தினர் இவருக்கு வழங்கியப் பெயர் புட்டி துது என்பதாகும்.
- இவரது பள்ளி ஆசிரியர் இவருக்கு திரௌபதி என்று பெயர் மாற்றம் செய்தார்.
- முர்மு 2015 ஆண்டில் ஜார்கண்ட் ஆளுநராகப் பதவியேற்றார்.
- எனவே, அவர் இந்த மாநிலத்தின் முதல் பெண் ஆளுநர் ஆனார்.
- இவர் ஒடிசா மாநிலத்திலிருந்து இந்திய மாநில ஆளுநராக நியமிக்கப்பட்ட முதல் பெண் பழங்குடியினத் தலைவர் ஆவார்.



## இந்திய உயிரிப் பொருளாதார அறிக்கை 2022




- உயிரித் தொழில்நுட்பத் தொழில்துறை ஆராய்ச்சி உதவிக் கழகமானது (BIRAC) சமீபத்தில் தனது "2022 ஆம் ஆண்டு இந்திய உயிரிப் பொருளாதார அறிக்கையினை" வெளியிட்டது.
- இந்தியாவின் உயிரிப் பொருளாதாரம் ஆனது 2025 ஆம் ஆண்டில் 150 பில்லியன் அமெரிக்க டாலராகவும், 2030 ஆம் ஆண்டில் 300 பில்லியன் டாலருக்கும் அதிகமாகவும் உயரும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- 2021 ஆம் ஆண்டில், இந்தியாவின் உயிரிப் பொருளாதாரம் 80 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டி 14.1 சதவீத வளர்ச்சியை அடைந்துள்ளது.
- இது 2020 ஆம் ஆண்டில் 70.2 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது.
- 2021 ஆம் ஆண்டில் சராசரியாக ஒவ்வொரு நாளும் மூன்று உயிரித் தொழில்நுட்ப தொடக்க நிறுவனங்கள் நிறுவப்பட்டன.
- இவ்வாறு, 2021 ஆம் ஆண்டில் மொத்தம் 1128 உயிரித் தொழில்நுட்பத் தொடக்க நிறுவனங்கள் நிறுவப் பட்டன.

## இந்தியக் கொடியின் விதிமுறைகள்

- இந்தியக் கொடியின் விதிமுறைகள் என்பது இந்தியாவில் அதன் பயன்பாடு, காட்சிப் படுத்துதல் மற்றும் கொடியேற்றம் தொடர்பான சட்டங்கள் மற்றும் மரபுகளின் ஒரு தொகுப்பாகும்.

- இது 2002 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் தேதியன்று நடைமுறைக்குக் கொண்டு வரப் பட்டது.
- 2022 ஆம் ஆண்டு ஜூலை 20 ஆம் தேதியன்று இந்தியக் கொடியின் விதிமுறைகளை மத்திய அரசு திருத்தியமைத்தது.
- தேசியக் கொடியானது, ஒரு திறந்த அல்லது பொது இடத்தில் ஏற்றப் பட்டால் பகல் மற்றும் இரவிலும் அதனைப் பறக்க விடுவதற்கு இது அனுமதி அளிக்கிறது.
- முன்னதாக, மூவர்ணக் கொடியைச் சூரிய உதயம் மற்றும் சூரிய அஸ்தமனம் ஆகியவற்றிற்கு இடைப்பட்ட நேரத்தில் மட்டுமே ஏற்ற முடியும்.
- 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 30 ஆம் தேதியன்று வெளி வந்த முந்தையத் திருத்தத்தில், இயந்திரத்தால் நெய்யப்பட்ட மற்றும் பாலியஸ்டர் கொடிகளையும் சேர்த்து பயன்படுத்த அரசாங்கம் அனுமதித்தது.
- இதற்கு முன்பு, இத்தகையக் கொடிகளைப் பயன்படுத்த அனுமதி இல்லை.

## இந்திய அண்டார்டிகா மசோதா – 2022




- அண்டார்டிக் உடன்படிக்கையின் உறுப்பினராக, அதன் கீழ் வழங்கப்பட்டுள்ள கடமைகளின் காரணமாக 2022 ஆம் ஆண்டின் இந்திய அண்டார்டிகா மசோதாவினை மக்களவை நிறைவேற்றியது.
- இது அண்டார்டிகா பகுதியில் உள்ள இராணுவப் படையை நீக்குதல், அப்பகுதியினை அணுசக்திச் சோதனைகளை மேற்கொள்ளாத மண்டலமாக மாற்றுதல், கதிரியக்கக் கழிவுகளை அகற்றுதல், மேலும், அப்பகுதியினை அமைதியான நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படச் செய்வதை உறுதி செய்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அண்டார்டிகா பகுதியில் சர்வதேச அறிவியல் ஒத்துழைப்பை ஊக்குவித்தல் மற்றும் பிராந்திய இறையாண்மை மீதான சர்ச்சைகளைப் புறந்தள்ளுதல் ஆகியவற்றை இது ஊக்குவிக்கிறது.

- அண்டார்டிக் ஒப்பந்தம் 1959 ஆம் ஆண்டில் கையெழுத்திடப்பட்டு 1961 ஆம் ஆண்டில் நடைமுறைப் படுத்தப்பட்டது.
- இந்தியா 1983 ஆம் ஆண்டில் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

## 'ஜோஹர்' வரவேற்பு

- இந்தியாவின் 15வது குடியரசுத் தலைவரான திரௌபதி முர்மு, 'ஜோஹர்' வரவேற்பு நிகழ்வுடன் ஜூலை 25 ஆம் தேதியில் திங்கள் கிழமையன்று பதவியேற்றார்.
- 'ஜோஹர்' என்பதன் பொருள் 'வணக்கம் மற்றும் வரவேற்பு' என்பதாகும்.
- இது ஜார்க்கண்டின் பழங்குடியின சமூகங்களிலும், சத்தீஸ்கர் மற்றும் ஒடிசாவின் சில பகுதிகளிலும் பயன்படுத்தப்படுகிறது.
- 'ஜோஹர்' என்ற சொல்லுக்கு 'மரியாதை செலுத்துதல்' என்றும் பொருள் உண்டு.
- இது முக்கியமாக சில சமூகங்களில் மரபுகள் ஒத்து காணப்படும் சந்தாலி, முண்டா மற்றும் ஹோ போன்ற சமூகங்களால் பயன்படுத்தப்படுகிறது.



**JOHAR, NAMASKAR**

**SUPREME COMMANDER:** President Droupadi Murmu inspects the guard of honour after the swearing-in ceremony at Rashtrapati Bhavan on Monday

"It is the power of India's democracy that a girl born in a poor tribal home could reach the topmost constitutional post

I was born in that tribal tradition which has lived in harmony with nature for thousands of years... We take resources and serve nature with equal reverence. This sensitivity has become a global imperative today" —President Droupadi Murmu

➤ President Murmu began her speech with **"Johar, Namaskar"**. 'Johar' or "Juhar" is a **traditional tribal greeting** exchanged among the communities in Odisha, Jharkhand and Chhattisgarh

➤ Murmu chose to wear a **Santhali saree** brought by her sister-in-law for the swearing-in. In another recall of her roots, she **quoted Odia saint and poet Bhim Bhoi** to stress welfare of the world over self interest


➤ In her first tweets, the President **highlighted tribal uprisings & icons** such as Rani Velu Nachchiar, Rani Gaidinlu & Rani Chennamma for their role in the freedom struggle (SEE FLAP OPP)

"The entire nation watched with pride as Smt Droupadi Murmu Ji took oath as the President of India. Her assuming the Presidency is a **watershed moment** for India..." —PM Modi

## கூட்டுப் போர் படைப்பிரிவுகள்

- ஆயுதப் படைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பை மேம்படுத்தச் செய்வதற்காக முப்படைகளின் மீதான கூட்டுப் போர்ப் படைகள் அமைக்கப்பட உள்ளன.
- இது இராணுவம், விமானப்படை மற்றும் கடற்படை ஆகிய மூன்று படைகளின் திறன்களை ஒருங்கிணைக்க முயலும் ஒரு திட்டமாகும்.
- இது அவற்றின் வள ஆதாரங்களைப் போர்கள் மற்றும் நடவடிக்கைகளுக்கு உகந்த முறையில் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- அதற்கு ஒதுக்கப்பட்ட செயல்பாடுகளைப் பொறுத்து, மூன்று படைகளில் இருந்து தேர்ந்தெடுக்கப் பட்ட ஏதேனும் ஒரு படைப் பிரிவின் தலைவர் மூன்று நட்சத்திரத் தரம் உள்ள படைத் தளபதியாகச் செயல்படுவார்.
- தற்சமயம் இந்தியாவில் அந்தமான் மற்றும் நிக்கோபார் படைப் பிரிவு மற்றும் யுக்தி சார் படைப் பிரிவு என்று இரண்டு கூட்டுப் படைப் பிரிவுகள் உள்ளன.
- அந்தமான் மற்றும் நிக்கோபார் படைப் பிரிவு என்பது மட்டுமே நாட்டில் தரைப்படை, கடற்படை மற்றும் விமானப் படை ஆகிய மூன்றையும் ஒருங்கிணைக்கின்ற இம்மாதிரியிலான அமைப்பாக கருதப் படுகின்றது.
- 2001 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப் பட்ட இது போர்ட் பிளேயரில் ஏற்படுத்தப் பட்டது.
- யுக்தி சார் படைப் பிரிவு என்பது இந்தியாவில் அணு ஆயுதச் சொத்துக்களை மட்டுமே கையாள்வதோடு எந்தவொரு குறிப்பிட்ட யுத்தக் களத்தினையும் கையாளச் செய்வது இல்லை.




## வெள்ளை வெங்காயத்திற்குப் புவிசார் குறியீடு

- அலிபாக் பகுதியின் வெள்ளை வெங்காயத்திற்குப் புவிசார் குறியீடு வழங்கப் பட்டு உள்ளது.
- அலிபாக் மகாராஷ்டிராவின் ராய்காட் மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- இந்த வெங்காயத்திற்கான புவிசார் குறியீடானது, அதன் இனிப்புத் தன்மைக்காக வழங்கப் பட்டது.
- புவிசார் குறியீடானது வெள்ளை வெங்காயத்திற்கு ஒரு தனித்துவமான அடையாளத்தை அளிக்கிறது.
- மருத்துவக் குணங்கள் கொண்ட இது பாரம்பரிய முறையில் நீண்ட காலமாக பயிரிடப் பட்டு வருகிறது.

## ஸ்வதேஷ் தர்ஷன் திட்டம் 2.0

- சுற்றுலா அமைச்சகம் ஆனது அதன் ஸ்வதேஷ் தர்ஷன் திட்டத்தை ஸ்வதேஷ் தர்ஷன் 2.0 என புதுப்பித்துள்ளது.
- இது பல இடங்களில் நிலையான மற்றும் முறையான உள்கட்டமைப்பை மேம்படுத்தச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது 2014-15 ஆம் ஆண்டில், ஒருங்கிணைந்த முறையில் கருத்துரு அடிப்படையிலான சுற்றுலாத் தளங்களைக் கட்டமைப்பதற்காகத் தொடங்கப்பட்டது.
- இது முழுவதுமாக மத்திய அரசின் நிதியுதவியைப் பெறுகின்ற ஒரு திட்டமாக இருப்பதோடு மத்திய மற்றும் மாநில அரசுகளின் இதர பிறத் திட்டங்களுடன் இதனை ஒன்றிணைக்க பல முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன.


## கடல்சார் கூட்டாண்மைப் பயிற்சி

- ஜப்பான் கடற்படை மற்றும் இந்தியக் கடற்படை ஆகியவற்றுக்கிடையேயான கடல் சார் கூட்டாண்மைப் பயிற்சியானது அந்தமான் கடலில் நடத்தப் பட்டது.
- இந்தியப் பெருங்கடல் பகுதியில் (IOR) கடல்சார் தொடர்பை வலுப்படுத்தும் நோக்கில் இரு நாடுகளும் இது போன்ற வழக்கமானப் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.
- இந்தப் பயிற்சிகள், இந்த இரு நாடுகளின் படைகளுக்கிடையேயான இயங்குதிறனை மேம்படுத்துதல், கப்பல் போக்குவரத்து திறன் மற்றும் தகவல்தொடர்பு நடைமுறை ஆகியவைகளை நெறிப்படுத்துதல் போன்றவற்றை ஒரு நோக்கமாகக் கொண்டு மேற் கொள்ளப் பட்டன.

## தேசிய ஊக்கமருந்து எதிர்ப்பு மசோதா 2021

- இது இந்தியாவில், விளையாட்டுப் போட்டிகளில் ஊக்கமருந்து பயன்படுத்துவதை நிறுத்துவதற்கான ஒரு சட்ட வடிவிலான சட்டப்பூர்வக் கட்டமைப்பை வழங்கும்.
- தற்போது, தேசிய ஊக்கமருந்து எதிர்ப்பு நிறுவனமானது, உலக ஊக்கமருந்து தடுப்பு அமைப்பின் விதிமுறைகளுக்கு ஏற்ப ஊக்கமருந்து தடுப்பு நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகிறது.
- விளையாட்டுத் துறையில் தேசிய ஊக்கமருந்து தடுப்பு வாரியத்தினை அமைப்பதற்கு இந்த மசோதா உதவும்.
- இது திறன்மிக்க மற்றும் தன்னிச்சையாகச் செயல்படுகின்றப் பணியாளர்களை உள்ளடக்கியதாக இருக்கும்.
- இது விளையாட்டு வீரர்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில் நீதியை அடையச் செய்ய முயல்கிறது.
- ஊக்க மருந்துக்கு எதிராகப் போராடுவதற்கு வேண்டி முகமைகளின் ஒத்துழைப்பை இது மேம்படுத்தும்.

## நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் தீவு




- ❖ நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் தீவினுடைய நிர்வாகமானது, அந்தமான் நிக்கோபார் நிர்வாகத்திடம் மாற்றப்பட்டது.
- ❖ இந்தத் தீவின் உள்கட்டமைப்பு மற்றும் சுற்றுலாவை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்த நடவடிக்கையானது மேற்கொள்ளப்பட்டது.
- ❖ இதற்கு முன்பு இந்தப் பகுதியானது, அந்தமான் நிக்கோபார் படைப்பிரிவினால் நிர்வகிக்கப் பட்டது.

## விமானம் தாங்கி கப்பல் ஐஎன்எஸ் விக்ராந்த்

- ❖ உள்நாட்டிலேயேத் தயாரிக்கப்பட்ட விமானம் தாங்கி போர்க்கப்பலான ஐஎன்எஸ் விக்ராந்த் இந்தியக் கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டு ஆகஸ்ட் 15 ஆம் தேதியன்று அது படையில் இணைக்கப்பட உள்ளது.
- ❖ இது 76 சதவீதம் வரையில் ஒட்டு மொத்த உள்நாட்டு உள்ளடக்கத்தைக் கொண்டு தயாரிக்கப் பட்டது,
- ❖ இந்தியாவின் முதல் விமானம் தாங்கி கப்பலின் நினைவாக இதற்கு இப்பெயரானது சூட்டப் பட்டது.
- ❖ இந்தியக் கடற்படை கப்பல் விக்ராந்த் 1971 ஆம் ஆண்டு போரில் குறிப்பிடத்தக்க பங்கினை வகித்தது.

## ராஷ்ட்ரிய கனிஜ் புரஸ்கார்

- ❖ மத்திய சுரங்கத் துறை அமைச்சகம் ராஷ்ட்ரிய கனிஜ் புரஸ்கார் என்ற விருதினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- ❖ இது நாடு முழுவதும் சுரங்கத் தொழில் மேற்கொள்வதை ஊக்குவிப்பதற்கும் அதனை மேம்படுத்துவதற்குமான ஒரு தேசிய விருதாகும்.
- ❖ 2022 ஆம் ஆண்டிற்கான இந்த ராஷ்டிரிய கனிஜ் புரஸ்கார் விருதானது, கனிமத் தொகுதிகளை ஆராய்தல், ஏலம் விடுதல் மற்றும் அதன் செயல்பாடு ஆகியவற்றினை மேற்கொள்வதற்கு வேண்டிய சிறந்த முயற்சிகளை மேற்கொள்ளும் மாநிலங்களை ஊக்குவிக்கச் செய்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது.

- மூன்று வகையான கனிமங்களுக்கு ராஷ்ட்ரிய கனிஜ் புரஸ்கார் விருதானது வழங்கப் படும்.
- சிறிய கனிமங்களுக்கான சுரங்க ஏலத்தில் குஜராத் மாநிலமானது, ராஷ்ட்ரிய கனிஜ் புரஸ்கார் விருதின் முதல் பரிசைப் பெற்றது.


### வாக்காளர் பட்டியலில் முன்கூட்டியே பதிவு செய்தல்

- 17 வயதுக்கு மேற்பட்டவர்கள் வாக்காளர் பட்டியலில் தங்களது பெயர்களை முன் கூட்டியேச் சேர்ப்பதற்காக தற்போது விண்ணப்பிக்கலாம்.
- ஒரு வருடத்தின் ஜனவரி 01 ஆம் தேதியன்று, 18 வயதை அடைந்திருக்க வேண்டும் என்கின்ற ஒரு அவசிய நிபந்தனையைப் பூர்த்தி செய்யும் வரை தற்போது காத்திருக்க வேண்டிய அவசியமில்லை.
- 2023 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியைக் குறிப்பிட்டவாறு, வருடாந்திர தொகுப்புத் திருத்தத்தையும் தேர்தல் ஆணையம் வெளியிட்டது.

## சர்வதேசச் செய்திகள்

### காமன்வெல்த் அமைப்பின் புதிய உறுப்பினர்கள்

- மேற்கு ஆப்பிரிக்க நாடுகளான காபோன் மற்றும் டோகோ ஆகியவை காமன்வெல்த் நாடுகள் அமைப்பின் உறுப்பினர்களாக இணைந்துள்ளன.
- பிரிட்டனுடன் எந்தவொரு வரலாற்றுத் தொடர்பு உறவுகளும் இல்லாத, இராணி இரண்டாம் எலிசபெத் தலைமையிலான ஆங்கில மொழி பேசும் நாடுகளின் குழுவில் நுழைகின்ற நாடுகள் இவை மட்டுமே ஆகும்.
- இந்த நாடுகள் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்ததேயில்லை.
- இவை ருவாண்டாவின் கிகாலியில் நடைபெற்ற 2022 ஆம் ஆண்டு காமன்வெல்த் நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் இந்தக் குழுவில் இணைக்கப்பட்டன.




- தற்போது இந்த அமைப்பின் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை 56 ஆக உள்ளது.
- 2009 ஆம் ஆண்டில் ருவாண்டா இதில் இணைந்ததற்குப் பிறகு காமன்வெல்த் அமைப்பில்

இணைந்த முதல் புதிய உறுப்பினர் நாடு பிரெஞ்சு மொழி பேசும் மக்களைக் கொண்ட இந்த மேற்கு ஆப்பிரிக்க நாடுகளாகும்.

- முன்பு போர்த்துகீசியக் காலனியாக இருந்த மொசாம்பிக், பிரிட்டனுடன் வரலாற்றுத் தொடர்புகள் இல்லாத முதல் காமன்வெல்த் உறுப்பினராக 1995 ஆம் ஆண்டில் இந்த அமைப்பில் இணைந்தது.

## ஐக்கிய நாடுகள் சபையின் பெருங்கடல் மாநாடு 2022

- 2022 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் சபையின் பெருங்கடல் மாநாடு போர்ச்சுகலின் லிஸ்பன் நகரில் தொடங்கியது.
- இது போர்ச்சுகல் மற்றும் கென்யாவுடன் இணைந்து நடத்தப்படுகிறது.
- இந்த மாநாட்டில் மத்திய இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் கலந்து கொள்கிறார்.
- இது 14வது நிலையான மேம்பாட்டு இலக்கான 'கடலுக்கு அடியில் உள்ள உயிரினங்கள்' பற்றி விவாதிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- 14வது நிலையான மேம்பாட்டு இலக்கினைச் செயல்படுத்துவதற்காக வேண்டி, அறிவியல் மற்றும் கண்டுபிடிப்புகளின் அடிப்படையிலான பெருங்கடல் என்ற ஒரு நடவடிக்கையை உருவாக்குதல் : பங்காற்றுதல், கூட்டாண்மை மற்றும் தீர்வுகள் என்ற தலைப்பில் இந்தியா சார்பாக இந்த மாநாட்டில் உரையாற்றப்பட உள்ளது.
- 2021 முதல் 2030 ஆம் ஆண்டு வரையிலான நிலையான வளர்ச்சிக்கான ஐக்கிய நாடுகளின் கடல்சார் அறிவியல் பத்தாண்டுகள் என்ற ஒரு முன்னேற்றப் பாதையில் இந்தியா தற்போது உள்ளது.
- மாநாட்டின் முடிவில், தலைவர்கள் நமது கடல், நமது எதிர்காலம்: நடவடிக்கைக்கான அழைப்பினை விடுத்தல் என்ற தலைப்பிலான அறிக்கையை மீண்டும் வலியுறுத்துவர்.
- அமெரிக்காவின் ஒரு பிரபல நடிகரும் கடல்சார் ஆர்வலருமான ஜேசன் மோமோவா, ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்தின் (UNEP) கடலுக்கு அடியில் உள்ள உயிரினங்கள் என்ற இலக்கின் ஆதரவாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

## பிரிக்ஸ் அமைப்பில் இணையும் புதிய நாடுகள்


POTENTIAL MEMBERS

Indonesia, Turkey, Mexico and Germany have been mentioned as candidates for full membership of the BRICS, while Egypt, Argentina, Iran, Nigeria, Syria and most recently Bangladesh have expressed interest in joining BRICS

- ❖ பிரிக்ஸ் எனப்படும் வளர்ந்து வரும் நாடுகளின் குழுவில் உறுப்பினராக சேர்வதற்காக ஈரான் நாடு தனது விண்ணப்பத்தைச் சமர்ப்பித்துள்ளது.
- ❖ அர்ஜென்டினாவும் இக்குழுவில் சேர விண்ணப்பித்துள்ளதாக ரஷ்யாவும் தனியாகக் குறிப்பிட்டது.

## இயற்கை மறுசீரமைப்புச் சட்டம்

- ❖ இயற்கை மறுசீரமைப்புச் சட்டத்திற்கான ஐரோப்பிய ஆணையத்தின் ஒரு முன் மொழிவானது, ஒரு முழு கண்டம் அளவிலான, விரிவான சட்டம் மற்றும் பல்லுயிர் உத்தியின் ஒரு பகுதியாகும்.
- ❖ இது சீரழிந்த சுற்றுச்சூழல் அமைப்புகளை மறுசீரமைப்பதற்கான பிணைப்பு சார்ந்த இலக்குகளை உருவாக்குவதற்கான ஒரு அழைப்பினை விடுக்கிறது.
- ❖ இரசாயன பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டை 50% வரை (2030 ஆம் ஆண்டிற்குள்) குறைத்தல், மரத்தின் மேல்பகுதியின் பரவலை (குறைந்தபட்சம் 10%) அதிகரித்தல் மற்றும் ஆறுகள் தடையின்றி ஓட வழி வகை செய்வது ஆகியவை இதில் அடங்கும்.

## நிலங்களுக்கான சாசனம்




- ❖ காமன்வெல்த் அமைப்பின் அனைத்து 54 உறுப்பினர்களும் அந்தந்த நாடுகளில் உள்ள 'நிலங்களை' வருங்காலச் சந்ததியினருக்கு தானாக முன்வந்து அர்ப்பணிக்க ஒப்புக் கொண்டுள்ளனர்.
- ❖ ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் அமைப்பின் மறுசீரமைப்புக்கான தசாப்தத்திற்காக அமைக்கப் பட்ட உத்திக்கு ஏற்ற வகையில் இது மேற்கொள்ளப்பட்டது (2021-2030).
- ❖ இது ஒரு பிணைப்பு சாராத ஒப்பந்தமாகும்.
- ❖ இது உறுப்பினர் நாடுகள் காலநிலை மாற்றம், பல்லுயிர் இழப்பு மற்றும் நிலையான மேலாண்மை ஆகியவற்றுக்கு எதிராகச் செயல்படுகின்ற அதே சமயம், உலகளாவிய நில வளங்களைப் பாதுகாப்பதோடு நிலச் சீரழிவைத் தடுக்கச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

- இது நிலம் மற்றும் முக்கிய சுற்றுச்சூழல் வளங்களைப் பாதுகாப்பதில் பழங்குடி மக்கள் மற்றும் உள்ளூர் சமூகங்களால் வழங்கப்படும் "முக்கியமான பாதுகாப்பினை" அங்கீகரிக்கிறது.


## வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் படைகள்

- வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பானது அதன் விரைவு செயல்பாட்டுப் படையின் (RRF) எண்ணிக்கையினைக் கிட்டத்தட்ட எட்டு மடங்கு அதிகரித்து 3,00,000 துருப்புகளாக உயர்த்த உள்ளது.
- வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் படைகள் தற்போது சுமார் 40,000 என்ற எண்ணிக்கையில் உள்ளது.
- சீனா முன் வைத்துள்ள பாதுகாப்புச் சவால்களை, இந்தக் கூட்டணி முதன்முறையாக எதிர்கொள்ளும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## நீலநிறப் பசிபிக் என்ற முன்னெடுப்பின் பங்குதாரர்கள்

- அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளான ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, ஜப்பான் மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகள் இந்தப் புதிய முன்னெடுப்பினைத் தொடங்கி உள்ளன.
- இது அந்தப் பிராந்தியத்தில் உள்ள சிறிய தீவு நாடுகளுடன் "பயனுள்ள மற்றும் செயல் திறன்மிக்க ஒத்துழைப்பினை மேம்படுத்துவதற்காக" தொடங்கப்பட்டுள்ளது.
- இது பசிபிக் பிராந்தியத் தீவுகளை ஆதரிப்பதற்காகவும், பசிபிக் பிராந்தியத்தில் இராஜதந்திர, பொருளாதார உறவுகளை மேம்படுத்துவதற்காகவும் ஐந்து நாடுகள் மேற்கொண்ட "முறைசாரா வழிமுறை" ஆகும்.

## மெர்சர் நிறுவனம் மேற்கொள்ளும் 2022 ஆம் ஆண்டு வாழ்க்கைச் செலவின மதிப்பீடு




- இந்தக் கணக்கெடுப்பின்படி, ஆசியாவிலேயே கொல்கத்தா நகரம் தான் செலவு குறைந்த நகரம் எனக் கூறப்பட்டுள்ளது.

- இந்தியாவில் மும்பை நகரானது வெளிநாட்டு ஊழியர்களுக்கு மிகுந்த செலவுகளைப் பிடிக்கும் நகரமாக உள்ளது.
- இந்தத் தரவரிசையில் அதிக செலவு நிறைந்த இந்திய நகரமாக ஹைதராபாத் குறிப்பிடப் பட்டுள்ளது.
- இதனைத் தொடர்ந்து புது டெல்லி, சென்னை, பெங்களூரு மற்றும் ஹைதராபாத் ஆகிய நகரங்கள் இடம் பெற்றுள்ளன.
- குறைந்தச் செலவினம் உள்ள இந்திய நகரங்கள் புனே மற்றும் கொல்கத்தா ஆகியன ஆகும்.
- உலகிலேயே வெளிநாட்டு ஊழியர்களுக்கு மிகவும் செலவு மிகுந்த நகரமாக ஹாங்காங் உள்ளது.

## ஐக்கிய நாடுகள் சபை வாழ்விட அமைப்பின் உலக நகரங்கள் அறிக்கை 2022

- கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக இந்தியாவில் விரைவான நகரமயமாக்கல் தற்காலிகமாக தாமதமாகியுள்ளதாக இந்த அறிக்கை எடுத்துரைக்கிறது.
- 2035 ஆம் ஆண்டில் இந்தியாவின் நகர்ப்புற மக்கள் தொகை 675 மில்லியனாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- இது ஒரு பில்லியன் மக்கள்தொகை கொண்ட நாடான சீனாவிற்கு அடுத்தபடியாக இரண்டாவது மிக உயர்ந்த எண்ணிக்கையாக இருக்கும்.
- கோவிட்-19 பெருந்தொற்றிற்குப் பிறகு, உலகளாவிய நகர்ப்புற மக்கள் தொகை மீண்டும் அதிகரித்து வருகிறது.
- 2050 ஆம் ஆண்டில் இது மேலும் 2.2 பில்லியனாக உயரும்.
- 2035 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவின் நகர்ப்புறங்களின் மக்கள்தொகை சதவீதம் 43.2 சதவீதமாக இருக்கும்.

## யுனெஸ்கோ அமைப்பின் அருகி வரும் உலகப் பாரம்பரிய தளங்களின் பட்டியல்

- ஐக்கிய நாடுகளின் கலாச்சார முகமையானது (யுனெஸ்கோ) உக்ரைனில் போர்ஷ் சூப் சமைக்கும் கலாச்சாரத்தை அருகி வரும் ஒரு கலாச்சாரப் பாரம்பரியமாக குறிப்பிட்டு உள்ளது.
- போர்ஷ் என்ற பீட்ரூட் வடிசாற்றினை ஒரு உக்ரேனிய கலாச்சாரப் பாரம்பரியமாக அங்கீகரித்த யுனெஸ்கோவின் முடிவை உக்ரைன் வரவேற்றுள்ளது.
- இந்த முடிவானது உக்ரைனால் வலுவாக வலியுறுத்தப்பட்டது என்றாலும் ரஷ்யாவால் கடுமையாக எதிர்க்கப்பட்டது.
- ரஷ்யாவும் போர்ஷ் என்ற பீட்ரூட் வடிசாற்றினை தனது தேசிய உணவாகக் குறிப்பிடச் செய்கிறது.

## QS சிறந்த மாணவர்களைக் கொண்ட நகரங்களின் தரவரிசை

| QS Best Student Cities Ranking 2022: Top Ten | | | |
|---|---|---|---|
| Rank 2022 | Rank 2019 | City | Location |
| 1 | 1 | London | UK |
| 2 | 4 | Munich | Germany |
| 3= | 10 | Seoul | South Korea |
| 3= | 2 | Tokyo | Japan |
| 5 | 5 | Berlin | Germany |
| 6 | 3 | Melbourne | Australia |
| 7 | 8 | Zurich | Switzerland |
| 8 | 9 | Sydney | Australia |
| 9= | 7 | Paris | France |
| 9= | 6 | Montreal | Canada |
| 9= | 13 | Boston | US |

- QS அமைப்பின் 2023 ஆம் ஆண்டிற்கான சிறந்த மாணவர்களைக் கொண்ட நகரங்களின் தரவரிசையானது சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- இந்தத் தரவரிசையில் இலண்டன் சிறந்த நகரமாக இடம் பெற்றுள்ளது.
- அதைத் தொடர்ந்து சியோல் மற்றும் முனிச் ஆகியவை முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களில் உள்ளன.
- மிக அதிக தரத்தினைப் பெற்ற மாணவர்களைக் கொண்ட இந்திய நகரம் மும்பை ஆகும்.
- உலக அளவில் இது 103வது இடத்தில் உள்ளது.
- இதில் மும்பையைத் தொடர்ந்து பெங்களூரு 114 வது இடத்தில் உள்ளது.
- சென்னை மற்றும் டெல்லி ஆகிய நகரங்கள் இந்தப் பட்டியலில் இடம்பிடித்து முறையே 125வது மற்றும் 129வது இடத்தில் உள்ளன.

## அமெரிக்காவிற்கு கோவோவாக்ஸ் தடுப்பூசி வழங்கீடு




- இந்திய சீரம் நிறுவனமானது கோவோவாக்ஸ் என்ற தனது கோவிட்-19 தடுப்பூசியின் 32.4 லட்சம் தடுப்பூசி மருந்துகளை நுவாக்ஷோவிட் என்ற ஒரு தயாரிப்புப் பெயரின் கீழ் அமெரிக்காவிற்கு வழங்க அரசாங்கம் அனுமதித்துள்ளது.

- ஒரு இந்திய உற்பத்தி நிறுவனத்தினால் அமெரிக்க நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படும் முதல் தடுப்பூசி இதுவாகும்.
- 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 28 ஆம் தேதியன்று, கோவோவாக்ஸ் தடுப்பூசியினை பெரியவர்கள் மீது அவசரகாலச் சூழ்நிலைகளில் மட்டுமே பயன்படுத்துவதற்கு என்று இந்தியத் தலைமை மருந்துக் கட்டுப்பாட்டகம் (DCGI) அங்கீகரித்தது.

## நைஜீரியாவில் லித்தியம் கண்டுபிடிப்பு




- சமீபத்தில், நைஜீரிய நாட்டில் உயர்தர லித்தியம் கண்டுபிடிக்கப்பட்டது.
- மேற்கு ஆஸ்திரேலியாவில் உள்ள கிரீன்புசெஸ் சுரங்கம் ஆனது உலகின் மிகப்பெரிய கடின ரக லித்தியச் சுரங்கமாகும்.
- தென் கொரியா, சீனா, ஜப்பான், அமெரிக்கா மற்றும் பெல்ஜியம் ஆகியவை லித்தியத்தை அதிக அளவில் இறக்குமதி செய்கின்ற நாடுகள் ஆகும்.
- லித்தியம் இயற்கையில் ஸ்போடுமீன் மற்றும் லெபிடோலைட் ஆகிய இரண்டு தாதுக்களில் போதுமான அளவு செறிவில் காணப்படுகிற ஒரு தனிமம் ஆகும்.

## இயற்கை சார்ந்தத் தீர்வுகளுக்கான இந்திய மன்றம்

- போலந்தில் நடைபெற்ற 11வது உலக நகர்ப்புற மன்றத்தில் இயற்கை சார்ந்தத் தீர்வுகளுக்கான இந்திய மன்றம் தொடங்கப்பட்டது.
- இந்த மன்றமானது பின்வருவனவற்றால் இணைந்து தொடங்கப்பட்டது
  - தேசிய நகர்ப்புற விவகாரங்கள் கல்வி நிறுவனம் (NIUA)
  - உலக வள நிறுவனம் - இந்தியா (WRI இந்தியா)
  - நகரங்களுக்கான பருவநிலை மையம் (NIUA C-Cube) மற்றும் அவற்றின் பங்குதார அமைப்புகள்.
- இது நகர்ப்புற இயற்கை சார்ந்தத் தீர்வுகளுக்கான (NbS) இந்தியாவின் முதல் தேசிய அளவிலான கூட்டணித் தளமாகும்.
- இது Cities4Forest என்ற முன்னெடுப்பின் கீழ் தொடங்கப்பட்டுள்ளது.

- நகர்ப்புற இயற்கை சார்ந்தத் தீர்வுகளை உருவாக்குவதற்கு உதவுவதற்காக நகர்ப்புற இயற்கை சார்ந்தத் தீர்வுகளுக்கான தொழில்முனைவோர், ஒத்த கருத்து கொண்ட நிறுவனங்கள் மற்றும் அரசு நிறுவனங்கள் ஆகியவற்றின் ஒரு கூட்டாண்மையை உருவாக்கச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.




## பட்சகன் கோயிலில் கண்காட்சி

- மங்கோலிய நாட்டுப் புத்தப் பூர்ணிமாவை முன்னிட்டு, மங்கோலியாவின் காந்தன் மடாலயத்தின் மைதானத்தில், பட்சகன் கோயிலின் 12 நாட்கள் அளவிலான ஒரு கண்காட்சி நடைபெற்றது.
- புத்தப் பெருமானின் நான்கு புனித நினைவுச் சின்னங்கள் இந்தக் கண்காட்சியில் 12 நாட்கள் காட்சிப்படுத்தப்பட்ட பின்னர் அவை மீண்டும் இந்தியாவிற்கு வந்தடைந்தன.
- மத்திய அமைச்சர் அர்ஜுன் மேக்வால், காஜியாபாத்தில் இந்தப் புனித நினைவுச் சின்னங்களைப் பெற்றுக் கொண்டார்.
- மங்கோலிய மக்களின் கோரிக்கையின் பேரில் நினைவுச் சின்னங்களை காட்சிப் படுத்தப் படுவதற்கான கால அவகாசத்தினை மேலும் சில நாட்களுக்கு நீட்டிக்க வேண்டியிருந்தது.
- இந்த நினைவுச்சின்னங்கள் 'கபில்வஸ்து நினைவுச் சின்னங்கள்' என்று அழைக்கப் படுகின்றன.
- இவை பண்டைய காலத்து கபிலவஸ்து நகரமாக நம்பப்படுகின்ற, பீகாரில் உள்ள ஒரு தளத்திலிருந்து 1898 ஆம் ஆண்டில் முதன்முதலில் கண்டெடுக்கப்பட்டவையாகும்.
- இவற்றிற்கு அரசு விருந்தினர் என்ற அந்தஸ்து வழங்கப்பட்டது.



## இணைய முடக்கம் குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை

- இணையத்தை முடக்குவது மக்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வைப் பாதிக்கிறது என்றும் தகவல் பரிமாற்றத்தினைத் தடுக்கிறது மற்றும் பொருளாதாரத்திற்குத் தீங்கு விளைவிக்கிறது என்றும் OHCHR அறிக்கை குறிப்பிடுகிறது.
- மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஆணையர் அலுவலகம் என்பது பொதுவாக மனித உரிமைகளுக்கான அலுவலகம் அல்லது ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான அலுவலகம் என்று அழைக்கப் படும்.
- இணைய முடக்கம் என்பது ஒரு அரசாங்கத்தால் அல்லது அரசாங்கத்தின் சார்பாக தகவல் மற்றும் தகவல்தொடர்பு அமைப்புகளை அணுகுவதையும் அதனைப் பயன்படுத்துவதையும் வேண்டுமென்றே முடக்கச் செய்வதற்காக எடுக்கப்பட்ட சில நடவடிக்கைகள் ஆகும்.
- #KeepItOn என்ற கூட்டணியின் அறிக்கைப் படி, 2016-2021 ஆம் ஆண்டுகள் வரையில் 74 நாடுகளில் 931 இணைய முடக்கங்கள் மேற்கொள்ளப்பட்டதாக ஆவணப் படுத்தப் பட்டுள்ளன.
- #KeepItOn கூட்டணியானது உலகம் முழுவதும் மேற்கொள்ளப்படும் இணைய முடக்க நிகழ்வுகளைக் கண்காணிக்கிறது.
- இந்தியா 106 முறை இணைய இணைப்புகளைத் தடுத்துள்ளது அல்லது முடங்கி உள்ளது.
- மேலும், இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட இணைய முடக்கத்தில் குறைந்தது 85 முடக்கங்கள் ஜம்மு & காஷ்மீரில் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

## RIMPAC 2022 பயிற்சி

- RIMPAC-22 என்ற பயிற்சியானது ஹவாய் தீவுகள் மற்றும் தெற்கு கலிபோர்னியாவிற்கு அருகில் நடைபெற்றது.
- இந்த ஆண்டிற்கான இந்தப் பல்பரிமாணப் பயிற்சியில் 27 நாடுகள் பங்கேற்கின்றன.

- இது அமெரிக்காவினால் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப் படுகின்ற, மிகப் பெரியப் பலதரப்புக் கடற்படைப் பயிற்சிகளில் ஒன்றாகும்.
- RIMPAC பயிற்சியானது 1971 ஆம் ஆண்டில் அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் கனடா ஆகிய நாடுகளால் வருடாந்திர பயிற்சியாகத் தொடங்கப்பட்டது.
- ஆனால் 1974 ஆம் ஆண்டு முதல், கடல்சார் பயிற்சி இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் நிகழ்வாக மாறியது.
- இந்தியா முதன் முதலில் 2014 ஆம் ஆண்டில் நடைபெற்ற RIMPAC பயிற்சியில் பங்கேற்றது.
- 2022 ஆம் ஆண்டு RIMPAC பயிற்சியின் கருத்துரு, 'திறன்மிக்க, தகவமைப்பு மிக்க, பங்குதாரர்கள்' என்பதாகும்.

## ஆறாவது காஸ்பியன் உச்சி மாநாடு




- காஸ்பியன் கடல் நாடுகளின் தலைவர்களின் ஆறாவது உச்சி மாநாடு என்பது துர்க்மெனிஸ்தானின் தலைநகரில் நடைபெற்றது.
- காஸ்பியன் பகுதியில் உள்ள துர்க்மெனிஸ்தான், அஜர்பைஜான், ஈரான், கஜகஸ்தான் மற்றும் ரஷ்யக் கூட்டமைப்பு ஆகிய "ஐந்து" நாடுகளின் தலைவர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

## லிஸ்பன் பிரகடனம்

- ஐக்கிய நாடுகள் சபையின் 2வது பெருங்கடல் மாநாடு லிஸ்பன் பிரகடனத்துடன் நிறைவடைந்தது.
- 'நமது பெருங்கடல், நமது எதிர்காலம்: நடவடிக்கை மேற்கொள்வதற்கான அழைப்பு' என்று இந்தப் பிரகடனத்திற்குத் தலைப்பிடப்பட்டுள்ளது.
- இது லிஸ்பனில் கென்யா மற்றும் போர்ச்சுகல் ஆகிய நாடுகளால் இணைந்து நடத்தப் பட்டது.

*முக்கியக் கூறுகள்*


- 2030 ஆம் ஆண்டிற்குள் குறைந்தது 30% அளவிற்குத் தேசிய கடல்சார் மண்டலங்களைப் பாதுகாத்தல்
- 2040 ஆம் ஆண்டிற்குள் கார்பன் நடுநிலைத் தன்மையினை அடைதல்

- கடல் அமிலமயமாக்கல், பருவநிலையின் நெகிழ்திறன் மற்றும் கண்காணிப்பு பற்றிய ஆராய்ச்சிக்கு நிதி ஒதுக்கீடு செய்தல்
- கடல்சார் அவசரநிலையை எதிர்கொள்வதற்கான அறிவியல் அடிப்படையிலான மற்றும் புதுமையான நடவடிக்கைகளை உருவாக்குதல்
- பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு அதிகாரம் அளிப்பதன் மூலம் 14வது நிலையான மேம்பாட்டு இலக்குகளின் அமலாக்கத்தினைச் செயல்படுத்துதல் - ஒரு நிலையான கடல் சார்ந்தப் பொருளாதாரத்தை உருவாக்குவதற்கு அவர்களின் பங்கேற்பினை அங்கீகரிப்பது முக்கியமானதாகும்.
- ஒவ்வொரு நாடுகளின் 200 மைல் (322 கிலோமீட்டர்) தொலைவு வரையான பிரத்தியேகப் பொருளாதார மண்டலங்களுக்கு வெளியே அமைந்துள்ள தேசிய அதிகார எல்லை வரம்பிற்கு அப்பாற்பட்ட பகுதிகளில் உள்ள பல்லுயிர்ப் பெருக்கத்தைப் பாதுகாத்தல்.

## வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்புடனான இணக்க நெறிமுறைகள்

- ஸ்வீடன் மற்றும் பின்லாந்து ஆகிய இரண்டு நாடுகளும் வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்புடனான இணக்க நெறிமுறைகளில் கையெழுத்திட்டுள்ளன.
- மாட்ரிட் நகரில் நடைபெற்ற கடந்த முத்தரப்பு மாநாட்டில், துருக்கி ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் தனது ஆட்சேபனைகளைக் கைவிட ஒப்புக் கொண்டது.
- இந்த நெறிமுறையானது 28 ஐரோப்பிய நாடுகள் மற்றும் 2 வட அமெரிக்க நாடுகள் உள்ளிட்ட 30 உறுப்பினர் நாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது.
- இது அரசுகளுக்கிடையேயான ஒரு இராணுவக் கூட்டணியாகும்.
- இது பெரும்பாலும் வடக்கு அட்லாண்டிக் கூட்டணி என்று அழைக்கப்படுகிறது.


## 2023 ஆம் ஆண்டில் உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட நாடு




- 2023 ஆம் ஆண்டில் இரு நாடுகளிலும் இந்த ஆண்டு 1.4 பில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகை பதிவாகியுள்ள நிலையில் உலகின் அதிக மக்கள்தொகை கொண்ட நாடாக இந்தியா சீனாவை விஞ்சும்.

- உலக மக்கள் தொகையானது, இந்த ஆண்டு நவம்பர் 15 ஆம் தேதிக்குள் 8 பில்லியனை எட்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- இது 2030 ஆம் ஆண்டில் 8.5 பில்லியனாகவும், 2100 ஆம் ஆண்டில் 10.4 பில்லியனாகவும் உயரலாம்.
- உலக மக்கள் தொகையானது 1950 ஆம் ஆண்டிற்குப் பிறகு மிகவும் குறைவான வேகத்தில் அதிகரித்து வந்தது.
- இது 2020 ஆம் ஆண்டில் 1 சதவீதத்திற்கும் கீழே சரிந்தது.
- 2021 ஆம் ஆண்டில், உலக மக்கள்தொகையின் சராசரி கருவுறுதல் வீதமானது ஒரு பெண்ணுக்கு அவரது வாழ்நாள் முழுவதும் 2.3 குழந்தைப் பிறப்புகளாக இருந்தது.
- இது 1950 ஆம் ஆண்டில் சுமார் 5 என்ற குழந்தைப் பிறப்புகளில் இருந்து வீழ்ச்சி அடைந்தது.
- உலகளாவிய கருவுறுதல் வீதமானது 2050 ஆம் ஆண்டில் ஒரு பெண்ணுக்கு 2.1 குழந்தை பிறப்புகளாக மேலும் குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச சிறார் பாலியல் சுரண்டல் தொடர்பான முன்னெடுப்பு




- சர்வதேசக் காவல்துறையின் சர்வதேச சிறார் பாலியல் சுரண்டல் (ICSE) தொடர்பான முன்னெடுப்பில் இந்தியாவின் மத்தியப் புலனாய்வுப் பிரிவு இணைந்துள்ளது.
- இதன் மூலம், அதன் படங்கள் மற்றும் ஒளிப்படக் காட்சிகள் ஆகியவற்றின் தரவுத் தளத்திற்கான அணுகலைப் இது பெற்றது.
- சர்வதேச சிறார் பாலியல் சுரண்டல் தொடர்பான முன்னெடுப்பின் படம் மற்றும் ஒளிப் படக் காட்சிகள் தரவுத்தளம் ஆனது ஒரு நுண்ணறிவு மற்றும் புலனாய்வுக் கருவி ஆகும்.
- இது சிறப்புப் புலனாய்வாளர்களை சிறார் பாலியல் துஷ்பிரயோக வழக்குகள் பற்றிய தரவைப் பகிர்ந்து கொள்ள வழிவகை செய்கிறது.
- இது சிறார் பாலியல் சுரண்டல் ஆதாரங்களைப் பகுப்பாய்வு செய்வதோடு, பாதிக்கப் பட்டவர்கள், துஷ்பிரயோகம் செய்பவர்கள் மற்றும் நடந்த இடம் ஆகியவற்றிற்கு இடையேயான தொடர்புகளை ஏற்படுத்துகிறது.

- இந்த தரவுத்தளத்தையும் மென்பொருளையும் அணுகுவதற்கு வாய்ப்பு பெற்ற 68வது நாடு இந்தியாவாகும்.
- சர்வதேச சிறார் பாலியல் சுரண்டல் தொடர்பான முன்னெடுப்பின் தரவுத்தளம் ஆனது உலகளவில் சராசரியாக தினமும் 7 பாதிக்கப்பட்ட குழந்தைகளை அடையாளம் காண உதவுகிறது.

## SOFI 2022


TABLE 1 PREVALENCE OF UNDERNOURISHMENT (PoU) IN THE WORLD, 2005–2020

| | Prevalence of undernourishment (%) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2005 | 2010 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020* |
| **WORLD** | **12.4** | **9.2** | **8.3** | **8.3** | **8.1** | **8.3** | **8.4** | **9.9** |
| **AFRICA** | **21.3** | **18.0** | **16.9** | **17.5** | **17.1** | **17.8** | **18.0** | **21.0** |
| Northern Africa | 8.5 | 7.3 | 6.1 | 6.2 | 6.5 | 6.4 | 6.4 | 7.1 |
| Sub-Saharan Africa | 24.6 | 20.6 | 19.4 | 20.1 | 19.5 | 20.4 | 20.6 | 24.1 |
| Eastern Africa | 33.0 | 28.4 | 24.8 | 25.6 | 24.9 | 25.9 | 25.6 | 28.1 |
| Middle Africa | 36.8 | 28.9 | 28.7 | 29.6 | 28.4 | 29.4 | 30.3 | 31.8 |
| Southern Africa | 5.0 | 6.2 | 7.5 | 7.9 | 7.3 | 7.6 | 7.6 | 10.1 |
| Western Africa | 14.2 | 11.3 | 11.5 | 11.9 | 11.8 | 12.5 | 12.9 | 18.7 |
| **ASIA** | **13.9** | **9.5** | **8.3** | **8.0** | **7.8** | **7.8** | **7.9** | **9.0** |
| Central Asia | 10.6 | 4.4 | 2.9 | 3.2 | 3.2 | 3.1 | 3.0 | 3.4 |
| Eastern Asia | 6.8 | <2.5 | <2.5 | <2.5 | <2.5 | <2.5 | <2.5 | <2.5 |
| South-eastern Asia | 17.3 | 11.6 | 8.3 | 7.8 | 7.4 | 6.9 | 7.0 | 7.3 |
| Southern Asia | 20.5 | 15.6 | 14.1 | 13.2 | 13.0 | 13.1 | 13.3 | 15.8 |
| Western Asia | 9.0 | 9.1 | 14.3 | 15.0 | 14.5 | 14.4 | 14.4 | 15.1 |
| *Western Asia and Northern Africa* | *8.8* | *8.2* | *10.5* | *10.9* | *10.7* | *10.6* | *10.7* | *11.3* |

- உணவு மற்றும் வேளாண் அமைப்பு, விவசாய மேம்பாட்டுக்கான சர்வதேச நிதியம், UNICEF, ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்டம் மற்றும் உலக சுகாதார அமைப்பு ஆகியவை இணைந்து SOFI 2022 என்ற அறிக்கையினை வெளியிட்டுள்ளன.
- SOFI என்பது "உலகில் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து நிலை" என்பதைக் குறிக்கிறது.
- இந்தியாவில் அதிக ஊட்டச்சத்துக் குறைபாடு (மக்கள் தொகையில் சுமார் 16 சதவீதத்தினர்), வீணாக்குதல் (சுமார் 17 சதவீதத்தினர்), வளர்ச்சி குன்றிய நிலை (சுமார் 31 சதவீதத்தினர்) மற்றும் குறைந்த அளவில் பிரத்தியேகமாக தாய்ப்பால் மட்டுமே வழங்கும் நடைமுறை (58% மட்டுமே) உள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் பசி, உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் அனைத்து வடிவங்களிலுமான ஊட்டச்சத்துக் குறைபாட்டினை முடிவுக்குக் கொண்டு வருதல் என்ற இலக்கிலிருந்து உலகம் மேலும் விலகிச் செல்கிறது.
- 2021 ஆம் ஆண்டில் 828 மில்லியனுக்கும் அதிகமானோர் பட்டினியால் பாதிக்கப் பட்டு உள்ளனர்.

- உலகப் பொருளாதார மீட்சியைக் கருத்தில் கொண்டாலும் 2030 ஆம் ஆண்டளவில் 8 சதவீதத்திற்கும் அதிகமானோர் பட்டினி நிலையினை எதிர்கொள்வர்.
- உணவுப் பாதுகாப்பின்மையில் நிலவும் பாலின இடைவெளியானது 2021 ஆம் ஆண்டில் தொடர்ந்து அதிகரித்து வந்துள்ளது.
- 27.6 சதவீத ஆண்களுடன் ஒப்பிடுகையில், உலகில் 31.9 சதவீதப் பெண்கள் மிதமான அல்லது கடுமையான உணவுப் பாதுகாப்பின்றி உள்ளனர்.

## உலக மக்கள்தொகை வளங்கள் 2022




- 1951 ஆம் ஆண்டு முதல் இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை உலக மக்கள்தொகை வளங்கள் அறிக்கையினை ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டு வருகிறது.
- 2050 ஆம் ஆண்டு வரையில், உலக மக்கள்தொகையில் ஏற்படும் பாதிக்கும் மேலான உயர்வானது வெறும் எட்டு நாடுகளில் மட்டுமே நிகழும்.
- இவை, காங்கோ ஜனநாயகக் குடியரசு, எகிப்து, எத்தியோப்பியா, இந்தியா, நைஜீரியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ் மற்றும் தான்சானியா ஐக்கியக் குடியரசு ஆகியனவாகும்.
- 2022 ஆம் ஆண்டில் உலக மக்கள்தொகையில் 10 சதவீதமாக உள்ள 65 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதினரின் பங்கு 2050 ஆம் ஆண்டில் 16% ஆக உயரும் என்று கணிக்கப் பட்டுள்ளது.
- அடுத்த சில தசாப்தங்களில், அதிக வருமானம் கொண்ட நாடுகளில் ஏற்பட உள்ள மக்கள் தொகை வளர்ச்சிக்கு இடம்பெயர்வு மட்டுமே முக்கிய உந்துதலாக இருக்கும்.
- தற்போது ஈடு செய்வதற்கான கருவுறுதல் விகிதத்தை இந்தியா அடைந்துள்ளது
- இது மக்கள் தொகையானது ஒரு தலைமுறையிலிருந்து அடுத்தத் தலைமுறைக்கு ஒட்டு மொத்தமாக பதிலீடு செய்கின்ற ஒரு விகிதமாகும்.
- 0 முதல் 14 வயது மற்றும் 15 முதல் 24 வயதுடையவர்களின் மக்கள்தொகையானது தொடர்ந்து குறையச் செய்யும்.
- வரவிருக்கும் பத்தாண்டுகளில் 25 முதல் 64 வரையில் மற்றும் 65க்கும் மேற்பட்ட வயதினரின் எண்ணிக்கையானது தொடர்ந்து உயரும்.

- ஏற்கனவே 25 முதல் 64 வயதிற்குட்பட்டவர்களுக்கு, அவர்கள் அதிக உற்பத்தித் திறன் மற்றும் சிறந்த வருமானம் இருப்பதை உறுதி செய்வதற்கான ஒரே வழிவகையாக திறன் மேம்பாட்டின் தேவை உள்ளது.

## I2U2 தலைவர்கள் உச்சி மாநாடு 2022

- முதலாவது I2U2 தலைவர்கள் உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் அவர்கள் பங்கேற்றார்.
- I2U2 குழுமமானது மேற்கு ஆசியாவிற்கான குவாட் (நாற்கர அமைப்பு) அமைப்பாக கருதப் படுகிறது.
- நீர், உணவுப் பாதுகாப்பு, எரிசக்தி, சுகாதாரம், போக்குவரத்து மற்றும் விண்வெளி உள்ளிட்ட பரஸ்பர ரீதியில் அடையாளம் காணப்பட்ட ஆறு துறைகளில் முதலீடுகளை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இந்தக் குழுமம் நிறுவப்படுவதற்கு முன்மொழியப் பட்டது.
- இதன் உச்சி மாநாட்டின் போது 2 பில்லியன் டாலர் மதிப்பிலான வேளாண் பூங்கா அமைக்கும் திட்டமானது அறிவிக்கப்பட்டது.
- இந்தத் திட்டமானது ஐக்கிய அரபு அமீரகத்தின் பகுதியளவு நிதி உதவியுடனும் அமெரிக்கத் தனியார் துறையின் ஆதரவுடன் இஸ்ரேல் நாட்டின் தொழில்நுட்ப நிபுணத்துவ உதவியுடன் தொடங்கப்படும்.




## வளர்ந்து வரும் நாடுகளில் நிலவும் வாழ்க்கைச் செலவின நெருக்கடி

- ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்ட அமைப்பானது அதன் "வளர்ந்து வரும் நாடுகளில் நிலவும் வாழ்க்கைச் செலவின நெருக்கடி" என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டது.
- உலகளாவிய வாழ்க்கைச் செலவின நெருக்கடியானது, உலகின் ஏழ்மையான நாடுகளில் உள்ள மேலும் 71 மில்லியன் மக்களைக் கடுமையான வறுமையில் ஆழ்த்துகிறது.

- 2022 ஆம் ஆண்டில் முக்கியப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பானது, ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதிகள், ஆசியா மற்றும் பால்கன் பகுதிகளில் ஏற்கனவே தாக்கத்தினை ஏற்படுத்தி வருகிறது.
- வாழ்க்கைச் செலவின நெருக்கடியானது மில்லியன் கணக்கான மக்களை வறுமை நிலையிலும் பட்டினி நிலையிலும் அபாயகரமான வேகத்தில் ஆழ்த்தி வருகிறது.




## ஸீ கார்டியன்-2 பயிற்சி

- இந்தப் பயிற்சியானது பாகிஸ்தான் மற்றும் சீனா ஆகிய நாடுகளின் இராணுவக் கடற் படையால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- இது இத்தகைய இரண்டாவது பயிற்சியாகும்.
- முதல் பயிற்சியானது 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் வடக்கு அரேபியக் கடல் பகுதியில் அமைந்த கராச்சி கடற்கரையில் ஏற்பாடு செய்யப்பட்டது.
- இந்தக் கடற்படை பயிற்சியானது கடல்சார் பாதுகாப்பு சார்ந்த அச்சுறுத்தல்களுக்கு எதிரான கூட்டு ஒத்துழைப்பினை மேம்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு மேற் கொள்ளப் படுகிறது.
- இது இரு நாட்டுக் கடற்படைகளின் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துதல் மற்றும் கடற்படைத் திறன்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## 10வது உலக அமைதி மன்றம்

- பத்தாவது உலக அமைதி மன்றம் (2022) ஆனது சீனாவின் பெய்ஜிங்கில் உள்ள சிங்குவா பல்கலைக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

❖ உலக அமைதி மன்றத்தின் ஒரு பகுதியாக, "பிரிக்ஸ் ஒத்துழைப்பு: வாய்ப்புகள் மற்றும் சவால்கள்" என்ற தலைப்பில் குழு விவாதம் நடைபெற்றது.

## ஜெருசலேம் பிரகடனம்

❖ அமெரிக்க அதிபர் ஜோ பிடன் மற்றும் இஸ்ரேல் பிரதமர் யார் லாபிட் ஆகியோர் ஜெருசலேம் நகரில், ஒரு கூட்டு மூலோபாயப் பிரகடனத்தில் கையெழுத்திட்டனர்.

❖ இது அதிகாரப்பூர்வமாக "ஜெருசலேம் அமெரிக்கா-இஸ்ரேல் மூலோபாய கூட்டுப் பிரகடனம்" என்று அழைக்கப்படுகிறது.

❖ ஈரான் அணு ஆயுதங்களைப் பெறுவதைத் தடுப்பதற்காக, அதன் தேச அதிகாரத்தின் கீழ் அனைத்து வாய்ப்புகளையும் பயன்படுத்த அமெரிக்கா உறுதி பூண்டுள்ளது.

❖ இஸ்ரேல்-பாலஸ்தீன மோதலில் உள்ள சவால்கள் மற்றும் வாய்ப்புகள் தொடர்பான விவாதங்களைத் தொடர அமெரிக்காவும் இஸ்ரேலும் உறுதியளித்துள்ளன.

## நேபாள நாட்டின் முதல் குடியுரிமை திருத்த மசோதா

❖ நேபாளப் பாராளுமன்றம் ஆனது சமீபத்தில் அந்நாட்டின் முதல் "குடியுரிமை திருத்த மசோதாவை" நிறைவேற்றியது.

❖ இந்தக் குடியுரிமை திருத்த மசோதா குறித்து 2020 ஆம் ஆண்டு முதல் விவாதிக்கப்பட்டு வருகிறது.

❖ இது 2006 ஆம் ஆண்டு நேபாள குடியுரிமைச் சட்டத்தினைத் திருத்தி அமைக்க உள்ளது.

❖ இது அரசியலமைப்பின்படி குடியுரிமை வழங்குவதற்கான வழிவகைகளை செய்யும்.

## முதல் மார்பர்க் வைரஸ் பெருந்தொற்று

❖ மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள கானா நாட்டு அரசானது, கொடிய மார்பர்க் வைரசின் இரண்டு பாதிப்புகளை அதிகாரப் பூர்வமாக உறுதிப்படுத்தியுள்ளது.

❖ உயிரிழந்த இந்த இரண்டு நோயாளிகளும் இந்தக் கொடிய தொற்று வைரசினால் பாதிக்கப் பட்டிருந்தனர்.

❖ மார்பர்க் வைரஸ் நோய் என்பது எபோலா வைரஸின் அதே குடும்பத்தைச் சேர்ந்த மிகவும் கொடிய இரத்தக் கசிவு நிலை சார்ந்த ஒரு காய்ச்சலாகும்.




## ஊழல் எதிர்ப்பு மீதான பிரிக்ஸ் அமைப்பின் அமைச்சர்கள் கூட்டம் 2022

- முதலாவது ஊழல் எதிர்ப்பு மீதான பிரிக்ஸ் அமைப்பின் அமைச்சர்கள் கூட்டமானது சீனாவின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டது.
- பிரிக்ஸ் அமைப்பின் உறுப்பினர் நாடுகளானது ஊழல் எதிர்ப்பு மீதான அமைச்சர்கள் கூட்டத்தின் அறிக்கையில் கையெழுத்திட்டன.




## S-400 ஏவுகணை கொள்முதலில் இந்தியாவிற்கு விலக்கு




- ரஷ்யாவிடம் இருந்து S-400 ஏவுகணை அமைப்புகளை வாங்கியதற்காக இந்தியா மீது பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டாம் என அமெரிக்கா முடிவு செய்துள்ளது.
- பொருளாதாரத் தடைச் சட்டம் (CAATSA) மூலம் அமெரிக்காவின் எதிரி நாடுகளை எதிர் கொள்ளுதல் என்றச் சட்டத்தில் இருந்து இந்தியாவிற்கு தற்போது விலக்கு அளிக்கப் பட்டுள்ளது.

- ரஷ்யாவிடமிருந்து S-400 ஏவுகணை அமைப்புகளை வாங்கியதற்காக வேண்டி ஏற்கனவே, துருக்கி அரசானது இந்தச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட அமெரிக்காவின் தடைகளை எதிர்கொண்டது.
- ஐந்து S-400 ஏவுகணை அமைப்புகளை வாங்குவதற்காக ரஷ்யாவுடன் 5 பில்லியன் டாலர் மதிப்பிலான ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டது.
- முதல் அலகானது இந்திய விமானப் படையிடம் ஒப்படைக்கப்பட்டு, பஞ்சாப் பகுதியில் மேற்குப் படைப் பிரிவில் பணியமர்த்தப் பட்டது.
- S-400 என்பது எளிதில் இடம் விட்டு வேறு இடம் மாற்றக் கூடிய நீண்ட தூர வரம்புடைய நிலம் விட்டு வான்வெளியில் பாயக் கூடிய முதல் வான்வழி ஏவுகணை அமைப்பு ஆகும்.
- இது உலகிலேயே மிகவும் ஆபத்தான ஒன்றாகக் கருதப்படுகிறது.
- இது 400 கி.மீ. தூரம் வரையில் உள்ள பல இலக்குகளை வீழ்த்தும் திறன் கொண்டது.
- நான்கு வெவ்வேறு வகையான ஏவுகணைகளுடன், இது பார்வைக்குப் புலப்படும் வரம்பிற்கு அப்பாற்பட்ட திறன்களைக் கொண்டுள்ளது.
- இது 600 கி.மீ. வரம்பில் உள்ள 160 பொருட்களைக் கண்டறிந்து பல இலக்குகளையும் மற்றும் 400 கி.மீ. வரம்பில் உள்ள 72 இலக்குகளைத் தாக்கும் திறன் கொண்டது.

## இலங்கையின் 9வது குடியரசுத் தலைவர்

- இலங்கை அரசியல்வாதியான ரணில் விக்கிரமசிங்கே இலங்கை நாட்டின் 9வது குடியரசுத் தலைவராக அந்நாட்டின் பாராளுமன்றத்தினால் தேர்வு செய்யப் பட்டு உள்ளார்.
- அந்நாட்டின் மிக மோசமானப் பொருளாதார நெருக்கடியின் காரணமாக மக்கள் கோபமடைந்து போராட்டம் நடத்தியதை அடுத்து நாட்டை விட்டு வெளியேறி ராஜினாமா செய்த கோத்தபய ராஜபக்சவுக்குப் பதிலாக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்த நெருக்கடிக் காலத்தில் ரணில் பிரதமராக இருந்தார்.
- ராஜபக்சே தப்பியோடியப் பிறகு, ரணில் இலங்கையின் இடைக்கால குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்றார்.


## ஜெட்டா பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு உச்சி மாநாடு

- சவூதி அரேபியாவின் ஜெட்டா நகரில், ஜெட்டா பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு உச்சி மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது.
- இது அனைத்துத் துறைகளிலும் உலக நாடுகளின் கூட்டு ஒத்துழைப்பை உத்வேகப் படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- "சவூதி பசுமை முயற்சி" மற்றும் "மத்தியக் கிழக்கு பசுமை முயற்சி" ஆகியவை குறித்து இந்த உச்சி மாநாட்டில் குறிப்பிடப் பட்டது.
- பணிக்குழு 153 மற்றும் பணிக்குழு 59 ஆகியவற்றின் மீதான ஒருங்கிணைந்தப் பணிக் குழுவினை அமைப்பது குறித்து இந்த உச்சி மாநாட்டில் விவாதிக்கப் பட்டது.

## G-20 அமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் சந்திப்பு

- ❖ 2022 ஆம் ஆண்டிற்கான G-20 அமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் சந்திப்பு சமீபத்தில் இந்தோனேசியாவால் நடத்தப் பட்டது.
- ❖ இந்தச் சந்திப்பில் "பலதரப்புத் தன்மையை வலுப்படுத்துதல் மற்றும் உணவு மற்றும் எரிசக்திப் பாதுகாப்பு உள்ளிட்ட தற்போதைய உலகளாவியச் சவால்கள் போன்ற சமகாலத் தொடர்புடையப் பிரச்சனைகள்" குறித்து ஆலோசிக்கப் பட்டன.
- ❖ 2023 ஆம் ஆண்டிற்கான G-20 அமைப்பின் தலைமைப் பொறுப்பினை இந்தியா ஏற்க உள்ளது.

## குரங்கு அம்மை – உலகளாவிய அவசரநிலை




- ❖ உலக சுகாதார நிறுவனமானது, உலகளவில் குரங்கு அம்மை பரவி வருவதை 'சர்வதேச அளவில் சிக்கல் உண்டாக்கக் கூடிய பொது சுகாதார அவசரநிலை' என அறிவித்து உள்ளது.
- ❖ இது 'பெருந்தொற்று' என்ற நிலையை விட ஒரு படி கீழே உள்ளது.
- ❖ 2020 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் தேதியன்று, அந்த அமைப்பு கோவிட்-19 தொற்று நோயை சர்வதேச அளவில் சிக்கல் உண்டாக்கக் கூடிய ஒரு பொது சுகாதார அவசர நிலையாக வகைப்படுத்தியது.
- ❖ அந்த ஆண்டு மார்ச் 11 ஆம் தேதியன்று, உலக சுகாதார அமைப்பு அதனை 'பெருந் தொற்று' என்ற நிலைக்கு உயர்த்தியது.
- ❖ சர்வதேச அளவில் சிக்கல் உண்டாக்கக் கூடிய ஒரு பொது சுகாதார அவசரநிலை பிரகடனம் "தற்காலிகமானது" என்பதோடு ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் ஒரு முறை இது மதிப்பாய்வு செய்யப்படும்.
- ❖ முந்தைய ஆண்டுகளில், எபோலா (2014), ஜிகா வைரஸ் (2016), H1N1 (2009), போலியோ வைரஸ் (2014) மற்றும் கோவிட்-19 ஆகியவை சர்வதேச அளவில் சிக்கல் உண்டாக்கக் கூடிய பொது சுகாதார அவசரநிலையாக அறிவிக்கப் பட்டுள்ளன.

## ரஷ்யா மற்றும் துருக்கி இடையிலான தானிய ஏற்றுமதி ஒப்பந்தம்




- ❖ ரஷ்ய மற்றும் உக்ரேனிய அமைச்சர்கள், ஐக்கிய நாடுகள் மற்றும் துருக்கிய அதிகாரிகள் உடன் ஒரே மாதிரியான ஒப்பந்தங்களில் தனித்தனியாக கையொப்பம் இட்டனர்.
- ❖ இதன் மூலம் மேற்கொள்ளப்படும் தானிய ஏற்றுமதியானது, மில்லியன் கணக்கான மக்கள் பட்டினியை எதிர்கொள்ளும் நிலையில் உள்ள ஒரு உலகளாவிய உணவு நெருக்கடியை எதிர்கொள்வதை எளிதாக்கும்.
- ❖ துருக்கி தலைநகர் இஸ்தான்புல்லில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

## சகுராஜிமா எரிமலை




- ❖ ஜப்பானின் சகுராஜிமா எரிமலை சமீபத்தில் வெடித்தது.
- ❖ இது கியூஷு தீவில் பசிபிக் பெருங்கடலின் அருகே அமைந்துள்ளது
- ❖ இது ஜப்பானில் அமைந்துள்ள செயலில் உள்ள எரிமலைகளில் ஒன்றாக இருப்பதோடு இந்த எரிமலையின் பல்வேறு நிலைகளில் ஒரு குறிப்பிட்ட இடைவெளியில் வெடிப்புகள் ஏற்பட்டு வருகின்றன.

- இது செயலில் உள்ள ஒரு பாறை அடுக்கு எரிமலை ஆகும்.
- வரலாற்றில் பதிவான சகுராஜிமாவின் மிகப்பெரிய வெடிப்பு நிகழ்வுகள் 1471-76 மற்றும் 1914 ஆகிய ஆண்டுகளில் நிகழ்ந்தன.

## குரங்கு அம்மைக்கு எதிரான தடுப்பூசி - 'இமான்வாக்ஸ்'

- குரங்கு அம்மைக்கு எதிராகப் பெரியம்மை நோய்த் தடுப்பூசியைப் பயன்படுத்தச் செய்வதற்கு ஐரோப்பிய ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது.
- ஐரோப்பிய ஒன்றியத்தில், 2013 ஆம் ஆண்டு முதல் பெரியம்மை நோயைத் தடுக்கச் செய்வதற்காக இமான்வாக்ஸ் தடுப்பூசியைப் பயன்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப் பட்டுள்ளது.
- குரங்கு அம்மை வைரசிற்கும் பெரியம்மை வைரசிற்கும் இடையே உள்ள ஒற்றுமையின் காரணமாக இது குரங்கு அம்மைக்கு எதிராகப் பயன்படுத்துவதற்குச் சாத்தியமான தடுப்பூசியாகக் கருதப்படுகிறது.
- 1980 ஆம் ஆண்டில் முற்றிலும் ஒழிக்கப்பட்ட பெரியம்மை நோயை விட குரங்கு அம்மை நோய் குறைவான ஆபத்தானது மற்றும் குறைவான தொற்றும் தன்மையினை கொண்டது.
- சமீபத்தில், உலக சுகாதார அமைப்பானது குரங்கு அம்மைப் பரவலை ஒரு உலக சுகாதார அவசரநிலையாக அறிவித்தது.
- 72 நாடுகளில் 16,000 பேர் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## மின்சாரச் சந்தை பற்றிய அறிக்கை

- சர்வதேச எரிசக்தி முகமையானது, இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை தான் வெளியிடுகின்ற அறிக்கையின் 2022 ஆம் ஆண்டிற்கான மின் சந்தை பற்றிய அறிக்கையின் முதல் பதிப்பை வெளியிட்டது.
- 2021 ஆம் ஆண்டில் உலகளாவிய மின்சாரத் தேவை ஆண்டிற்கு 6% அதிகரித்துள்ளது.
- 2008 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நிதிச் சிக்கலுக்குப் பிறகு சர்வதேச எரிசக்தி முகமை மூலம் பதிவு செய்யப்பட்ட ஆண்டிற்கு ஆண்டு ஏற்பட்ட செங்குத்தான உயர்வு இதுவே ஆகும்.
- உலகளாவிய ஆற்றல் செறிவானது ஆண்டிற்கு 1.9% குறைந்துள்ளது.
- 2050 ஆம் ஆண்டிற்குள் நிகரச் சுழியம் என்ற நிலையை அடைவதற்கான அடித்தளம் அமைப்பதற்குத் தேவையான அளவோடு ஒப்பிடும் போது இந்த வீழ்ச்சியானது அதன் பாதியளவாகவே உள்ளது.
- 2021 ஆம் ஆண்டில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தியிலிருந்துத் தயாரிக்கப்படும் மின் உற்பத்தியானது ஆண்டிற்கு 6% என்ற அளவு அதிகரித்துள்ளது.
- நிலக்கரியிலிருந்துத் தயாரிக்கப்படும் மின் உற்பத்தியானது 9% அதிகரித்துள்ளது.
- இந்த உயர்வானது, நிலக்கரித் தேவை அதிகரிப்பில் பாதிக்கும் அதிகமான தேவைகள் பதிவான சீனா மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் தான் அதிகம் பதிவாகியுள்ளது.
- எரிவாயு மூலமான மின் உற்பத்தியானது 2% என்ற அளவில் அதிகரித்துள்ளது.

## பேரிடரைத் தாங்கக் கூடிய நெகிழ்திறன்மிக்க உள்கட்டமைப்பிற்கான கூட்டணியில் ஐரோப்பிய முதலீட்டு வங்கி

- ஐரோப்பிய முதலீட்டு வங்கியானது, சமீபத்தில் பேரிடரைத் தாங்கக் கூடிய நெகிழ் திறன் மிக்க உள்கட்டமைப்பிற்கான கூட்டணியில் இணைந்துள்ளது.
- இந்தக் கூட்டணியானது இந்தியாவின் தலைமையில் இயங்குகிறது.
- பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் அழிவைக் கட்டுப்படுத்தச் செய்யும் நோக்கில் இந்தக் கூட்டணியானது நிறுவப் பட்டுள்ளது.
- ஐரோப்பிய முதலீட்டு வங்கியானது இந்தக் கூட்டணியின் உறுப்பினர் நாடுகளுக்கு ஆலோசனை மற்றும் நிதி உதவியை வழங்கும்.
- ஐரோப்பிய முதலீட்டு வங்கியானது இந்தக் கூட்டணியில் "ஐரோப்பிய ஒன்றியப் பருவ நிலை வங்கியாக" செயல்படும்.
- பேரிடரைத் தாங்கக் கூடிய நெகிழ்திறன்மிக்க உள்கட்டமைப்பிற்கான கூட்டணி, 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் பருவநிலை நடவடிக்கைக்கான உச்சி மாநாட்டில் இந்திய நாட்டினால் தொடங்கப் பட்டது.
- இது உறுப்பினர் நாடுகளுக்கு அறிவுசார்ந்த தகவல்கள் மற்றும் வளங்களைப் பகிர்ந்து கொள்ளவும், ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைய நாடுகளுக்கு உதவவும் வேண்டி வழி வகுக்கிறது.
- ஐரோப்பிய முதலீட்டு வங்கி என்பது ஐரோப்பிய ஒன்றியத்தின் முதலீட்டு வங்கியாகும்.
- இதன் உரிமம் ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர் நாடுகளிடம் உள்ளது.

## உலக விமான நிலையப் போக்குவரத்து தரவுத்தொகுப்பு 2021




- ஏர்போர்ட்ஸ் கவுன்சில் இன்டர்நேஷனல் வேர்ல்ட் என்ற அமைப்பானது வருடாந்திர உலக விமான நிலையப் போக்குவரத்து குறித்த தரவுத் தொகுப்பை வெளியிட்டுள்ளது.
- இது 2021 ஆம் ஆண்டிற்கான, சிறந்த 20 விமானத் தொழில்துறை நிறுவனங்களின் உலகளாவிய விமானப் போக்குவரத்து தரவரிசைகளைப் பட்டியலிட்டுள்ளது.
- இந்தியாவில் இருந்து, புது டெல்லியில் உள்ள இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம் (13வது) இந்தத் தரவரிசையில் முதல் 20 இடங்களுக்குள் இடம் பெற்றுள்ளது.

- இது 180க்கும் மேற்பட்ட நாடுகள் மற்றும் பிரதேசங்களில் உள்ள 2,600க்கும் மேற்பட்ட விமான நிலையங்களின் விமான நிலையப் போக்குவரத்துத் தகவல்களை உள்ளடக்கிய, இந்தத் தொழில்துறையின் மிகவும் விரிவான ஒரு விமான நிலைய புள்ளி விவர தரவுத் தொகுப்பாகும்.

### சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து ரஷ்யா விலகல்

- 2024 ஆம் ஆண்டிற்குப் பிறகு சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து வெளியேறப் போவதாக ரஷ்யா அறிவித்துள்ளது.
- விண்வெளி நிலையத்திலிருந்து ரஷ்யா வெளியேறுவதால், தனியார் நிறுவனங்கள் விண்வெளி நிலையத்திற்குள் நுழைவதற்கான புதிய வாய்ப்புகளை அது வழங்கும்.
- சீனா டியாங்காங் என்ற தனது சொந்த விண்வெளி நிலையத்தினை உருவாக்கி, இந்த ஆண்டு இறுதிக்குள் அதனை நிறைவு செய்ய உள்ளது.

## பொருளாதாரச் செய்திகள்

### உலகளாவியச் சுகாதார நலன்

- பஜாஜ் அலையன்ஸ் ஜெனரல் இன்சூரன்ஸ் நிறுவனமானது அதன் தனித்துவமான உலகளாவிய சுகாதார நலக் காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.
- இது காப்பீட்டுத் திட்டத்தில் பதிவு செய்தோருக்கு, உள்நாட்டு மற்றும் சர்வதேச (இந்தியாவிற்கு வெளியே) மருத்துவச் சேவை வழங்கீட்டு நிறுவனங்களில் திட்டமிடப் பட்ட மற்றும் அவசரச் சிகிச்சை ஆகிய இரண்டையும் (இந்தியாவிற்குள்) தடையற்ற முறையில் பெறுவதற்கு வகை செய்கிறது.
- இது இந்தியக் காப்பீட்டுத் துறையில் முதன்முதலில் மேற்கொள்ளப்படும் உலகளாவிய சுகாதார நலக் காப்பீட்டு வசதியாகும்.

### சரக்கு மற்றும் சேவை வரிச் சபையின் 47வது கூட்டம்

- இந்த சந்திப்பு சண்டிகரில் நடைபெற்றது.
- மத்திய நிதியமைச்சர் தலைமையில் நடைபெற்ற இந்த இரண்டு நாட்கள் அளவிலான சரக்கு மற்றும் சேவை வரிச் சபையின் கூட்டத்தில், சில குறிப்பிட்டப் பொருட்களின் மீதான வரி வீத மாற்றங்கள் பரிந்துரைக்கப் பட்ட.
- சரக்கு மற்றும் சேவை வரிச் சபையின் ஒவ்வொரு முடிவும், அதில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களின் அதிகபட்ச வாக்குகளில் நான்கில் மூன்றில் ஒரு பங்கிற்குக் குறையாத பெரும்பான்மையினரால் எடுக்கப்பட வேண்டும்.
- மத்திய அரசின் வாக்கு மொத்த வாக்குகளில் மூன்றில் ஒரு பங்கு அளவிற்கு மதிப்பு கொண்டது.

- ❖ மாநில அரசுகளின் வாக்குகள் அனைத்தும் மொத்த வாக்குகளில் மூன்றில் இரண்டு பங்கு அளவிற்கு மதிப்பினைக் கொண்டிருக்கும்.



47[th] Meeting of the GST Council, Chandigarh
28[th] and 29[th] June, 2022

PRESS RELEASE


The GST Council's 47[th] meeting was held in Chandigarh on 28[th] and 29[th] June 2022 under the chairmanship of the Union Finance & Corporate Affairs Minister Smt. Nirmala Sitharaman. The GST Council has inter-alia made the following recommendations relating to changes in GST rates on supply of goods and services and changes related to GST law and procedure.

I. Recommendations relating to GST rates on goods and services

A. Rate Rationalization to remove inverted duty structure [Approval of recommendations made by GoM on rate rationalization]

| S. No. | Description | From | To |
|---|---|---|---|
| GOODS | | | |
| 1. | Printing, writing or drawing ink | 12% | 18% |
| 2. | Knives with cutting blades, Paper knives, Pencil sharpeners and blades therefor, Spoons, forks, ladles, skimmers, cake-servers etc. | 12% | 18% |
| 3. | Power driven pumps primarily designed for handling water such as centrifugal pumps, deep tube-well turbine pumps, submersible pumps, Bicycle pumps | 12% | 18% |
| 4. | Machines for cleaning, sorting or grading, seed, grain pulses; Machinery used in milling industry or for the working of cereals etc; Pawan Chakki that is Air Based Atta Chakki; Wet grinder | 5% | 18% |
| 5. | Machines for cleaning, sorting or grading eggs, fruit or other agricultural produce and its parts, Milking machines and dairy machinery | 12% | 18% |
| 6. | LED Lamps, lights and fixture, their metal printed circuits board | 12% | 18% |
| 7. | Drawing and marking out instruments | 12% | 18% |
| 8. | Solar Water Heater and system | 5% | 12% |
| 9. | Prepared/Finished leather/chamois leather / composition leathers | 5% | 12% |
| 10. | Refund of accumulated ITC not to be allowed on flowing goods: (i) Edible oils (ii) Coal | | |
| | Services | | |
| 11. | Services supplied by foreman to chit fund | 12% | 18% |
| 12. | Job work in relation to processing of hides, skins and leather | 5% | 12% |

## முதன்மை வேளாண் கடன் சங்கங்கள்




- ❖ முதன்மை வேளாண் கடன் சங்கங்களை கணினிமயமாக்கம் செய்வதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ இது ஐந்து ஆண்டுகளில், செயலில் உள்ள சுமார் 63,000 முதன்மை வேளாண் கடன் சங்கங்களை கணினிமயமாக்க முன்மொழிந்துள்ளது.

- உரங்கள், விதைகள் போன்ற பல்வேறு சேவைகள் மற்றும் உள்ளீடுகளை வழங்கச் செய்வதற்கான இடமாக இது மாறும்.
- வங்கி சார்ந்த செயல்பாடுகள் மற்றும் வங்கி சாராத செயல்பாடுகளுக்கான வழங்கீட்டு நிலையங்களாக முதன்மை வேளாண் கடன் சங்கங்களை உருவாக்க இந்தத் திட்டம் உதவும்.
- முதன்மை வேளாண் கடன் சங்கங்கள் என்பது கூட்டுறவுத் துறையில் விவசாயிகளுடன் இணைந்து செயல்படுகின்ற, கிராமப்புறப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட மிகச்சிறிய அலகு ஆகும்.
- இது மூன்று அடுக்கு குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் வழங்கீட்டு அமைப்பின் மிகவும் தாழ்மட்ட நிலையில் உள்ள ஒரு அடுக்கு ஆகும்.
- இதன் மற்ற இரண்டு நிலைகளில் உள்ள அமைப்புகளாவன: ஏற்கனவே பொது வங்கி மென்பொருளில் செயல்பட்டு வருகின்ற மாநிலக் கூட்டுறவு வங்கிகள் (SCBs) மற்றும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் (DCCBs) ஆகியனவாகும்.

## நிதிச் சேவை நிறுவனங்கள் வாரியம்

- மத்திய அரசானது "வங்கிகள் குழு வாரியத்தினை (BBB)" "நிதிச் சேவைகள் நிறுவனங்கள் வாரியமாக (FSIB)" மாற்றியுள்ளது.
- நிதிச் சேவை நிறுவனங்கள் வாரியத்தின் ஆரம்பக் கட்டத் தலைவராக பானு பிரதாப் சர்மாவை நியமிப்பதற்கு அமைச்சரவையின் நியமனக் குழுவானது ஒப்புதல் அளித்து உள்ளது.
- இவர் இரண்டு ஆண்டு காலத்திற்கு இப்பதவியில் பணியாற்றுவதற்கு நியமிக்கப் பட்டு உள்ளார்.
- இவர் வங்கிகள் குழு வாரியத்தின் முன்னாள் தலைவராகப் பணியாற்றினார்.
- நிதிச் சேவைகள் நிறுவனங்கள் வாரியமானது வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் முழுநேர இயக்குநர்கள் மற்றும் நிர்வாகம் சாராதத் தலைவர்களின் நியமனங்களுக்கான பரிந்துரைகளை மேற்கொள்ளும்.
- பொதுத்துறை பொதுக் காப்பீட்டு நிறுவனங்களின் தலைமை மேலாளர்கள் மற்றும் இயக்குநர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வழிகாட்டுதல்களும் தற்போது நிதிச் சேவைகள் நிறுவனங்கள் வாரியத்தின் ஒரு பணியாகும்.

## எதிர்கால யூனிகார்ன் நிறுவனங்கள் குறியீடு 2022

- 2022 ஆம் ஆண்டின் ஹுருன் இந்தியா எதிர்கால யூனிகார்ன் நிறுவனங்கள் என்ற குறியீடானது ஹுருன் ஆராய்ச்சி நிறுவனத்தால் வெளியிடப்பட்டது.
- இந்தக் குறியீட்டின்படி, அடுத்த இரண்டு அல்லது நான்கு ஆண்டுகளில் இந்தியாவில் 122 புதிய யூனிகார்ன் நிறுவனங்கள் உருவாகும்.
- அடுத்த இரண்டு ஆண்டுகளில் யூனிகார்ன் நிறுவனமாக மாறக்கூடிய நிறுவனங்கள் கேசெல்லெஸ் என்று அழைக்கப் படும்.
- கேசெல்லெஸ் நிறுவனத்தின் மதிப்பு 500 மில்லியன் அமெரிக்க டாலர்கள் முதல் 1 பில்லியன் டாலர் வரை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- அடுத்த நான்கு ஆண்டுகளில் யூனிகார்ன் நிறுவனமாக மாறக்கூடிய தொடக்க நிறுவனம் சீட்டாஸ் ஆகும்.
- ஒரு யூனிகார்ன் நிறுவனம் என்பது 1 பில்லியன் அமெரிக்க டாலர்களுக்கும் அதிகமான மதிப்பைக் கொண்ட ஒரு தனியார் தொடக்க நிறுவனமாகும்.
- இந்தச் சொல் முதன்முதலில் 2013 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.
- இந்தச் சொல்லானது துணிகர முதலீட்டாளர் அய்லின் லீ என்பவரால் உருவாக்கப் பட்டது.

**Top 10 Gazelles in India**

| Startup | Funding recieved (in $ mn) | Year founded | Sector |
|---|---|---|---|
| Shiprocket | 355 | 2017 | Logistics Tech |
| Zepto | 360 | 2021 | Quick Commerce |
| Turtlemint | 200 | 2015 | E-Commerce |
| Ather Energy | 290 | 2013 | Electric Vehicle |
| Vivriti Capital | 190 | 2017 | Fintech |
| Ninjacart | 370 | 2015 | AgriTech |
| Dunzo | 700 | 2015 | Quick Commerce |
| Rapido | 310 | 2015 | Shared Economy |
| Clear Tax | 140 | 2011 | Fintech |
| Twin Health | 200 | 2018 | HealthTech |

Source - ASK Private Wealth Hurun India Future Unicorn Index 2022

## தங்கத்திற்கான இறக்குமதி வரி


- தங்கத்திற்கான இறக்குமதி வரியை 10.75 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக அரசு உயர்த்தியுள்ளது.
- இது நடப்புக் கணக்குப் பற்றாக்குறையினை நிலையாக வைத்திருக்கவும், இந்த மஞ்சள்நிற உலோகத்தின் அதிகரித்து வரும் இறக்குமதியைச் சரியான முறையில் வைத்திருப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- முன்பு, தங்கத்தின் மீதான அடிப்படை சுங்க வரி 7.5 சதவீதமாக இருந்த நிலையில், தற்போது இது 12.5 சதவீதமாக இருக்கும்.
- 2.5 சதவீத விவசாய உள்கட்டமைப்பு மேம்பாட்டு வீத வரியுடன், தங்கம் மீதான செயல் திறன்மிக்க சுங்க வரியானது 15 சதவீதமாக இருக்கும்.

## நிதி நிலைத்தன்மை அறிக்கை

- இந்திய ரிசர்வ் வங்கியானது, ஆண்டிற்கு இரண்டு முறை அதனால் மேற்கொள்ளப் படும் நிதி நிலைத்தன்மை அறிக்கையை (FSR) வெளியிட்டது.
- இதன் படி மொத்த வாராக் கடன்களுடன் (GNPA) வங்கி அமைப்பின் சொத்துத் தரம் மேம்பட்டு உள்ளது.
- 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 7.4 சதவீதமாக இருந்த அதன் விகிதம் ஆனது 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், ஆறு ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 5.9 சதவீதமாகக் குறைந்துள்ளது.

- ஒரு வருடத்திற்கு முன்பு 67.6 சதவீதமாக இருந்த வாராக் கடன்களை ஈடு செய்ய வைக்கப் படும் நிதி விகிதம் ஆனது (PCR) 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 70.9 % ஆக மேம்படுத்தப் பட்டுள்ளது.
- வாராக் கடன்களை ஈடு செய்ய வைக்கப்படும் நிதி விகிதம் என்பது, மோசமானக் கடன்களால் ஏற்படும் இழப்புகளுக்கு வங்கி ஒதுக்கும் நிதியின் சதவீதமாகும்.

## கடல்சார் பொருட்களின் ஏற்றுமதி





- 2021-22 ஆம் நிதியாண்டில், 7.76 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள 13,69,264 மெட்ரிக் டன் கடல்சார் உணவுகளை இந்தியா ஏற்றுமதி செய்துள்ளது.
- ஏற்றுமதியானது ரூபாய் மதிப்பில் 31.71 சதவீதமும், அமெரிக்க டாலர் மதிப்பில் 30.26 சதவீதமும் மற்றும் அளவு அடிப்படையில் 19.12 சதவீதமும் உயர்ந்துள்ளது.
- உறைந்த இறால் ஆனது அளவு மற்றும் மதிப்பின் அடிப்படையில் முக்கிய ஏற்றுமதிப் பொருளாக இருந்தது.
- உறைந்த இறால் இறக்குமதி செய்யும் நாடுகளுக்கான இந்தப் பட்டியலில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து சீனா, ஐரோப்பிய ஒன்றியம், தென்கிழக்கு ஆசியா, ஜப்பான் மற்றும் மத்தியக் கிழக்கு நாடுகள் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

## ஜூன் மாத சரக்கு மற்றும் சேவை வரி வசூல்

- 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் வசூலான மொத்த சரக்கு மற்றும் சேவை வரி வசூல் ஆனது 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத வசூலுக்கு அடுத்தபடியாக இரண்டாவது மிக உயர்ந்த வசூலாகும்.
- சரக்கு மற்றும் சேவை வரி தொடங்கப்பட்டதில் இருந்து 5வது முறையாக சரக்கு மற்றும் சேவை வரி வசூல் ரூ.1.40 லட்சம் கோடியைத் தாண்டியுள்ளது.
- இது 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் தொடர்ச்சியாக 4வது மாதமாக அதிக வசூல் பதிவாகியுள்ளது.
- 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் வசூலான ரூ. 1,67,540 கோடியைத் தொடர்ந்து 2022 ஆம்

ஆண்டு ஜூன் மாதத்தில் வசூலான மொத்த சரக்கு மற்றும் சேவை வரிவசூல் 2வது அதிகபட்ச வசூலாகும்.





## வெளிநாடுகளில் உள்ள உறவினர்கள் அனுப்பு தல் மூலம் வரும் பணவரவு

- வெளிநாட்டுப் பங்களிப்பு (ஒழுங்குமுறை) சட்டம் (FCRA) தொடர்பான சில விதிகளை மத்திய உள்துறை அமைச்சகம் திருத்தி அமைத்துள்ளது.
- வெளிநாட்டில் உள்ள உறவினர்களிடமிருந்து இந்தியர்கள் அதிகாரிகளுக்குத் தெரிவிக்காமல், ஒரு வருடத்திற்கு 10 லட்சம் ரூபாய் வரை பெற இந்தச் சட்டம் அனுமதிக்கிறது.
- இதற்கான முந்தைய வரம்பு ரூ.1 லட்சமாக இருந்தது.
- தொகை இந்த வரம்பைத் தாண்டினால், தனிநபர்கள் அரசாங்கத்திற்குத் தெரிவிப்பதற்கு முன்பு விதிக்கப்பட்டிருந்த 30 நாட்கள் என்ற வரம்பிற்குப் பதிலாக தற்போது 90 நாட்கள் என்ற வரம்பு விதிக்கப்படும்.
- திருத்தப்பட்ட விதிகள் ஆனது, தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் அல்லது தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு அத்தகைய நிதியைப் பயன்படுத்துவதற்கு அவற்றால் பயன்படுத்தப்படும் வங்கிக் கணக்குகள் குறித்து உள்துறை அமைச்சகத்திற்குத் தெரிவிக்க 45 நாட்கள் அவகாசம் அளித்துள்ளது.

## இந்தியாவின் சேவைத் தொழில் துறை

- இந்தியாவின் சேவைத் தொழில் துறையானது, ஜூன் மாதத்தின் போது கடந்த 11 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு மிக உயர்ந்த அளவிலான ஒரு செயல்பாட்டைக் கொண்டிருந்தது.
- சரியான சரக்கு மற்றும் சேவை வரி ரசீதுகளின் மூலம் அறியப்பட்ட இந்த முடிவுகளானது சேவைத் துறையில் ஒரு உறுதியான மீள் நிலையிலான எழுச்சியை காட்டுகின்றன.
- மே மாதத்தில் 58.9 ஆக இருந்த S&P உலகக் கொள்முதல் மேலாண்மைக் குறியீடானது ஜூன் மாதத்தில் 59.2 ஆக உயர்ந்துள்ளது.
- அது 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குப் பிறகு பதிவாகிய மிக உயர்ந்த அளவாகும்.




### உலக ஃபின்டெக்ஸ் தரவுத்தளம்

- உலக வங்கியானது 2021 ஆம் ஆண்டு உலக ஃபின்டெக்ஸ் தரவுத் தளத்தை வெளியிட்டு உள்ளது.
- 123 நாடுகளில் உள்ள மக்கள் வங்கி அட்டைகள், தானியங்குப் பண வழங்கீட்டு இயந்திரங்கள், கைபேசிகள் மற்றும் இணையம் போன்ற முறையான மற்றும் முறை சாரா நிதிச் சேவைகளை எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பதை இது ஆய்வு செய்தது.
- உலகளவில், 2021ஆம் ஆண்டில் 76 சதவீத வயது வந்தோர் வங்கி அல்லது ஒழுங்கு படுத்தப் பட்ட நிறுவனத்தில் கணக்கு வைத்துள்ளனர்.
- இதில் கடன் சங்கம், நுண்நிதி நிறுவனம் அல்லது கைபேசி வழியிலான பணச் சேவை வழங்கும் நிறுவனம் ஆகியவை அடங்கும்.
- வங்கிக் கணக்கு இல்லாத வயது வந்தோர் பிரிவினர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் நிதி நிறுவனத்தில் கணக்கைத் தொடங்கினால், பிறர் உதவியின்றி அதைப் பயன்படுத்த முடியாது என்று கூறியுள்ளனர்.
- இந்தியாவில் முறையாக வங்கியை அணுகுவதற்கான குறைந்த வாய்ப்பு மற்றும் நம்பிக்கையின்மையே உள்ளது.
- வயது வந்தோர் பிரிவினர்களில் 80 சதவீதத்தினரின் கணக்கு உரிமைக்கு ஆதார் முக்கியமானப் பங்காற்றியுள்ளது (2011 ஆம் ஆண்டில் இது 35% ஆக இருந்தது).
- பண உபயோகத்திலிருந்து உடலியல் அடையாளங்கள் சார்ந்த திறன் அட்டைகளுக்கு மாறுவது ஓய்வூதியக் கொடுப்பனவுகளில் இழப்பு ஏற்படுவதை 47% குறைத்துள்ளது.



## இந்திய ரூபாய் மதிப்பில் சர்வதேச வர்த்தகம் மேற்கொள்வதற்கான வழிமுறை

- இந்திய ரிசர்வ் வங்கியானது "ரூபாய் மதிப்பில் சர்வதேச வர்த்தகத்தை" மேற் கொள்வதற்கான புதிய வழிமுறைகளை அறிவித்தது.
- இந்த நடவடிக்கையானது உலகளாவிய வர்த்தகத்தை ஊக்குவிப்பதோடு, இந்தியாவில் இருந்து மேற்கொள்ளப்படும் ஏற்றுமதிக்கு முக்கியத்துவம் கொடுக்கும்.
- இதன் கீழ், விலைப்பட்டியல், பணம் செலுத்துதல், அத்துடன் ஏற்றுமதி அல்லது இறக்குமதிக்கான வழங்கீடுகள் ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படும்.
- எனவே, இதன் மூலம் அனைத்து ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகளையும் ரூபாய் மதிப்பில் குறிப்பிடலாம் மற்றும் விலைப் பட்டியல் தயாரிக்கலாம்.
- இருப்பினும், ரூபாய் மதிப்பில் பணம் செலுத்துவதற்கு, வங்கிகள் இந்திய ரிசர்வ் வங்கியின் அந்நியச் செலாவணித் துறையின் முன் அனுமதியைப் பெற வேண்டும்.




## முத்தரப்பு மேம்பாட்டு ஒத்துழைப்பு நிதி

- SBICAP வென்ச்சர்ஸ் லிமிடெட் (SVL) நிறுவனம் மற்றும் வெளியுறவு விவகாரங்கள் அமைச்சகம் ஆகியவை "முத்தரப்பு வளர்ச்சி ஒத்துழைப்பு நிதியினை (TDC நிதி)" அமைப்பதற்காக கை கோர்த்துள்ளன.
- உலகப் புத்தாக்க மேம்பாட்டு நிதிக்கு சுமார் ரூ. 175 கோடியை இந்தியா செலுத்த வேண்டும் என்ற உறுதிப்பாட்டை பூர்த்தி செய்வதற்காக ஒரு முத்தரப்பு மேம்பாட்டு ஒத்துழைப்பு நிதி உதவும்.
- இந்த நிதியானது SVL நிறுவனத்தினால் நிர்வகிக்கப்பட்டு அறிவுறுத்தப்படும்.
- மேலும் வெளியுறவு விவகாரங்கள் அமைச்சகத்திற்கான உலகப் புத்தாக்க மேம்பாட்டு நிதி திட்டத்திற்கான வசதிகளையும் SVL நிறுவனம் ஏற்பாடு செய்யும்.

## மறுநிதியளிப்பு - டாலர் மதிப்பிலானப் பத்திரங்கள்

- ரினியூ எனர்ஜி குளோபல் பிஎல்சி என்ற நிறுவனமானது சமீபத்தில் 525 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலானப் பத்திரங்களுக்கு மறுநிதியளிப்பு செய்தது.
- இது 2024 ஆம் ஆண்டில் நிறைவடைய இருந்தது.
- இவை இந்திய வங்கி சாரா நிதி நிறுவனத்திடமிருந்துப் பெறப்பட்ட கடனைத் திருப்பிச் செலுத்துவதன் மூலம் மறுநிதியளிப்பு செய்யப்பட்டன.
- ரினியூ எனர்ஜி குளோபல் பிஎல்சி என்ற நிறுவனமானது, டாலர் மதிப்பிலான பத்திரங்களை மறுநிதியளிப்பதற்கான இந்தியாவின் முதல் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவனமாக மாறியுள்ளது.

## புதிய சரக்கு மற்றும் சேவை வரி விகிதங்கள்





- புதிய சரக்கு மற்றும் சேவை வரி விகிதங்கள் ஆனது 2022 ஆம் ஆண்டு ஜூலை 18 ஆம் தேதி முதல் அமலுக்கு வந்தன.
- பன்னீர், அரிசி, கோதுமை, வெல்லம், தயிர் மற்றும் லஸ்ஸி போன்ற முன்பே பொதியிடப் பட்டு நிறுவனப் பெயர் முத்திரையிடப்பட்டத் தயாரிப்புகள் உட்பட பல உணவுப் பொருட்களின் விலை உயர்ந்துள்ளன.
- இந்த அன்றாட வீட்டு உபயோகப் பொருட்களுக்கு ஜூலை 18 ஆம் தேதி முதல் 5 சதவீத சரக்கு மற்றும் சேவை வரியானது விதிக்கப்படுகிறது.
- உலர்ந்த மக்கானா, பொறி, மெஸ்லின் மாவு, முத்திரையிடப்பட்ட இறைச்சி மற்றும் மீன் ஆகியவற்றுக்கும் 5 சதவீத அளவில் சரக்கு மற்றும் சேவை வரி விதிக்கப்படும்.
- இந்தப் பொருட்கள் அனைத்திற்கும் முன்பு சரக்கு மற்றும் சேவை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது.
- இது தவிர, மாம்பழக் கூழ் உட்பட அனைத்து வகையான மாம்பழங்களுக்கும் இப்போது 12% அளவில் சரக்கு மற்றும் சேவை வரி விதிக்கப்படுகிறது.
- இருப்பினும், எடை அளவில் வழங்கப்படும் பொருட்கள், முத்திரையிடப்படாத மற்றும் பெயரிடப் படாதப் பொருட்களுக்கு சரக்கு மற்றும் சேவை வரியில் இருந்து விலக்கு அளிக்கப் படும்.

- ❖ உணவகங்கள் மற்றும் வங்கிச் சேவைகளுக்கான சரக்கு மற்றும் சேவை வரி விகிதங்களும் உயர்த்தப்பட்டுள்ளன.
- ❖ காசோலைகளை வழங்குவதற்கு வங்கிகள் வசூலிக்கும் கட்டணம் உள்ளிட்ட வங்கிச் சேவைகளுக்கான புதிய சரக்கு மற்றும் சேவை வரி விகிதங்கள் தற்போது 18% ஆக இருக்கும்.
- ❖ தங்கும் விடுதி அறைகளுக்கு 12 சதவீதம் சரக்கு மற்றும் சேவை வரி விகிதங்கள் விதிக்கப் படும்.
- ❖ முன்னர் சரக்கு மற்றும் சேவை வரியில் இருந்து இவற்றிற்கு விலக்கு அளிக்கப்பட்டது.


## 2020-21 ஆம் ஆண்டில் இந்திய நாட்டில் பதிவான பண வருகை

- ❖ இந்திய ரிசர்வ் வங்கியானது 2020-21 ஆம் ஆண்டிற்கான பண வருகை குறித்த ஐந்தாவது சுற்றுக் கணக்கெடுப்பினை நடத்தியது.
- ❖ 2016-17 ஆம் ஆண்டில் 50 சதவீதத்திற்கும் அதிகமாக இந்தியாவிற்கு வளைகுடா நாடுகளில் இருந்து அனுப்பப் படும் பணத்தின் பங்கு 2020-21 ஆம் ஆண்டில் சுமார் 30% ஆகக் குறைந்துள்ளது.
- ❖ ஐக்கிய அரபு அமீரகத்திலிருந்து அனுப்பப்படும் பணத்தின் அளவை விட அமெரிக்காவிலிருந்து அதிகளவில் பணம் அனுப்பப்பட்டுள்ளது.
- ❖ 2020-21 ஆம் ஆண்டில் 23% சதவீத அளவிற்கு அமெரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு பணம் அனுப்பப்பட்டுள்ளது.




- ❖ இந்தியாவின் மொத்த உள்நாட்டுப் பண வரவில் ஐக்கிய அரபு அமீரகத்திலிருந்து அனுப்பப் படும் பணத்தின் அளவு 17-18% ஆகும்.
- ❖ பாரம்பரியமாக பண வரவினைப் பெற்று வரும் கேரளா, தமிழ்நாடு மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களின் பங்கு 2020-21 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட பாதியாகக் குறைந்து உள்ளது.
- ❖ 2016-17 ஆம் ஆண்டில் 42 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் தற்போது பதிவான இந்தப் பண வரவானது 25% மட்டுமே ஆகும்.
- ❖ பண வரவினைப் பெறுவதில் கேரளாவை விஞ்சி மகாராஷ்டிரா முதலிடத்தில் உள்ளது.
- ❖ 2020-21 ஆம் ஆண்டில் பதிவான மொத்தப் பண வரவில் 35% மகாராஷ்டிராவின் பங்களிப்பு என்று இந்த அறிக்கை காட்டுகிறது.

## திடீர் வரியில் குறைப்பு



Top Sector Gainers


| COMPANY | CMP (In ₹) | % Change vs previous close | % Change in July |
|---|---|---|---|
| Chennai Petroleum | 285.6 | 7.3 | -8.9 |
| MRPL | 76.3 | 5.0 | -15.8 |
| ONGC | 132.6 | 4.0 | -12.5 |
| Reliance Industries | 2,501.4 | 2.5 | -3.6 |

Compiled by: ETIG Database

- சர்வதேச விலை வீதங்கள் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து பெட்ரோல், டீசல், கச்சா எண்ணெய் மற்றும் ஜெட் விமான எரிபொருள் மீதான திடீர் வரியை மத்திய அரசு குறைத்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டு ஜூலை 01 ஆம் தேதியன்று, இந்தியா சுத்திகரிப்பு மற்றும் எண்ணெய் உற்பத்தி நிறுவனங்கள் மீது திடீர் வரியை விதித்தது.
- திடீர் வரி என்பது ஒரு நிறுவனத்திந மீது அரசாங்கத்தால் விதிக்கப்படும் ஒற்றை முறை வரியாகும்.
- அந்த நிறுவனங்கள் அவற்றின் பொறுப்பினைச் சாராமல் வரும் ஆதாயங்களைப் பெறும் நிறுவனங்களை இலக்காக வைத்து இந்த வரியானது விதிக்கப்படுகிறது.
- இந்த வரியானது திடீரென பெருகும் இலாபத்தின் மீது விதிக்கப்படும் அதிகபட்ச வரி விகிதமாகும்.
- இது இலாபத்தின் மீது விதிக்கப்படும் சாதாரண வரி விகிதங்களை விட அதிக அளவிலான ஒற்றை முறை வரியாகும்.

## 4 அடுக்கு ஒழுங்குமுறைக் கட்டமைப்பு

- நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகளுக்கு நான்கு அடுக்கு ஒழுங்குமுறைக் கட்டமைப்பினை மத்திய வங்கி நிறுவியுள்ளது.
- தற்போதுள்ள நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகளின் நிதி நிலைமையின் உறுதித் தன்மையை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்த நடவடிக்கையானது மேற் கொள்ளப்பட்டது.



- நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகளை வலுப்படுத்துவது தொடர்பானப் பரிந்துரைகளை வழங்குவதற்காக S.விஸ்வநாதன் தலைமையில் குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.
- வங்கிகளில் உள்ள வைப்புத் தொகையின் அளவு மற்றும் வங்கிகள் இயங்கும் பகுதி ஆகியவற்றின் அடிப்படையில் நான்கு அடுக்கு ஒழுங்குமுறைக் கட்டமைப்பினை ஏற்குமாறு அந்தக் குழு பரிந்துரைத்துள்ளது.

## நீண்ட கால மீள்திறன் கொண்ட விநியோக அமைப்புகள்

- 18 நாடுகளின் ஒரு கூட்டாண்மை அமைப்பானது, கூட்டு மற்றும் நீண்ட கால மீள்திறன் கொண்ட விநியோக அமைப்புகளை உருவாக்குவதற்கான ஒரு நான்கு அம்ச செயல் திட்டத்தினை வெளியிட்டுள்ளது.
- விநியோகத்திற்கானச் சார்புகள் மற்றும் அதில் உள்ள பாதிப்புகளிலிருந்து உருவாகும் இடர்களை எதிர்கொள்வதற்கான படிநிலைகள் இதில் அடங்கும்.
- இந்த 18 நாடுகளில்  இந்தியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் (EU) உள்ளிட்ட நாடுகள் அடங்கும்.


## எண்ணிம வங்கிகள்

- நிதி ஆயோக் அமைப்பானது, 'எண்ணிம வங்கிகள்: இந்தியாவில் உரிமம் மற்றும் ஒழுங்குமுறைக் கட்டமைப்பிற்கான முன்மொழிவு' என்ற தலைப்பிடப்பட்ட ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- எண்ணிம வங்கிகள் மற்றும் அத்தகைய வங்கிகளுக்கான உரிமம் மற்றும் ஒழுங்கு முறைக் கட்டமைப்பை அமைப்பதற்கு இந்த அறிக்கை பரிந்துரை செய்துள்ளது.
- பிரதான் மந்திரி ஜன் தன் யோஜனா மற்றும் இந்தியா ஸ்டேக் என்ற அமைப்பு மூலம் நிதி உள்ளடக்கத்தை மேம்படுத்துவதில் இந்தியா விரைவான முன்னேற்றம் கண்டு உள்ளது.
- ஆனால் கடன் வழங்கீடானது குறிப்பாக நாட்டின் 63 மில்லியன் அளவிலான குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு.ஒரு கொள்கை சார்ந்த சவாலாக உள்ளது.

## வெளிநாடுகளில் இருந்து அதிகளவு பண வரவினைப் பெறும் நாடு - 2021


- அகதிகள் மற்றும் புலம்பெயர்ந்தோரின் ஆரோக்கியம் பற்றிய முதல் உலக சுகாதார அமைப்பின் உலக அறிக்கையானது சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- இந்த அறிக்கையின்படி, உலகில் உள்ள எட்டு பேரில் ஒருவர் சுமார் ஒரு பில்லியன் எண்ணிக்கையினர் புலம்பெயர்ந்தோராக உள்ளனர்.
- குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகள் பிரிவில் 87 பில்லியன் அமெரிக்க டாலர்களுடன், வெளிநாடுகளில் இருந்து அதிக பண வரவினைப் பெறும் நாடாக இந்தியா உள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் இந்தியா, சீனா, மெக்சிகோ, பிலிப்பைன்ஸ் மற்றும் எகிப்து ஆகிய நாடுகள் வெளிநாடுகளில் இருந்து அதிக பண வரவினைப் பெறும் நாடுகளின் பட்டியலில் முதல் ஐந்து இடங்களில் உள்ளன.
- 2020 ஆம் ஆண்டில் பணம் வரவிற்கான மிகப்பெரிய மூல ஆதார நாடாக அமெரிக்கா இருந்தது.

- அதைத் தொடர்ந்து ஐக்கிய அரபு அமீரகம், சவுதி அரேபியா மற்றும் சுவிட்சர்லாந்து ஆகியவை உள்ளன.




## இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி

- சர்வதேச நாணய நிதியமானது 2022-23 ஆம் நிதியாண்டிற்கான இந்தியாவின் பொருளாதாரக் கண்ணோட்ட நிலையை 7.4% ஆகக் குறைத்துள்ளது.
- பொருளாதார வளர்ச்சிக்கான கண்ணோட்ட நிலை 0.8 சதவிகிதம் குறைக்கப் பட்டு உள்ளது.
- சர்வதேச நாணய நிதியத்தின் தற்போதைய இந்தக் கணிப்பானது, 2023 ஆம் நிதி ஆண்டிற்கான அதன் முந்தைய மதிப்பீடான 8.2 சதவீதத்தினை விட மிகவும் குறைவாக உள்ளது.
- ஆனால், இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்ட சமீபத்திய மதிப்பீடான 7.2% என்ற வளர்ச்சி விகிதத்தை விட இது அதிகமாகும்.
- சமீபத்திய உலகப் பொருளாதாரக் கண்ணோட்ட அறிக்கையில், 2023-24 ஆம் நிதி ஆண்டில் இந்தியாவின் பொருளாதாரம் 6.1% என்ற அளவு வளர்ச்சியடையும் என்று சர்வதேச நாணய நிதியம் கணித்துள்ளது.




## 5ஜி அலைக்கற்றை ஏலம்

- 5G அலைக்கற்றை ஏலம் விடப்பட்ட நான்கு நாட்களுக்குப் பிறகு மொத்தம் ₹1,49,855 கோடி ஏலம் எடுக்கப் பட்டுள்ளது.
- இப்பிரிவில் மொத்தம் 70 சதவீத அலைக்கற்றை விற்கப்பட்டது.
- 5ஜி அலைக்கற்றைகளுக்கான ஏலத்தில் ரிலையன்ஸ் ஜியோ நிறுவனமும், அதைத் தொடர்ந்து பார்தி ஏர்டெல், வோடபோன்-ஐடியா மற்றும் கௌதம் அதானி நிறுவனம் ஆகியவையும் முன்னணியில் உள்ளன.

## முதல் சர்வதேச விலைமதிப்பு மிக்க உலோகப் பொருட்கள் பரிமாற்ற வசதி

- இந்தியா தனது முதல் சர்வதேச விலை மதிப்பு மிக்க உலோகப் பரிமாற்றத்தை தொடங்கியது.
- இந்திய சர்வதேச விலை மதிப்பற்ற உலோகப் பொருட்கள் பரிமாற்ற மையமானது (IIBX), குஜராத் சர்வதேச நிதித் தொழில்நுட்ப நகரம் அல்லது குஜராத்தில் உள்ள GIFT நகரில் அமைந்துள்ளது.
- இந்திய சர்வதேச விலை மதிப்பு மிக்க உலோகப் பொருட்கள் பரிமாற்ற மையம் என்பது நகை வியாபாரிகளைப் பரிமாற்றத்தில் வர்த்தகம் செய்ய பதிவு செய்ய வைப்பது மட்டுமல்லாமல், தங்கம் மற்றும் வெள்ளியைச் சேமிப்பதற்குத் தேவையான உள்கட்டமைப்பையும் அமைத்துள்ளது.

## BSNL மற்றும் BBNL நிறுவனங்கள் இணைப்பு




- மத்திய அமைச்சரவையானது, சமீபத்தில் பாரத் பிராட்பேண்ட் நெட்வொர்க் லிமிடெட் மற்றும் பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் ஆகிய நிறுவனங்களை இணைப்பதற்கு அதன் ஒப்புதலை அளித்தது.
- BSNL நிறுவனமானது, அரசாங்கத்தின் நிர்வாகப் பிரிவாகச் செயல்படுவதோடு அதன் சொத்து உரிமைகள் அரசாங்கத்திடம் இருக்கும்.

- பாரத் பிராட்பேண்ட் நெட்வொர்க் லிமிடெட் நிறுவனமானது பாரத்நெட் என்றும் அழைக்கப் படுகிறது.
- இது அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனமாவதோடு, இது அகலப் பட்டை சேவை தொடர்பான உள்கட்டமைப்பினை வழங்குகிறது.
- BSNL நிறுவனமானது, நாட்டின் மிகப்பெரிய, அரசாங்கத்திற்குச் சொந்தமான, கம்பிவட இணைப்பற்ற தொலைத் தொடர்பு சேவை வழங்குநராக உள்ளது.


## சூயஸ் கால்வாய் பொருளாதார மண்டலம்

- சூயஸ் கால்வாய் பொருளாதார மண்டலத்தில் பசுமை ஹைட்ரஜன் தொழிற் சாலையைக் கட்டமைக்கச் செய்வதற்காக எகிப்து மற்றும் இந்திய நிறுவனம் ஒன்றும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- ஆண்டுதோறும் 20,000 டன் பசுமை ஹைட்ரஜனை உற்பத்தி செய்யும் திறன் கொண்ட ஆலையைக் கட்டமைப்பதற்காக 8 பில்லியன் அமெரிக்க டாலர்களை இந்திய ரீநியூ பவர் பிரைவேட் லிமிடெட் (RENE.BO) என்ற நிறுவனம் முதலீடு செய்ய உள்ளது.



# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ஆற்றல் சேமிப்புத் தளம்




- இந்திய அறிவியல் கல்வி நிறுவனத்தின் அறிவியலாளர்கள் டங்ஸ்டன் போன்ற ஒரு நுண்ணிய, வெப்பத்தினைத் தாங்கக் கூடிய உலோக அடுக்குகளைக் கண்டறிந்து உள்ளனர்.
- இது மின்சாரப் போக்குவரத்து போன்றப் பயன்பாடுகளுக்கு அவசியமான இந்த மின் கலன்களின் செயல்திறனை மேம்படுத்தும்.
- இது திட-நிலை லித்தியம் கொண்ட உலோக மின்கலன்களில் வேகமான மின்னேற்ற மற்றும் மின்னிறக்க விகிதங்களுக்கு வழிவகுக்கும்.
- வழக்கமான லித்தியம்-அயனி கொண்ட மின்கலன்கள் ஒரு கிராஃபைட் நேர் மின் முனை, ஒரு திரவ மின்பகுளி மற்றும் ஒரு பரிமாற்ற உலோக எதிர்மின்முனை ஆகியவற்றைப் பயன்படுத்துகின்றன.
- இருப்பினும், திரவ மின்பகுளிகள் எளிதில் தீப்பற்றக்கூடியவையாகவும், அதிக வெப்ப நிலையில் சிதைந்து மோசமான ஆயுள் காலத்தினைக் கொண்ட மின்கலன்களாக உள்ளன.
- மேலும், சில தீவிர நிகழ்வுகளில் மின்கலன்கள் தீப்பற்றக்கூடிய ஒரு வாய்ப்பிற்கும் வழி வகுக்கின்றன.
- திரவ மின்பகுளிகளுக்குப் பதிலாக செராமிக் திட மின்பகுளிகளைப் பயன்படுத்தச் செய்வது பாதுகாப்பானதாகவும் ஒருமுறை மின்னேற்றுவதன் மூலம் அவை நீண்ட நாட்களுக்குப் பயன்படுத்தக் கூடியதாகவும் இருக்கும்.


## மின்மினிப் பூச்சி போன்ற ஒளி உமிழும் எந்திரங்கள்

- சென்னையில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் சில ஆராய்ச்சியாளர்கள், பறக்கும் போது ஒளியை உமிழும் திறன் கொண்ட, இடப் பெயர்வினைக் கண்காணிக்கக் கூடிய மற்றும் தகவல்தொடர்பு திறன் கொண்ட சில எந்திரங்களை உருவாக்கியுள்ளனர்.

- இந்த எந்திரங்கள் ஒரு காகிதப் பற்றியை விட எடை குறைவாக இருக்கும்.
- மேலும் அவை வெளியிடும் ஒளி மற்றும் திறன்பேசியில் இணைக்கப்பட்ட மூன்று ஒளிப் படக் கருவிகள் ஆகியவற்றினைப் பயன்படுத்தி அவற்றைக் கண்காணிக்க முடியும்.
- மின்மினிப் பூச்சிகள் ஒரு துணையை ஈர்க்கவும், அதனை வேட்டையாடும் உயிரிகளை விரட்டவும் அல்லது இரையைக் கவரவும் தொடர்பு கொள்ளவும் வேண்டி தங்கள் ஒளி உமிழ்வைப் பயன்படுத்துகின்றன.




## தடிப்புத் தோல் அழற்சி நோய்க்கான சிகிச்சைக்கு எஸ்ட்ராடியோல் பயன்பாடு




- பெண்களின் உடலில் உள்ள எஸ்ட்ராடியோல் ஹார்மோன் தடிப்புத் தோல் அழற்சியை கட்டுப்படுத்துகிறது என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இது சொறி மற்றும் அரிப்புக்கு வழி வகுக்கும் ஒரு தோல் நோயாகும்.
- பெண்களின் உடலில் இந்த ஹார்மோன் இருப்பதால், ஆண்களுடன் ஒப்பிடும்போது, பெண்களுக்கு தீவிரமான தடிப்புத் தோல் அழற்சி ஏற்படுவதற்கான வாய்ப்பு கணிசமான அளவில் குறைவாக உள்ளது.

- எஸ்ட்ராடியோல் அல்லது ஆய்ஸ்ட்ராடியோல் என்பது பெண்களின் உடலில் உள்ள பாலின ஹார்மோன் ஈஸ்ட்ரோஜனின் ஒரு வடிவமாகும்.
- 17-பீட்டா-எஸ்ட்ராடியோல் என்றும் அழைக்கப்படுகின்ற இந்த எஸ்ட்ராடியோல் ஒரு ஈஸ்ட்ரோஜன் ஸ்டீராய்டு ஹார்மோன் ஆகும்.

## ஜென்னோவா mRNA தடுப்பூசி




- ஜெம்கோவாக்-19 என்ற ஜென்னோவா mRNA அடிப்படையிலான ஒரு தடுப்பூசியானது, உள்நாட்டிலேயேத் தயாரிக்கப்பட்ட இந்தியாவின் முதல் mRNA கோவிட்-19 தடுப்பூசி ஆகும்.
- 2-8 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் கூட சேமிக்கப்படும் போதிலும் சிதைவுறாமல் இருக்கும் முதல் mRNA தடுப்பூசி இதுவாகும்.
- மற்ற mRNA தடுப்பூசிகளில் பெரும்பாலானவற்றைச் சுழிய நிலைக்கும் கீழான வெப்ப நிலையில் சேமிக்கப்பட வேண்டும்.
- இது 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து வயதினருக்கும், அவசரகாலச் சூழ்நிலைகளில் பயன்படுத்துவதற்காக அதன் அவசரகாலப் பயன்பாட்டிற்கான ஒரு அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.
- இந்தியத் தலைமை மருந்துக் கட்டுப்பாட்டு வாரியம் ஆனது இதற்கான ஒப்புதலை அளித்துள்ளது.
- இது புனேவைச் சேர்ந்த ஜென்னோவா என்ற உயிரி மருந்துத் தயாரிப்பு நிறுவனத்தால் உருவாக்கப் பட்டது.
- mRNA என்பது புரதங்களின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் செல்களில் காணப் படும் RNA வகையான ஒரு தூது RNAவின் சுருக்கமாகும்.
- mRNA தடுப்பூசியானது, நமது உடலுக்குள் நோய் எதிர்ப்பு சக்தியைத் தூண்டும் ஒரு புரதத்தை எவ்வாறு உருவாக்குவது என்பது பற்றி நமது செல்களுக்குக் கற்றுக் கொடுக்கிறது.

- mRNA தடுப்பூசிகள் நமது உடலில் ஊடுருவும் வைரசிற்கு எதிராக போராடுவதற்கான செல்களைச் செயல்படச் செய்வதன் மூலம் தொற்று நோய்களிலிருந்து நம்மைப் பாதுகாக்கிறது.
- நோயெதிர்ப்புச் செயல்முறை என்பது குறிப்பிட்ட ஒரு புரதத்தைக் குறி வைத்து உடலில் ஊடுருவும் வைரஸை எதிர்த்துப் போராடத் தேவையான ஆன்டிபாடிகளை (எதிர்ப் புரதங்களை) உருவாக்க வழிவகுக்கிறது.
- mRNA அடிப்படையிலான கோவிட்-19 தடுப்பூசிகள், இணைப்புப் புரதம் எனப்படும் புரதத்தினை உருவாக்குவதற்கு செல்களுக்கு அறிவுறுத்தல்களை அனுப்புகின்றன.
- இது புதிய கொரோனா வைரசின் மேற்பரப்பில் உள்ள புரதத்தினைப் போன்றது.
- இந்தப் புரதங்கள் அவை மேலும் பிரதி எடுக்கும் நிகழ்வினைத் தடுக்கும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளன.
- பைசர் பயோன்டெக் மற்றும் மாடெர்னா கோவிட்-19 தடுப்பூசிகள் ஆகிய இரண்டும் mRNA தடுப்பூசிகள் ஆகும்.
- ஹைதராபாத்தைச் சேர்ந்த பயோலாஜிக்கல் இ என்ற நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட கார்பிவாக்ஸ் கோவிட்-19 தடுப்பூசி குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.


## அணுசக்தியினால் இயங்கும் விமானத்தில் நடத்தப்படும் தங்கும் விடுதி

- ஸ்கை க்ரூஸ் என்பது எதிர்காலத்தில் பெருமளவில் நடத்தப்பட உள்ள விமான தங்கும் விடுதி ஆகும்.
- இது பூமியில் ஒரு போதும் தரையிறங்காத அணுசக்தியினால் இயங்கும் ஒரு விமான தங்கும் விடுதி ஆகும்..
- இது மேகங்களுக்கு மேல் உள்ள வான்வெளியிலேயே இயக்கப்படும்.
- இது அணுசக்தியால் இயங்கும் 20 இயந்திரங்களைக் கொண்டுள்ளது.
- இது 5000 விருந்தினர்களுக்கு இடமளிக்கும் அளவுக்கு பெரியதாகும்.
- திட்டமிடப்பட்டப் பயணம் முழுவதும் இந்த விமானம் எப்போதுமே வானில் பறந்து கொண்டே இருக்கும்.
- இது ஏமன் நாட்டின் ஒரு தயாரிப்பு நிறுவனமான ஹஷேம் அல்-கைலி என்ற ஒரு நிறுவனத்தினால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## அண்டத்தில் உள்ள தன் இனத்தையே உட்கவரும் நட்சத்திரம்

- வானியலாளர்கள் முதன்முறையாக "தன் இனத்தையே ஒரு நட்சத்திரம் உட்கவருதல்" என்ற ஒரு நிகழ்வைக் கண்டறிந்துள்ளனர்.
- இதில், ஒரு அழிந்த நட்சத்திரமானது அதன் கோள்கள் அமைப்பின் உள் மற்றும் வெளிப் புறப் பகுதிகளிலிருந்து விண்வெளி சார்ந்தச் சிதிலங்களை உட்கவருகிறது.
- நமது சூரியனைப் போன்ற குறைந்த நிறை கொண்ட ஒரு நட்சத்திரம் தனது அணு எரிபொருளின் பெரும்பகுதியை வெளிவிடும் போது ஒரு வெண்ணிற குறு நட்சத்திரம் உருவாகிறது.

- இது பொதுவாக மிகவும் அடர்த்தியாகவும், ஒளி மங்கியதாகவும், ஒரு கோளின் அளவினை ஒத்ததாகவும் இருக்கும்.
- இது குறைந்த மற்றும் நடுத்தர நிறை கொண்ட சில நட்சத்திரங்களின் உருவாக்கத்தினுடைய ஒரு கடைசி நிலையாகும்.





## இந்தியாவின் பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டு ஏவுகணை (ATGM)




- பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டு ஏவுகணையானது இலக்கைத் துல்லியமாக தாக்குகிறது என்றும் குறைந்தபட்ச வரம்புகளில் அது இலக்கைச் சரியா
- கத் தாக்குகிறதா என்றும் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது எனவும் பாதுகாப்பு அமைச்சகம் கூறுகிறது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு மற்றும் இந்திய ராணுவம் ஆகியவை இணைந்து உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இந்த பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டு ஏவுகணையை மகாராஷ்டிராவின் அஹமத் நகரில் உள்ள கேகே என்ற தளத்தில் வெற்றிகரமாகப் பரிசோதித்தன.
- இது அர்ஜுன் போர் பீரங்கியில் இருந்து வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.

- ❖ இது வெடிப்பு நிகழ்வுகளுக்கான எதிர்வினைக் கவசத்தைக் கொண்டுப் பாதுகாக்கப் பட்ட கவச வாகனங்களை வீழ்த்துவதற்காக அதிகளவில் வெடிக்கும் திறன் கொண்ட பீரங்கி எதிர்ப்பு (HEAT) போர்க் கப்பலைப் பயன்படுத்துகிறது.

## மூளையிலுள்ள நரம்பு இணைப்புப் பற்றி அறிவதற்கான புதிய நிரல் நெறிமுறை




- ❖ இந்திய அறிவியல் கழகம் (IISc) ஆனது ஒரு புதிய இயங்குபடச் செயல்முறை அலகு (GPU) அடிப்படையிலான இயந்திரக் கற்றல் வழிமுறையை உருவாக்கியுள்ளது.
- ❖ இது RaAl-LiFE (முறைப்படுத்தப்பட்ட, துரிதப்படுத்தப்பட்ட, நேரியக் கற்றை மதிப்பீடு) என்று அழைக்கப்படுகிறது.
- ❖ மூளையின் பல்வேறு பகுதிகளுக்கு இடையேயானத் தொடர்பைச் சிறந்த முறையில் புரிந்து கொள்ளவும், அவற்றைக் கணிக்கவும் இது அறிவியலாளர்களுக்கு உதவும்.
- ❖ இது மனித மூளையின் விரவல் காந்த அதிர்வு அலை வரைவு ஆய்வு மூலம் உருவாக்கப் படும் அதிகளவிலான தரவை விரைவாகப் பகுப்பாய்வு செய்ய முடியும்.
- ❖ தற்போதுள்ள அதிநவீன நிரல் நெறிமுறைகளுடன் ஒப்பிடும் போது, புதிய நிரல் நெறி முறையைப் பயன்படுத்தி இந்தக் குழுவால் விரவல் காந்த அதிர்வு அலை வரைவு ஆய்வுத் தரவை 150 மடங்கு வேகமாக மதிப்பிட முடிந்தது.

## CAPSTONE விண்வெளித் திட்டம்

- ❖ நாசா ஆராய்ச்சியாளர்கள், நியூசிலாந்தில் இருந்து நிலவுக்கு கேப்ஸ்டோன் என்ற ஒரு விண்கலத்தை வெற்றிகரமாக அனுப்பினர்.
- ❖ CAPSTONE திட்டம் என்பது நிலவு தொடர்பான நிகழ்வுகள் சார்ந்த, தன்னியக்க நிலைப் படுத்துதல் அமைப்பின் தொழில்நுட்பச் செயல்பாடுகள் மற்றும் தேடுதல் ஆய்வு என்பதன் சுருக்கமாகும்.
- ❖ ஒரு குறிப்பிட்ட வகை நிலவின் சுற்றுப் பாதையானது, இந்த தசாப்தத்தின் பிற் பகுதியில் இந்த நிறுவனம் தொடங்க உள்ளதற்கு இலக்கு நிர்ணயித்துள்ள சந்திர உள் நுழைவு விண்வெளி நிலையத்திற்குப் பொருத்தமானதா என்பதை இது சரி பார்க்கும்.

## PSLV-C53 விண்வெளித் திட்டம்


- ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் உள்ள இரண்டாவது ஏவுதளத்தில் இருந்து PSLV-C53 விண்கலம் ஏவப்பட்டது.
- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமானது அதன் துருவச் செயற்கைக்கோள் ஏவுகலத்தின் மூலம் சிங்கப்பூர் நாட்டின் மூன்று செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தியது.
- இது இந்த மூன்று செயற்கைக்கோள்களை புவியின் தாழ்மட்டச் சுற்றுப்பாதையில் (LEO) நிலை நிறுத்துவதற்காக ஏவப்பட்டது.
- இது இந்த ஆண்டில் இஸ்ரோ ஏவிய இரண்டாவது செயற்கைக்கோள் மற்றும் இந்திய விண்வெளி நிறுவனம் ஏவிய இரண்டாவது வணிகரீதியிலான ஏவுதலாகும்.
- PSLV-C53 ஏவுகணை வாகனத்தின் மூலம் ஏவப்படும் 55வது விண்வெளித் திட்டமாகும்.
- மேலும் இது PSLV-முக்கியப் பகுதியை மட்டும் பயன்படுத்தி ஏவப்படும் 15வது விண்வெளித் திட்டமாகும்.
- PSLV என்பது இஸ்ரோவின் முக்கிய மற்றும் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட அதன் மிக வெற்றிகரமான ஏவுகலமாகும்.
- இது கடந்த காலத்தில் 54 முறை விண்ணில் ஏவப்பட்டது.
- மேலும் இது 2008 ஆம் ஆண்டில் இந்தியா விண்ணில் ஏவிய மிகவும் வெற்றிகரமான திட்டமான சந்திரயான்-1 விண்வெளித் திட்டம் மற்றும் 2013 ஆம் ஆண்டில் செவ்வாய்க் கிரகத்திற்கு அனுப்பப்பட்ட செவ்வாய்க் கிரகச் சுற்று விண்கலத்தை ஏவுவதற்கும் இது பயன்படுத்தப் பட்டது.
- இந்த ஏவுகலமானது 600 கிமீ உயரத்தில் உள்ள சூரிய-ஒத்திசைவு துருவ சுற்றுப் பாதைக்கு 1,750 கிலோ வரையிலான விண்வெளிப் பொருட்களை எடுத்துச் செல்லும் திறன் கொண்டது.
- IRNSS செயற்கைக்கோள் தொகுப்பு போன்ற பல்வேறு செயற்கைக் கோள்களைப் புவி ஒத்திசைவு மற்றும் புவிநிலைச் சுற்றுப்பாதைகளில் செலுத்தவும் இது பயன்படுத்தப் பட்டுள்ளது.

## அபியாஸ்-அதிவேக விரைவுப்படுத்தக்கூடிய வான்வழி இலக்கு (HEAT) அமைப்பு

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது அபியாஸ் அமைப்பினை வெற்றிகரமாக சோதனை செய்தது.
- இது அதிவேக விரைவுப் படுத்தக் கூடிய வான்வழி இலக்கு (HEAT) அமைப்பாகும்.
- இது வங்காள விரிகுடா கடற்கரையில் உள்ள ஒடிசாவின் சந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்தச் சோதனைத் தளத்திலிருந்து (ITR) சோதனை செய்யப்பட்டது.
- அபியாஸ் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் வான்வெளி மேம்பாட்டுக் கட்டுமான முகமையினால் வடிவமைத்து உருவாக்கப்பட்டுள்ளது.
- அதிகுறையொலி என்ற வேகத்தில் நீண்ட தூரம் பறப்பதற்கான தாங்குதிறனைத் தக்க வைப்பதற்காக இது ஒரு சிறிய எரிவாயு விசையாழி இயந்திரத்தால் இயக்கப் படுகிறது.

## விண்வெளியில் எலும்பு நிறை இழப்பு

- விண்வெளி வீரர்கள் விண்வெளியில் பயணம் செய்யும் போது அதிக அளவு எலும்பு நிறைகளை இழப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- அவர்கள் தங்கள் பணிகளில் இருந்து திரும்பி வந்த பிறகு அதிலிருந்து மீண்டு வருவதற்கு ஒரு வருடத்திற்கு மேல் ஆகும்.
- சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கியிருக்கும் போதும் அதற்குப் பின்னரும் விண்வெளி வீரர்களின் மணிக்கட்டு மற்றும் கணுக்கால் ஆகிய பகுதிகளில் ஒவ்வொரு மாதமும் சுமார் 1 முதல் 2 சதவீத எலும்பு அடர்த்தி இழப்பு ஏற்படுவதைக் கண்டறிந்து உள்ளனர்.
- கிட்டத்தட்டப் பத்தாண்டுகளில் மனித உடலில் ஏற்படும் எலும்பு இழப்பின் அதே அளவிற்கு இதனால் எலும்பு அடர்த்தி இழப்பு ஏற்படுகிறது.




## சால்மோனெல்லா பாதிப்பு

- சால்மோனெல்லா பாக்டீரியாக்கள் பேரி காலேபட் என்பவரால் நிர்வகிக்கப்படுகின்ற உலகின் மிகப்பெரிய சாக்லேட் தயாரிப்பு நிறுவனத்தில் காணப்பட்டன.
- பெல்ஜியத்தில் உள்ள பேரி காலேபட்டின் வியெஸ் தொழிற்சாலை அதன் உற்பத்தியை நிறுத்தியுள்ளது.
- மேலும், அமெரிக்காவில் பரிசோதிக்கப் பட்டவைகளில் 31% அளவிலான கோழி இறைச்சியின் மாதிரிகளில் சால்மோனெல்லா கண்டறியப்பட்டது.
- சால்மோனெல்லா என்பது சால்மோனெல்லோசிஸ் எனப்படுகின்ற, உணவு மூலம் பரவும் நோய்களை உண்டாக்கும் பாக்டீரியாக்களின் ஒரு குழுவாகும்.

## தன்னிச்சையாக பறக்கும் வான்வழி வாகனத் தொழில்நுட்பத்தின் செயல் விளக்கம்


- பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி அமைப்பானது ஒரு புதிய ஆளில்லா வான்வழி வாகனத்தின் முதல் சோதனைப் பயணத்தை மேற்கொண்டது.
- இது ஒரு தன்னிச்சையாக பறக்கும் வான்வழி வாகனத் தொழில்நுட்பத்தின் செயல் விளக்கமாகும்.
- இது 'ரேடாருக்குப் புலப்படாத வகையில் பறக்கும் தொழில்நுட்பத்தின் சோதனைத் தளம்' (SWiFT) என்றும் அழைக்கப்படும் செயல்விளக்கச் சோதனை ஆகும்.
- இது ஓர் ஆளில்லாப் போர் விமானம் (UCAV) அல்லது பறக்கும் இறக்கை வகையிலான போர் முறைக்கான ஆளில்லா விமானம் ஆகும்.
- இந்த ஆளில்லாப் போர் விமானம் ஆனது ஏவுகணைகள் மற்றும் துல்லியமாக வழி காட்டும் ஆயுதங்களை ஏவக் கூடிய திறன் கொண்டதாக இருக்கும்.
- இதன் செயற்கூறுகள் பின்வருமாறு
  - நிலச்சரிவினால் பாதிக்கப்பட்டப் பகுதியினை வரைபடமிடுதல்
  - பாதிக்கப்பட்டப் பயிர்ச் சேதங்களின் மதிப்பீடு
  - பெரிய அளவிலான பகுதிகளை வரைபடமிடுதல் சேவைகள்
  - போக்குவரத்துக் கண்காணிப்பு மற்றும் மேலாண்மை
  - தளவாடங்கள் வழங்கீடு




## அப்ஹீலியன் நிகழ்வு 2022

- அப்ஹீலியன் என்பது சூரியனுக்கும் பூமிக்கும் இடையே உள்ள தூரம் மிகத் தொலைவாக இருக்கும் ஒரு நிலையாகும்.
- விண்வெளியில் உள்ள இரண்டும் 2022 ஆம் ஆண்டு ஜூலை 04 ஆம் தேதியன்று கிட்டத் தட்ட 152.1 மில்லியன் கிலோமீட்டர்கள் தொலைவில் அமைந்துள்ளன.
- இது பூமி - சூரியன் ஆகியவற்றிற்கு இடையில் உள்ள சராசரி இடைவெளியை விட சூரியனிலிருந்து கிட்டத்தட்ட 1.67 சதவீதம் தொலைவில் உள்ளது.
- பூமி - சூரியன் ஆகியவற்றிற்கு இடையில் உள்ள சராசரி இடைவெளி ஆனது வானியல் அலகு (AU) என அழைக்கப்படுகிறது.

- இதில் 1 AU என்பது 149.6 மில்லியன் கிலோமீட்டருக்குச் சமம் ஆகும்.





## தாவரங்களில் நைட்ரேட் உட்கிரகித்தல் செயல்முறையை ஒழுங்குபடுத்துதல்

- தாவரங்களில் நைட்ரேட் உட்கிரகித்தல் செயல்முறையை ஒழுங்குபடுத்தும் ஒரு புதிய வழியை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- அவர்கள் முன்பு ஆராய்ச்சியாளரிடையே சிறிய கவனத்தைப் பெற்ற, ஒரு படி எடுத்தல் காரணியான MADS27 எனப்படும் miR444 இலக்கு மரபணுவை ஆய்வு செய்தனர்.
- miR444 எனப்படும் மைக்ரோ ஆர்என்ஏ என்பது MADS27 என்ற மரபணுவினைச் செயல் படுத்தச் செய்கிறது
- அது நைட்ரேட் உட்கிரகித்தல், வேர் வளர்ச்சி மற்றும் அழுத்தத்தைத் தாங்கும் தன்மையை ஒழுங்குபடுத்தும்.
- எனவே இது இந்தத் தாவரப் பண்புகளைக் கட்டுப்படுத்த ஒரு வழியினை வழங்குகிறது.
- MADS27 ஆனது மரபணு நைட்ரஜன் பயன்பாட்டுத் திறனை மேம்படுத்தும் வகையில் மாறுபாடுகள் செய்வதற்கான ஒரு சிறந்த மாற்றாகத் தோன்றுகிறது.




## புதிய அணுவகத் துகள்கள்




- LHCb கூட்டாண்மை அமைப்பானது ஒரு புதிய வகையான பென்டாக்வார்க் மற்றும் முதல் இணை டெட்ராக்வார்க்குகளைக் கண்டறிந்துள்ளது.
- இந்தப் புதிய துகள்கள் "பியூட்டி குவார்க்" அல்லது "பி குவார்க்" என அழைக்கப் படுகின்றன.
- இந்த மூன்று துகள்களும் இன்று வரை அறியப்படவில்லை.

## உலகின் முதல் "மணல் மின்கலன்"

- மணலில் வெப்ப ஆற்றலைச் சேமிக்கும் மின்கலம் ஒன்று மேற்கு பின்லாந்தில் நிறுவப் பட்டுள்ளது
- புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களிலிருந்து வரும் மின்சாரமானது மணலைச் சுமார் 932°F வரை வெப்பப்படுத்தப் பயன்படுகிறது.
- இந்த வெப்ப ஆற்றல் ஆனது பின்னர் அங்குள்ளக் கட்டிடங்களில் வழங்கப்படும் தண்ணீரைச் சூடாக்குகிறது
- காற்று மற்றும் சூரிய ஒளி போன்ற குறிப்பிட்ட இடைவெளியில் இயங்கும் ஆற்றல் மூலங்களிலிருந்து இதனால் ஆற்றலைச் சேமிக்க முடியும்.
- இது ஒரே நேரத்தில் பல மாதங்கள் வரை புதுப்பிக்கத்தக்க ஆற்றலைச் சேமித்து வைத்திருக்க முடியும்.



## தன்னிச்சையாகப் பறக்கும் ஆளில்லா விமானத்தின் முதல் புறப்பாடு

❖ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் ஆனது தன்னிச்சையாகப் பறக்கும் வான்வெளித் தொழில்நுட்பக் கருவியின் முதல் சோதனையை வெற்றிகரமாக மேற்கொண்டது.

❖ இது கர்நாடகாவின் சித்ர துர்காவில் உள்ள வான்வெளியியல் சோதனைத் தளத்தில் இருந்து பரிசோதிக்கப்பட்டது.

❖ இந்த ஆளில்லா வான்வழி வாகனம் (UAV) ஆனது ஒரு சிறிய சுழல்விசை விசிறி இயந்திரத்தால் இயக்கப்படுகிறது.

## சூ துகள்கள் 2.0

❖ பெரிய ஆட்ரான் மோதுவி ஆய்வகத்தில், பேரண்டத்தின் கட்டமைப்புத் தொகுதிகளைப் பற்றி அறிவதற்கானப் பணியின் போது, இதுவரை கண்டிராத மூன்று அணுவகத் துகள்களை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

❖ அறிவியலாளர்கள் ஒரு புதிய வகையான "பென்டாக்வார்க்" மற்றும் முதல் இணை "டெட்ராக்வார்க்" ஆகியவற்றைக் கண்டறிந்துள்ளனர்.

❖ இதனை ஐரோப்பிய அணு ஆராய்ச்சி மன்றமான CERN தெரிவித்துள்ளது.

❖ லார்ஜ் ஹாட்ரான் கொலைடர் அல்லது பெரிய ஆட்ரான் மோதுவி என்பது புலப்படாத 'தெய்வீக துகள்' அல்லது ஹிக்ஸ் போசான் என்றத் துகளைக் கண்டறிந்த இயந்திரம் ஆகும்.

❖ 13.7 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட பெருவெடிப்புக்குப் பிறகு பேரண்டம் உருவாவதற்கு இது இன்றியமையாததாகக் கருதப்படுகிறது.

❖ இது CERN மன்றத்தில் அமைந்துள்ள 27 கிமீ நீளமுள்ள லார்ஜ் ஹாட்ரான் கொலைடர் இயந்திரம் ஆகும்.

❖ இது ஸ்விட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் அமைந்துள்ளது.

❖ CERN என்பது ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு அதிகாரப்பூர்வப் பார்வையாளர் தகுதி பெற்ற அமைப்பாகும்.

❖ CERN ஆனது உலகளாவிய வலையமைப்பின் பிறப்பிடமாகவும் உள்ளது.

## இதுவரை காணப்படாத பேரண்டத்தின் படங்கள்

❖ ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி எடுத்த அடுத்தக் கட்டப் புகைப்படங்களை நாசா வெளியிட்டுள்ளது.

❖ இதுவரை பார்த்திராதப் பேரண்டத்தின் காட்சிகளை இந்தப் படங்கள் காட்டுகின்றன.

❖ அண்டங்களின் தொகுப்பானது 4.6 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியது போலவே இந்தப் படத்தில் காட்டப்பட்டுள்ளது.

❖ இந்தப் புதிய படங்களில் கரினா நெபுலா, WASP-96b, தென்புற வளைய நெபுலா மற்றும் ஸ்டீபனின் குயின்டெட் ஆகியவை அடங்கும்.

❖ கரினா நெபுலா என்பது நமது சூரியனை விட அளவில் பெரிய நட்சத்திரங்கள் இடம் பெற்றுள்ள ஒரு நட்சத்திரக் குழுமம் ஆகும்.

- இது 9,600 ஒளி ஆண்டுகளுக்கும் அதிகமான தொலைவில் அமைந்துள்ளது.
- WASP-96b என்ற புறக்கோள் மற்றும் அதன் வளிமண்டலத்தின் படங்களும் வெளியிடப் படும்.
- இந்தக் கோள் பூமியிலிருந்து 1,150 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளது.
- இது வியாழனின் நிறையில் பாதி நிறையைக் கொண்டது.
- மேலும், அது தனது சூரியனை வெறும் 3.4 நாட்களில் சுற்றி வருகிறது.




## உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட லித்தியம்-அயனி மின்கலம்

- ஓலா எலக்ட்ரிக் நிறுவனமானது சமீபத்தில், உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட "NMC 2170" என்ற இந்தியாவின் முதல் லித்தியம்-அயனி மின்கலத்தினைத் தயாரித்துள்ளது.
- NMC 2170 என்பது உருளை வடிவ உயர் ஆற்றல் நிக்கல் ஓலா மின்கலமாகும்.
- இது எதிர்மின் முனையில் நிக்கல்-மாங்கனீஸ்-கோபால்ட் (NMC) கலவையையும் மற்றும் நேர்மின் முனையில் கிராஃபைட் மற்றும் சிலிக்கான் ஆகியவற்றின் கலவையையும் கொண்டுள்ளது.

## LUX-ZEPLIN கரும்பொருள் உணர்வி

- இந்த அடுத்தத் தலைமுறைத் தொழில்நுட்பத்தினைச் சேர்ந்த கரும்பொருள் உணர்வி என்பது அதன் செயல்பாடுகளைத் தொடங்கி, தனது முதல் முடிவுகளை வழங்கி உள்ளது.
- இது பூமியில் உள்ள இந்த வகையிலான மிகவும் உணர்திறன் வாய்ந்த இயந்திரமாகும்.
- இது அமெரிக்காவின் தெற்கு டகோட்டாவில் உள்ள பிளாக் ஹில்ஸ் (கருமலை) என்னுமிடத்தில் உள்ள சான்ஃபோர்ட் நிலத்தடி ஆராய்ச்சி மையத்தில் நிறுவப் பட்டு உள்ளது.
- கரும்பொருள் துகள்கள் இதற்கு முன்னதாகக் கண்டறியப்படவில்லை.
- LZ கருவியினால் மேற்கொள்ளப்பட்ட முதல் 60 நாட்கள் அளவிலான நேரடி சோதனையின் ஆரம்ப முடிவுகள் நேர்மறையான முடிவுகளை வழங்கியுள்ளன.




## பாக்டீரியாவிலிருந்து ராக்கெட் எரிபொருள் தயாரிப்பு

- POP-FAME என்ற ஸ்ட்ரெப்டோமைசஸ் பாக்டீரியா மூலம், பூஞ்சை எதிர்ப்பு மூலக்கூறின் அடிப்படையில் புதிதாக உருவாக்கப்பட்ட உயிரி எரிபொருள் எதிர்காலத்தில் மேற் கொள்ளப் படும் ராக்கெட் ஏவுதல்களில் பயன்படுத்தப்படலாம்.
- POP-FAME என்பது 'பாலிசைக்ளோப்ரோபனேட்டட் அமில மெத்தில் எஸ்டர்' என்பதைக் குறிக்கிறது.
- இது தற்போது பயன்படுத்தப்படும் ராக்கெட் எரிபொருட்களை விட கணிசமாக அதிக ஆற்றலைக் கொண்டிருக்கலாம்.
- இது பெட்ரோலியத்தில் இருந்து உருவாக்கப்படும் மற்ற எந்த எரிபொருளையும் ஒப்பிடும் போது அதிலுள்ள பசுமை இல்ல வாயுவின் அளவைக் கணிசமாகக் குறைக்கிறது.
- POP-FAME எரிபொருளின் மூலக்கூறு அமைப்பானது சின்டின் என்பதினை ஒத்துள்ளது.
- இருப்பினும், ராக்கெட்டின் அதிக எடையைத் தவிர்ப்பதற்காக, ஒவ்வொரு மூலக் கூறிலும் இரண்டு ஆக்ஸிஜன் அணுக்களை அகற்றுவது சவாலான ஒன்றாகும்.

## கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்க்கு எதிரான தடுப்பூசி


- சீரம் இந்திய நிறுவனமானது, பெண்கள் மத்தியில் நிலவும் கர்ப்பப்பை வாய்ப் புற்று நோயைத் தடுப்பதற்காக உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ஒரு தடுப்பூசியை வெளியிடத் திட்டமிட்டுள்ளது.
- கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயைத் தடுப்பதற்காக, இந்தியாவில் வெளியிடப்படும் முதலாவது நான்முனை இணைப்புடைய மனித பாப்பிலோமா வைரஸ் தடுப்பூசி (qHPV) இதுவாகும்.
- கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயானது தடுக்கக் கூடியதாக இருந்தாலும், இந்தியாவில் பெண்களுக்கு அதிகளவில் ஏற்படும் புற்றுநோய்களில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

- இந்தப் புற்றுநோய் ஆனது பொதுவாக 15 முதல் 44 வயதுடைய பெண்களிடையேக் கண்டறியப்படுகிறது.
- தேசியப் புற்றுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம் இந்தியாவில் முதன்முதலாக 1975 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

## இலகுரக ஹெலிகாப்டர் அடங்கிய படைப்பிரிவு INAS 324


- விசாகப்பட்டினத்தில் உள்ள INS தேகா கப்பலில் இந்தியக் கடற்படையின் விமானப் படைப் பிரிவானது (INAS 324) இந்தியக் கடற்படையில் இணைக்கப்பட்டது.
- கிழக்குக் கடற்கரைப் பகுதியில் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு கட்டமைக்கப் பட்ட மேம்பட்ட இலகுரக ஹெலிகாப்டர் ஆன MK III ஹெலிகாப்டர்களை இயக்கி வரும் முதல் கடற்படைப் படைப் பிரிவு இதுவாகும்.
- முதலாவது இலகுரக ஹெலிகாப்டர் அடங்கிய படைப் பிரிவிற்கு INAS 324 "KESTRELS" என்று பெயரிடப் பட்டுள்ளது.
- இது சிறப்பான உணர்திறன்களைக் கொண்டுள்ளது.
- இது விமானம் மற்றும் விமானப் படையின் முக்கியப் பங்கைக் குறிக்கிறது.

## செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான புற்றுநோயைக் கண்டறியும் கருவி




- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது, ‘PIVOT’ என்ற செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான கருவியினை உருவாக்கியுள்ளது.
- PIVOT ஆனது நோயாளிகளின் உடலில் உள்ள புற்றுநோயை உண்டாக்கும் மரபணுக்களைக் கணித்து அவற்றைக் கண்டறியும் திறன் கொண்டது.
- இந்த செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான கருவியானது தனிப் பயனாக்கப் பட்ட புற்றுநோய்ச் சிகிச்சைக்கான உத்திகளை வகுப்பதில் உதவும்.
- புற்றுநோயை உண்டாக்கும் மரபணுக்களைக் கணிப்பதற்காக இது வடிவமைக்கப் பட்டுள்ளது.
- இது புற்றுநோயை உண்டாக்கும் மரபணுக்களை முன்கூட்டியே கண்டறிவதற்காக, சடுதி மாற்றம் மற்றும் மரபணு வெளிப்பாடு உள்ளிட்ட பல்வேறு தரவுகளைப் பயன்படுத்துகிறது.

## மார்பர்க் வைரஸ் நோய்



- சமீபத்தில், இரண்டு மார்பர்க் வைரஸ் நோய் பாதிப்புகள் கானாவில் பதிவாகியுள்ளன.
- மார்பர்க் வைரஸ் நோய் என்பது ஒரு தொற்றக்கூடிய இரத்தக்கசிவு சார்ந்த காய்ச்சல் ஆகும்.
- இது எபோலா வைரஸின் குழுமத்தினை ஒத்த வைரஸ் குடும்பத்தினைச் சேர்ந்தது.
- பழந்திண்ணி வௌவால்கள் மூலம் இந்த வைரஸ் மக்களுக்கு பரவுகிறது.
- இது மக்களிடம் இருந்து மக்களுக்குப் பரவுவதும் உண்டு.
- பாதிக்கப்பட்ட நபர் அல்லது மேற்பரப்புகளில் காணப்படும் உடல் திரவங்களுடன் நேரடி தொடர்பு கொள்வதன் மூலம் இந்த நோய் பரவுகிறது.
- இது 2 முதல் 21 நாட்கள் வரையிலான நோய் வளர்ச்சிக் காலத்தினைக் கொண்டது.
- இந்த நோய் மிகவும் தீங்கு விளைவிக்கக் கூடிய மற்றும் ஆபத்தான நோயாகும்.
- இதற்கு முன்னதாக ஏற்பட்ட தொற்றுகளில் பதிவான இறப்பு விகிதம் ஆனது 24% முதல் 88% வரை இருந்தது.

## ARYABHAT-1

- பெங்களுருவின் இந்திய அறிவியல் கல்வி நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள் சமீபத்தில் "ARYABHAT-1" என்ற தொடர்முறை சில்லு தொகுதிகளின் ( சிறிய மின்னணு தொடர்முறை சுற்றுகள்) முன்மாதிரியை உருவாக்கியுள்ளனர்.
- ARYABHAT-1 என்பது செயற்கை நுண்ணறிவுச் செயல்முறைகளுக்கான தொடர்முறை மறு அமைவாக்கத் தொழில்நுட்பம் மற்றும் பிறழ்வு வகை-தகவமைவு வன்பொருள் என்பதைக் குறிக்கும்.

- இந்த சில்லுத் தொகுதிகள் வேகமாக செயல்படும்.
- வெவ்வேறு மின்னணு உபகரணங்களில் பயன்படுத்தப்படும் எண்ணிமச் செயலிகளுடன் ஒப்பிடும் போது இது குறைந்த ஆற்றலைப் பயன்படுத்தும்.
- செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலானச் செயலிகளுக்கு இத்தகையச் சில்லுத் தொகுதிகள் பயனுள்ளதாக இருக்கும்.

## IS4OM

- பெங்களூருவில் உள்ள இஸ்ரோ கட்டுப்பாட்டு மையத்தில் "பாதுகாப்பான மற்றும் நீடித்தச் செயல்பாட்டிற்கான இஸ்ரோ அமைப்பு" (IS4OM) ஆனது சமீபத்தில் தொடங்கப் பட்டது.
- S4OM என்பது பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மையை உறுதி செய்வதற்கான முழுமையான அணுகுமுறையுடன் உருவாக்கப்பட்ட ஒரு வசதியாகும்.
- S4OM ஆனது சுற்றுப்பாதையில் நிகழும் மோதல், கூறுகளாகப் பிரிதல், வளி மண்டலத்தில் மீண்டும் நுழைவதில் உள்ள அபாயம், விண்வெளி அடிப்படையிலான மூலோபாயத் தகவல், அபாயகரமான சிறுகோள்கள் மற்றும் விண்வெளி சார்ந்த உத்தி சார் தகவல்கள், ஆபத்து மிக்க குறுங்கோள்கள், விண்வெளியின் வானிலை முன்னறிவிப்பு ஆகியவை குறித்த உடனடி, துல்லியமான மற்றும் திறன்மிக்கத் தகவலைக் கொண்டு வரும்.

## செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான மாண்டரின் மொழிபெயர்ப்பு



- இதைப் பயன்படுத்தி, மெய்க் கட்டுப்பாட்டு எல்லைப் பகுதியில் ரோந்து செல்லும் இந்திய வீரர்கள் மாண்டரின் மொழியைப் புரிந்து கொண்டு உடனடியாக பதிலளிக்க முடியும்.
- இது இந்தியத் தொடக்க நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட 600 கிராம் எடை கொண்ட செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான ஒரு சாதனமாகும்.
- இது ஒரு இணைய இணைப்பில்லாத முறையில் இயங்கும் செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான ஒரு கையடக்கமான மொழிபெயர்ப்பு அமைப்பு ஆகும்.
- இது 5 முதல் 10 அடி வரையிலான வரம்புடன் கூடிய இருவழி தகவல் தொடர்பு அமைப்பாகும்.
- இது மாண்டரின் மொழியை ஆங்கிலத்திற்கு மாற்றுகிறது.

## இந்தியாவின் முதல் தனித்தன்மை வாய்ந்த இரத்த வகை


- குஜராத்தைச் சேர்ந்த இதய நோயாளியான ஒருவருக்கு EMM நெகட்டிவ் இரத்த வகை இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.
- இது இந்தியாவின் முதல் மற்றும் உலகின் பத்தாவது தனித்தன்மை வாய்ந்த இரத்தக் வகையாகும்.
- இதனை 'A', 'B', 'O' அல்லது 'AB' ஆகிய தற்போதைய வகையில் ஒன்றாக வகைப்படுத்த முடியாது.
- மனித உடலில் நான்கு வகையான இரத்த வகைகள்உள்ளன.
- மேலும் இது A, B, O, Rh மற்றும் Duffy போன்ற 42 வகையான அமைப்புகளைக் கொண்டு உள்ளது.
- EMM அதிகமாக இருக்கும் 375 வகையான ஆன்டிஜென்களும் (எதிர்ப்புத் திறன் ஊக்கி) உள்ளன.
- இருப்பினும், இரத்தத்தில் அதிக EMM ஆன்டிஜென் இல்லாத 10 பேர் மட்டுமே உலகில் உள்ளனர்.
- இது அவர்களைச் சராசரி மனிதர்களிடமிருந்து வேறுபடுத்துகிறது.
- இத்தகைய அரிதான இரத்தக் வகை உள்ளவர்கள் தங்கள் இரத்தத்தை யாருக்கும் தானம் செய்யவோ, யாரிடமிருந்தும் பெறவோ முடியாது.

| Blood Group | Gives to these groups | Receives from these groups |
|---|---|---|
| O- | All | O- only |
| O+ | AB+, A+, B+, O+ | O- and O+ |
| A- | AB-, AB+, A+, A- | O- and A- |
| A+ | AB+ and A+ | O-, O+, A-, A+ |
| B- | B-, B+, AB-, AB+ | O- and B- |
| B+ | B+ and AB+ | O-, O+, B-, B+ |
| AB- | AB- and AB+ | O-, A-, B-, AB- |
| AB+ | AB+ only | All |

## சிறுகோள் 2022 KY4


- 2022 KY4 என்ற குறுங்கோளானது ஜூலை 17 ஆம் தேதியன்று பூமிக்கு மிக அருகில் வந்தது.
- 2022 KY4 விண்வெளிப் பாறையானது கிட்டத்தட்ட 50 அடுக்குமாடிக் கட்டிடத்தைப் போல பெரிய அளவிலானதாகும்.
- சுமார் 290 அடி அகலம் கொண்ட இந்தக் குறுங்கோள் ஆனது 100 ஆண்டுகளுக்குப் பிறகு பூமியை நெருங்கியது.

- 2022 KY4 என்ற குறுங்கோளின் மதிப்பிடப்பட்ட வேகம் மணிக்கு 16,900 மைல்கள் ஆகும்.
- இது இதற்கு முன்பு 1959 மற்றும் 1948 ஆம் ஆண்டுகளில் பூமிக்கு மிக அருகில் வந்தது.
- இந்தக் குறுங்கோள் ஆனது 2048 ஆம் ஆண்டு மே மாதம் வரை மீண்டும் பூமிக்கு அருகில் வராது.




## தொலைதூரக் கிரகத்தில் நீர் இருப்பது குறித்த கண்டுபிடிப்பு

- ஜேம்ஸ் வெப் தொலைநோக்கியானது தொலைதூரத்தில் உள்ள ஒரு கிரகத்தில் நீரைக் கண்டறிய உதவும்.
- இந்த தொலைநோக்கியானது மற்ற நட்சத்திரத் திரள்கள் முழுவதும் உள்ள கோள்களின் மீதான வளிமண்டலங்களின் வேதியியல் அமைப்பை மதிப்பிடுவதில் ஆராய்ச்சியாளர்களுக்கு உதவும்.
- இது அகச்சிவப்பு வானியல் ஆய்வுகளை மேற்கொள்ளச் செய்வதற்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டுள்ள ஒரு விண்வெளித் தொலைநோக்கியாகும்.
- இது விண்வெளியில் உள்ள மிகப்பெரிய ஒளியியல் தொலைநோக்கி ஆகும்.
- இதன் மேம்படுத்தப்பட்ட உணர்திறன் மற்றும் அகச்சிவப்பு தெளிவுத்திறன் ஆனது, மிகவும் பழைய, தொலைதூர அல்லது மங்கலானப் பொருட்களையும் கூட ஹப்பிள் விண்வெளித் தொலைநோக்கி மூலம் காண்பதற்கு வழிவகை செய்கிறது.




## திட்டம் 17A - ரேடாருக்குப் புலப்படாத போர்க் கப்பல்

- மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர், 'துனகிரி' என்ற நான்காவது P17A ரேடாருக்குப் புலப்படாத போர்க் கப்பலினைச் சமீபத்தில் அறிமுகப்படுத்தினார்.
- P-17A வகுப்பு என்பது P-17 ஷிவாலிக் வகுப்பைப் பின்பற்றி உருவாக்கப்பட்ட மேம்படுத்தப் பட்ட ரேடாருக்குப் புலப்படாத அம்சங்கள் மற்றும் மேம்பட்ட ஆயுதங்களைக் கொண்ட கப்பலாகும்.
- P17A திட்டத்தின் முதல் இரண்டு கப்பல்கள் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டில் அறிமுகப் படுத்தப் பட்டன.
- மூன்றாவது கப்பலான உதயகிரி இந்த ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

## உலகின் அதிவேக வரைகலைக்கான சக்தி வாய்ந்த நேரடி அணுகல் நினைவகச் சில்லுகள்


- சாம்சங் நிறுவனமானது அதிவேகமான மற்றும் மேம்படுத்தப்பட்ட ஆற்றல் திறன் கொண்ட ஒரு புதிய வரைகலைக்கான சக்தி வாய்ந்த நேரடி அணுகல் நினைவகச் சில்லுகளை உருவாக்கியுள்ளது.
- புதிய DRAM சில்லுகள் வினாடிக்கு 1.1 டெராபைட் வேகத்தில் வரைகலை படங்களைச் செயலாக்கும் திறன் கொண்டது.
- சாம்சங், இதனை உலகிலேயே அதிவேகமானது என்றும், ஒரு நொடியில் 275 முழு உயர்தெளிவு கொண்டத் திரைப்படங்களைச் செயல்முறையாக்குவதற்கு ஈடான ஒரு திறன் உடையது என்றும் குறிப்பிடுகிறது.
- வரைகலை DRAM சில்லுகளானது அதிக ஆற்றல் கொண்ட முப்பரிமாண விளையாட்டுச் செயலிகள், கணினி அல்லது கணினிக் குறிப்பேடுகள் அல்லது உயர் தெளிவுத் திறனுடன் கூடிய ஒளிப்படக் காட்சிகளைக் காட்சிப்படுத்தும் சாதனங்கள் ஆகியவற்றில் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன.




## புதிய செயற்கை பெப்டைடுகள்

- இந்திய ஆராய்ச்சியாளர்கள் SARS-CoV-2 வைரஸினைச் செயலிழக்கச் செய்வதற்கான புதிய முறையை உருவாக்கியுள்ளனர்.
- புதிய செயற்கை பெப்டைடுகள் SARS-CoV-2 வைரஸ் செல்களுக்குள் நுழைவதைத் தடுக்கும்.

- மேலும், உயிரணுக்களைத் தாக்கும் திறனைக் குறைப்பதற்காக வைரஸ் துகள்களை இவை ஒன்றாக இணைக்கிறது.
- இந்தப் புதுமையான நுட்பத்தின் உதவியுடன், SARS-CoV-2 போன்ற வைரஸ்கள் செயலற்ற நிலையில் வைக்கப்பட்டு, பெப்டைட் வைரஸ் தடுப்பு மருந்துகளின் புதிய உருவாக்கத்திற்கு வழி வகுக்கப்படும்.




## வர்ரோவா உண்ணி மூலம் பரவும் பிளேக் நோய்

- ஆஸ்திரேலியா அதன் தென்கிழக்குப் பகுதியில் பேரழிவினை உண்டாக்குகின்ற ஒட்டுண்ணிகளின் பரவலைத் தடுக்கும் ஒரு முயற்சியில் மில்லியன் கணக்கான தேனீக்களைக் கொன்றுள்ளது.
- ஆஸ்திரேலியாவில் உள்ள தேனீக்கள் இனமானது, சமீபகாலத்தில் கொடிய வர்ரோவா உண்ணிகள் அதிகளவில் பரவி வருவதால் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது.
- இது சிட்னிக்கு அருகிலுள்ள துறைமுகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட, ஒரு எள் விதை அளவிலான ஒட்டுண்ணியாகும்.
- இவை தேனீக்களைத் தாக்கி அவற்றைக் கொன்று வருகின்றன.
- அவை தேனீக்களின் முழு இனங்களையும் அழித்துவிடும் அளவிற்கு அபாயமானவை.




## மனிதர்கள் பயணிக்கும் வகையிலான இந்தியாவின் முதல் ஆளில்லா விமானம்

- இந்தியாவில் முதல் முறையாக மனிதர்களை ஏற்றிச் செல்லக் கூடிய ஓட்டுநர் இல்லாத ஆளில்லா விமானமானது புது டெல்லியில் அறிமுகப் படுத்தப் பட்டது.

- இந்த 'வருணா' என்ற ஆளில்லா விமானம் ஆனது, சாகர் டிஃபென்ஸ் இஞ்ஜினியரிங் என்ற தொடக்க நிறுவனத்தினால் வடிவமைக்கப் பட்டு உருவாக்கப் பட்டுள்ளது.
- இது ஒரு முறையில் ஒரு நபரினை ஏற்றிச் செல்லும் திறன் கொண்டது.
- இது 130 கிலோ எடையுடன் 25 கி.மீ. தொலைவு வரை சுமந்து, 25-33 நிமிடங்கள் வரை தாக்குப் பிடிக்கும் திறன் கொண்டது.



## நுண்ணுயிர் எதிர்ப்புத் தடுப்பூசிகள்




- நுண்ணுயிர் எதிர்ப்புத் திறன் கொண்ட பாக்டீரிய நோய்க் கிருமிகளால் ஏற்படும் தொற்று நோய்களைத் தடுப்பதற்காக வேண்டி தற்போது உருவாக்கப்பட்டு வரும் தடுப்பூசிகளின் மீதான தகவல் பற்றிய முதல் அறிக்கையை உலக சுகாதார அமைப்பு வெளியிட்டது.
- எதிர்ப்புத் திறன் கொண்ட பாக்டீரியத் தொற்றுகள் ஆண்டிற்குக் கிட்டத்தட்ட 4.95 மில்லியன் உயிரிழப்புகளை ஏற்படுத்துகின்றன.
- அதில், 1.27 மில்லியன் உயிரிழப்புகளுக்கு நேரடிக் காரணம் நுண்ணுயிர் எதிர்ப்புத் திறன் கொண்ட பாக்டீரியத் தொற்றுகளாகும்.
- நான்கு பாக்டீரியா நோய்க் கிருமிகளுக்கு எதிராக ஏற்கனவே தடுப்பூசிகள் உள்ளன.
    - நிமோனியா நோய் (ஸ்ட்ரெப்டோகாக்கஸ் நிமோனியா)

- ஹிப் (ஹீமோபிலஸ் இன்ஃப்ளுயன்ஸா B வகை )
- காசநோய் (மைக்கோபாக்டீரியம் காசநோய்) மற்றும்
- டைபாய்டு காய்ச்சல் (சால்மோனெல்லா டைஃபி).

❖ காசநோய் தடுப்பூசி தவிர, மீதமுள்ள மூன்று தடுப்பூசிகளும் திறன்மிக்கவை ஆகும்.

## "வென்ஷியன்" விண்வெளி நிலையப் பெட்டகங்கள்

❖ சீனா தனது புதிய விண்வெளி நிலையத்தின் கட்டமைப்பினை நிறைவு செய்வதற்குத் தேவையான மூன்று பெட்டகங்களில் இரண்டாவதுப் பெட்டகமான வென்ஷியனை விண்ணில் ஏவியது.

❖ இது சீனாவின் இலட்சிய நோக்கம் கொண்ட விண்வெளித் திட்டத்தில் மேற்கொள்ளப் பட்ட மிக சமீபத்திய முன்னேற்றமாகும்.

❖ 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், சீன மொழியில் "தேவலோக அரண்மனை" என்று பொருள்படும் தியாங்காங் விண்வெளி நிலையத்தின் முதன்மைப் பெட்டகத்தினைப் பெய்ஜிங் விண்ணில் ஏவியது.


❖ தியாங்காங், குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் வரை செயல்படும்.




## பேரண்டத்தின் பழமையான பால்வெளி மண்டலம்


❖ உலகின் மிகவும் சக்திவாய்ந்த ஒரு தொலைநோக்கியான ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலை நோக்கி பேரண்டத்தின் மிகப் பழமையான பால்வெளி மண்டலத்தினைக் கண்டுபிடித்துள்ளது.

- ❖ பேரண்டமானது பால்வெளி மண்டலம் சார்ந்த கூறுகளின் அடிப்படையில் ஓர் ஆரம்ப நிலையாகக் கருதப் படுகின்ற, வெறும் 300 மில்லியன் ஆண்டுகள் பழமையானதாக இருந்த போது இருந்த அண்டங்களை இந்தத் தொலைநோக்கி கண்டறிந்துள்ளது.
- ❖ இது பேரண்டத்தின் GLASS-z11 மற்றும் GLASS-z13 ஆகிய இரு பழமையானப் பால்வெளி மண்டலங்களைக் கண்டறிந்தது.
- ❖ நமது பால்வெளி மண்டலம் உருப்பெற்ற தருணமான பெருவெடிப்பிற்குப் பிறகான முதல் சில நூறு மில்லியன் ஆண்டுகளில் அங்கு இடம் பெற்றிருப்பதாக உறுதி செய்யப் பட்ட ஒரே அண்டம் GNz11 ஆகும்.
- ❖ GLASS-z13 அண்டத்திலிருந்து வெளிவரும் ஒளியானது விண்கலத்தின் கண்ணாடிகளில் மோதுவதற்குச் சுமார் 13.4 பில்லியன் ஆண்டுகள் எடுத்துக் கொண்டுள்ளது.
- ❖ இது பூமியிலிருந்துச் சுமார் 15,00,000 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.




## வானவில் நிறத்திலான கோள்

- ❖ குள்ளக் கோளான புளூட்டோவின் வானவில் வண்ணப் படத்தை நாசா பகிர்ந்துள்ளது.
- ❖ இப்புகைப்படங்கள் அந்தக் கிரகத்தின் பல்வேறு பகுதிகளைப் பல்வேறு பிரகாசமான வண்ணங்களில் காட்டுகின்றன.



- புளூட்டோ இயற்கையாக இந்த அளவிற்கு வண்ணமயமாகத் தெரியாது.
- இந்தப் படமானது உண்மையில், அந்தக் கோளின் தனித்துவமானப் பகுதிகளை முன்னிலைப் படுத்துவதற்காக நியூ ஹாரிசன்ஸ் கலத்தின் அறிவியலாளர்களால் உருவாக்கப் பட்டது.
- புளூட்டோ சூரியக் குடும்பத்தின் குய்ப்பர் மண்டலத்தில் அமைந்துள்ளது.
- இது நெப்டியூனின் சுற்றுப்பாதைக்கு அப்பால் உள்ள பனிக்கட்டிகளால் சூழப்பட்ட கோள்கள் அடங்கிய முப்பரிமாண வளைய வடிவிலான ஒரு பகுதியாகும்.

### விரைவாகச் செயல்படும் போர் வாகனம்

- டாடா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் நிறுவனமானது, உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட விரைவாகச் செயல்படும் போர் வாகனங்களை இந்திய இராணுவத்திடம் வழங்கி உள்ளது.
- இந்த ஆயுதமேந்திய வாகனங்கள் அனைத்து வானிலை மற்றும் நிலப்பரப்புச் சூழல்களிலும் போரிடுவதற்கான்த் திறன்களுடன் நாட்டின் பாதுகாப்புத் திறனை அதிகரிப்பதோடு, இயக்கத்தில் உள்ள போதே நாட்டிற்கானப் பாதுகாப்பை வழங்கும்.



## சுற்றுச்சூழல் செய்திகள்

### புதிய உயிர்க்கோளக் காப்பகங்கள்

- யுனெஸ்கோ அமைப்பானது 9 நாடுகளில் உள்ள 11 புதிய உயிர்க் கோளக் காப்பக மையங்களுக்கு அங்கீகாரம் அளித்துள்ளது.
- இது முதல் முறையாக சாட், ஜார்ஜியா மற்றும் ஜாம்பியா ஆகிய மூன்று நாடுகளை உட்சேர்த்துள்ளது.
- ஏற்கனவே இதில் சேர்க்கப்பட்டுள்ள ஸ்பெயினில் உள்ள இரண்டு உயிர்க்கோளக் காப்பகங்களும் இதில் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளன.
- புதியக் காப்பகங்கள் இணைக்கப்பட்டதுடன், உலக உயிர்க்கோளக் காப்பகங்களின் கட்டமைப்பானது 134 நாடுகளில் மொத்தம் 738 தளங்களைக் கொண்டுள்ளது.

- சர்வதேச ஒருங்கிணைப்பு சபையின் 34வது அமர்வில் இந்தக் காப்பகங்களை இணைப்பது பற்றிய முடிவு மேற்கொள்ளப்பட்டது.
- இது யுனெஸ்கோவின் மனிதனும் உயிர்க்கோளமும் திட்டத்தின் ஒரு ஆளுகைக் குழு ஆகும்.
- இது யுனெஸ்கோ அமைப்பின் உறுப்பினர் நாடுகளின் 34 பிரதிநிதிகளை உள்ளடக்கி உள்ளது.
- இந்தச் சபையின் சந்திப்பானது ஜூன் 13 முதல் 17 ஆம் தேதி வரை பாரீஸில் உள்ள யுனெஸ்கோவின் தலைமையகத்தில் நடைபெற்றது.
- மனிதனும் உயிர்க்கோளமும் திட்டமானது நிலையான மேம்பாடு என்றக் கருத்தினை முன் வைத்த ஒரு முன்னோடித் திட்டமாகும்.
- இது 1971 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ அமைப்பினால் அரசுகளுக்கிடையேயான ஒரு அறிவியல் திட்டமாக நிறுவப்பட்டது.

| |
|---|
| Sunshine Coast Biosphere Reserve (Australia) |
| Doumba-Rey Biosphere Reserve (Cameroon) |
| Sena Oura Biosphere Reserve (Chad) |
| Dedoplistskaro Biosphere Reserve (Georgia) |
| Three Alazani Rivers Biosphere Reserve (Georgia) |
| Burabay Biosphere Reserve (Kazakhstan) |
| Markakol Biosphere Reserve (Kazakhstan) |
| Khuvsgul Lake Biosphere Reserve (Mongolia) |
| Harrat Uwayrid Biosphere Reserve (Saudi Arabia) |
| Kafue Flats Biosphere Reserve (Zambia) |
| Chimanimani Biosphere reserve (Zimbabwe) |

## விலங்கு இனங்களின் பட்டியல்

- 2021 ஆம் ஆண்டில், இந்தியாவின் விலங்கினங்களின் தரவுத் தளத்தில் 540 புதிய உயிரினங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.
- இது ஒட்டுமொத்த விலங்கு இனங்களின் எண்ணிக்கையை 1,03,258 ஆக உயர்த்தி உள்ளது.
- மேலும், 2021 ஆம் ஆண்டில், இந்தியத் தாவரங்களில் 315 இனங்கள் சேர்க்கப்பட்டன.
- இது நாட்டிலுள்ள மொத்த மலர் வகைகளின் எண்ணிக்கையை 55,048 ஆக உயர்த்தி உள்ளது.
- 540 விலங்கினங்களில், 406 இனங்கள் புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்டதோடு, 134 இனங்கள் இந்தியாவில் புதிதாகப் பதிவு செய்யப் பட்டுள்ளன.
- மேலும் 2021 ஆம் ஆண்டில் பதின்மூன்று புதிய இனங்கள் கண்டறியப்பட்டன.

- ஒரு பாலூட்டி இனம், 35 ஊர்வன இனங்கள் மற்றும் 19 வகையான மீன்கள் புதிதாக அடையாளம் காணப்பட்ட இனங்களில் அடங்கும்.
- இந்தியா 1.03 லட்சம் இனங்களுடன் உலகின் மொத்த விலங்கு வகைகளில் 6.1 சதவீதத்தினைக் கொண்டுள்ளது.

## புதிய கண்டுபிடிப்புகள் 2021

- இந்திய விலங்கியல் ஆய்வு அமைப்பானது 2021 ஆம் ஆண்டில் 68% விலங்கினங்களைக் கண்டுபிடித்துள்ளது.
- அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் இருந்து கண்டறியப்பட்ட குரோசிடுரா நார்கொண்டமிகா என்ற ஒரு வெள்ளை-பல் மூஞ்சூறு, புதிதாக அடையாளம் காணப் பட்ட ஒரு பாலூட்டி இனமாகும்.
- விட்டேக்கரின் பூனைப் பாம்பு என்றும் அழைக்கப்படும் பொய்கா விட்டகேரி, 2021 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு குறிப்பிடத்தக்க ஊர்வன இனமாகும்.
- இது தமிழ்நாட்டின் மேற்கு தொடர்ச்சி மலையில் கண்டறியப்பட்டது.
- ஹைமனோப்டெரா எனப்படும் பூச்சிகளின் பட்டியல் மிகவும் புதிய கண்டுபிடிப்புகளுக்கு ஆதாரமாக இருந்தது.
- இது ஒரு புதிய இனம் உட்பட 80 இனங்களை உள்ளடக்கியது.
- ஹைமனோப்டெரா குழுவில் மரபூச்சிகள், குளவிகள், தேனீக்கள் மற்றும் எறும்புகள் அடங்கும்.
- இந்திய தாவரவியல் ஆய்வின்படி, மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் வடகிழக்குப் பகுதிகள் போன்ற பகுதிகளில் 28% இனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- மாநில வாரியான பகுப்பாய்வில், கேரளாவில் 51 குழுமங்கள் உட்பட அதிக எண்ணிக்கையிலான கண்டுபிடிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.
- அதைத் தொடர்ந்து மகாராஷ்டிரா மற்றும் அருணாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் உள்ளன.

## உலகின் மிகப்பெரிய நீராம்பல்



- விக்டோரியா பொலிவியானா என்ற இனமானது உலகின் மிகப்பெரிய நீராம்பல் ஆகும்.
- இது பொதுவாக வடகிழக்குப் பொலிவியாவில் உள்ள நன்னீர் ஆறுகள், வெள்ளப் பெருக்கு மற்றும் குளங்களில் வளர்கிறது.
- இது விக்டோரியா தாவர இனத்தினைச் சேர்ந்த மூன்றாவது இனமாகும்.
- விக்டோரியா அமேசோனிகா மற்றும் விக்டோரியா குரூசியானா ஆகியவை நீராம்பல்களின் மற்ற இரண்டு இனங்கள் ஆகும்.

## யுனெஸ்கோ குழுவின் உறுப்பினர் பதவி

- வியத்தகு கலாச்சாரப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான யுனெஸ்கோவின் 2003 ஆம் ஆண்டு உடன்படிக்கையின் அரசுகளுக்கிடையேயான குழுவின் உறுப்பினராக இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- 2003 ஆம் ஆண்டு உடன்படிக்கையின் அரசுகளுக்கிடையேயான குழுவானது 24 உறுப்பினர்களை உள்ளடக்கியது.
- இந்தியா 2022 முதல் 2026 ஆம் ஆண்டு வரையில் இதன் உறுப்பினராக இருக்கும்.
- இதற்கு முன்னதாக, இந்தியா 2006-2010 மற்றும் 2014-2018 ஆகிய ஆண்டுகளில் இரண்டு முறை இந்தக் குழுவில் உறுப்பினராக இருந்தது.
- "வியத்தகு கலாச்சாரப் பாரம்பரியத்தைப் பாதுகாக்கச் செய்வதற்கான அரசுகளுக்கு இடையேயான குழுவின்" முக்கியச் செயல்பாடுகள் பின்வருமாறு
  - உடன்படிக்கையின் நோக்கங்களை ஊக்குவித்தல்
  - சிறந்த நடைமுறைகள் பற்றிய வழிகாட்டுதல்களை வழங்குதல்
  - வியத்தகு கலாச்சாரப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தல்.

## சிவப்புப் பாண்டா கரடிகள் அறிமுகம்

- மேற்கு வங்காளத்தின் பத்மஜா நாயுடு இமயமலை விலங்கியல் பூங்கா நிர்வாகமானது சுமார் ஐந்து ஆண்டுகளில் 20 சிவப்பு நிறப் பாண்டா கரடிகளை காடுகளுக்குள் விடுவிக்கும் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- மேற்கு வங்காளத்தில் உள்ள மிக அதிகளவில் பாதுகாக்கப்பட்டப் பகுதியான சிங்களிலா தேசியப் பூங்காவானது விரைவில் புதிய கரடி இனங்களைப் பெறவுள்ளது.
- இது மேற்கு வங்காளத்தின் டார்ஜிலிங் மாவட்டத்தில் உள்ள சிங்காலிலா முகட்டில் அமைந்துள்ளது.
- 1994 ஆம் ஆண்டில், இது சிவப்புப் பாண்டா கரடிகளுக்கான முக்கிய வன வாழ்விடமாக அறிவிக்கப் பட்டது.
- பெரிய பாண்டா கரடி மற்றும் சிவப்புப் பாண்டா கரடி என இரண்டு வகையான பாண்டா கரடிகள் உலகம் முழுவதும் காணப்படுகின்றன.
- சூழலியல் மாற்றத்திற்கான ஒரு குறிகாட்டி இனமாகவும் அவை கருதப்படுகின்றன.
- இந்தியாவில், இமயமலை சிவப்பு நிறப் பாண்டா மற்றும் சீன சிவப்பு நிறப் பாண்டா என

பாண்டா கரடிகளின் இரண்டு துணையினங்கள் காணப்படுகின்றன.

- சிவப்பு நிறப் பாண்டா கரடிகள் இந்தியா, பூடான், நேபாளம், வடக்கு மியான்மர் மற்றும் தெற்கு சீனா ஆகிய காடுகளில் பரவிக் காணப்படுகின்றன.
- சிவப்பு நிறப் பாண்டா கரடிகள் IUCN அமைப்பின் சிவப்பு நிறப் பட்டியலில் "அருகி வரும் இனங்கள்" பிரிவில் வகைப்படுத்தப் பட்டுள்ளன.
- பெரிய பாண்டா கரடிகள் IUCN அமைப்பின் சிவப்பு நிறப் பட்டியலில் பாதிக்கப்படக் கூடிய நிலையில் உள்ள இனங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.




## ஈஸ்கன்சர் கோப்ரென்சிஸ்




- ஈஸ்கான்சர் கோப்ரென்சிஸின் ஒரு புதிய படிமமானது நியூ மெக்சிகோ நகரில் கண்டு பிடிக்கப் பட்டது.
- ஈஸ்கன்சர் கோப்ரென்சிஸ் என்பது கார்போனிஃபெரஸ் காலத்தின் பென்சில்வேனிய உட்காலக் கட்டத்தினைச் சேர்ந்த ஊர்வன இனங்கள் ஆகும்.
- இது 305 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, இன்றைய நியூ மெக்சிகோவைச் சுற்றி உள்ள பகுதியில் வாழ்ந்த இனமாகும்.
- இந்த இனங்கள் அழிந்துபோன வாரனோபிடே என்ற ஊர்வன குடும்பத்தினைச் சேர்ந்தது.
- அவை உடும்புகளின் வடிவமைப்பினைப் போலவே இருந்தன.

## வன உயிரினங்களை நிலையான முறையில் பயன்படுத்துதல்

- பல்லுயிர்ப் பெருக்கம் மற்றும் சுற்றுச்சூழல் சேவைகள் (IPBES) பற்றிய அரசுகளுக்கு இடையேயான அறிவியல்-கொள்கை தளம் ஆனது சமீபத்தில் ஒரு அறிக்கையை வெளியிட்டது.
- உலகளாவிய பல்லுயிர்ப் பெருக்க நெருக்கடிகள் அதிகரித்து வருவதனால், ஒரு மில்லியன் வகையான தாவரங்கள் மற்றும் விலங்குகள் அழிவை எதிர்கொள்வதாக இந்த அறிக்கை கண்டறிந்துள்ளது.
- இந்த மதிப்பீடு ஆனது வன உயிரினங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற மீன் பிடித்தல், ஒட்டு மொத்தமாக மீன் பிடித்தல், மரம் வெட்டுதல், நிலப்பரப்பு விலங்கு வேட்டை ஆகிய ஐந்து வகை நடைமுறைகளைப் பட்டியலிட்டுள்ளது.
- உலகின் ஏழ்மையான மக்கள்தொகையில் 70 சதவீதத்தினர் நேரடியாக வன உயிரினங்களைச் சார்ந்துள்ளனர்.
- 20 சதவீதத்தினர் வனத் தாவரங்கள், பாசிகள் மற்றும் பூஞ்சைகளில் இருந்து உணவினைப் பெறுகின்றனர்.
- சுமார் 34% ஆழ்கடல் மீன்கள் அதிகமாக பிடிக்கப்படுவதோடு உயிரியல் ரீதியாக உள்ள நிலையான மட்டத்தில் வாழும் 66% மீன்கள் பிடிக்கப் பட்டு விட்டன.
- மதிப்பிடப்பட்ட 12% வன மரங்களின் வாழ்நாளானது நீடித்து நிலைக்க முடியாத அளவிற்கு மரங்களை வெட்டுவதால் அச்சுறுத்தல் நிலையில் உள்ளன.
- வன உயிரினங்களின் சட்டவிரோத வர்த்தகமானது அனைத்து வகையிலானச் சட்ட விரோத வர்த்தகத்திலும் மூன்றாவது பெரிய வர்த்தகமாக உள்ளது.

## ஓசோன் துளை 2022

- அறிவியலாளர்கள் கீழ் படை மண்டலத்தில் ஒரு புதிய பெரிய ஓசோன் துளையை கண்டுபிடித்துள்ளனர்.
- இது அண்டார்டிகாவின் மேல் இருந்த துளையை விட ஏழு மடங்கு பெரியதாகும்.
- இந்தப் புதிய ஓசோன் துளையானது வெப்ப மண்டலத்தின் மேல் பகுதியில் கண்டு பிடிக்கப் பட்டது.



- இது கடக ரேகைக்கும் மகர ரேகைக்கும் இடைப்பட்ட ஒரு பகுதியாகும்.
- இது 30 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வருவதாகக் கூறப்படுகிறது.
- ஓசோன் அடுக்கு என்பது பூமியின் படைமண்டலத்தில் உள்ள ஒரு வாயு அடுக்கு ஆகும்.
- இது புவியைச் சூழ்ந்து சூரியனிடமிருந்து வரும் தீங்கு விளைவிக்கும் புற ஊதாக் கதிர்களில் இருந்து அதனைப் பாதுகாக்கிறது.
- இது பொதுவாகப் பூமியிலிருந்து 15-35 கிலோமீட்டர் உயரத்தில் உள்ள படை மண்டலத்தின் கீழ் பகுதியில் காணப்படுகிறது.

## கார்பன் நடுநிலையைக் கொண்ட முதல் விமான நிலையம்

- லே விமான நிலையம் கார்பன் நடுநிலை கொண்ட ஒரு விமான நிலையமாக கட்டமைக்கப் படுகிறது.
- இந்தியாவில் இது போன்ற விமான நிலையம் கட்டமைக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- புதிய விமான நிலைய முனையக் கட்டிடத்தில் வெப்பம் மற்றும் குளிரூட்டும் வசதிகளை வழங்குவதற்காக சூரியசக்தி ஒளி மின்னழுத்த ஆலையுடன் ஒரு "புவி வெப்ப அமைப்பு" வசதியும் இணைத்து இயக்கப்படும்.
- இந்த அமைப்பு காற்று மற்றும் தரைப் பகுதிக்கு இடையில் வெப்பத்தைப் பரிமாறிக் கொள்வதன் மூலம் செயல்படுகிறது.
- அதன் வெப்ப விசையியக்கக் குழாய்கள் பரப்புகளைச் சூடாக்குவதற்கும் குளிரூட்டச் செய்வதற்கும், அத்துடன் தண்ணீரைச் சூடாக்குவதற்கும் பயன்படுத்தப் படுகின்றன.

## சிறுத்தை மறு அறிமுகம்




- இந்தியாவில் உள்ள முந்தைய சிறுத்தை வாழ்விடப் பகுதியில் சிறுத்தைகளை மீண்டும் அறிமுகப் படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்தியா மற்றும் நமீபியா ஆகிய நாடுகள் கையெழுத்திட்டன.
- 8 சிறுத்தைகள் (4 ஆண் சிறுத்தை மற்றும் 4 பெண் சிறுத்தை) 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இந்தியாவை வந்தடையும்.
- அவை மத்தியப் பிரதேசத்தின் குனோ தேசியப் பூங்காவில் மீண்டும் அறிமுகப் படுத்தப் படும்.


- இவை தற்போது இந்தியாவில் அழிந்து விட்ட இனமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- இந்தியா ஒவ்வோர் ஆண்டும் 8 முதல் 10 சிறுத்தைகளை அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளது.
- அடுத்த ஐந்தாண்டுகளில், நமீபியா, தென்னாப்பிரிக்கா மற்றும் பிற ஆப்பிரிக்க நாடுகளில் இருந்து மொத்தம் 50 சிறுத்தைகள் இந்தியாவிற்கு இடம் மாற்றப்படும்.

## 13வது பீட்டர்ஸ்பர்க் பருவநிலை குறித்த பேச்சுவார்த்தை

- 13வது பீட்டர்ஸ்பர்க் காலநிலை உரையாடல் ஜெர்மனியின் பெர்லின் நகரில் நடந்தது.
- இந்த இரண்டு நாட்கள் அளவிலான முறைசாரா அமைச்சர்கள் கூட்டமானது ஜெர்மனி மற்றும் எகிப்து ஆகிய நாடுகளின் தலைமையில் நடைபெறுகிறது.
- இவை இந்த ஆண்டிற்கான வருடாந்திரப் பருவநிலைச் சந்திப்பினை (COP-27) ஏற்பாடு செய்யும் நாடுகளாகும்.
- இந்த முறைசாரா அமைச்சர்கள் சந்திப்பானது பருவநிலை நடவடிக்கையை மேம்படுத்தச் செய்வதை நோக்கமாகக் கொண்டு, ஒரு ஒருமித்த கருத்தை உருவாக்கச் செய்வதற்கும், பல வேறுபாடுகளைத் தீர்க்கச் செய்வதற்கும் ஒரு அவசியமான அரசியல் வழிகாட்டுதலை வழங்கவும் முன்மொழிதலை வழங்குகிறது.

## வெப்ப அலை

- ஐரோப்பாவில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு ஏற்பட்ட ஒரு வெப்ப அலையின் தாக்கத்தினால் ஸ்பெயின் மற்றும் போர்ச்சுகல் ஆகிய நாடுகளில் 2,000க்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்துள்ளனர்.



- மேற்கு ஐரோப்பாவின் பெரும்பகுதியைப் பாதித்த வெப்ப அலையானது, ஸ்பெயின் நாட்டினை வாட்டி வதைத்தது.
- இது அப்பகுதியின் வெப்பநிலையை 45 டிகிரி செல்சியஸ் (113 டிகிரி பாரன்ஹீட்) வரை உயர்த்தியது.
- 1975 ஆம் ஆண்டில் நவீனப் பதிவு முறைகள் தொடங்கப்பட்டதிலிருந்து, புவியியல் பரவல் மற்றும் கால அளவு அடிப்படையில் இது மூன்றாவது மிகத் தீவிரமான வெப்ப அலையாகும்.
- இதற்கு முன்னதாக, 2015 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலும் (26 நாட்கள்) 2003 ஆகஸ்ட் மாதத்திலும் (16 நாட்கள்) ஏற்பட்ட இரண்டு வெப்ப அலைகள் மட்டுமே நீண்ட காலம் வரை நீடித்தன.

## உலகின் மிக வயதான பெரிய ஆண் பாண்டா

- ஹாங்காங் உயிரியல் பூங்காவில் வைக்கப்பட்டிருந்த உலகின் மிக வயதான இராட்சத வகை ஆண் பாண்டா தனது 35 வயதில் இறந்தது.
- ஆன் ஆன் என்று அழைக்கப்படும் இந்த பாண்டா, அதன் 35 வயதில் கருணைக் கொலை செய்யப்பட்டது.
- இது ஒரு மனிதன் 105 வரை உயிர் வாழ்வதற்குச் சமமாகும்.
- ஆன் என்ற இந்த பாண்டாவானது, அதன் இணையான ஜியா ஜியாவுடன் சேர்ந்து, 1999 ஆம் ஆண்டில் சீனாவின் மத்திய அரசினால் ஹாங்காங்கிற்குப் பரிசாக வழங்கப் பட்டது.
- இந்தப் பாண்டாவின் பெண் துணையான, ஜியா ஜியா, 2016 ஆம் ஆண்டில் அதன் 38 வயதில் இறந்தது.
- உயிரியல் பூங்காவில் வைக்கப்பட்டிருந்த மிக வயதான பெண் பாண்டா என்று இது குறிப்பிடப்பட்டது.
- காடுகளில் வாழும் போது இந்த உயிரினங்களின் சராசரி ஆயுட்காலம் 20 ஆண்டுகளுக்கும் குறைவு என கூறப்படுகிறது.



## முதல் அபாய வானிலை எச்சரிக்கை

- இங்கிலாந்தின் வானிலை ஆய்வு மையமானது, இலண்டன் உட்பட இங்கிலாந்தின் சில பகுதிகளுக்கு முதன்முறையாக ஒரு அபாயகர தீவிர வெப்பநிலை எச்சரிக்கையை வெளியிட்டது.

- சிவப்பு அபாய எச்சரிக்கை என்பது வானிலை அலுவலகத்தினால் அதன் எச்சரிக்கை அமைப்பின் கீழ் பயன்படுத்தப்படும் ஒரு மிக உச்சகட்ட நிலை எச்சரிக்கை ஆகும்.
- வெப்பநிலை 40 டிகிரி செல்சியஸைத் தொடும் என்பதால் உயிருக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்புள்ளது.
- இந்த வெப்பமான வானிலை ஒரு தேசிய அவசரநிலையாக கருதப்பட்டு, அவசரகாலத் திட்டங்கள் வகுக்கப் படுகின்றன.




## காரகோரம் முரண்பாடு

- உலகெங்கிலும் அதிக அளவிலான பனிப்பாறைகள் உருகி குறைந்து வருகின்றன.
- ஆனால் இமயமலையில் மத்திய காரகோரத்தின் பனிப்பாறைகள் கடந்த சில தசாப்தங்களில் வியக்கத் தக்க வகையில் எந்த வகையிலும் மாறாமல் அல்லது சிறிதளவு மட்டுமே அதிகரித்து உள்ளன.
- இந்த நிகழ்வானது, பனிப்பாறை நிபுணர்களைக் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளதோடு மட்டுமல்லாமல் பருவநிலை மாற்றத்திற்கான மனிதக் காரணங்களை மறுக்கச் செய்பவர்களுக்கு மிகவும் அரிதான ஒரு உண்மையைப் புரிய வைக்க உதவுகிறது.
- இந்த மாற்றம் மிகவும் ஒரு சிறியப் பிராந்தியத்தில் மட்டுமே காணப்படுவதால் இது மிகவும் விசித்திரமானதாக கருதப்படுகிறது.




- குன்லுன் மலைத் தொடரானது இமயமலை முழுவதிலும் இதே போன்ற நிகழ்வுகள் இருப்பதைக் குறிப்பதற்கு மற்றொரு எடுத்துக்காட்டாகும்.

- 21 ஆம் நூற்றாண்டின் ஒரு தொடக்கக் காலத்திலிருந்து காரகோரம் மலையின் ஒழுங்கின்மையைத் தூண்டுவதற்கும் அந்த நிலையைத் தொடர்ந்து நிலை நிறுத்துவதற்கும் மேற்கத்தியப் புயல்காற்றுகள் ஒரு செயற்கருவியாக இருந்ததாகச் சமீபத்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

## புலம்பெயரும் மோனார்க் வகை வண்ணத்துப் பூச்சி

- மோனார்க் வகை வண்ணத்துப்பூச்சி இனமானது, சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியத்தின் (IUCN) அச்சுறுத்தல் நிலையில் உள்ள உயிரினங்கள் அடங்கிய சிவப்பு நிறப் பட்டியலில் 'அழியும் நிலையில் உள்ள உயிரினமாக' வகைப்படுத்தப் பட்டுள்ளது.
- ஒவ்வோர் ஆண்டும் அமெரிக்கா முழுவதும் சுமார் 4,000 கிலோமீட்டர் வரை பயணம் செய்கிற இது மோனார்க் வகை வண்ணத்துப்பூச்சியின் ஒரு துணை இனமாகும்.
- ராக்கி மலைகளுக்கு மேற்குப் பகுதியில் வாழும் மேற்கத்திய மோனார்க் வகை வண்ணத்துப் பூச்சிகளின் எண்ணிக்கையானது, 99.9 சதவீதம் குறைந்துள்ளது.
- 1980 ஆம் ஆண்டுகளில் 10 மில்லியனாக இருந்த இவற்றின் எண்ணிக்கையானது, 2021 ஆம் ஆண்டில் 1,914 ஆக குறைந்துள்ளது.
- கிழக்கு அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகளில் இருந்து இடம் பெயர்கின்ற கிழக்கு மோனார்க் வகை வண்ணத்துப் பூச்சிகளின் எண்ணிக்கையும் 1996-2014 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் இருந்து 84 சதவீதம் வரை குறைந்துள்ளது.




## இந்தியாவின் புதிய ராம்சார் தளங்கள் 2022

- இந்தியாவில் உள்ள மேலும் ஐந்து சதுப்பு நிலங்கள் ராம்சார் தளங்கள் என்ற சர்வதேச முக்கியத்துவ அங்கீகாரத்தினைப் பெற்றுள்ளன.
- தற்போது, நாட்டில் மொத்தம் 54 ராம்சார் தளங்கள் உள்ளன.
- புதிதாக அறிவிக்கப்பட்ட தளங்கள்
    - கரிக்கிளி பறவைகள் சரணாலயம் - தமிழ்நாடு
    - பள்ளிக்கரணை பாதுகாக்கப்பட்ட ஈரநிலங்கள் - தமிழ்நாடு
    - பிச்சாவரம் சதுப்புநிலக் காடுகள் - தமிழ்நாடு

- மிசோரமில் உள்ள பாலா ஈரநிலம்
- மத்தியப் பிரதேசத்தில் உள்ள சாக்ய சாகர்.




## புலிகள் மற்றும் யானைகள் பற்றிய தரவு




❖ புலிகள் மற்றும் யானைகள் பற்றியத் தரவுகளானது சமீபத்தில் மக்களவையில் சமர்ப்பிக்கப் பட்டது.

- இந்தத் தரவுகளின்படி, கடந்த 3 ஆண்டுகளில் இந்தியாவில் 29 புலிகள் காணாமல் போய் உள்ளன.
- 2019 ஆம் ஆண்டில், இந்தியா 96 புலிகளையும், 2020 ஆம் ஆண்டில் 106 புலிகளையும், 2021 ஆம் ஆண்டில் 127 புலிகளையும் இழந்துள்ளது.
- தற்போது, 197 புலிகள் ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டுள்ளன.
- கடந்த மூன்றாண்டுகளில் புலிகள் மீதான தாக்குதலில் 125 புலிகள் கொல்லப் பட்டு உள்ளன.
- மகாராஷ்டிராவில் 61 புலிகளும் உத்தரப் பிரதேசத்தில் 25 புலிகளும் உயிரிழந்துள்ளன.
- இதே காலக் கட்டத்தில் இந்தியாவில் 307 யானைகள் உயிரிழந்துள்ளன.
- கடந்த 3 ஆண்டுகளில் 222 யானைகள் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளன.
- ஒடிசாவில் 41, தமிழகத்தில் 34, அசாமில் 33 என்று யானை உயிரிழப்புகள் பதிவாகி உள்ளன.
- இரயில் விபத்தில் 45 யானைகள் உயிரிழந்துள்ளன.

## பனிச் சிறுத்தை பற்றிய இந்திய விலங்கியல் கணக்கெடுப்பு அமைப்பின் ஆய்வு





- இந்திய விலங்கியல் கணக்கெடுப்பு அமைப்பானது (ZSI), சமீபத்தில் பனிச்சிறுத்தை பற்றிய ஆய்வை மேற்கொண்டது.
- பனிச் சிறுத்தைகளுக்கும், நீலமலையாடு மற்றும் சைபீரிய ஐபெக்ஸ் காட்டாடு போன்ற அதன் இரை இனங்களுக்கும் இடையேயான வாழ்விடப் பயன்பாட்டில் ஒரு வலுவான தொடர்பு உள்ளது.
- அந்தப் பகுதிகளை அதன் இரை இனங்கள் நன்கு பயன்படுத்தினால், அங்கு பனிச் சிறுத்தைகள் காணப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக அமையும்.
- வேட்டையாடப்படும் இனங்களைப் பொறுத்தவரையில், பனிச்சிறுத்தை அப்பகுதியில் இருக்கும் போது இந்த இரை இனங்களை அங்குக் காண்பதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவாகும்.

- பனிச் சிறுத்தையானது IUCN சிவப்புநிறப் பட்டியலில் 'பாதிக்கப்படக் கூடிய இனமாக' வகைப் படுத்தப் பட்டுள்ளது.
- இந்தியாவில், இமாச்சலப் பிரதேசம், லடாக், சிக்கிம் மற்றும் உத்தரகாண்ட் ஆகிய இடங்களில் இது காணப்படுகிறது.

## பூமியின் சுற்றுச்சூழல் வள எல்லை மீறல் தினம்

- புவியானது ஜனவரி 1 முதல் ஜூலை 28 வரையில் மட்டும், அதற்குத் தேவையான இயற்கை வளங்களை மீண்டும் தயாரிப்பதற்கு முன்னதாகவே மனிதகுலம் அதனை முழுமையாகப் பயன்படுத்தி உள்ளது..
- எனவே, ஜூலை 28 ஆம் தேதியானது பூமியின் சுற்றுச்சூழல் வள எல்லை மீறல் தினம் ஆகும்.
- உலக மக்கள்தொகைக்கு இத்தகைய அளவிலான வளங்களை நிலையான முறையில் வழங்குவதற்கு 1.75 பூமிகள் தேவைப்படும்.
- கடந்த 50 ஆண்டுகளில் பூமியின் சுற்றுச்சூழல் வள எல்லை மீறல் மிகவும் விரைவில் முன்னேறி நெருங்கி வருவதாக உலக மனிதத் தடங்கள் மீதான கூட்டமைப்பானது கூறியுள்ளது.



# மாநிலச் செய்திகள்

## ஏக்நாத் ஷிண்டே

- மகாராஷ்டிராவின் புதிய முதலமைச்சராக சிவசேனா கட்சியின் ஒரு எதிர்த் தரப்புச் சட்டமன்ற உறுப்பினரான ஏக்நாத் ஷிண்டே பதவியேற்றுள்ளார்.
- உத்தவ் தாக்கரேவுக்குப் பதிலாக, இவர் மகாராஷ்டிராவின் 20வது முதல்வர் ஆக பொறுப்பேற்றுள்ளார்.
- பாரதிய ஜனதா கட்சியின் தேவேந்திர ஃபட்னாவிஸ் அந்த மாநிலத்தின் துணை முதல்வராகப் பதவியேற்றுள்ளார்.

## ஔரங்காபாத் மற்றும் ஓஸ்மானாபாத் மாவட்டங்கள் – மகாராஷ்டிரா




- ஓஸ்மானாபாத் தாராஷிவ் என்றும், ஔரங்காபாத் சம்பாஜி நகர் என்றும் பெயர் மாற்றப் பட்டுள்ளன.
- நவி மும்பை விமான நிலையத்தின் பெயரும் டிபி பாட்டீல் சர்வதேச விமான நிலையம் என மாற்றப்படும்.
- ஔரங்காபாத் பகுதியானது, 1610 ஆம் ஆண்டில் அகமத்நகரின் நிஜாம்ஷாஹி வம்சத்தின் சித்தி என்ற இனத்தின் தளபதி மாலிக் ஆம்பர் என்பவரால் நிறுவப்பட்டது.
- ஔரங்காபாத் பகுதிக்கு அந்த நேரத்தில் கிர்கி அல்லது காட்கி என்று பெயரிடப்பட்டது.
- 1626 ஆம் ஆண்டில் மாலிக் ஆம்பரின் மரணித்திற்குப் பிறகு அவரின் மகன் ஃபதே கான் இதற்கு ஃபதேபூர் என பெயரிட்டார்.
- முகலாயப் பேரரசர் ஔரங்கசீப் 1653 ஆம் ஆண்டில் தக்காணத்தின் மீது படை எடுத்து அந்த நகரத்தில் தனது தலைநகரை அமைத்தார்.
- மேலும் அதன் பெயரை அவர் ஔரங்காபாத் என்று மாற்றினார்.

## ஜான்சி இரயில் நிலையம்

- ❖ உத்தரப் பிரதேசத்தின் ஜான்சி இரயில் நிலையமானது வீராங்கனை இலட்சுமிபாய் இரயில் நிலையம் என பெயர் மாற்றம் செய்யப்பட உள்ளது.
- ❖ இரயில் நிலையத்தின் பெயரை மாற்றுவதற்கு மத்திய அரசிடம் இருந்து மாநில அரசு ஒப்புதல் பெற்றதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- ❖ முன்னதாக, யோகி அவர்களின் அரசாங்கம் பைசாபாத்தை அயோத்தி என்றும், அலகாபாத்தை பிரயாக்ராஜ் என்றும், முகல்சராய் இரயில் நிலையத்தை தீன் தயாள் உபாத்யாய் சந்திப்பு என்றும் பெயர் மாற்றியுள்ளது.

## மிகப்பெரிய மிதக்கும் சூரிய மின்சக்தி ஆலைத் திட்டம்

- ❖ தேசிய அனல்மின் கழகத்தினால் தெலுங்கானாவில் உள்ள இராமகுண்டத்தில் அமைக்கப் பட்டுள்ள இந்தியாவின் மிகப்பெரிய மிதக்கும் சூரிய மின் உற்பத்தி நிலையமானது முழுமையாக இயங்கத் தொடங்கியது.
- ❖ இந்த சூரிய மின் உற்பத்தி ஆலையின் திறன் 100 மெகாவாட் ஆகும்.
- ❖ இது மேம்பட்டத் தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற வகையிலான சில அம்சங்களுடன் இயங்குகிறது.
- ❖ இதில் மிதக்கும் சூரியசக்தி மின் தகடுகள் இருப்பதால் நீர்நிலைகளில் இருந்து நீர் ஆவியாதல் வீதம் குறைக்கப்படும்.
- ❖ இதனால், நீர்வளங்காப்பு நோக்கத்திற்கு இது உதவும்.

## 'சூரியா' திட்டம் முன்னெடுப்பு

- ❖ ReNew அமைப்பானது UNEP மற்றும் SEWA ஆகியவற்றுடன் இணைந்து தொடங்கப்பட்ட 'சூரியா' என்றத் திட்டமானது குறைந்த வருமானம் கொண்ட 1,000 உப்பளப் பெண் தொழிலாளர்களுக்குப் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தொழிற்துறையில் பணியாற்றச் செய்வதற்கானப் பயிற்சியினை அளிக்கும்.
- ❖ ReNew அமைப்பானது இதற்கான நிதியுதவி அளித்து, அதன் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வசதியை அப்பகுதியில் வழங்குகிறது.
- ❖ SEWA அல்லது சுய வேலைவாய்ப்பு கொண்ட பெண்கள் சங்கம் என்ற அமைப்பானது இதன் அமலாக்கத்தில் முன்னணிப் பங்குதார அமைப்பாக விளங்கும்.
- ❖ ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பானது இந்தத் திட்டத்தைக் கண்காணித்து மதிப்பிடுவதற்கானப் பொறுப்பினை வகிக்கும்.
- ❖ SEWA என்பது இந்தியாவின் 16 மாநிலங்களில் உள்ள முறைசாரா பொருளாதாரத்தைச் சேர்ந்த 1.5 மில்லியனுக்கும் அதிகமான ஏழை, சுய தொழில் செய்யும் பெண் தொழிலாளர்களைக் கொண்ட ஒரு தேசிய அளவிலான தொழிற்சங்கமாகும்.

## ஜகன்னாத் பூரி இரத யாத்திரை 2022

- ❖ தேர்த் திருவிழா என அழைக்கப்படும் ஜகன்னாத் பூரி இரத யாத்திரையானது ஒடிசா மாநிலத்தின் பூரியில் ஜூலை 01 ஆம் தேதியன்று தொடங்கியது.

- இந்த யாத்திரையானது உலகின் மிகப் பழமையான மற்றும் மிகப்பெரிய இரத ஊர்வலமாகக் கருதப்படுகிறது.
- பகவான் ஜகந்நாதரின் தேர் நந்திகோஷ் என்று பெயரிடப்பட்டுள்ளது.
- பாலபத்ரா பகவான் மற்றும் தேவி சுபத்ராவின் தேர்களுக்கு முறையே தலத்வாஜா மற்றும் தர்பதாலனா என்றும் பெயரிடப்பட்டுள்ளது.

## பொதுச் சுகாதார அவசரநிலை




- புதுச்சேரியின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலச் சேவை இயக்குநரகம் ஆனது, காரைக்கால் பகுதியில் பொதுச் சுகாதார அவசரநிலையை அறிவித்தது.
- கடந்த சில நாட்களாக அப்பகுதியில் கடுமையான வயிற்றுப் போக்குப் பாதிப்புகள் அதிகரித்ததன் காரணமாக இது அறிவிக்கப்பட்டுள்ளது.
- இப்பகுதியில் அதிக எண்ணிக்கையிலான மக்கள் தீவிரமான வயிற்றுப் போக்கு (Acute Diarrheal Disease) நோயால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டது.

## 'எறும்புச் சட்னிக்கு' புவிசார் குறியீடு

- ஒடிசாவில், காய் என்ற சட்னிக்குப் புவிசார் குறியீடு விளக்கத்தினை உருவாக்கச் செய்வதற்காக வேண்டி அறிவியலாளர்கள் தங்கள் பகுப்பாய்வை நல்ல முறையில் மேற்கொண்டு வருகின்றனர்.
- சிஞ்சிருக்கான் அல்லது தையற்கார எறும்புகளிலிருந்துத் தயாரிக்கப்படும் உணவுகள் ஒடிசா பழங்குடியினர் மத்தியில் பல நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கின்றன.
- காய் என்ற சட்னியில் மிக அற்புதமானப் புரதங்கள், துத்தநாகம், கால்சியம், இரும்பு, உணவு சார்ந்த B-12, பொட்டாசியம், மெக்னீசியம், தாமிரம், சோடியம், நார்ச்சத்து மற்றும் 18 அமினோ அமிலங்கள் நிறைந்துள்ளன.
- நோயெதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கவும், நோய்களைத் தடுக்கவும் இது மிக அதிக ஆரோக்கியமானதாகக் கருதப்படுகிறது.
- தையற்கார எறும்புகள் அறிவியல் ரீதியாக ஒகோபில்லா ஸ்மரக்டினா என்று அழைக்கப் படுகின்றன.



## நாரி கோ நமன் திட்டம்

- இமாச்சலப் பிரதேச மாநில அரசானது, 'நாரி கோ நமன்' என்ற திட்டத்தைத் தொடங்கி உள்ளது.
- இமாச்சலப் பிரதேச சாலைப் போக்குவரத்துக் கழகம் (HRTC) ஆனது அம்மாநில எல்லைக்குள் இயக்கப்படும் பேருந்துகளில் பெண் பயணிகளுக்கு 50% கட்டணச் சலுகை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டு தொடங்கப்பட்டது.
- அம்மாநிலத்தின் முதல் பெண் பேருந்து ஓட்டுநரான சீமா தாக்கூர், மாநில முதல்வர் அவர்களை அரசுப் போக்குவரத்துப் பேருந்தில் நிகழ்ச்சி நடைபெறும் இடத்திற்கு அழைத்துச் சென்றார்.

## தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்திற்கான மாநில தரவரிசைக் குறியீடு

**IMPLEMENTING FOOD SECURITY**

How the 20 'general category' states ranked in terms of NFSA implementation

**TOP THREE**

| Rank | State | Index score |
|---|---|---|
| 1 | Odisha | 0.836 |
| 2 | Uttar Pradesh | 0.797 |
| 3 | Andhra Pradesh | 0.794 |

**BOTTOM THREE**

| Rank | State | Index score |
|---|---|---|
| 18 | Delhi | 0.658 |
| 19 | Chhattisgarh | 0.654 |
| 20 | Goa | 0.631 |

- தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்திற்கான 2022 ஆம் ஆண்டு மாநில தரவரிசைக் குறியீடு சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- பலன் வழங்கீட்டினை மேம்படுத்தும் முயற்சியில், மாநிலத்தில் நெகிழ்திறன்மிக்க உணவு முறைகளைக் கொண்டு வந்ததற்காக, ஒடிசா மாநிலம் இதில் முதலிடம் பிடித்தது.
- பொதுப் பிரிவு சார்ந்த மாநிலங்களில் உத்தரப் பிரதேசம் 2வது இடத்திலும், ஆந்திரப் பிரதேசம் 3வது இடத்திலும் உள்ளது.

- சிறப்புப் பிரிவு மாநிலங்கள் / ஒன்றியப் பிரதேசங்களில், திரிபுரா முதலிடத்திலும், இமாச்சலப் பிரதேசம் மற்றும் சிக்கிம் ஆகியவை முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் இடத்திலும் உள்ளன.
- நேரடிப் பயன் பரிமாற்றம் (DBT) - பணம் வழங்கும் முறை செயலில் உள்ள 3 ஒன்றியப் பிரதேசங்களில், தாத்ரா மற்றும் நகர் ஹவேலி & டாமன் மற்றும் டையூ ஆகியவை முதலிடத்தில் உள்ளன.

## டெல்டா தரவரிசை

- ஷ்யாமா பிரசாத் முகர்ஜி கிராம-நகர்ப்புற பணித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஜூன் மாதத்திற்கான டெல்டா தரவரிசையில் ஜார்க்கண்ட் முதல் இடத்தைப் பிடித்து உள்ளது.
- இதை நிதி ஆயோக் அமைப்பானது வெளியிட்டது.
- நாட்டிலேயே ஒட்டு மொத்தச் செயல்திறனில், ஜார்க்கண்ட் மாநிலம் மிக முன்னேற்றம் அடைந்து 8வது இடத்தைப் பெற்றுள்ளது.

## தியோகர் விமான நிலையம்

- மேம்படுத்தப்பட்ட தியோகர் சர்வதேச விமான நிலையமானது பிரதமர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- தியோகர் சர்வதேச விமான நிலையம் 68வது விமான நிலையமாக விளங்கும்.
- உடான் திட்டத்தின் கீழ் கொல்கத்தா, பாட்னா மற்றும் ராஞ்சி ஆகிய நகரங்களுடன் இது இணைக்கப் படும்.
- ராஞ்சிக்குப் பிறகு ஜார்க்கண்டில் உள்ள இரண்டாவது சர்வதேச விமான நிலையம் இதுவாகும்.

## இந்தியாவின் முதல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை



- கர்நாடகா மாநில அரசானது, தனக்கென பிரத்தியேக ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கையைக் கொண்ட இந்தியாவின் முதல் மாநிலமாக மாற உள்ளது.
- இந்தப் புதிய கொள்கையானது, மாநிலத்தில் உள்ள ஆரம்ப நிலை அளவிலான புத்தாக்கங்கள் முதல் பெரிய நிறுவனங்கள் வரை அனைத்து நிலைகளிலும் நடைபெறும் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்களை ஊக்குவிக்கும்.
- தனிநபர்களும் கூட இதன் மூலம் ஊக்குவிக்கப்படுவர்.

## புதிய கல்விக் கொள்கை அமலாக்கம்


- மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கையை அமல்படுத்துவதற்கான ஒரு செயல் முறையைத் தொடங்கிய நாட்டின் முதல் மாநிலமாக உத்தரகாண்ட் மாறியுள்ளது.
- புதிய கல்விக் கொள்கையின் அமலாக்கமானது நாட்டில் கலாச்சார அடிப்படையிலான கல்வி முறையின் தொடக்கத்தைக் குறிக்கிறது.
- இது மாணவர்களின் ஒட்டு மொத்த ஆளுமை வளர்ச்சியில் கவனம் செலுத்துகிறது.

## உத்தரப் பிரதேசத்தில் 13 விரைவு வழிச் சாலைகள்

- அதிகபட்சமாக 13 விரைவு வழிச் சாலைகளைக் கொண்ட முதல் மாநிலமாக உத்தரப் பிரதேசம் மாறியுள்ளது.
- மொத்தம் 3200 கி.மீ. நீளமுள்ள 13 விரைவு வழிச் சாலைகளில் ஆறு பயன்பாட்டில் உள்ள நிலையில் மற்ற ஏழு விரைவு வழிச் சாலைகள் கட்டுமானப் பணியில் உள்ளன.

## "சுகாதார உரிமை" மசோதா

- ராஜஸ்தான் அரசு ஆனது "சுகாதார உரிமை" சட்டத்தை இயற்ற உள்ளது.
- இது "இந்தியாவில் இது போன்ற முதல்" வகை சட்டமாக இருக்கும்.
- அரசு மற்றும் தனியார் சுகாதாரச் சேவை வழங்குநர்கள் மூலம் தரமான மற்றும் மலிவு விலையிலான சுகாதாரச் சேவைகளை வழங்கச் செய்வதனை உறுதி செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.



## இந்தியாவின் மிகப்பெரிய வணிகத் திருவிழா

- 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து, டெல்லி அரசானது அரசு ஆதரவுடன் கூடிய முதல் வணிகத் திருவிழாவை நடத்தவுள்ளது.
- இவ்விழாவில் பொழுதுபோக்கிற்காக 200 கச்சேரி நிகழ்வுகள், உணவு கடைகள் மற்றும் பொருட்கள் மீது பெரும் அளவில் தள்ளுபடியும் வழங்கப்படும்.
- இது இந்தியாவில் இதுவரை நடைபெறாத ஒரு மிகப்பெரிய வணிகத் திருவிழாவாக இருக்கும்.

## அன்னை தெரசா நினைவு விருது

- ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பின் தேசிய நல்லெண்ணத் தூதர் திருமதி தியா மிர்சா மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர் திரு அஃப்ரோஸ் ஷா ஆகியோருக்கு 2021 ஆம் ஆண்டின் சமூக நீதிக்கான மதிப்புமிக்க அன்னை தெரசா நினைவு விருதுகள் வழங்கப் பட்டன.
- சுற்றுச்சூழல் நிலைத்தன்மையில் அவர்கள் ஆற்றியப் பாராட்டத்தக்க மற்றும் குறிப்பிடத் தக்க சாதனைகளுக்காக இருவருக்கும் விருது வழங்கப்பட்டது.
- ஹார்மனி என்ற அறக்கட்டளையானது சமூக நீதிக்கான அன்னை தெரசா நினைவு விருதுகளை வழங்குகிறது.




## அரசுக்குச் சொந்தமான இணையச் சேவை

- கேரள மாநிலமானது நாட்டிலேயே முதல் முறையாக அரசுக்குச் சொந்தமான இணையச் சேவையைக் கொண்டுள்ள மாநிலமாக மாறியுள்ளது.
- கேரள ஒளியிழைக் கட்டமைப்பு நிறுவனத்தின் (K-Fon) தகவல் தொழில்நுட்ப உள் கட்டமைப்புத் திட்டத்திற்கு இணையச் சேவை வழங்குநர் உரிமத்தை தொலைத் தொடர்புத் துறை வழங்கியுள்ளது.
- கேரள ஒளியிழைக் கட்டமைப்பு நிறுவனம் என்பது டிஜிட்டல் உபயோகத்தில் உள்ள இடைவெளியை அகற்றுவதை நோக்கமாகக் கொண்ட மாநில அரசின் ஒரு முன்னெடுப்பாகும்.

## இந்தியாவில் எண்ணிமம் சார்ந்த லோக் அதாலத்

- செயற்கை நுண்ணறிவு மூலம் இயக்கப்படும் முதல் எண்ணிம லோக் அதாலத்தை தேசியச் சட்டச் சேவைகள் ஆணையத்தின் தலைவர் உதய் உமேஷ் லலித் தொடங்கி வைத்தார்.
- ராஜஸ்தான் மாநிலச் சட்டச் சேவைகள் ஆணையத்தின் (RSLSA) எண்ணிம லோக் அதாலத் ஆனது ஜூபிடிஸ் ஜஸ்டிஸ் டெக்னாலஜிஸ் என்ற நிறுவனத்தால் உருவாக்கப் பட்டது.




## பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனா- ஆந்திரப் பிரதேசம்

- ஆந்திரப் பிரதேச அரசானது பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனாவில் (PMFBY) மீண்டும் இணைவதற்கு முடிவு செய்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டின் காரீஃப் பருவத்தில் இருந்து பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனா திட்டத்தினைச் செயல்படுத்த மாநில அரசு முடிவு செய்துள்ளது.
- பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனா மற்றும் மறுசீரமைக்கப்பட்ட வானிலை அடிப்படையிலான பயிர்க் காப்பீட்டுத் திட்டம் (RWBCIS) ஆகியவை ஆந்திரப் பிரதேசத்தில் 2016 ஆம் ஆண்டு காரீஃப் பருவம் முதல் 2019 ஆம் ஆண்டு காரீஃப் பருவம் வரை வெற்றிகரமாகச் செயல்படுத்தப் பட்டுள்ளன.


## எல்லைப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கான ஒப்பந்தங்கள்

- அசாம் முதல்வர் ஹிமந்தா பிஸ்வா சர்மா மற்றும் அருணாச்சலப் பிரதேச முதல்வர் பெமா கந்து ஆகியோர் எல்லைப் பிரச்னை தொடர்பான மூன்றாவதுச் சந்திப்பினை மேற்கொண்டனர்.
- அவர்கள் கூட்டாக இணைந்து 'நம்சாய் பிரகடனத்தினை' வெளியிட்டனர்.
- இந்த இரண்டு முதல்வர்கள் இடையே, இந்த ஆண்டு ஜனவரி 24 மற்றும் ஏப்ரல் 20 ஆகிய தேதிகளில் முதல் இரண்டு சந்திப்புகள் நடைபெற்றன.
- 1960 ஆம் ஆண்டின் போது, உயர் அதிகாரம் கொண்ட ஒரு முத்தரப்புக் குழுவால் தயாரிக்கப் பட்ட 29 விதிமுறைகளின் பேரில் எல்லைக் கோடு வரையறுக்கப்பட்டு கையொப்பமிடப் பட்டு, அங்கீகரிக்கப்பட்ட எல்லையாக இது அறிவிக்கப்பட்டது.

- இந்த இரு மாநிலங்களும் 12 "பிராந்தியக் குழுக்களை" அமைக்க முடிவு செய்தன.
- இது ஒவ்வொன்றும் அருணாச்சலப் பிரதேசத்தின் 12 மாவட்டங்களையும், அதற்கு இணையான அசாமின் மாவட்டங்களையும் உள்ளடக்கிய 123 கிராமங்களின் மீது கூட்டுச் சரிபார்ப்பினை மேற்கொள்ளும்.
- பிராந்தியக் குழுக்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் ஒரு இறுதி முடிவு எடுக்கப் படும்.
- அருணாச்சலப் பிரதேசத்தின் அரசியலமைப்பு எல்லைக்குள் இருக்கும் 28 கிராமங்கள் இதனுடன் இருக்கும்.
- அருணாச்சலப் பிரதேசத்தினால் உரிமைக் கோரல்கள் திரும்பப் பெறப்பட்ட 3 கிராமங்கள் அசாமுடன் இருக்கும்.

## புல்வாய் இனங்களின் கணக்கெடுப்பு

- ஆந்திரப் பிரதேச மாநில வனவிலங்குத் துறையானது புல்வாய் இனங்கள் பற்றிய முதல் கணக்கெடுப்பினைத் தொடங்கியுள்ளது.
- இது தௌலேஸ்வரம் மற்றும் ஏனாம் ஆகிய பகுதிகள் இடையே, கோதாவரி ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள உள்ள தீவுப் பகுதிகளில் நடத்தப்பட்டது.
- இந்தியப் புல்வாய் ஆனது ஒரு மறிமான் இனமாகும்.
- தற்போது உயிருடன் உள்ள மறிமான் இனத்தினைச் சேர்ந்த ஒரே ஒரு உயிரினம் இதுவாகும்.
- சிறுத்தைப் புலிக்கு அடுத்தபடியாக உலகின் அதிவேக விலங்காக இது கருதப் படுகிறது.
- இது IUCN அமைப்பின் சிவப்பு நிறப் பட்டியலில் குறைந்த அளவே கவனம் செலுத்தப் படும் இனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- ராஜஸ்தான் மாநிலத்தின் பிஷ்னோய் சமூகத்தினர் புல்வாய் இனங்களின் பாதுகாப்பு முயற்சிகளுக்காக வேண்டி உலகம் முழுவதும் பிரபலமாக அறியப்படுகின்றனர்.



## வாகன இருப்பிடக் கண்காணிப்புச் சாதனம் பொருத்துதல்

- அவசரகால உதவி வழங்கீட்டு அமைப்புடன் (ERSS) வாகன இருப்பிடக் கண்காணிப்புச் சாதனத்தை (VLTD) இணைக்கும் இந்தியாவின் முதல் மாநிலமாக இமாச்சலப் பிரதேசம் மாறியுள்ளது.
- வாகன இருப்பிடக் கண்காணிப்புச் சாதனம் பொருத்தப்பட்ட அனைத்துப் பதிவு செய்யப் பட்ட வணிகப் பயன்பாட்டு வாகனங்களும் அவசரகால உதவி வழங்கீட்டு அமைப்புடன் இணைக்கப்படும்
- இதன் மூலம், இந்த வாகனங்களை இந்தியாவின் எந்தப் பகுதியில் இருந்து வேண்டுமானாலும் கண்காணிக்க முடியும்
- இது வாகனத் திருட்டு மற்றும் வாகன விபத்துகளை எளிதில் கண்டறிய உதவும்.
- அனைத்துப் பயணிகள் சேவை வாகனங்களிலும் வாகன இருப்பிடக் கண்காணிப்புச் சாதன முறையை அறிமுகப்படுத்த பஞ்சாப் அரசு முடிவு செய்துள்ளது.

## OBC ஒதுக்கீட்டினை மறுசீரமைத்தல்

- மகாராஷ்டிர மாநில அரசானது, ஜெயந்த் குமார் பாந்தியா தலைமையிலான 6 பேர் கொண்ட ஒரு ஆணையத்தினை அமைத்தது.
- இந்தக் குழு தனது அறிக்கையைச் சமீபத்தில் உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பித்தது.
- மகாராஷ்டிராவின் உள்ளாட்சித் தேர்தலில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த வேட்பாளர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க இந்த அறிக்கை வழி வகுத்துள்ளது.
- உள்ளாட்சி அமைப்புகளில் 27% இட ஒதுக்கீடு வழங்க இந்த ஆணையம் பரிந்துரை செய்துள்ளது
- இருப்பினும், இந்த இடஒதுக்கீடானது, பட்டியலிடப்பட்டச் சாதியினர் மற்றும் பழங்குடியினருக்கான சட்ட ரீதியான இட ஒதுக்கீட்டைப் பாதிக்கக் கூடாது.
- மேலும் இது 50% இட ஒதுக்கீடு என்ற வரம்பிற்கு உட்பட்டது.

## இணையவழி முதல் தகவல் அறிக்கை முறை

- குஜராத் மாநில அரசானது கைபேசி அல்லது இரு சக்கர வாகனத் திருட்டு போன்ற குற்றங்களுக்கு இணையவழி ரீதியில் முதல் தகவல் அறிக்கை வழங்கும் சேவையை வழங்குகிறது.
- எண்ணிம ஆளுகையை அறிமுகப்படுத்தும் வகையில், அம்மாநிலத்தில் "இணைய வழி முதல் தகவல் அறிக்கை முறை" தொடங்கப்பட்டது.
- இணையவழி ஆளுமை முன்னெடுப்புகள் மற்றும் இணையவழி முதல் தகவல் அறிக்கை முறை ஆகியவை "இ-குஜ்காப் திட்டத்தின்" ஒரு பகுதியாக தொடங்கப் பட்டு உள்ளன.
- இணைய வழி முதல் தகவல் அறிக்கை முறையானது, தற்போது இணைய தள வழி முறையில் காவல்துறை தொடர்பான16 சேவைகளை வழங்குகிறது.
- இ-குஜ்காப் திட்டம் 2013 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் தொடங்கப்பட்டது.

## 'ஹர் கர் ஜல்' சான்றிதழ் பெற்ற முதல் மாவட்டம்

- மத்தியப் பிரதேசத்தின் புர்ஹான்பூர் மாவட்டமானது 'ஹர் கர் ஜல்' சான்றிதழ் பெற்ற முதல் மாவட்டமாக மாறியது.
- புர்ஹான்பூரில் உள்ள 254 கிராமங்களில் வசிக்கும் மக்கள், கிராமச் சபையினால் நிறைவேற்றப் பட்ட தீர்மானத்தின் மூலம் தங்கள் கிராமங்களை 'ஹர் கர் ஜல்' என அறிவித்த ஒரே மாவட்டம் இதுவாகும்.
- ஜல் ஜீவன் திட்டமானது 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் தேதியன்று தொடங்கப் பட்டது.
- இந்தத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள ஒரு வீட்டிற்கு ஒரு நபருக்கு 55 லிட்டர் தண்ணீர் வழங்கப்படும்.

## இந்தியாவின் முதல் மூளை நல மருத்துவமனை

- பெங்களூரு நகரில் அமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் முதல் கூட்டு மூளை நல மருத்துவமனையினை கர்நாடகச் சுகாதார அமைச்சர் திறந்து வைத்தார்.
- இது கர்நாடக மூளை நல முன்னெடுப்பின் கீழ், NIMHANS என்ற அமைப்புடன் இணைந்து மாநிலச் சுகாதாரத் துறையால் நிறுவப்பட்டுள்ளது.

## ராஜஸ்தான் மகிளா நிதி

- தெலுங்கானா அரசின் ஸ்திரீ நிதி கடன் கூட்டுறவுக் கூட்டமைப்புடன் ராஜஸ்தான் மாநில அரசு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை மேற்கொண்டுள்ளது.
- இது முதன்முறையாக "ராஜஸ்தான் மகிளா நிதி" என்று முழுவதுமாக பெண்கள் மட்டும் நடத்தும் கூட்டுறவு வங்கியை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது அவர்களின் நிறுவனங்களுக்கு ஆதரவை வழங்குவதன் மூலம் பெண்களுக்கு அதிகாரமளிப்பதை ஊக்குவிக்கும்.
- இது முழுவதுமாக பெண் ஊழியர்களால் இயக்கப்படும்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## விஜய் அமிர்தராஜ்

- இந்திய டென்னிஸ் ஜாம்பவானான விஜய் அமிர்தராஜ், லண்டனில் 2021 ஆம் ஆண்டிற்கானத் தங்கச் சாதனையாளர் விருதிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இது சர்வதேச டென்னிஸ் புகழ் மன்றம் மற்றும் சர்வதேச டென்னிஸ் கூட்டமைப்பு ஆகியவற்றால் வழங்கப்படுகிறது.
- இந்த விருதைப் பெறும் முதல் இந்திய நபர் இவரே ஆவார்.
- இவர் இந்த விருதினைப் பெற்ற ஆஸ்திரேலியாவின் பிரையன் டோபின், ஜப்பானின் எய்ச்சி கவாடே மற்றும் அமெரிக்காவின் பீச்சி கெல்மேயர் ஆகியோருடன் இணைந்து உள்ளார்.

## ஆஸ்கார் அகாடமி உறுப்பினர்கள் 2022

- பாலிவுட் நடிகர் கஜோல் மற்றும் தமிழ் நடிகர் சூர்யா ஆகியோருக்கு மோஷன் பிக்சர் கலை மற்றும் அறிவியல் அகாடமியின் 2022 ஆம் ஆண்டின் குழுவில் சேர அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது.
- இந்த அகாடமி ஒவ்வோர் ஆண்டும் ஆஸ்கார் விருது விழாக்களை நடத்துகிறது.
- 2022 ஆம் ஆண்டிற்கான இந்தக் குழுவில் சேர அழைக்கப்பட்டுள்ள, உலகெங்கிலும் உள்ள 397 புகழ் பெற்ற கலைஞர்கள் மற்றும் நிர்வாகிகளில் இந்த இரண்டு இந்திய நடிகர்களும் அடங்குவர்.

## இயோன் மோர்கன் ஓய்வு

- இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் தலைவர் இயோன் மோர்கன் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.
- இவரது தலைமையின் கீழ், இங்கிலாந்து அணி 2019 ஆம் ஆண்டில் தங்களது முதல் ஒருநாள் போட்டிக்கான உலகக் கோப்பையை வென்றது
- மொத்தமுள்ள 72 போட்டிகளில் 42 போட்டிகளை இவரது அணி வெற்றி பெற்று, வெற்றி கரமான T20I அணித் தலைவர் என்ற பெருமையையும் இவர் பெற்றுள்ளார்.

## வரீந்தர் சிங்

- இந்திய ஹாக்கி வீரரும், 1975 ஆம் ஆண்டு உலகக் கோப்பை போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற அணியில் ஒருவருமான வரீந்தர் சிங் காலமானார்.
- 1975 ஆம் ஆண்டு கோலாலம்பூரில் நடைபெற்ற ஆண்கள் ஹாக்கி உலகக் கோப்பைப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற இந்திய அணியில் இவர் இடம்பெற்றிருந்தார்.
- இது இந்திய ஹாக்கி அணி வென்ற ஒரே உலகக் கோப்பை ஆகும்.
- வரீந்தருக்கு 2007 ஆம் ஆண்டில் மதிப்புமிக்க தியான் சந்த் வாழ்நாள் சாதனையாளர் என்ற விருது வழங்கப் பட்டது.

## அமெரிக்க உச்ச நீதிமன்றத்தில் முதல் கருப்பினப் பெண் நீதிபதி

- கேதான்ஜி பிரவுன் ஜாக்சன் அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் முதல் கருப்பினப் பெண் நீதிபதி ஆனார்.
- இவர் அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் முதலாவது முன்னாள் அரசுத் தரப்பு வழக்கறிஞர் ஆவார்.
- அமெரிக்க வரலாற்றிலேயே ஒரு கறுப்பினப் பெண்மணி ஒருவர் அந்நாட்டின் உச்ச நீதிமன்ற நீதிபதியாகப் பொறுப்பேற்பது இதுவே முதல் முறையாகும்.

## சரஸ்வதி சம்மான் 2021

- ❖ பேராசிரியர் ராம்தராஷ் மிஸ்ராவுக்கு 2021 ஆம் ஆண்டிற்கான மதிப்புமிக்க சரஸ்வதி சம்மான் விருது வழங்கப்படவுள்ளது.
- ❖ இது அவரது 'மெய் டு யஹான் ஹுன்' என்ற கவிதைத் தொகுப்பிற்காக வழங்கப் படுகிறது.
- ❖ சரஸ்வதி சம்மான் விருது 1991 ஆம் ஆண்டில் KK பிர்லா அறக்கட்டளையால் நிறுவப் பட்டது.
- ❖ இது இந்தியாவின் மிகவும் மதிப்புமிக்க இலக்கிய விருதுகளில் ஒன்றாகும்.
- ❖ இந்த விருதானது இந்தியக் குடிமகன் ஒருவரால் ஒரு இந்திய மொழியில் எழுதப்பட்டு கடந்த 10 ஆண்டுகளில் வெளியிடப்பட்ட சிறந்த இலக்கியப் படைப்பிற்கு ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்படுகிறது.

## நிதியியல் நடவடிக்கைப் பணிக் குழுவின் தலைவர்

- ❖ நிதியியல் நடவடிக்கைப் பணிக்குழுவின் (FATF) தலைவராக சிங்கப்பூரைச் சேர்ந்த T. ராஜ குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.
- ❖ நிதியியல் நடவடிக்கைப் பணிக்குழு என்பது பணமோசடித் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஒரு கண்காணிப்பு அமைப்பாகும்.
- ❖ இவர் மார்கஸ் ப்ளேயருக்கு அடுத்தப் படியாக இந்தப் பதவியினை ஏற்றுக் கொண்டு அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு இவர் இப்பதவியில் இருப்பார்.

## 21வது TIFF பதக்க வழங்கீட்டு விழா

- ❖ 21வது டிரான்சில்வேனியா சர்வதேசத் திரைப்பட விருது விழாவானது ருமேனியாவின் க்ளூஜ்-நபோகாவில் உள்ள யூனிரி சதுக்கத்தில் நடைபெற்றது.
- ❖ உத்தாமா எனும் திரைப்படத்தினை இயக்கிய அறிமுகத் திரைப்பட இயக்குனரான அலெஜான்ட்ரோ லோயாசா க்ரிசி வெற்றியாளராக அறிவிக்கப்பட்டு, 10,000 யூரோ டிரான்சில்வேனியா பதக்கமானது அவருக்கு வழங்கப்பட்டது.
- ❖ சிறந்த இயக்குனருக்கான விருதானது திரைப்படத் தயாரிப்பாளர் குவோமுண்டூர் அர்னார் குவோமுண்ட்சன் என்பவருக்கு வழங்கப்பட்டது.
- ❖ சிறந்த நடிப்புத் திறனுக்கான விருதானது லாரா முல்லர் & ஸ்கெம்சி லாத் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

## ஆயுர்வேத ரத்னா விருது

- ❖ அகில இந்திய ஆயுர்வேத நிறுவனத்தின் (AIIA) இயக்குனர் தனுஜா நேசாரிக்கு இங்கிலாந்து நாடாளுமன்றத்தால் ஆயுர்வேத ரத்னா விருது வழங்கப்பட்டது.
- ❖ இந்தியப் பாரம்பரிய அறிவியல் துறைக்கான இங்கிலாந்தின் அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழு (ITSappg) இந்த விருதை வழங்கியது.
- ❖ இந்தியாவிலும் வெளிநாட்டிலும் ஆயுர்வேதத்தின் வளர்ச்சியை ஊக்குவிப்பதில் இவரது பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் இந்த விருதானது வழங்கப்பட்டுள்ளது.

## மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் ஆண்டின் சிறந்தப் பங்குதார நிறுவன விருதுகள் 2022

- HCL டெக்னாலஜிஸ் நிறுவனமானது, மைக்ரோசாப்ட் தொழில்நுட்பத்தின் அடிப்படையிலான புத்தாக்கம் மற்றும் வாடிக்கையாளர் தீர்வுகளைச் செயல்படுத்தச் செய்வதற்காக, மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் ஆண்டின் சிறந்தப் பங்குதார நிறுவன விருது வழங்கும் விழாவில் (2022) விருது வழங்கி அங்கீகரிக்கப்பட்டது.
- சுகாதார நலன் மற்றும் வாழ்வியல் அறிவியலுக்கான (உலகளாவிய வெற்றியாளர்) மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் ஆண்டின் சிறந்தப் பங்குதார நிறுவன விருதினையும், 2022 ஆம் ஆண்டுக்கான UK மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் ஆண்டின் சிறந்தப் பங்கு தார நிறுவன விருதையும் (நாட்டின் வெற்றியாளர்) HCL டெக் நிறுவனம் பெற்றது.
- இன்டர்நெட் ஆஃப் திங்ஸ் பிரிவிலும் (இப்பிரிவிற்கான இறுதி வெற்றியாளர்) 2022 ஆம் ஆண்டிற்கான மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் ஆண்டின் சிறந்தப் பங்குதார நிறுவன விருது வழங்கும் விழாவில் இந்தத் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் இறுதிப் போட்டியாளராகவும் அறிவிக்கப்பட்டது.

## இந்தியாவின் இளம் வயது சபாநாயகர்

- மும்பையைச் சேர்ந்த வழக்கறிஞரும் முதல் முறையில் சட்டமன்ற உறுப்பினருமான ராகுல் நர்வேகர் மகாராஷ்டிரா மாநிலச் சட்டமன்றத்தின் இளம் வயது சபாநாயகராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இவர் பாரதிய ஜனதா கட்சியினைச் சேர்ந்தவர் ஆவார்.
- இதன் மூலம், இந்த அரசியலமைப்புப் பதவியை வகிக்கும் இந்தியாவின் இளம் வயது நபர் என்ற பெருமையை இவர் பெற்றார்.
- 16வது சபாநாயகராக (1960 ஆம் ஆண்டிலிருந்து) தேர்ந்தெடுக்கப்பட்ட இளம் சட்டமன்ற உறுப்பினர் என்ற வரலாற்றை அவர் படைத்துள்ளார்.

## ஃபீல்ட்ஸ் விருதுகள் 2022

- நான்கு கணிதவியலாளர்களுக்கு மதிப்புமிக்க ஃபீல்ட்ஸ் விருதுகள் வழங்கப் பட்டு உள்ளன.
- இது கணிதத்திற்கான நோபல் பரிசு என அழைக்கப்படுகிறது.
- இது சர்வதேச கணிதச் சங்கத்தினால் வழங்கப் படுகின்றது.
- அது ஒரு சர்வதேச அரசு சாரா அமைப்பு மற்றும் லாப நோக்கம் சாரா அறிவியல் அமைப்பு ஆகும்.
- இது 40 வயதிற்குட்பட்ட கணிதவியல் அறிஞர்களுக்கு வழங்கப் படுகின்றது.
- இதில் பரிசு பெற்ற நான்கு பேர்களின் பட்டியல்
    - பிரான்சின் ஹ்யூகோ டுமினில்-கோபின் - இன்ஸ்டிட்யூட் டெஸ் ஹாட்ஸ் எடுட்ஸ் சயின்டிஃபிக்ஸ்
    - அமெரிக்காவைச் சேர்ந்த ஜூன் ஹூ - பிரின்ஸ்டன் பல்கலைக்கழகம்
    - பிரிட்டனின் ஜேம்ஸ் மேனார்ட் - ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம்

  - உக்ரைனின் மரினா வியாசோவ்ஸ்கா - சுவிஸ் ஃபெடரல் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி

- உக்ரைன் நாட்டின் மரியானா இந்த விருதினைப் பெற்ற இரண்டாவது பெண் ஆவார்.
- இந்த விருதினைப் பெற்ற மற்றுமொரு பெண் 2014 ஆம் ஆண்டில் ஈரான் நாட்டின் மர்யம் மிர்சாகாணி ஆவார்.




## தெற்கு சூடான் நாட்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புத் திட்டத்தின் படைத் தளபதி

- இந்தியாவின் லெப்டினன்ட் ஜெனரல் மோகன் சுப்ரமணியன் தெற்கு சூடானில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புத் திட்டத்தின் படைத் தளபதியாக நியமிக்கப் பட்டுள்ளார்.
- ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புத் திட்டத்திற்கான படையில் கிட்டத்தட்ட 20,000 அமைதி காக்கும் படையினர் பணியாற்றுகின்றனர்.
- அவர்கள் மோதலால் பாதிக்கப்பட்ட நாட்டில் வாழும் குடிமக்களைப் பாதுகாக்கச் செய்வதற்காகவும், நீடித்த அமைதியை உருவாக்குவதற்காகவும் பணி புரிகின்றனர்.
- இந்தியாவிலிருந்து மொத்தம் 1,160 அமைதி காக்கும் வீரர்கள் தற்போது தெற்கு சூடானில் பணியாற்றி வருகின்றனர்.

## சிரோமணி விருது

- ஐக்கியப் பேரரசில் நடைபெற்ற 2022 ஆம் ஆண்டிற்கான வெளிநாடுவாழ் இந்தியர்கள் உலக உச்சி மாநாட்டில் மிச்செல் பூனாவல்லா சிரோமணி விருதைப் பெற்றுள்ளார்.
- சிரோமணி விருது ஆனது ஸ்ரீ சாது பிரம்மவிஹாரி, லார்ட் ராமி ரேஞ்சர், ரீட்டா ஹிந்துஜா சாப்ரியா ஆகியோருக்கும் வழங்கப்பட்டது.

## "Mind Master: Winning Lessons from a Champion's Life" புத்தகம்

- இந்தப் புத்தகத்தின் விரிவாக்கப்பட்ட கடின அட்டை கொண்டப் பதிப்பை ஹாசெட்டே இந்தியா பதிப்பகம் வெளியிட உள்ளதாக அறிவித்துள்ளது.
- இது ஐந்து முறை உலகச் சதுரங்கச் சாம்பியன் பட்டம் வென்ற விஸ்வநாதன் ஆனந்த் அவர்களைப் பற்றிய புத்தகமாகும்.

- இது ஆசிரியரும் ஒரு பத்திரிக்கையாளருமான சூசன் நினனுடன் இணைந்து ஆனந்த் அவர்கள் எழுதிய புத்தகமாகும்.

## P.கோபிநாத் நாயர்

- சுதந்திரப் போராட்ட வீரர் P.கோபிநாதன் நாயர் தனது 100வது வயதில் காலமானார்.
- இவர் காந்தியச் சித்தாந்தத்தைத் தனது வாழ்க்கையில் வெகுவாக பின்பற்றச் செய்தற்காகப் பிரபலமாக அறியப்பட்டதோடு இவருக்குப் பத்ம விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப் பட்டது.
- இவர் சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டவர் ஆவார்.
- இவர் 1942 ஆம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்றார்.
- இவர் வினோபா பாவேவுடன் இணைந்து பூதான் மற்றும் கிராமதான் இயக்கங்களை ஊக்குவிப்பதற்காகப் பணியாற்றினார்.
- இந்திய அரசானது சமூகத்திற்கு அவர் ஆற்றியப் பங்களிப்பிற்காக 2016 ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ என்ற நான்காவது உயரிய குடிமை விருதை அவருக்கு வழங்கி கௌரவித்தது.

## முன்னாள் தலைமை பொருளாதார நிபுணர்களின் புகைப்படம் கொண்ட சுவர்

- இந்தியாவில் பிறந்த கீதா கோபிநாத் சர்வதேச நாணய நிதியத்தின் 'முன்னாள் தலைமைப் பொருளாதார நிபுணர்களின் புகைப்படம் கொண்ட சுவரில்' இடம் பெற்று உள்ளார்.
- இந்தப் பெருமையைப் பெற்ற முதல் பெண் மற்றும் இரண்டாவது இந்தியர் இவர் ஆவார்.
- ரகுராம் ராஜன் இந்த பெருமையைப் பெற்ற முதல் இந்தியர் ஆவார்.
- இவர் 2003 மற்றும் 2006 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் சர்வதேச நாணய நிதியத்தின் தலைமைப் பொருளாதார நிபுணராகவும், ஒரு ஆராய்ச்சி இயக்குநராகவும் பணி ஆற்றியவர் ஆவார்
- கீதா கோபிநாத் 2018 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் தலைமைப் பொருளாதார நிபுணராக நியமிக்கப்பட்டார்.
- பின்னர் கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் முதல் துணை நிர்வாக இயக்குநராக பதவி உயர்வு பெற்றார்.

## ஜப்பான் பிரதமர்

- ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே சமீபத்தில் காலமானார்.
- ஒரு பிரச்சார மேடையில் உரையாற்றுகையில் அவர் துப்பாக்கியால் சுடப்பட்டார்.
- ஷின்சோ அபே நீண்ட காலம் ஜப்பானின் பிரதமராகப் பணியாற்றியவர் ஆவார்.
- அவர் ஆரம்பத்தில் 2006-2007 வரையும், பின்னர் மீண்டும் 2012 முதல் 2020 வரையிலும் பணியாற்றினார்.




## ஐக்கிய இராஜ்ஜியத்தின் பிரதமர்

- ஐக்கியப் பேரரசின் பழமைவாதக் கட்சியைச் சேர்ந்த பிரதமர் போரிஸ் ஜான்சன் தனது பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.
- புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்கும் ஒரு செயல்முறை முடியும் வரை ஜான்சன் அந்தப் பொறுப்பில் இருப்பார்.

## இந்திய இணைய உலகத்தின் தந்தை

- விதேஷ் சஞ்சார் நிகாம் லிமிடெட் (VSNL) என்ற நிறுவனத்தின் முன்னாள் தலைவர் பிரிஜேந்திர K. சிங்கால் காலமானார்.
- இவர் இந்திய இணைய உலகத்தின் தந்தை என அங்கீகரிக்கப்பட்டவர் ஆவார்.
- இவர் நிறுவனத்தினை நிர்வாகம் செய்வதில் அவரது வலுவான கருத்துக்கள் மற்றும் அச்சமின்மை போன்ற பண்புகளுக்காக அறியப்பட்டார்.

## கர்ச்சி திருவிழா

- ஒரு வார காலப் பாரம்பரிய விழாவான கர்ச்சி என்ற திருவிழாவானது, திரிபுராவின் கிழக்கத்தியப் புறநகர் பகுதியில் தொடங்கியது.
- இத்திருவிழாவின் போது 14 தெய்வங்களுக்கும் தேவிகளுக்கும் வழிபாடு நடத்தப்படும்.
- கர்ச்சி பூஜையானது பிரதானமாக ஒரு பழங்குடியினரின் பண்டிகையாகும்.
- ஆனால் அதன் தோற்றத்தின் அடிப்படையில் இது ஓர் இந்து மதப் பண்டிகையாகும்.

## தொல்பொருள் ஆய்வாளர் எனமுல் ஹக்

- பிரபல தொல்பொருள் ஆய்வாளர், வரலாற்றாசிரியர், கலை நிபுணர் மற்றும் வங்காள தேச தேசிய அருங்காட்சியகத்தின் முன்னாள் தலைமை இயக்குநரான டாக்டர் எனமுல் ஹக் காலமானார்.
- இவர் 2016 ஆம் ஆண்டில் ஏகுஷே பதக்கத்தினையும், 2020 ஆம் ஆண்டில் ஸ்வாதிநாத பதக்கத்தினையும் பெற்றார்.
- அவரதுப் பங்களிப்புகளுக்காக வேண்டி இந்திய அரசு அவருக்கு பத்மஸ்ரீ விருதினை வழங்கி கௌரவித்தது.

## திருமதி பிரபஞ்சப் பேரழகி

- தென் கொரியாவின் யோசு நகரில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் இந்தியாவின் பல்லவி சிங், திருமதி பிரபஞ்சப் பேரழகிப் பட்டத்தை வென்றுள்ளார்.
- இவர் 2020 ஆம் ஆண்டில் ஜெய்ப்பூரில் நடைபெற்ற திருமதி இந்தியா பட்டத்தை வென்றார்.
- பின்னர் 2021 ஆம் ஆண்டில் டெல்லியில் நடைபெற்ற ஆசிய அளவிலானப் போட்டியில் திருமதி இந்தோ-ஆசியா பிரபஞ்சப் பட்டத்தையும் இவர் வென்றார்.



## சுப்ரீம் ஆர்டர் ஆஃப் கிரிசாந்திமம் விருது

- ஜப்பான் அரசானது அதன் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே அவர்களுக்கு, சுப்ரீம் ஆர்டர் ஆஃப் கிரிசாந்திமம் என்ற விருதினை அவரது மரணத்திற்குப் பின் வழங்கி கௌரவிக்க முடிவு செய்தது.
- இது ஜப்பானின் மிக உயரிய விருதாகும்.
- ஜப்பானின் பேரரசர் மெய்ஜி 1876 ஆம் ஆண்டில் கிராண்ட் கார்டன் ஆஃப் தி ஆர்டர் என்ற விருதினை நிறுவினார்.
- ஜப்பானின் உயரிய விருதைப் பெற்ற நான்காவது முன்னாள் பிரதமர் இவர் ஆவார்.
- இந்த விருதானது ஐரோப்பிய விருதுகளைப் போலல்லாமல், மரணத்திற்குப் பின்னரும் வழங்கப் படலாம்.

## பேராயர்களுக்கான ஆலோசனைக் குழு

- போப் பிரான்சிஸ் உலகப் பேராயர்களைத் தேர்ந்தெடுப்பதில் அவருக்கு உதவ இரண்டு கன்னியாஸ்திரிகளையும், ஒரு சாதாரணப் பெண் என மூன்று பெண்களைக் கொண்ட குழுவை நியமித்துள்ளார்.
- அந்த மூன்று பெண்கள் அர்ஜென்டினாவின் சாதாரண பெண் மரியா லியா செர்வினோ, பிரெஞ்சு கன்னியாஸ்திரி யுவோன் ரெயுங்கோட் மற்றும் இத்தாலிய கன்னியாஸ்திரி ரஃபெல்லா பெட்ரினி ஆகியோர் ஆவர்.
- மாதத்திற்கு இரண்டு முறை, அந்தக் குழுவின் சர்வதேச உறுப்பினர் நாடுகள் தங்களது ஆலோசனைகளைப் பற்றி விவாதிக்க ரோம் நகரில் சந்திக்க உள்ளன.

## இலண்டன் இந்தியத் திரைப்பட விருது விழா

- இந்த ஆண்டு இலண்டன் இந்தியத் திரைப்பட விருது விழாவில் திரைப்படத் தயாரிப்பாளர்கள் அபர்ணா சென் மற்றும் நந்திதா தாஸ் ஆகியோருக்கு ஐகான் விருது வழங்கப் பட்டுள்ளது.
- இந்திய மற்றும் உலகச் சினிமாவிற்கு அவர்கள் ஆற்றியப் பங்களிப்பிற்காக வேண்டி இந்த விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- இயக்குநர் பான் நளினின், 'செல்லோ ஷோ' (தி லாஸ்ட் பிலிம் ஷோ) என்ற திரைப் படமானது இந்த ஆண்டில், பார்வையாளர்களால் சிறந்த திரைப்படமாக வாக்களிக்கப் பட்டு அதற்கான விருதை வென்றது.
- வருடாந்திர சதாய்ஜித் ரே குறும்படப் பிரிவில் 'ஜாக்ரன்' என்ற குறும்படமானது LIFF ஜூரி பரிசை வென்றது.

## கௌதம் அதானி - உலகின் நான்காவது பணக்காரர்




THE RICH LIST

| Rank | Name | Net worth ($ bn) |
|---|---|---|
| 1 | Elon Musk (Tesla, SpaceX) | 235.8 |
| 2 | Bernard Arnault & family (LVMH) | 156.7 |
| 3 | Jeff Bezos (Amazon) | 148.4 |
| 4 | Gautam Adani & family (infrastructure, commodities) | 116.4 |
| 5 | Bill Gates (Microsoft) | 104.6 |
| 6 | Larry Ellison (software) | 99.7 |
| 7 | Warren Buffett (Berkshire Hathaway) | 99.4 |
| 8 | Larry Page (Google) | 98.3 |
| 9 | Sergey Brin (Google) | 94.5 |
| 10 | Mukesh Ambani (Reliance Industries) | 90.1 |

Source: Forbes Real-Time Billionaires List

- கௌதம் அதானி, மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் நிறுவனர் பில்கேட்ஸ் அவர்களை விஞ்சி, உலகின் நான்காவது பணக்காரராக மாறியுள்ளார்.
- போர்ப்ஸ் நிகழ்நேரப் பணக்காரர்களுக்கானப் பட்டியலில் முகேஷ் அம்பானி 10வது இடத்தில் உள்ளார்.
- டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் நிறுவனர் எலோன் மஸ்க் இந்தப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார்.

## 68வது தேசியத் திரைப்பட விருதுகள் 2022

- கோவிட்-19 தொடர்பாக ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக இந்த ஆண்டின் விருது வழங்கும் விழாவானது, 2020 ஆம் ஆண்டிலிருந்து வெளியான திரைப்படங்களைக் கௌரவிக்கும் வகையில் விருதுகளை வழங்கியது.
- சூரரைப் போற்று திரைப்படமானது இந்த விருது வழங்கும் விழாவில் நான்கு முக்கிய விருதுகளுள் மூன்று விருதுகளை வென்றது.
- 'தன்ஹாஜி தி அன்சங் வாரியர்' என்ற திரைப்படமும் முக்கிய விருதுகளை வென்றது.
- தேசியத் திரைப்பட விருதுகள் ஆனது 1954 ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் நடத்தப் பட்டு வரும் ஒரு மிக முக்கியமான திரைப்பட விருது விழாவாகும்.
- சில முக்கிய விருதுகள்
    - சிறந்த திரைப்படம்: சூரரைப் போற்று
    - சிறந்த இயக்குனர்: அய்யப்பனும் கோஷியும் திரைப்படத்திற்காக சச்சிதானந்தன் K.R
    - சிறந்த நடிகர்: சூரரைப் போற்று திரைப்படத்திற்காக சூர்யா மற்றும் தன்ஹாஜி திரைப்படத்திற்காக அஜய் தேவ்கான்
    - சிறந்த நடிகை: சூரரைப் போற்று திரைப்படத்திற்காக அபர்ணா பாலமுரளி
    - சிறந்த பின்னணி இசை: சூரரைப் போற்று திரைப்படத்திற்காக G.V. பிரகாஷ் குமார்
    - சிறந்த துணை நடிகை: சிவரஞ்சனியும் இன்னும் சில பெண்களும் திரைப் படத்திற்காக லட்சுமி பிரியா சந்திரமௌலி
    - சிறந்த தொகுப்பு: சிவரஞ்சினியும் இன்றும் சில பெண்களும் திரைப்படத்திற்காக ஸ்ரீகர் பிரசாத்
    - சிறந்த திரைக்கதை: சூரரைப் போற்று திரைப்படத்திற்காக சுதா கொங்கரா மற்றும் மண்டேலா திரைப்படத்திற்காக மடோன் அஷ்வின்
    - தமிழில் சிறந்த திரைப்படம்: சிவரஞ்சினியும் இன்னும் சில பெண்களும்.
    - சிறந்த அறிமுக இயக்குனருக்கான இந்திரா காந்தி விருது: மண்டேலா (தமிழ்) திரைப் படத்திற்காக மடோன் அஷ்வின்
    - திரைப்படம் எடுப்பதற்கு மிகவும் உகந்த மாநிலம்: மத்தியப் பிரதேசம்

## உலகின் சிறந்த சிறு மற்றும் நடுத்தர நிறுவன வங்கி

- டெவலப்மென்ட் பேங்க் ஆஃப் சிங்கப்பூர் லிமிடெட் (DBS வங்கி) என்ற வங்கியானது யூரோமனி நிறுவனத்தினால் 'உலகின் சிறந்த சிறு மற்றும் நடுத்தர நிறுவன வங்கி' என அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

- வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை மேம்படுத்துவதற்காக வேண்டி சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுடன் (SMEs) இணைந்து உலகளாவியத் தொழில்துறை நிறுவனமாக இந்த வங்கி தனது நிலையை நிறுவியுள்ளது.
- இந்த வங்கிக்குச் சமீபத்தில் வழங்கப்பட்ட இந்த உலகின் சிறந்த சிறு மற்றும் நடுத்தர நிறுவன வங்கி என்ற அங்கீகாரத்தினை ஐக்கிய இராஜ்ஜியத்தினைச் சேர்ந்த முன்னணி நிதி வழங்கீட்டு நிறுவனமான யூரோமனி வழங்கியது.
- இந்த வங்கியானது 2018 ஆம் ஆண்டிலிருந்து இரண்டாவது முறையாக இந்த அங்கீகாரத்தினைப் பெற்றுள்ளது.
- இது பின்வரும் மூன்று விருதுகளையும் முதல் முறையாகப் பெற்றுள்ளது.
    - 2022 ஆம் ஆண்டிற்கான உலகின் சிறந்த நிதிப் புத்தாக்கம்
    - ஆசியாவின் சிறந்தச் செல்வ மேலாண்மை வங்கி 2022
    - ஆசியாவின் சிறந்த சிறு மற்றும் நடுத்தர நிறுவன வங்கி விருது 2022

## உலக ஆற்றல் பரிசு 2022

- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கௌசிக் ராஜசேகரா என்ற பேராசிரியர் மதிப்பு மிக்க உலக ஆற்றல் பரிசை வென்றுள்ளார்.
- மின் உற்பத்தி உமிழ்வைக் குறைக்கும் வகையிலான தொழில்நுட்பத்துடன், போக்குவரத்து மின்மயமாக்கல் மற்றும் ஆற்றல் திறன்மிக்க தொழில்நுட்பங்கள் போன்றவற்றில் அவர் ஆற்றிய சிறந்தப் பங்களிப்புகளுக்காக வேண்டி அவருக்கு இந்தப் பரிசானது வழங்கப் பட்டுள்ளது.
- மாஸ்கோ நகரில் அனுசரிக்கப்பட உள்ள ரஷ்ய எரிசக்தி வாரத்தின் போது இந்த விருது வழங்கும் விழாவானது நடைபெற உள்ளது.

## கமல்ஹாசனுக்கு தங்க நுழைவு இசைவுச் சீட்டு

- ஐக்கிய அரபு அமீரகமானது, தமிழ் நடிகர் கமல்ஹாசனுக்கு மதிப்புமிக்க தங்க நுழைவு இசைவுச் சீட்டினை வழங்கியுள்ளது.
- ஐக்கிய அரபு அமீரகத்தின் தங்க நுழைவு இசைவுச் சீட்டு என்பது ஐந்து முதல் பத்து ஆண்டுகள் வரையில் குடியிருப்பு இசைவினை வழங்கும் ஒரு நீண்ட கால குடியுரிமை நுழைவு இசைவுத் திட்டமாகும்.
- இதில் நுழைவு இசைவு ஆனது நிரந்தரமாக நீட்டிக்கப்படுகிறது.
- இது பல்வேறு தொழில்களில் உயர்செயல்திறன் கொண்டவர்களுக்கும், தொழில் வல்லுநர்களுக்கும், முதலீட்டாளர்களுக்கும் மற்றும் திறன் கொண்டவர்களுக்கும் வழங்கப் படுகிறது.

## அதிக வரி செலுத்தும் நபர்கள்

- நாட்டின் மேம்பாட்டில் ரஜினிகாந்த் மற்றும் அக்சய் குமார் ஆகியோர் ஆற்றியப் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில், வருமான வரித்துறை சார்பில் விருது வழங்கப் பட்டது.

- முறையாக வரி செலுத்தியதற்காக ரஜினிகாந்த்திற்கு விருது வழங்கப்பட்டது.
- இந்தியாவிலேயே அதிக வரி செலுத்துபவரான அக்சய் குமாருக்கு ‘சம்மான் பத்ரா’ விருது வழங்கப்பட்டது.

## வின்ஸ்டன் சர்ச்சில் தலைமைத்துவ விருது

- உக்ரைன் நாட்டின் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கிக்கு வின்ஸ்டன் சர்ச்சில் தலைமைத்துவ விருதானது வழங்கப்பட்டது.
- 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி 24 ஆம் தேதியன்று, உக்ரைன் மீது மேற்கொள்ளப்பட்ட ரஷ்ய படையெடுப்பிற்கு எதிராக அவர் நிலையாக நின்று போராடியதற்காக இந்த விருது அவருக்கு வழங்கப் பட்டது.
- இது 1940 ஆம் ஆண்டில் சர்ச்சில் எதிர் கொண்ட நிலையைப் போன்றதாகும்.
- வின்ஸ்டன் சர்ச்சில் தலைமைத்துவ விருதானது முதன்முதலில் 2006 ஆம் ஆண்டில் வழங்கப் பட்டது.
- வின்ஸ்டன் சர்ச்சில் இரண்டாம் உலகப் போரின் போதும், 1951 முதல் 1955 ஆம் ஆண்டு வரையிலும் ஐக்கியப் பேரரசின் பிரதமராகப் பணியாற்றினார்.

## இந்தியாவின் பணக்காரப் பெண்மணி

- HCL டெக்னாலஜிஸ் என்ற நிறுவனத்தின் தலைவர் ரோஷ்னி நாடார் மல்ஹோத்ரா இந்தியாவின் பணக்காரப் பெண்மணி என்ற தனது இடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளார்.
- நைக்கா என்ற நிறுவனத்தின் நிறுவனர் ஃபால்குனி நாயர் இந்தப் பட்டியலில் 2வது பணக்காரப் பெண்மணியாக உருவெடுத்துள்ளார்
- பயோகான் என்ற நிறுவனத்தின் கிரண் மசூம்தார் தரவரிசையில் ஒரு இடம் பின்தங்கி, நாட்டின் மூன்றாவது பணக்காரப் பெண்மணியாக இடம் பெற்றுள்ளார்.



# விளையாட்டுச் செய்திகள்

## கோசனோவ் நினைவு தடகளப் போட்டி

- 200 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் 3வது அதிவேக இந்தியப் பெண்மணி என்ற ஒரு பெருமையைத் தனலட்சுமி பெற்றார்.
- கஜகஸ்தானின் அல்மாட்டி நகரில் நடைபெற்ற கோசானோவ் நினைவு தடகளப் போட்டியில் 200 மீட்டர் பிரிவில் அவர் தனது தனிப்பட்டச் சாதனை அளவிலான நேரத்தில் அந்தத் தூரத்தினைக் கடந்து தங்கம் வென்றார்.
- தேசியச் சாதனையாளர்களான சரஸ்வதி சாஹா (22.82 வினாடிகள்) மற்றும் ஹிமா தாஸ் (22.88 வினாடிகள்) ஆகியோருக்குப் பிறகு 23 வினாடிகளில் இந்தத் தூரத்தினைக் கடந்த மூன்றாவது இந்தியப் பெண்மணி இவரே ஆவார்.
- தனலட்சுமி சேகர் தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்தியத் தடகள வீராங்கனை ஆவார்.
- பஞ்சாப்பைச் சேர்ந்த இந்திய வட்டு எறிதல் வீராங்கனையான நவ்ஜீத் தில்லான் தங்கப் பதக்கம் வென்றார்.

## அதானி ஸ்போர்ட்ஸ்லைன் நிறுவனம்

- இது அதானி குழுமத்தின் ஒரு விளையாட்டுத்துறைப் பிரிவாகும்.
- இது இந்திய ஒலிம்பிக் சங்கத்துடன் (IOA) ஒரு நீண்ட கால முதன்மை நிதி ஆதரவு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இது வரவிருக்கும் பர்மிங்காம் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் 2022, ஹாங்சோ ஆசிய விளையாட்டுப் போட்டிகள் 2022 மற்றும் பாரீஸ் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் 2024 ஆகியவற்றின் போது இந்தியா சார்பாக பங்கேற்கும் அணிக்கான அதிகாரப்பூர்வப் பங்குதாரராக இருக்கும்.
- இது முன்னதாக 2021 ஆம் ஆண்டில் டோக்கியோ ஒலிம்பிக்கின் போது இந்தியக் குழுவுடன் தொடர்புடையது.

## நீரஜ் சோப்ராவின் தேசியச் சாதனை

- நீரஜ் சோப்ரா, ஸ்வீடன் நாட்டின் ஸ்டாக்ஹோம் டயமண்ட் லீக் போட்டியில் 89.94 மீட்டர் தூரம் வரை ஈட்டி எறிந்து ஒரே மாதத்தில் இரண்டாவது முறையாக ஒரு புதிய தேசியச் சாதனையைப் படைத்துள்ளார்.
- இதனால் சமீபத்தில், 89.30 மீட்டர் தூரம் வரை ஈட்டி எறிந்த தனது முந்தையச் சாதனையை சோப்ரா முறியடித்தார்.
- தனது மூன்றாவது முயற்சியில் 90.31 மீட்டர் தூரம் வரை ஈட்டி எறிந்த கிரெனடாவின் ஆண்டர்சன் பீட்டர்ஸ் என்பவருக்கு அடுத்தபடியாக சோப்ரா இரண்டாவது இடத்தைப் பெற்றார்.

## ஜஸ்பிரித் பும்ரா - உலகச் சாதனை

- இந்தியக் கிரிக்கெட் அணித் தலைவர் ஜஸ்பிரித் பும்ரா 35 ரன்கள் எடுத்து, டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஒரு ஓவரில் அதிகபட்ச ரன்களை எடுத்த வீரர் என்ற உலக சாதனையைப் படைத்தார்.
- இவர் இங்கிலாந்தின் ஸ்டுவர்ட் பிராட் என்பவரின் பந்து வீச்சில் ஆடி 29 ஓட்டங்கள் எடுத்ததுடன் 6 ஓட்டங்கள் உபரி என்ற வகையில் கூடுதலாக எடுத்து இந்தச் சாதனையைப் படைத்தார்.
- இதன் மூலம், இவர் மேற்கிந்தியத் தீவுகளின் பிரையன் லாராவின் சாதனையை ஒரு ரன் வித்தியாசத்தில் முறியடித்தார்.
- லாரா, 2003-04 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஒரு டெஸ்ட் போட்டியில் 28 ரன்கள் எடுத்து, தென்னாப்பிரிக்காவின் ராபின் பீட்டர்சனின் சாதனையை முறியடித்தார்.
- முன்னாள் ஆஸ்திரேலிய வீரர் ஜார்ஜ் பெய்லியும் 28 ரன்கள் எடுத்து சாதனை ஒன்றைப் படைத்திருந்தார்.

## புதிய பந்துவீச்சு சாதனை

- ஜஸ்பிரித் பும்ரா இங்கிலாந்தில் நடைபெற்ற டெஸ்ட் போட்டித் தொடரின் போது அதிக விக்கெட்களை (21) வீழ்த்திய இந்தியப் பந்துவீச்சாளர் என்ற ஒரு புதிய சாதனையைப் படைத்துள்ளார்.
- ஜஸ்பிரித் பும்ராவின் இந்தப் புதிய சாதனையானது, 2014 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஐந்து போட்டிகள் கொண்ட தொடரின் போது புவனேஷ்வர் குமார் வீழ்த்திய 19 விக்கெட்டுகளின் சாதனையை முறியடித்துள்ளது.

| Player | Season | Matches | Wickets |
|---|---|---|---|
| Jasprit Bumrah | 2021/22 | 5 | 21 |
| Bhuvneshwar Kumar | 2014 | 5 | 19 |
| Zaheer Khan | 2007 | 3 | 18 |
| Ishant Sharma | 2018 | 5 | 18 |
| Subhash Gupte | 1959 | 5 | 17 |

## 15 வயதிற்கு உட்பட்டவர்களுக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டி

- ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய அணி பட்டத்தை வென்றுள்ளது
- பஹ்ரைனில் நடந்த 15 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்தச் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய ஆண் மல்யுத்த வீரர்கள் 4 தங்கம் உட்பட ஏழு பதக்கங்களை வென்றனர்.
- இதில் நான்கு தங்கப் பதக்கங்கள், இரண்டு வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப் பதக்கங்கள் அடங்கும்.
- இதற்கு முன் இந்திய மல்யுத்த வீராங்கனைகள் 6 தங்கம் மற்றும் மூன்று வெள்ளிப் பதக்கங்களை வென்றிருந்தனர்.

## SENA குழும நாடுகளில் டெஸ்ட் விக்கெட்டுகள்

- SENA நாடுகளில், 100 விக்கெட்டுகளை வீழ்த்திய 6வது இந்தியப் பந்துவீச்சாளர் மற்றும் 5வது வேகப் பந்து வீச்சாளர் என்ற பெருமையை ஜஸ்பிரித் பும்ரா பெற்றார்.
- இதன் மூலம், அவர் கபில்தேவ், ஜாகீர் கான், இஷாந்த் சர்மா, முகமது ஷமி மற்றும் அனில் கும்ப்ளே போன்ற ஜாம்பவான்கள் நிறைந்தப் பட்டியலில் இணைந்தார்.
- SENA குழும நாடுகளில் தென்னாப்பிரிக்கா, இங்கிலாந்து, நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலியா ஆகியவை அடங்கும்.

## காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் 2022

- 2022 ஆம் ஆண்டு பர்மிங்காம் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் மகளிர் கிரிக்கெட் போட்டி அறிமுகமாக உள்ளது.
- காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் கிரிக்கெட் விளையாடப்படுவது இது இரண்டாவது முறையாகும்.
- 1998 ஆம் ஆண்டு கோலாலம்பூர் நகரில் நடைபெற்ற காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் ஆண்களுக்கான ஒருநாள் கிரிக்கெட் போட்டி விளையாட்டுப் பட்டியலில் சேர்க்கப் பட்டது.
- 2022 ஆம் ஆண்டு பர்மிங்காம் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் டி20 கிரிக்கெட் போட்டி அறிமுகமாக உள்ளது.
- இந்தப் போட்டியில் மகளிர் கிரிக்கெட் அணியானது முதல் முறையாக பங்கேற்பதை இது குறிக்கும்.

## எலோர்டா கோப்பைப் போட்டி

- கஜகஸ்தானின் நூர்-சுல்தான் என்னுமிடத்தில் நடைபெற்ற எலோர்டா கோப்பைப் போட்டியில் இளையோர் உலகக் குத்துச்சண்டை சாம்பியன்களான அல்ஃபியா பதான் மற்றும் கிதிகா ஆகியோர் தங்கப் பதக்கத்தினை வென்றுள்ளனர்.
- மேலும் இரு இந்தியக் குத்துச்சண்டை வீராங்கனைகளான கலைவாணி சீனிவாசன் மற்றும் ஜமுனா போரோ ஆகியோர் வெள்ளிப் பதக்கங்களை வென்றனர்.
- இந்தப் போட்டியில் இந்தியா, உஸ்பெகிஸ்தான் மற்றும் கஜகஸ்தான், கியூபா, சீனா மற்றும் மங்கோலியா போன்ற நாடுகளின் வீரர்கள் கலந்து கொண்டனர்.

## உலக மாஸ்டர்ஸ் தடகள சாம்பியன்ஷிப் போட்டி

- 94 வயதான அரியானா மாநிலத்தினைச் சேர்ந்த பகவானி தேவி தாகர் 2022 ஆம் ஆண்டு உலக மாஸ்டர்ஸ் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவிற்காக ஒரு தங்கம் மற்றும் 2 வெண்கலப் பதக்கங்களை வென்றார்.
- பின்லாந்தின் தாம்பியரில் நடைபெற்ற 2022 ஆம் ஆண்டின் உலக மாஸ்டர்ஸ் தடகள சாம்பியன்ஷிப் போட்டியின் 100 மீட்டர் தடை தாண்டுதல் போட்டியில் இவர் தங்கப் பதக்கத்தினைப் பெற்றார்.
- மேலும் இவர் குண்டு எறிதலில் வெண்கலப் பதக்கத்தினை வென்றார்.



## காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் - 2022

- இங்கிலாந்தின் பர்மிங்காமில் நடைபெறவுள்ள காமன்வெல்த் போட்டியில் இந்திய அணியை ஹர்மன்ப்ரீத் கவுர் வழி நடத்த உள்ளார்.
- இந்தப் பல்துறை விளையாட்டு நிகழ்வில் மகளிருக்கான டி20 சர்வதேசப் போட்டி இடம் பெறுவது இதுவே முதல் முறையாகும்.
- இந்திய அணியானது, ஆஸ்திரேலியா, பார்படாஸ் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் A பிரிவில் போட்டியிட உள்ளது.




## விம்பிள்டன் ஆடவர் போட்டி

- செர்பியாவின் நோவக் ஜோகோவிச் ஏழாவது விம்பிள்டன் ஆடவர் போட்டியின் பட்டத்தையும் 21வது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தையும் வென்றார்.
- 2022 ஆம் ஆண்டு விம்பிள்டன் சாம்பியன்ஷிப் என்பது லண்டனில் நடைபெற்று வரும் ஒரு கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டியாகும்.

| S.No | Category | Winner |
|---|---|---|
| 1 | Men's Singles | N. Djokovic |
| 2 | Women's Singles | E. Rybakina |
| 3 | Men's Doubles | M. Ebden & M. Purcell |
| 4 | Women's Doubles | K. Siniaková & B. Krejčíková |
| 5 | Mixed Doubles | D. Krawczyk & N. Skupski |

## 20 வயதிற்குட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்தச் சாம்பியன்ஷிப் போட்டி

- பஹ்ரைன் நாட்டின் மனாமா நகரில் நடைபெற்ற 20 வயதிற்குட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்தச் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய அணி 22 பதக்கங்களை வென்றது.
- இந்திய அணி 4 தங்கப் பதக்கங்கள், 9 வெள்ளி மற்றும் 9 வெண்கலப் பதக்கங்களை வென்றது.
- இந்திய அணியில் ஆடவர் மற்றும் மகளிர் மல்யுத்த வீரர்கள் அடங்குவர்.



## ISSF உலகக் கோப்பை போட்டி

- அஸ்பெரிஜானின் பாகு நகரத்தில் நடைபெற்ற ISSF உலகக் கோப்பையில் மூத்த இந்தியத் துப்பாக்கி சுடுதல் வீரர் மைராஜ் அகமது கான் ஆண்களுக்கான ஸ்கீட் என்ற துப்பாக்கிச் சுடுதல் பிரிவில் தங்கப் பதக்கம் வென்ற முதல் நபர் என்ற ஒரு வரலாற்றினைப் படைத்தார்.
- கொரியாவைச் சேர்ந்த மின்சு கிம் இரண்டாம் இடத்தையும், பிரிட்டனைச் சேர்ந்த பென் லெவெலின் மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.




## சிங்கப்பூர் ஓபன் பட்டம்

- 2022 ஆம் ஆண்டு சிங்கப்பூர் ஓபன் BWF சூப்பர் 500 போட்டியில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் P.V. சிந்து பட்டத்தைக் கைப்பற்றினார்.
- 2019 ஆம் ஆண்டில் உலக சாம்பியன்ஷிப் பட்டத்தினை வென்ற பிறகு, சிந்து வென்ற முதல் சூப்பர் 500 பட்டம் இதுவாகும்.
- 2022 ஆம் ஆண்டில், அவர் இரண்டு சூப்பர் 300 பட்டங்களை வென்றுள்ளார்.
- சிங்கப்பூர் ஓபன் பேட்மிண்டன் போட்டியானது 1929 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் நடத்தப்பட்டு வருகிறது.



## 36வது தேசிய விளையாட்டுப் போட்டியின் சின்னம்

- 36வது தேசிய விளையாட்டுப் போட்டிகள் ஆனது, செப்டம்பர் 28 முதல் அக்டோபர் 10 வரை குஜராத் நகரில் நடைபெறவுள்ளது.
- 36வது தேசிய விளையாட்டுப் போட்டிக்கான (2022) ஆசியச் சிங்கம் இடம் பெற்றச் சின்னமானது சமீபத்தில் வெளியிடப்பட்டது.

## உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டி 2025

- உலகத் தடகள போட்டிகள் சபையானது 2025 ஆம் ஆண்டின் உலகத் தடகள சாம்பியன் ஷிப் போட்டியினை நடத்துவதற்கு வேண்டி ஜப்பானின் டோக்கியோ நகரினைத் தேர்வு செய்துள்ளது.

- 18வது உலக தடகள சாம்பியன்ஷிப் (2022) போட்டியானது அமெரிக்காவின் ஓரிகான் நகரில் தொடங்கியுள்ளது.
- ஹங்கேரியில் உள்ள புத்தபெஸ்ட் நகரில் 2023 ஆம் ஆண்டின் போட்டி நடைபெற உள்ளது.
- 2024 ஆம் ஆண்டின் உலக நாடுகளுக்கிடையிலான தடகள சாம்பியன்ஷிப் போட்டியானது குரோஷியாவின் மெடுலின் மற்றும் புலா ஆகிய நகரங்களில் நடைபெறும்.
- 2026 ஆம் ஆண்டு உலக நாடுகளுக்கிடையிலான தடகள சாம்பியன்ஷிப் போட்டியானது அமெரிக்காவின் புளோரிடாவின் டல்லாஹஸ்ஸீ நகரில் நடைபெற உள்ளது.

## உலகத் தடகள சாம்பியன்ஷிப் போட்டி - உலக சாதனை

- உலகத் தடகள சாம்பியன்ஷிப் போட்டியின் 100 மீட்டர் தடை ஓட்டத்தில் டோபி அமுசன் தங்கம் வென்றார்.
- இந்தப் போட்டியில் நைஜீரியா வென்ற முதல் தங்கப் பதக்கம் இதுவாகும்.
- தனது அரையிறுதிப் போட்டியில் 12.12 வினாடிகளில் அந்தத் தூரத்தினைக் கடந்து உலகச் சாதனையை முறியடித்ததோடு, இறுதிப் போட்டியிலும் அவர் அதிவேகமாக அந்த தூரத்தினைக் கடந்தார்.
- ஸ்வீடனின் அர்மண்ட் டுப்லாண்டிஸ் ஒரு புதிய உலகச் சாதனையைப் படைத்து, உயரம் தாண்டுதல் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றார்.

## உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டி – 2022


- உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியானது முதல்முறையாக அமெரிக்காவில் நடத்தப் பட்டது.
- பதக்கப் பட்டியலைப் பொறுத்த வரையில், அமெரிக்க அணி கடந்த 10 நாட்களில் தங்களின் போட்டி நேரத்தைச் சிறப்பாகப் பயன்படுத்தியது.
- இதில் இந்தியா ஒட்டு மொத்தமாக 33வது இடத்தையும், ஆசிய அளவில் சீனா, ஜப்பான் மற்றும் கஜகஸ்தானுக்கு அடுத்தபடியாக நான்காவது இடத்தையும் பிடித்தது.
- அல்ஜீரியா, புர்கினா பாசோ, குரோஷியா, கிரீஸ், தென் கொரியா ஆகிய நாடுகள் தலா 1 வெள்ளிப் பதக்கத்துடன் பதக்கப் பட்டியலில் இந்தியாவுடன் சேர்த்து 33வது இடத்தில் உள்ளன.

| இடம் | நாடு | பதக்கங்கள் |
|---|---|---|
| 1 | அமெரிக்கா | 33 |
| 2 | எத்தியோப்பியா | 10 |
| 3 | ஜமைக்கா | 10 |
| 33 | இந்தியா | 1 |

# முக்கிய தினங்கள்

## தேசிய மருத்துவர்கள் தினம் - ஜூலை 01

- இத்தினமானது முதன்முதலில் 1991 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.
- வங்காளத்தின் இரண்டாவது முதலமைச்சரான டாக்டர் பிதான் சந்திர ராய் அவர்களின் பங்களிப்பை அங்கீகரிப்பதற்காக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- 1882 ஆம் ஆண்டு ஜூலை 01 ஆம் தேதியன்று பிறந்த இவர் 1962 ஆம் ஆண்டில் அதே தேதியில் உயிர் இழந்தார்.
- முன்னணியில் உள்ள குடும்ப மருத்துவர்கள் என்பது 2022 ஆம் ஆண்டின் இந்தத் தினத்திற்கான கருத்துருவாகும்.




## சரக்கு மற்றும் சேவை வரி தினம் - ஜூலை 01

- 2017 ஆம் ஆண்டு ஜூன் 30 மற்றும் ஜூலை 01 ஆகிய தினங்களுக்கு இடைப்பட்ட இரவில் நாடாளுமன்றத்தின் மத்திய மன்றத்தில் நடைபெற்ற விழாவில் சரக்கு மற்றும் சேவை வரி அறிமுகப்படுத்தப்பட்டது.
- புதிய வரி விதிப்பு நடைமுறைப் படுத்தப்பட்ட ஓராண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் 2018 ஆம் ஆண்டு ஜூலை 01 ஆம் தேதியன்று இத்தினமானது முதன்முதலில் அனுசரிக்கப்பட்டது.
- இது "ஒரு நாடு-ஒரு சந்தை-ஒரு வரி" என்ற ஒரு கருத்தாக்கத்துடன் அறிமுகப் படுத்தப் பட்டது.
- சரக்கு மற்றும் சேவை வரி என்பது ஒரு மறைமுக, பல கட்ட, நுகர்வு அடிப்படையிலான வரி அமைப்பாகும்.
- இருப்பினும், பெட்ரோலியம், மதுபானம், முத்திரைத் தாள் வரி உள்ளிட்டவை சரக்கு மற்றும் சேவை வரியில் சேர்க்கப்படவில்லை.
- இந்தப் பொருட்கள் மீது பழைய வரி முறையைப் பயன்படுத்தப்படுகின்றன.

## பட்டயக் கணக்காளர்கள் தினம் - ஜூலை 01

- ❖ இது இந்தியப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் (ICAI) நிறுவப்பட்ட தினம் என்றும் அழைக்கப்படுகிறது.
- ❖ இந்தத் தினமானது 1949 ஆம் ஆண்டு ஜூலை 01 ஆம் தேதியில் இந்தியப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் (ICAI) நிறுவப் பட்டதை நினைவுகூரும் வகையில் அனுசரிக்கப் படுகிறது.
- ❖ இந்தியாவின் மிகப் பழமையான தொழில்முறை நிறுவனங்களில் இந்தியப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனமும் ஒன்றாகும்.
- ❖ இது உறுப்பினர்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் உலகின் இரண்டாவது பெரிய தொழில்முறை கணக்கியல் மற்றும் நிதி அமைப்பு ஆகும்.
- ❖ இது இந்திய நாடாளுமன்றத்தினால் உருவாக்கப்பட்ட நாட்டின் முதல் தேசியத் தொழில்முறைக் கணக்கியல் அமைப்பு ஆகும்.

## உலக விளையாட்டுத் துறையின் பத்திரிகையாளர் தினம் - ஜூலை 02

- ❖ விளையாட்டுத் துறையை ஊக்குவிக்கச் செய்வதற்காக விளையாட்டுத் துறை ஊடகவியலாளர்கள் மேற்கொள்ளும் சேவைகளைக் கொண்டாடச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ விளையாட்டுத் துறை ஊடகவியல் என்பது விளையாட்டு தொடர்பான எந்தவொரு துறை அல்லது தலைப்பு தொடர்பான தகவல்களில் கவனம் செலுத்துகின்ற ஒரு வகையான அறிக்கையிடல் ஆகும்.
- ❖ விளையாட்டுத் துறைப் பத்திரிகையாளர்கள் அச்சகம், ஒளிபரப்பு மற்றும் இணையம் உள்ளிட்ட பல்வேறு ஊடகத் தளங்களில் பணிபுரிகின்றனர்.
- ❖ சர்வதேச விளையாட்டுப் பத்திரிகையாளர் சங்கம் (AIPS) ஆனது 1994 ஆம் ஆண்டில் உலக விளையாட்டுத் துறைப் பத்திரிகையாளர் தினத்தை நிறுவியது.

## சர்வதேசக் கூட்டுறவு தினம் – ஜூலை 02

- ❖ 1992 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை இந்தத் தினத்தினை அறிவித்தது.
- ❖ சர்வதேசக் கூட்டுறவுக் கூட்டணி நிறுவப்பட்டதன் நூற்றாண்டு விழாவைக் குறிக்கும் வகையில் இந்தத் தேதியானது தேர்வு செய்யப்பட்டது.
- ❖ கூட்டுறவுச் சங்கங்கள் ஆனது இந்த ஆண்டு 100வது சர்வதேசக் கூட்டுறவு தினத்தை கொண்டாடின.
- ❖ இத்தினமானது ஐக்கிய நாடுகளின் சர்வதேசக் கூட்டுறவு ஆண்டான 2012 ஆம் ஆண்டிலிருந்து இந்த ஆண்டு வரையிலான ஒரு தசாப்தத்தைக் குறிக்கிறது.
- ❖ இந்தியாவில் 100வது சர்வதேசக் கூட்டுறவு தினம் ஆனது, இந்திய அரசின் கூட்டுறவு அமைச்சகம் மற்றும் இந்தியத் தேசியக் கூட்டுறவு ஒன்றியம் (NCUI) ஆகியவற்றினால் இணைந்து ஜூலை 04 ஆம் தேதியன்று புது டெல்லியில் உள்ள விஞ்ஞான் பவனில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- இந்தியத் தேசியக் கூட்டுறவு ஒன்றியம் என்பது கூட்டுறவுக் கல்வி மற்றும் பயிற்சி ஆகியவற்றினை வழங்குவதை மையமாகக் கொண்டு இந்தியாவில் இயங்கும் கூட்டுறவு நிறுவனங்களின் ஒரு உயர்நிலை அமைப்பாகும்.
- 100வது சர்வதேசக் கூட்டுறவு தினத்தின் கருத்துரு, "கூட்டுறவுகள் ஒரு சிறந்த உலகத்தை உருவாக்குகின்றன" என்பதாகும்.
- இந்தியாவில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களானது உலகிலேயே மிகப்பெரியது ஆகும்.
- AMUL, IFFCO, KRIBHCO, NAFED போன்றவை இந்தியாவில் உள்ள நன்கு அறியப்பட்ட வெற்றி பெற்ற சில கூட்டுறவு நிறுவனங்கள் ஆகும்.

## உலக அடையாளம் காண இயலாதப் பறக்கும் பொருட்கள் தினம் - ஜூலை 02

- அடையாளம் காண இயலாதப் பறக்கும் பொருள்கள் (UFO) சந்தேகத்திற்கு இடமின்றி இருப்பதற்காக உலக அடையாளம் காண இயலாதப் பறக்கும் பொருட்கள் தின அமைப்பினால் (WUFODO) உறுதி செய்யப்பட்ட தினமாகும்.
- உலகில் முதன்முறையாக அடையாளம் காண இயலாதப் பறக்கும் பொருள்கள் தென்பட்ட இரண்டு முக்கியமான தினங்களை இது நினைவு கூறுகிறது.
- 1947 ஆம் ஆண்டு ஜூன் 24 ஆம் தேதி, கென்னத் அர்னால்ட் என்ற விமானி பறக்கும் தட்டு போன்ற ஒரு தோற்றத்தைப் பார்த்ததாகக் கூறியதை வைத்து இது முதன்முதலில் தென்பட்டதாக கூறப்படுகிறது.

## சர்வதேச நெகிழிப் பைகள் இல்லாத தினம் – ஜூலை 03

- உலகெங்கிலும் உள்ள நெகிழிப் பைகளை ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் முறையைத் தவிர்க்கும் நோக்கத்திற்காக வேண்டி பேக் ஃப்ரீ வேர்ல்ட் என்ற அமைப்பு மேற்கொண்ட முன்னெடுப்பாகும்.
- ஜீரோ வேஸ்ட் ஐரோப்பா என்ற அமைப்பின் (ZWE) உறுப்பினரான ரெஸெரோ, 2008 ஆம் ஆண்டு ஜூலை 03 ஆம் தேதியன்று முதன்முதலில் சர்வதேச நெகிழிப் பை இல்லாத தினம் அனுசரிக்கப்படும் முறைமையைத் துவக்கினார்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'சுழிய அளவு பைகள் - சுழிய அளவு கழிவுகள்' என்பதாகும்.

## உலக விலங்குவழித் தொற்று தினம் - ஜூலை 06

- காய்ச்சல், எபோலா மற்றும் வெஸ்ட் நைல் வைரஸ் போன்ற விலங்குவழித் தொற்று நோய்க்கு எதிராக அளிக்கப்பட்ட முதல் தடுப்பூசியின் நினைவாக இத்தினமானது குறிக்கப் பட்டுள்ளது.
- விலங்குவழித் தொற்று நோய்கள் வைரஸ்கள், ஒட்டுண்ணிகள், பாக்டீரியாக்கள் மற்றும் பூஞ்சைகளால் ஏற்படுகின்றன.
- இந்தத் தினமானது 1885 ஆம் ஆண்டு ஜூலை 06 ஆம் தேதியன்று, விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்கு பரவக்கூடிய விலங்குவழித் தொற்று நோய்களைப் பற்றி அறியச் செய்வதற்காகவும் அது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் வேண்டி நிறுவப் பட்டது.

- ❖ இது வெறிநாய்க்கடி நோய்க்கு எதிரான முதல் தடுப்பூசியின் முதல் தவணையினை வழங்கிய பிரெஞ்சு உயிரியலாளர் லூயிஸ் பாஸ்டர் அவர்களை நினைவு கூருகிறது.

## உலக சாக்லேட் தினம் - ஜூலை 07

- ❖ இந்தத் தினமானது ஐரோப்பாவில் 1550 ஆம் ஆண்டில் சாக்லேட் முதன்முதலில் அறிமுகப் படுத்தப்பட்ட தினமாகும்.
- ❖ முதன்முதலில் சாக்லேட் நுகர்வு ஆனது மெசோ அமெரிக்காவில் பதிவு செய்யப்பட்டது.
- ❖ இன்றைய மெக்சிகோ நகரானப் பண்டைய மெசோ அமெரிக்காவில், மக்கள் கோகோ காய்களை "கடவுளின் உணவாக" கருதினர்.
- ❖ திருமணத்தின் நம்பகத் தன்மையைக் குறிக்கும் ஒரு வழிமுறையாக அங்கு சாக்லேட் உட்கொள்ளப்பட்டதாக நம்பப் படுகிறது.

## உலக கிஸ்வாஹிலி மொழி தினம் – ஜூலை 07




- ❖ யுனெஸ்கோ அமைப்பின் உறுப்பினர் நாடுகள் முன்வைத்த ஒரு பிரகடனத்தைத் தொடர்ந்து இந்தத் தினமானது கடைப்பிடிக்கப்படுகிறது.
- ❖ இந்த ஆண்டில் இத்தினமானது முதல்முறையாக அனுசரிக்கப்படுகிறது.
- ❖ இது 2021 ஆம் ஆண்டில் நடைபெற்ற யுனெஸ்கோவின் 41வது அமர்வின் போது ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- ❖ இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, ‘அமைதி மற்றும் செழுமைக்கான கிஸ்வாஹிலி’ என்பதாகும்.
- ❖ கிஸ்வாஹிலி மொழியானது ஆப்பிரிக்கா மற்றும் அதன் துணை-சஹாரா பகுதிகளில் பரவலாகப் பேசப்படுகிறது.
- ❖ ஆப்பிரிக்க ஒன்றியத்தின் அதிகாரப்பூர்வ மொழியாக அறிவிக்கப்பட்ட ஒரே ஆப்பிரிக்க மொழி இதுவாகும்.
- ❖ ஐக்கிய நாடுகள் சபை, இவ்வாறு அங்கீகரித்த முதல் ஆப்பிரிக்க மொழியும் இதுவே ஆகும்.

## வன மஹோத்சவம் - ஜூலை 01 முதல் 07 வரை

- வன மஹோத்சவம் என்பது 1950 ஆம் ஆண்டில் K.M. முன்ஷி அவர்களால் தொடங்கப் பட்டது.
- காடுகளைப் பாதுகாத்தல் மற்றும் மரங்களை நடுதல் ஆகியவை குறித்து பொது மக்களிடையே ஆர்வத்தினை உருவாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேலும், மரங்களின் நன்மைகள் மற்றும் பாதுகாப்புப் பற்றியும், மரங்களை வெட்டச் செய்வதால் ஏற்படும் தீமைகள் பற்றியும் இந்த நாளில் விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் நடத்தப் படுகின்றன.

## தேசிய மீனவர் தினம் - ஜூலை 10


- நாடு முழுவதும் உள்ள அனைத்து மீனவ மக்கள், மீன் விவசாயிகள் மற்றும் இத்துறை தொடர்பான பங்குதாரர்களுடன் ஒற்றுமையை வெளிப்படுத்தச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அறிவியலாளர்களான டாக்டர் K.H.அலிகுன்ஹி மற்றும் டாக்டர் H.L.சௌத்ரி ஆகியோரின் நினைவாக இந்த தினம் கொண்டாடப் படுகிறது.
- இந்த இருவரும் 1957 ஆம் ஆண்டு ஜூலை 10 ஆம் தேதியன்று இந்தியாவின் முக்கியப் பயிர்களில் ஹைபோபைசேஷன் முறையை (தூண்டப்பட்ட இனப்பெருக்கத் தொழில் நுட்பம்) வெற்றிகரமாக நிரூபித்தனர்.
- நாட்டின் பொருளாதார மற்றும் ஒட்டு மொத்த வளர்ச்சியில் மீன்பிடித் துறை முக்கிய பங்கு வகிக்கிறது.
- இது "சூரிய உதயத் துறை" என்றும் குறிப்பிடப்படுகிறது.

## உலக மக்கள் தொகை தினம் - ஜூலை 11

- உலகளாவிய மக்கள்தொகைப் பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்காக இந்தத் தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- "8 பில்லியன்கள் மக்கள்தொகை கொண்ட உலகம்: அனைவருக்குமான ஒரு நெகிழ் திறன்மிக்க எதிர்காலத்தை நோக்கி - வாய்ப்புகளைப் பயன்படுத்துதல் மற்றும் அனைவருக்குமான உரிமைகள் மற்றும் தேர்வுகளை உறுதி செய்தல்" என்ற ஒரு கருத்துருவின் கீழ் இத்தினமானது கொண்டாடப்பட்டது.
- ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்ட அமைப்பானது 1989 ஆம் ஆண்டில் "உலக மக்கள் தொகைத் தினத்தை" அனுசரிக்கத் தொடங்கியது.
- 1987 ஆம் ஆண்டு ஜூலை 11 ஆம் தேதியன்று உலக மக்கள் தொகையானது 5 பில்லியனை எட்டிய பிறகு இந்த முடிவு எடுக்கப்பட்டது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது இந்தத் தினத்தினை 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் அங்கீகரித்துள்ளது.

## தம்மசக்கர தினம் 2022

- 2022 ஆம் ஆண்டின் தம்மசக்கர தினம் ஆனது உத்தரப் பிரதேசத்தின் சாரநாத் நகரில் அனுசரிக்கப்பட்டது.
- இந்தக் கொண்டாட்டங்கள் ஆனது "ஆஷாத பூர்ணிமா" அன்று, "சர்வதேச புத்தக் கூட்டமைப்புடன் இணைந்து கலாச்சார அமைச்சகத்தினால் நடத்தப்பட்டது.
- வைஷாக புத்தப் பூர்ணிமாவிற்குப் பிறகு, பௌத்தர்களுக்கு இரண்டாவது மிக முக்கியமானப் புனித நாளாக ஆஷாத பூர்ணிமா கருதப்படுகிறது.
- புத்தரின் முதல் போதனையை நினைவு கூரும் வகையில் இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- இது தம்மச் சக்கரத்தின் முதல் சுழற்சி (திரிபீடக போதனை) நிகழ்வாகக் கருதப் படுகிறது".
- சாரநாத்தில் ஆற்றிய தனது முதல் பிரசங்கத்தின் போது, புத்தர் தர்மசக்கரப் பிரவர்த்தனச் சூத்திரத்தைப் போதித்தார்.




## தமிழ்நாடு தினம் - ஜூலை 18

- தமிழ்நாடு மாநிலம் உருவானதை நினைவு கூரும் வகையில் தமிழ்நாடு தினம் கொண்டாடப் படுகிறது.
- தமிழ்நாடு மாநிலம் ஆனது 1956 ஆம் ஆண்டு நவம்பர் 01 ஆம் தேதியன்று மெட்ராஸ் மாநிலம் என்ற பெயரில் உருவாக்கப்பட்டது.
- அண்ணாதுரை அவர்களின் அரசால் சென்னை மாநிலச் சட்டப் பேரவையில் தமிழ்நாடு எனப் பெயர் மாற்றம் செய்யக் கோரி ஒருமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.
- 1967 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18 ஆம் தேதியன்று, மதராஸ் மாநிலம் அதிகாரப் பூர்வமாகத் தமிழ்நாடு என்று பெயர் மாற்றப்பட்டது.
- தமிழ்நாடு அரசானது 2019 ஆம் ஆண்டில், ஒவ்வோர் ஆண்டின் நவம்பர் 01 ஆம் தேதியினைத் தமிழ்நாடு தினமாக கொண்டாடப்படும் என்று அறிவித்தது.
- பின்னர், 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், ஒவ்வோர் ஆண்டின் ஜூலை 18 ஆம் தேதியானது தமிழ்நாடு தினமாக கொண்டாடப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்தது.

## உலக இளைஞர் திறன் தினம் - ஜூலை 15

- ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது 2014 ஆம் ஆண்டில் ஜூலை 15 ஆம் தேதியினை உலக இளைஞர் திறன் தினமாக அறிவித்தது.
- வேலைவாய்ப்பு மற்றும் தொழில் முனைவோர் திறன்களைக் கொண்ட இளைஞர்களை ஆயத்தப் படுத்துவதன் முக்கியத்துவத்தை நினைவு கூர்வது, அதனை அங்கீகரிப்பது மற்றும் அதைக் கொண்டாடுவதை இந்தத் தினமானது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டிற்கான கருப்பொருள் 'எதிர்காலத்திற்கு உற்ற வகையில் இளைஞர் திறன்களை மாற்றியமைத்தல்' என்பதாகும்.

## தேசிய ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சைத் தினம் - ஜூலை 15

- ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை நிபுணர்கள் சங்கம் ஆனது (APSI) 2011 ஆம் ஆண்டில், இந்தியாவில் தேசிய ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சைத் தினத்தினை அறிமுகப் படுத்தியது.
- இந்நாளில் நாடு முழுவதும் இலவச அறுவைச் சிகிச்சைகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறன.

## சர்வதேச நீதிக்கான உலக தினம் - ஜூலை 17

- சர்வதேசக் குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை நிலை நாட்டச் செய்வதற்காக பாடுபடும் அமைப்புகளை நினைவுகூ ருவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1998 ஆம் ஆண்டு ஜூலை 17 ஆம் தேதியன்று, 120 நாடுகள் ஒன்றிணைந்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் சாசனம் என்ற தலைப்பிடப்பட்ட ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- இந்த நிறுவனமானது சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் என்று அறியப்பட்டது.
- இது 2002 ஆம் ஆண்டு ஜூலை 01 ஆம் தேதி முதல் அமலுக்கு வந்தது.
- ரோம் சாசனத்தில் கையெழுத்திட்டதைக் கொண்டாடும் வகையில், சர்வதேச நீதிக்கான உலக தினம் அன்றிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடப்படுகிறது.

## சர்வதேச நிலவு தினம் - ஜூலை 20

- இந்த ஆண்டானது முதலாவது சர்வதேச நிலவு தினத்தினைக் குறிக்கிறது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது, 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 09 ஆம் தேதியன்று, மூன் வில்லேஜ் அசோசியேஷன் என்ற அமைப்பு இதற்காகச் சமர்ப்பித்த ஒரு முன் மொழிவை அங்கீகரித்தது.
- இந்தத் தினமானது மனித வரலாற்றில் மறக்க முடியாத ஒரு நிகழ்வினைக் கொண்டாடச் செய்கிறது.
- 1969 ஆம் ஆண்டு ஜூலை 20 ஆம் தேதியன்று, அமெரிக்க விண்வெளி வீரர்களான நீல் ஆம்ஸ்ட்ராங் மற்றும் பஸ் ஆல்ட்ரின் ஆகியோர் சந்திரனை அடைந்த முதல் மனிதர்கள் என்ற பெருமையைப் பெற்றனர்.
- சந்திரனின் மேற்பரப்பில் மனிதன் கால் பதித்தது இதுவே முதல் முறையாகும்.

## சர்வதேச நெல்சன் மண்டேலா தினம் - ஜூலை 18

- தென்னாப்பிரிக்காவில் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் அதிபரும், நிறவெறிக்கு எதிராக நீதி வேண்டி அவர் நீண்ட ஆண்டுகள் மேற்கொண்ட ஒரு போராட்டத்தினையும் இந்தத் தினம் நினைவு கூர்கிறது.
- இத்தினமானது நெல்சன் மண்டேலா அவர்களின் பிறந்தநாளன்று கொண்டாடப் படுகிறது.
- 2022 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "உங்களிடம் உள்ளதைக் கொண்டு, நீங்கள் எங்கே இருக்கிறீர்களோ அதைக் கொண்டு உங்களால் முடிந்ததைச் செய்யுங்கள் " என்பதாகும்.
- ஐக்கிய நாடுகள் சபையானது, 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் மண்டேலா தினத்தை அனுசரிப்பதற்கு அதிகாரப்பூர்வமாக அனுமதி வழங்கியது.
- 2014 ஆம் ஆண்டில் மனிதகுலத்திற்குச் சேவையாற்றுவதற்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்களை கௌரவிப்பதற்காக நெல்சன் மண்டேலா பரிசினை வழங்கும் முறையை ஐக்கிய நாடுகள் பொதுச் சபை நிறுவியது.

## சர்வதேச சதுரங்கத் தினம் - ஜூலை 20

- இத்தினமானது, 1924 ஆம் ஆண்டில் பாரீஸ் நகரில் சர்வதேச சதுரங்கக் கூட்டமைப்பு நிறுவப் பட்ட தினத்தினைக் குறிக்கிறது.
- 1966 ஆம் ஆண்டு இதே நாளில் அந்த அமைப்பின் தொடக்கத் தினமாகவும் இந்த தினமானது அனுசரிக்கப்பட்டது.
- 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது ஜூலை 20 ஆம் தேதியினை உலகச் சதுரங்கத் தினமாக அறிவித்தது.

## தேசியக் கொடி தினம் - ஜூலை 22




- இது 1947 ஆம் ஆண்டில் இந்தியாவின் தேசியக் கொடியாக மூவர்ணக் கொடி அதன் தற்போதைய வடிவத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தினமாகும்.
- 1947 ஆம் ஆண்டு ஜூலை 22 ஆம் தேதியன்று டெல்லியில் உள்ள அரசியலமைப்பு மன்றத்தில் இந்திய அரசியல் நிர்ணயச் சபையின் உறுப்பினர்களின் கூடுகை இதற்காக நடைபெற்றது.

- சுதந்திர இந்தியாவிற்கான தேசியக் கொடியை ஏற்றுக் கொள்ளச் செய்வதற்கான ஒரு தீர்மானமானது ஜவஹர்லால் நேரு அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது.

## உலக மூளை தினம் - ஜூலை 22

- இது மூளையின் ஆரோக்கியம் குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1957 ஆம் ஆண்டின் இதே நாளில் உலக நரம்பியல் கூட்டமைப்பு நிறுவப்பட்டது.
- இந்த நாளை உலக மூளை தினமாக அனுசரிப்பதற்காக 2014 ஆம் ஆண்டில் ஒரு தீர்மானம் முன்மொழியப் பட்டது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "அனைவருக்குமான மூளை ஆரோக்கியம்" என்பதாகும்.




## உலக நலிவுற்ற X குரோமோசோம் குறைபாட்டு நோய் விழிப்புணர்வுத் தினம் - ஜூலை 22

- நலிவுற்ற X குரோமோசோம் குறைபாட்டு நோயினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைப் போற்றுவதையும், அந்த நோய்க்கான சிகிச்சையைக் கண்டுபிடிகச் செய்வதற்கான ஒரு ஆராய்ச்சியின் முன்னேற்றத்தை முன்னிலைப்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நலிவுற்ற X குரோமோசோம் குறைபாட்டு நோயானது, லேசானது முதல் கடுமையானது வரையிலான அறிவுசார்ந்த இயலாமையை ஏற்படுத்துகிறது.
- இந்தத் தினமானது, அமெரிக்காவைச் சேர்ந்த FRAXA ஆராய்ச்சி அறக்கட்டளையால் தொடங்கப் பட்டது.

## பை மதிப்பின் தோராயமாக்கல் தினம் - ஜூலை 22

- பை (π) மதிப்பைக் கணக்கிடும் ஒரு செயல்முறையானது ஒரு முடிவில்லாத மற்றும் நிறைவு செய்ய இயலாத செயல்முறை ஆகும்.
- ஜூலை 22 ஆம் தேதியானது பை மதிப்பின் தோராயமாக்கல் தினமாகவும் வழக்கமான பை தினம் என்றும் அனுசரிக்கப் படுகிறது.
- பை மதிப்பானது முடிவிலா மாறிலியைக் குறிக்கின்ற ஆர்க்கிமிடிஸ் மாறிலி என்றும் குறிப்பிடப்படுகிறது.

- பை என்பதின் தசம மதிப்பான 3.14 என்ற மதிப்பானது, இயற்பியலாளர் லாரி ஷா என்பவரால் 1988 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

## தேசிய ஒலிபரப்புத் தினம் - ஜூலை 23

- 1927 ஆம் ஆண்டு ஜூலை 23 ஆம் தேதியன்று தான் அகில இந்திய வானொலி நிறுவனம் இந்திய ஒலிபரப்புத் நிறுவனம் என்ற தனியார் நிறுவனமாக தனது பயணத்தைத் தொடங்கியது.
- பின்னர், ஆங்கிலேயர்களால் கையகப் படுத்தப்பட்டு, 1936 ஆம் ஆண்டு ஜூன் 08 ஆம் தேதியன்று அது அகில இந்திய வானொலியாக (AIR) மாற்றப்பட்டது.
- ஆகாஷவாணி (வானில் இருந்து வெளிப்படும் குரல் அல்லது அறிவிப்பு) என்ற பெயர் ஆனது 1956 ஆம் ஆண்டில் இந்த தேசிய ஒலிபரப்பு நிறுவனத்திற்காக அதிகாரப் பூர்வமாக ஏற்றுக் கொள்ளப் பட்டது.





## வருமான வரி தினம் - ஜூலை 24

- 1860 ஆம் ஆண்டில் இதே நாளில், இந்தியாவில் வருமான வரி முதன்முதலில் வரியாக விதிக்கப் பட்டதை நினைவு கூறும் வகையில் இந்த தேதியானது தேர்ந்தெடுக்கப் பட்டது.
- 2010 ஆம் ஆண்டில், இந்த வரி விதிக்கப்பட்டதன் 150 ஆண்டுகள் நிறைவடைந்ததைக் குறிக்கும் வகையில், முதல் முறையாக இந்தத் தினத்தினைக் கொண்டாடுவதற்கு வருமான வரித் துறை முடிவு செய்தது.
- இந்த ஆண்டு 162வது தேசிய வருமான வரி தினமாகும்
- இந்தியாவில் வருமான வரியானது, 1860 ஆம் ஆண்டில் சர் ஜேம்ஸ் வில்சன் என்பவரால் முதல் முறையாக விதிக்கப்பட்டது.
- 1922 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட வருமான வரிச் சட்டமானது, நேரடி வரி நிர்வாகத்திற்கான சரியான கட்டமைப்பை வகுத்தது
- 1924 ஆம் ஆண்டில், வருமான வரிச் சட்டத்தை நிர்வகிப்பதற்கான செயல்பாட்டுப் பொறுப்புகளைக் கொண்ட ஒரு சட்டப்பூர்வ அமைப்பாக மத்திய வருவாய் வாரியம் உருவாக்கப்பட்டது.

- 1963 ஆம் ஆண்டில், மத்திய வருவாய் வாரியம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, மத்திய நேரடி வரிகள் வாரியம் (CBDT) எனப்படும் நேரடி வரிகளுக்கான தனி வாரியம் ஆனது, 1963 ஆம் ஆண்டு மத்திய வருவாய் வாரியச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது.

## உலக நீரில் மூழ்கும் நிகழ்வுகளைத் தடுத்தல் தினம் - ஜூலை 25

- உலகின் நிலையான மேம்பாட்டிற்கான ஒரு குறிக்கோளுடன், நீரில் மூழ்குவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை கூட்டாகத் தொடங்கச் செய்வதை இந்தத் தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.




- 01 வயது முதல் 24 வயது வரை உள்ளவர்களின் உயிரிழப்பிற்கான சில முக்கியக் காரணங்களில் நீரில் மூழ்குவதும் ஒன்றாகும்.
- இது தற்செயலாக ஏற்படும் காயம் மூலம் நிகழும் இறப்புக்கான மூன்றாவது முக்கியக் காரணமாகும்.
- காயம் தொடர்பான இறப்புகளில் இது 7% பங்கு வகிக்கிறது.

## உலக செயற்கைக் கருத்தரித்தல் முறை தினம் - ஜூலை 25

- 1978 ஆம் ஆண்டு ஜூலை 25 ஆம் தேதியன்று, செயற்கைக் கருத்தரித்தல் முறை மூலம் பிறந்த முதல் குழந்தை லூயிஸ் ஜாய் பிரவுன் ஆவார்.

- செயற்கைக் கருத்தரித்தல் முறையை உருவாக்கியதற்காக ராபர்ட் எட்வர்ட்ஸ் 2010 ஆம் ஆண்டில் நோபல் பரிசினைப் பெற்றார்.
- செயற்கைக் கருத்தரித்தல் முறை என்பது ஒரு செயற்கைக் குழாயில் ஒரு கருமுட்டை விந்தணுவில் உள்ள விந்துடன் இணைக்கப்படும் ஒரு கருவுறுதல் செயல்முறையைக் குறிக்கிறது.




## கார்கில் விஜய் திவாஸ் - ஜூலை 26




- பாகிஸ்தானுக்கு எதிரான கார்கில் போரில் இந்தியா வெற்றி பெற்றதைக் குறிக்கும் வகையில் இந்த தினமானது கொண்டாடப்படுகிறது.

- 2022 ஆம் ஆண்டானது கார்கில் போரில் இந்தியாவின் வெற்றி பெற்ற 23வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- கார்கில் போர் ஆனது 1999 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் 1999 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வரை ஜம்மு & காஷ்மீரின் கார்கில்-திராஸ் பகுதியில் நடைபெற்றது.
- லடாக்கில் உள்ள வடக்கு கார்கில் மாவட்டத்தின் மலை உச்சிப் பகுதியில் பாகிஸ்தான் ராணுவம் சட்டவிரோதமாக ஊடுருவியது.
- இந்திய இராணுவம் "ஆபரேஷன் விஜய்" என்ற நடவடிக்கையைத் தொடங்கி, இந்தப் பிராந்தியத்தின் மீதான தனது கட்டுப்பாட்டை மீண்டும் பெற்றது.

## உலக கல்லீரல் அழற்சி நோய் தினம் - ஜூலை 28

- இந்தத் தினமானது வைரஸ் மூலம் பரவும் இந்த நோய் பற்றி மிகுந்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த வருடத்தின் இந்தத் தினத்தின் கருப்பொருள், "ஹெபடைடிஸ் சிகிச்சையை உங்களுக்கு நெருக்கமாகக் கொண்டு வருதல்" என்பதாகும்.
- 1967 ஆம் ஆண்டு அமெரிக்க மருத்துவர் பாரூச் சாமுவேல் ப்ளம்பெர்க் ஹெபடைடிஸ் பி வைரஸைக் கண்டுபிடித்தார்.




- நோபல் பரிசு பெற்ற இந்த அறிவியலாளரைக் கௌரவிக்கும் வகையில் அவரது பிறந்த நாளான ஜூலை 28 ஆம் தேதியானது உலக கல்லீரல் அழற்சி நோய் தினமாக தேர்வு செய்யப் பட்டது.
- ஹெபடைடிஸ் வைரஸ் ஆனது, A, B, C, D மற்றும் E என்ற ஐந்து முதன்மைத் திரிபுகளைக் கொண்டுள்ளது.
- உலக ஹெபடைடிஸ் கூட்டணியானது 2007 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.
- 2008 ஆம் ஆண்டு முதல் சமூகத்தினால் முறையாக ஏற்பாடு செய்யப்பட்டு, உலக கல்லீரல் அழற்சி நோய் தினம் அனுசரிக்கப்பட்டது.

## சதுப்புநிலக் காடுகளின் சூழலைமைவின் பாதுகாப்பிற்கான சர்வதேச தினம் - ஜூலை 26

- இது சதுப்புநிலக் காடுகளின் சூழலைமைவின் மீதான முக்கியத்துவம் குறித்து ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த முயல்கிறது.

- சதுப்புநிலங்கள் "ஒரு தனித்துவமான, சிறப்பு வாய்ந்த மற்றும் பாதிக்கப்படக் கூடியச் சூழலைமைவு" என்று கருதப் படுகிறது.
- யுனெஸ்கோ இந்தத் தினத்தினை 2015 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொண்டது.
- 2021 ஆம் ஆண்டின் வன ஆய்வு அறிக்கையின் படி, 2019 ஆம் ஆண்டு மதிப்பீட்டைக் காட்டிலும் இந்தியாவில் சதுப்பு நிலங்களின் பரப்பு 17 சதுர கிமீ அதிகரித்துள்ளது.
- அது தற்போது 4,992 சதுர கி.மீ. வரை பரவியுள்ளது.

## உலக இயற்கைப் பாதுகாப்பு தினம் - ஜூலை 28

- நமது இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தவே இந்த தினமானது கொண்டாடப்படுகிறது.
- இயற்கையின் முக்கியத்துவத்தை மக்களுக்கு உணர்த்தச் செய்வதே இந்த தினத்தின் நோக்கமாகும்.
- இந்த ஆண்டில் இத்தினத்திற்கான கருத்துரு, "காடுகள் மற்றும் வாழ்வாதாரங்கள்: மக்கள் மற்றும் புவிக் கோளினை நிலைநிறுத்தச் செய்தல்" என்பதாகும்.

## சர்வதேச புலிகள் தினம் - ஜூலை 29

- புலிகளைப் பாதுகாப்பது பற்றியும், அவற்றின் இயற்கையான வாழ்விடத்தைப் பாதுகாப்பது பற்றியும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இத்தினத்தை அனுசரிப்பதன் நோக்கமாகும்.
- ஒரு நூற்றாண்டுக்கு முன்பு ஆசியாவில் 100,000 புலிகள் இருந்தன.
- இன்றைய நிலவரப்படி 4,000க்கும் குறைவான புலிகள் மட்டுமே காடுகளில் உள்ளன.
- 2022 ஆம் ஆண்டிற்குள் அந்த எண்ணிக்கையை இரட்டிப்பாக்குவது இத்தினத்தின் நோக்கங்களில் ஒன்றாகும்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "புலிகளின் எண்ணிக்கையை மீட்டெடுப்பதற்காக இந்தியா புலிகள் பாதுகாப்புத் திட்டத்தினை அறிமுகப் படுத்தச் செய்கிறது" என்பதாகும்.


## மத்திய சேமக் காவல் படையின் 84வது எழுச்சி தினம் - ஜூலை 27

- தேசத்தின் ஒற்றுமை, ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மையை நிலைநிறுத்துவதில் இந்தப் படைகள் ஆற்றும் மகத்தான மற்றும் இணையற்றப் பங்களிப்புகளை இந்தத் தினம் கொண்டாடுகிறது.
- மத்திய சேமக் காவல் படையானது இந்தியாவின் மிகப்பெரிய மத்திய ஆயுதக் காவல் படையாகும்.
- இது உள்துறை அமைச்சகத்தின் அதிகாரத்தின் கீழ் செயல்படுகிறது.
- இது 1939 ஆம் ஆண்டு ஜூலை 27 ஆம் தேதியன்று 'அரசக் காவல் பிரதிநிதிகள் படை' என்று உருவாக்கப் பட்டது.
- 1949 ஆம் ஆண்டு டிசம்பர் 28 ஆம் தேதியன்று 'மத்திய சேமக் காவல் படைச் சட்டம்' இயற்றப் பட்டதன் மூலம் இது மத்திய சேமக் காவல் படையாக மாறியது.

# இதரச் செய்திகள்

## நெகிழ்திறன் மிக்க மக்களாட்சி அறிக்கை 2022


- ❖ G7 நாடுகளின் உச்சி மாநாட்டில் பிரதமர் அவர்கள் கலந்து கொண்டதையடுத்து "2022 ஆம் ஆண்டு நெகிழ்திறன்மிக்க மக்களாட்சி அறிக்கை" கையெழுத்தானது.
- ❖ இந்தியாவுடன் சேர்ந்து, ஜெர்மனி, அர்ஜென்டினா, கனடா, பிரான்ஸ், இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், செனகல், தென்னாப்பிரிக்கா, ஐக்கிய இராஜ்ஜியம், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகளும் இந்த அறிக்கையில் கையெழுத்திட்டு உள்ளன.
- ❖ கையொப்பமிட்ட நாடுகள், குடிமக்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு ஒரே மாதிரியான சட்டப்பூர்வமான தன்மை, வெளிப்படைத்தன்மை, பொறுப்பு மற்றும் பதிலளிக்க வேண்டிய கட்டாயம் ஆகியவற்றினை மேம்படுத்தச் செய்யும் வகையில், "வெளிப்படையான பொது விவாதம், சுதந்திரமான மற்றும் பன்மைத்துவ ஊடகங்கள்" மற்றும் "இணையதள மற்றும் நேரடி தகவல்களை தடையற்ற முறையில் வழங்குதல்" ஆகியவற்றை மக்களாட்சி செயல்படுத்தும் என்று கூறுகின்றன.




## ஆசிய பசிபிக் நிலைத் தன்மைக் குறியீடு 2021

- ❖ 2021 ஆம் ஆண்டின் ஆசிய பசிபிக் நிலைத்தன்மைக் குறியீடானது நைட் ஃபிராங்க் என்ற உலகளாவியச் சொத்து ஆலோசக நிறுவனத்தினால் சமீபத்தில் வெளியிடப் பட்டது.
- ❖ இந்தக் குறியீட்டில் சிங்கப்பூர் முதலிடத்தில் உள்ளது.
- ❖ அதைத் தொடர்ந்து சிட்னி, வெலிங்டன், பெர்த் மற்றும் மெல்போர்ன் ஆகியவை உள்ளன.
- ❖ ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் வணிக ரீதியிலான மனை விற்பனைத் தொழில் துறையில் பசுமைத் தரம் பெற்ற முதல் ஐந்து நகரங்கள் இவையாகும்.
- ❖ இந்திய அளவில் பெங்களூரு முதலிடம் பிடித்தது.
- ❖ மேலும் ஆசிய-பசிபிக் பிராந்திய அளவில், இந்த நகரம் 14வது இடத்தைப் பிடித்துள்ளது.
- ❖ 'தங்கம்' என்ற தரப் பிரிவை எட்டிய ஒரே இந்திய நகரம் பெங்களூரு ஆகும்.

- ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் டெல்லி 17வது இடத்தைப் பெற்றுள்ளது.
- ஹைதராபாத் இந்திய அளவில் 3வது இடத்திலும், ஆசிய பசிபிக் பிராந்திய அளவில் 18வது இடத்திலும் உள்ளது.
- மும்பை இந்திய அளவில் 4வது இடத்திலும், ஆசிய பசிபிக் பிராந்திய அளவில் 20வது இடத்திலும் உள்ளது.





## உலகப் போதைப்பொருள் பயன்பாடு குறித்த அறிக்கை 2022

- 2022 ஆம் ஆண்டிற்கான உலகப் போதைப்பொருள் அறிக்கை ஆனது ஐக்கிய நாடுகள் சபையின் போதைப்பொருள் மற்றும் குற்றங்களுக்கான அலுவலகத்தினால் சமீபத்தில் வெளியிடப் பட்டது.
- கஞ்சாவைச் சட்டப்பூர்வமாக்குவது என்பது அதன் தினசரிப் பயன்பாடு மற்றும் அது தொடர்பான உடல்நலப் பாதிப்புகளை அதிகரித்துள்ளது என இந்த அறிக்கை கூறுகிறது.
- ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்கா ஆகிய நாடுகளில், 35 வயதிற்கு உட்பட்ட நபர்களில் பெரும்பாலானோர் போதைப் பொருள் பயன்பாட்டுக் கோளாறுகளுக்கு சிகிச்சை பெற்று வருகின்றனர்.
- உலகளவில் 2 மில்லியன் அளவில் போதை மருந்துகளை ஊசி மூலம் செலுத்திக் கொள்கின்றனர்.
- இந்த எண்ணிக்கையில் பாதி பேர் ஹெபடைடிஸ் சி வகையினாலும், 1.4 மில்லியன் பேர் எச்.ஐ.வி தொற்றினாலும் மற்றும் 1.2 மில்லியன் பேர் எச்.ஐ.வி மற்றும் ஹெபடைடிஸ் சி ஆகிய இரண்டினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- 2019 ஆம் ஆண்டில் 11 சதவீதமாக இருந்த கோகோயின் உற்பத்தியானது 2020 ஆம் ஆண்டில் 1,982 டன்களாக அதிகரித்துள்ளது.
- 2020-2021 ஆம் ஆண்டில் உலகளாவிய ஓபியம் உற்பத்தியானது ஏழு சதவீதம் அதிகரித்துள்ளது.
- முக்கியமாக ஆப்கானிஸ்தானில் அதன் உற்பத்தி அதிகரித்ததன் காரணமாக இந்த அதிகரிப்பானது ஏற்பட்டுள்ளது.

## அல்லூரி சீதாராம ராஜு சிலை

- புகழ்பெற்றச் சுதந்திரப் போராட்ட வீரர் அல்லூரி சீதாராம ராஜுவின் 125வது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு, ஆந்திரப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள அவரது சிலையைப் பிரதமர் அவர்கள் திறந்து வைத்தார்.

- இது ஆந்திரப் பிரதேசத்தின் பீமாவரம் பகுதியில் அமைந்துள்ள 30 அடி உயரம் கொண்ட ஒரு வெண்கலச் சிலையாகும்.
- புகழ்பெற்றச் சுதந்திரப் போராட்ட வீரர் அல்லூரி சீதாராம ராஜு, கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் உள்ள பழங்குடியினச் சமூகங்களின் நலன்களைப் பாதுகாக்கச் செய்வதற்காக ஆங்கிலேயர்களுக்கு எதிராக அவர் நடத்தியப் போராட்டத்திற்காக நினைவு கூறப்படுகிறார்.
- அல்லூரி சீதாராம ராஜு 1922 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் இராணுவத்திற்கு எதிராக ரம்பா கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கி வழி நடத்தினார்.
- ஆங்கிலேயர்களுக்கு எதிராக ஒரு ஆயுதமேந்தியப் பிரச்சாரத்தை மேற்கொண்டதால் உள்ளூர் மக்களால் அவர் ‘மான்யம் வீருடு’ (காடுகளின் நாயகன்) என்றும் அழைக்கப் படுகிறார்.




## 8வது டிஜிட்டல் இந்தியா வாரம் 2022

- டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டின் டிஜிட்டல் இந்தியா வாரக் கொண்டாட்டத்தினைப் பிரதமர் அவர்கள் குஜராத் மாநிலத்தில் உள்ள காந்தி நகரில் தொடங்கி வைத்தார்.
- இந்த டிஜிட்டல் இந்தியா வாரத்தின் கருத்துரு, நாட்டினை டிஜிட்டல் முறையில் வலுப் பெற்றச் சமூகமாகவும் அறிவு நிறைந்தப் பொருளாதாரமாகவும் மாற்றுவதற்கு ‘புதிய இந்தியாவின் தொழில்நுட்பத்தை ஊக்குவித்தல்’ என்பதாகும்.
- வணிகம் செய்வதை எளிதாக்குவதையும், வாழ்க்கை முறையை எளிதாக்குவதையும் வலுப்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## டைனோசர் எலும்புக் கூடு ஏலம்

- 76 மில்லியன் ஆண்டுகள் பழமையான டைனோசரின் புதைபடிவ எலும்புக்கூடுகள் இந்த மாத இறுதியில் நியூயார்க்கில் ஏலம் விடப்பட உள்ளது.
- இந்தப் புதைபடிவங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்படாத டைனோசர் எலும்புக் கூடுகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.
- இந்தப் புதைபடிவமானது 1987 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப் பட்டது.
- இந்த எலும்புக் கூட்டின் அளவானது 10 அடி உயரமும் 22 அடி நீளமும் கொண்டது.



## ஐரோப்பாவில் கண்டறியப்பட்ட பழமையான மனித புதைபடிவம்

- சமீபத்தில் வடக்கு ஸ்பெயினில் ஒரு தாடை எலும்புத் துண்டு கண்டுபிடிக்கப்பட்டது.
- ஐரோப்பாவில் இன்று வரையில் கண்டுபிடிக்கப்பட்ட மனித மூதாதையரின் ஒரு மிகப் பழமையான புதைபடிவமாக இது இருக்கலாம்.
- அடாபுர்கா மலைத்தொடரில் உள்ள தொல்பொருள் ஆய்வுத் தளத்தில் கண்டுபிடிக்கப் பட்ட இந்த புதைபடிவம் சுமார் 1.4 மில்லியன் ஆண்டுகள் பழமையானது ஆகும்.
- தற்போது வரையில், ஐரோப்பாவில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பழமையான மனித உடலின் புதைபடிவமானது 2007 ஆம் ஆண்டில் இதே இடத்தில் கண்டுபிடிக்கப் பட்ட தாடை எலும்பு ஆகும்.
- இது 1.2 மில்லியன் ஆண்டுகள் மிகப் பழமையானது என தீர்மானிக்கப்பட்டது.



## 2022 ஆம் ஆண்டின் உலகின் மிகச் சிறந்த இடங்கள்

- "பயணிப்பதற்கான 50 சிறந்த இடங்கள்" என்ற ஒரு பட்டியலானது இந்த ஆண்டு டைம் இதழினால் வெளியிடப்பட்டது
- 2022 ஆம் ஆண்டின் உலகின் மிகச் சிறந்த இடங்களின் பட்டியலில் இடம் பெற்ற இரண்டு இந்தியப் பகுதிகள் கேரளா மற்றும் அகமதாபாத் ஆகியனவாகும்.
- கண்கவர் கடற்கரைகள் மற்றும் பசுமையான உப்பங்கழிகள், கோவில்கள் மற்றும் அரண்மனைகள் ஆகியவை உள்ள வகையில் இந்தியாவின் மிக அழகான மாநிலங்களில் கேரளாவும் ஒன்று.

- இந்தியாவின் முதல் யுனெஸ்கோ உலகப் பாரம்பரிய நகரமாகவும், பண்டைய அடையாளங்கள் மற்றும் சமகாலக் கண்டுபிடிப்புகள் இரண்டையும் கொண்டு உள்ள நகரமாகவும் திகழும் அகமதாபாத் நகரம் கலாச்சாரச் சுற்றுலாவுக்கான மெக்கா நகரமாகப் போற்றப்படுகிறது.




### AIDef கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி

- முதலாவது "பாதுகாப்புத் துறையில் செயற்கை நுண்ணறிவு (AIDef) குறித்த கருத்தரங்கம் மற்றும் கண்காட்சியானது" சமீபத்தில் டெல்லியில் நடத்தப் பட்டது.
- இது பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் கீழ் பாதுகாப்பு உற்பத்தித் துறையால் ஏற்பாடு செய்யப் பட்டது.
- சேவைகள், தொழில்துறை, ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் தொடக்க நிறுவனங்கள் மற்றும் புத்தாக்க நிறுவனங்கள் ஆகியவற்றினால் உருவாக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவு மூலம் இயக்கப் படும் தொழில்நுட்பங்கள் இதில் காட்சிப் படுத்தப் பட்டது.




### நாடு கடத்தப்பட்ட உள்நாட்டினர் தரவரிசை 2022

- 2022 ஆம் ஆண்டிற்கான நாடு கடத்தப்பட்ட உள்நாட்டினர் தரவரிசையில் மெக்சிகோ முதலிடம் பிடித்துள்ளது.
- இது இன்டர்நேஷன் என்ற அமைப்பினால் வெளியிடப்பட்டது.
- இத்தரவரிசையில் இடம் பெற்ற 52 நாடுகளில் இந்தியா 36வது இடத்தில் உள்ளது.

- குவைத் நாடானது இத்தரவரிசையில் வெளிநாட்டவர்களுக்கு மிகவும் மோசமான நாடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது .
- முதல் 5 இடங்களில் உள்ள நாடுகள்: மெக்சிகோ, இந்தோனேசியா, தைவான், போர்ச்சுகல், ஸ்பெயின் ஆகியனவாகும்.




## ஹென்லி கடவுச்சீட்டு குறியீடு 2022

- ஜப்பான், சிங்கப்பூர் மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகள் இந்தக் குறியீட்டில் முதல் 3 இடங்களைப் பெற்றுள்ளன.
- இப்பட்டியலில் இந்தியா 87வது இடத்தில் உள்ளது.
- ஜப்பான் நாட்டின் கடவுச்சீட்டானது 193 நாடுகளுக்கு நுழைவு இசைவு இன்றி பயணம் செய்வதற்கான அணுகலை வழங்குகிறது.
- 144 நாடுகளுக்கு பயணம் செய்வதற்கான அணுகலுடன் உக்ரைன் இந்தக் குறியீட்டில் 35வது இடத்தில் உள்ளது

**Passports, Please?**
The world's most powerful travel documents are Asian

| Passport | Rank | Country Access Score |
|---|---|---|
| Japan | 1 | 193 |
| Singapore | 2 | 192 |
| South Korea | 2 | 192 |
| Germany | 3 | 190 |
| Spain | 3 | 190 |
| Finland | 4 | 189 |
| Italy | 4 | 189 |
| Luxembourg | 4 | 189 |
| Austria | 5 | 188 |
| Denmark | 5 | 188 |

- 80 நாடுகளுக்கு பயணம் செய்வதற்கான அணுகலுடன் சீனா 69வது இடத்தில் உள்ளது.
- சிரியா, ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகியவை இந்தக் குறியீட்டின் கடைசி இடங்களில் உள்ளன.
- ஆப்கானிஸ்தானின் கடவுச்சீட்டானது 27 நாடுகளுக்கு மட்டுமே அத்தகைய வசதி கொண்ட அணுகலை வழங்குகிறது.

- சர்வதேச விமானப் போக்குவரத்துக் கழகத்தின் பிரத்தியேகத் தரவுகளின் அடிப்படையில் இந்தக் குறியீடானது உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்தக் குறியீடானது ஹென்லி மற்றும் பார்ட்னர்ஸ் என்ற ஆய்வுக் குழுவினால் தயாரிக்கப் படுகிறது.

## அபின் உற்பத்தி மற்றும் பதப்படுத்துதல்

- மிகவும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையிலான அபின் உற்பத்தி மற்றும் பதப்படுத்துதல் பணியை தனியார் நிறுவனங்கள் தொடங்குவதற்கு வேண்டி இந்தியா அனுமதி வழங்கி உள்ளது.
- பஜாஜ் ஹெல்த்கேர் நிறுவனமானது, மிகவும் செறிவூட்டப்பட்ட அபின் பொருட்களை தயாரிப்பதற்கான ஒப்பந்தங்களைப் பெற்ற முதல் நிறுவனமாக மாறியுள்ளது.
- வலி மருந்து மற்றும் இருமல் நிவாரணிகளில் முக்கியமாக இடம் பெறுகின்ற மருந்துப் பொருளான ஆல்கலாய்டுகளை உற்பத்தி செய்ய இது பயன்படும்.
- குவாலியர் நகரில் உள்ள மத்தியப் போதைப்பொருள் தடுப்புப் பிரிவானது, ஓபியம் செடிகளைப் பயிரிட விவசாயிகளுக்கு உரிமம் வழங்கி, சாகுபடியை மேற்பார்வை இட்டு அதனைக் கட்டுப்படுத்தச் செய்வதோடு உரிமம் பெற்ற விவசாயிகள் உற்பத்தி செய்யும் அபின் பொருட்களை கொள்முதலும் செய்கிறது.

## வைரம் - லுலோ ரோஸ்

- அங்கோலாவில் அரிய வகை இளஞ்சிவப்பு நிற வைரம் ஒன்று கண்டெடுக்கப் பட்டு உள்ளது.
- இது உலகில் இதுவரை கண்டெடுக்கப்பட்ட மிகப் பெரிய வைரங்களுள் ஒன்று என கூறப் படுகிறது.
- 170 காரட் தரமுடைய இந்த விலை மதிப்பற்றக் கல்லானது, "லுலோ ரோஸ்" என்று அழைக்கப் படுகிறது.
- லுலோ ரோஸ் கடந்த 300 ஆண்டுகளில் கண்டெடுக்கப்பட்டவற்றுள் மிகப்பெரிய இளஞ் சிவப்பு நிற வைரம் என்று நம்பப்படுகிறது.
- இது லுலோ என்ற வண்டல் சுரங்கத்தில் இதுவரை கண்டெடுக்கப்பட்ட வைரங்களில் ஐந்தாவது பெரிய வைரமாகும்.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★